
நீ
மற்றும்
நான்
ஜெய்சக்தி

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : நீ மற்றும் நான் |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : மே, 2005 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்தளவு | : 10 புள்ளி |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 288 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை பைண்டிங் |
| பதிப்பாளர் | : ஸ்ரீ செல்வ நிலையம்<br>32/1-107/1, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.90.00**

| | |
|---|---|
| ஒளி அச்சுக் கோப்பு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆ : 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ்.ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>சென்னை-14. |




# நீ மற்றும் நான்

## உள்ளே...


1. நீ மற்றும் நான் 5

2. எங்கேயும் போகவில்லை 158


# நீ மற்றும் நான்



## 1

**வீ**டே நிறைந்திருந்தது.

எல்லாரும் கலகலப்பாய்ச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

நித்திலாவின் அம்மா பரமேஸ்வரி எல்லாப் பெண்களுக்கும் மஞ்சள், குங்குமம் கொடுக்க, ஒவ்வொருவராய்க் கிளம்பினார்கள். கணவன்மார்களும் கூடத்தான்.

நித்திலவல்லி, அவள் தம்பி ரமேஷ், ஒன்று விட்ட சகோதரன் ராகவன், அவன் அப்பா எல்லாரும் சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாம் என்று சோஃபாவில் அமர்ந்தார்கள்.

அன்று நித்திலாவைப் பெண் பார்க்க வந்திருந்தார்கள். அவள் அப்பா ஓரளவுக்குக் குடும்பம் பற்றி விசாரித்தபின்தான் பெண் பார்க்க வரச்சொல்லி இருந்தார் என்பதால் கிட்டத்தட்ட எல்லாம் முடிவான மாதிரித்தான் நிலைமை இருந்தது.

'என்ன, பரமேஸ்வரி, கல்யாணக் களை வந்துருச்சு வீட்டுக்கு!' என்றார் பெரியம்மா.

'என்னமோ... எல்லாம் பகவான் செயல்...' என்றாள் பரமேஸ்வரி.

'பகவானாவது... பாகற்காயாவது... எல்லாம் உங்க வீட்டுக் காரர் செயல்னு சொல்லு...' என்று அவர் சிரிக்கவும் -

'அப்படித்தான் இருக்கட்டுமே!' என்னைக்கும் அவர் எதையும் கரெக்டாதான் செய்வார்!' என்றாள் பரமேஸ்வரி.

'பாரப்பா... சுந்தரம், உன்ற ஊட்டுக்காரி உன்னை எப்படி நம்பறா... ஆனா நம்ம ஊட்டம்மா... இருக்குதே...' என்று ராகவனின் அப்பா ஆரம்பிக்கவும்,

'அப்பா... வீட்டு ரகசியமெல்லாம் வெளியே சொல்லாதே!' என்றான் ராகவன்.

எல்லாரும் சிரித்தார்கள்.

'சர்றா... நீ கொஞ்ச நேரம் இருந்துட்டு வா...நாங்க கெளம்ப றோம்...' என்று அவர்கள் கிளம்பினார்கள்.

'நித்தி... யானை வரும் பின்னே மணியோசை வரும் முன் னேங்கற மாதிரி, மாப்பிள்ளையோட அப்பா லொட லொடன் னுட்டு வர்றாரு... அந்தம்மா தூக்க முடியாம உடம்பைத் தூக்கிட்டு அசைஞ்சு அசைஞ்சு வர்றாங்க...'' என்றான் ராகவன்.

மீண்டும் சிரித்தார்கள்.

ராகவன் பெரியப்பா பிள்ளை என்றாலும், நித்திலாவுக்கும் அவனுக்கும் ஒரு ஒட்டுதல். அவனுக்கும் சொந்தச் சகோதரிகள் இல்லாததால் நித்திலாவை ரொம்பவும் நேசித்தான்.

'அதனால என்னடா... மாப்பிள்ளை நல்லாயிருக்காருல்ல... கரெக்டா உடம்பை வச்சிருக்காரு.' என்றார் அப்பா.



ஆனா.... கொஞ்சம்... கறுப்பு என்று எண்ணிக் கொண்டாள் நித்திலா. வாய்விட்டுச் சொல்லவில்லை.

'அதுமட்டுமில்ல... ராகவண்ணா, அந்த அம்மா உள்ள வந்து என் கழுத்தில் போட்டிருந்த நகையெல்லாம் கையில் எடுத்து எடுத்து வெயிட் பாக்கறாங்க...' என்று நித்திலா சிரிக்கவும், ஒரு கணம் சுந்தரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

'இல்லையே... எங்கிட்ட நகை, பணம்னு இதுவரை அதைப் பத்தியெல்லாம் எதுவும் பேசலையே...!' என்றார் சுந்தரம்.

'பேசாட்டி என்ன? நீங்களே எல்லாத்தையும் சொல்லீருப் பீங்க...' என்றான் ராகவன்.

'ஆமாப்பா... நூறு பவுன் போடறேன், வீடெழுதி வைக்கி றேன்னு சொல்லிட்டேன்... அப்புறம் பின்னால சங்கடம் வரக்கூடாதில்லை...' என்றார் அப்பா.

'இவ்வளவு சொன்னா பத்தாதாக்கும்!' என்று சிரித்தான் ராகவன்.

நித்திலவல்லி ஒரே மகள். ரமேஷ் ஒரே மகன் என்று அளவான குடும்பம். சுந்தரம் ஒரு நல்ல கம்பெனியில் மேனேஜராக இருந்தார். பூர்வீகச் சொத்துக்கள் இருந்தன. மனைவியும் நல்ல வசதி என்பதால் எவ்வளவு செய்யவும் தயாராக இருந்தார்.

நித்திலவல்லியும் ஒரு கம்பெனியில் அசிஸ்டண்ட் மேனேஜர் ரேங்கில் இருந்தாள். வேலைக்குப் போகத் தேவையில்லை என்றாலும் மகளுக்கு அனுபவம் வேண்டும் என்று நினைத்து அனுப்பி வைத்திருந்தார்.

மகள் திறமைசாலிதான் என்றாலும், ரொம்பவும் விட்டுக் கொடுக்கிற குணம் இருந்தது. சில நேரங்களில் ஏமாளித் தனமாகக் கூட இருக்கிறாள் என்று தோன்றியது. ஆனால், சில நேரங்களில் ஆழ்ந்த சிந்தனையோடும் பேசுவாள்.'சரி.

இனிமேல்தானே வாழ்க்கை... அனுபவம்... எல்லாம்...' என்று நினைத்துக் கொள்வார்.

அதனால்தான் துளைத்துத் துளைத்து விசாரித்து மாப்பிள்ளை பார்த்தார். மாப்பிள்ளை திருத்தமான முகம் உடையவன் இல்லை என்றாலும் சிவப்பாக இருந்தான். இரண்டு சகோதரிகள். இரண்டு பேருக்கும் திருமணமாகி இருந்தது. அதனால் பிக்கல் பிடுங்கல் இருக்காது என்று நினைத்தார்.

அலுவலகத்திலும் போய்ப் பார்த்தார். கெட்டிக்காரனா, சாமர்த்தியசாலியா என்று மாப்பிள்ளையின் நண்பன் சந்திர சேகரனைத்தான் விசாரித்தார். தன்னிடம் பழகியவரை நல்லவன்தான் என்றான் அவன். அதற்குப் பிறகுதான் பெண் பார்க்க அழைத்தார்.

சந்திரசேகரும் உடன் வந்திருந்தான். அவர் சுயநினைவுக்கு வந்தபோது மகள் ராகவனிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

'ஏண்ணா, அதென்ன' அப்பா.. அம்மா... ரெண்டு பேரும் சிவப்பா இருக்காங்க... மாப்பிள்ளை மட்டும் கறுப்பா இருக்காரு?' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

சுந்தரம் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனார். என்ன உளறுகிறாள் இந்தப் பெண்... மாப்பிள்ளை நல்ல சிவப்பாச்சே என்று எண்ணியவர் -

'ஏம்மா... நீ யாரைச் சொல்றே?' என்றார்.

'அதாம்ப்பா... சந்தனக் கலர்ல லேசா வரிவரியா சட்டை போட்டுக்கிட்டு... கொஞ்சம் கறுப்பா..' என்றாள்.

'அடடா! அவரு இல்லைம்மா... பக்கத்துல இருந்தாரே சிவப்பா... சட்டையும் சிவப்பா போட்டுக்கிட்டு... அவருதானே மாப்பிள்ளை!' என்றார்.

எல்லாரும் ஒரு கணம் அமைதியானார்கள். நித்திலாவுக்கு ஒரு கணம் ஏனோ மனது வாடியது. உடனே சமாளித்துக்



கொண்டாள்..'ஓ... அவரா... அவரையும் பார்த்தேம்பா... எனக்கொண்ணும் பிரச்சினையில்ல... உங்களுக்குப் பிடிச்சிருந்தா சரி.' என்றாள்.

சுந்தரம் நிம்மதியானார். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு அவர் அந்தப்புறம் எழுந்து போனார். ரமேஷும் தூங்கப் போனான்.

ராகவனும், அவளும் சற்று நேரம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

சற்று நேரம் கழித்து வந்தபோது. மகள் ராகவனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

'என்னவோ... தெரியலண்ணா. மனசுக்குத் திடீர்னு சங்கடமாயிருக்க. இவருதான் மாப்பிள்ளையா வரணும், அவருதான் வரணும்னு எல்லாம் நான் நினைக்கலை. ஆனா அந்தச் சந்திரசேகர்கிட்டே ஒரு கம்பீரம் தெரிஞ்சுது. கண்கள்ல நேர்மை தெரியுது. இந்த ஸ்ரீராம்கிட்டே ஒரு நரித்தனம் தெரியுது. என் கற்பனையோ என்னமோ...' என்று சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டுத் தயங்கி நின்றார்.

உள்ளத்தில் லேசாகக் கலக்கம் தோன்றியது. பிறகு அவளே... 'அப்பாவை விடவா நமக்கு அனுபவம்... அவரு செஞ்சா சரியாத்தான் இருக்கும்...' என்றும் சொன்னாள்.

அதற்கேற்றாற் போல் அன்றிரவு அவர் மனைவியும், 'ஏங்க... என்னமோ அந்த மாப்பிள்ளைப் பையன் இயற்கையாய் இருந்த மாதிரித் தெரியல. நடிக்கிற மாதிரித் தெரியுது...' என்றாள்.

சுந்தரம் சிந்தனையிலாழ்ந்தார்.

பெண்களுக்கு உள்ளுணர்வு அதிகம் என்பார்களே என்று யோசித்தார். மீண்டும் ஒரு வட்டம் விசாரித்தார்.

பையன் நல்லவன்தான் என்றார்கள். அந்தச் சந்திர சேகரனைப் பற்றியும் விசாரித்தார். நடுத்தரத்துக்கும் கீழே

உள்ள குடும்பம். இரண்டு தங்கைகள் கல்யாணத்துக்கு இருந்தார்கள். அப்பா ரிடையர்டு கிளார்க்... அவனும் அசிஸ்டெண்ட் மானேஜர் ரேங்கில்தான் இருந்தான். ஆனாலும், குடும்பம் மொத்தமும் அவனைச் சார்ந்திருந்தது.

தன் மகளோ வீட்டில் செல்லமாக வளர்ந்தவள். நடுத்தரக் குடும்பத்தின் சுமையை வேறு அவள் சுமக்க வேண்டுமா என்றெல்லாம் யோசித்தார்.

'ஸ்ரீராமே மேல்' என்று முடிவுக்கு வந்தார். கல்யாணத்துக்குப் பச்சைக் கொடி காட்டினார்.

நித்திலாவுக்கு மட்டும் அன்றிலிருந்தே உறங்கப் போகும் நேரத்தில் எல்லாம் அந்தச் சந்திரசேகரன் முகமே மனதுக்குள் வந்து போய்க் கொண்டிருந்தது. ஸ்ரீராமின் முகம் மனதில் படிய மறுத்தது.

'முதலில் அவன்தான் மாப்பிள்ளை என்று இம்ப்ரஷன் விழுந்ததால் அப்படி... சரியாய்ப் போயிடும்,' என்று அவளே சமாதானமும் சொல்லிக் கொண்டாள்.



2

நித்திலா வெகு பிஸியாக இருந்தாள். மாதக் கடைசியாகி விட்டது. கணக்கு முடிக்க வேண்டியிருந்தது. வேலையில் ஆழ்ந்திருந்தாள். அந்த நேரத்தில் தோழி விமலா வந்தாள்.

'ஏய்... நித்தி... உங்க மாப்பிள்ளை வந்திருக்காரு...' என்றாள்.





''மாப்பிள்ளையா...? என்று திகைத்தாள். ''எதுக்காக?''

'எதுக்கா? உங்கிட்டே பேசலாம்னு வந்திருப்பாரு!' என்றாள்.

'ஓ...' என்று எழுந்து போனாள். கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவன் வந்திருக்கிறான் என்றால், வெகு சாதாரணமாக எழுந்து போகிற அவளை விமலா யோசனையாகப் பார்த்தாள்.

ஸ்ரீராம் நின்று கொண்டிருந்தான் வரவேற்பறையில்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அவளும் புன்னகைத்தாள்.

'உட்காருங்க...'என்றாள். உட்கார்ந்தான்.

'இல்லே... இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தேன். உங்களைப் பார்க்கலாம்னு.'

அவள் புன்னகைத்தாள்.

'இன்னைக்கு எங்கூடக் கொஞ்சம் வெளியே வர முடியுமா?' என்றான்.

அவள் திகைப்பாய்ப் பார்த்தாள். பின்...

'ஓ...ஐ...ம். சாரி... இங்க வேலை நிறைய இருக்கு. அதுவும் இல்லாம அப்படி வெளியே போறதை எங்க ரிலேடிவ்ஸ்... லைக் பண்ண மாட்டாங்களே!' என்றாள்.

'ஓ... அப்படியா?' என்றான் சுரத்தே இல்லாமல். முகம் வாடிப் போனது. அவள் சமாதானம் செய்யும் நோக்கில் -

'வாங்க... இங்க... பக்கத்துல ஒரு கேண்டீன் இருக்கு. காஃபி சாப்பிடலாம்...' என்றாள்.

சரியென்று போனார்கள். சற்று நேரம் பொதுப்படையாய்ப் பேசினார்கள். அந்தக் கொஞ்ச நேரத்திலேயே அவனது

ரசனைகளும், அவளது ரசனைகளும் வேறு வேறாய் இருப் பதை உணர்ந்தான். அவன் திடீரென்று,

'உங்க டேக் ஹோம் சாலரி... என்ன?' என்றான்.

'பன்னிரண்டாயிரம்!' என்றாள்.

'கமிட்மெண்ட்ஸ் ஒன்னும் இல்லையே?'

'இல்லை... ஏன் கேக்கிறீர்கள்?'

'இல்லே... நான் ஒரு பெரிய இன்வெஸ்ட்மெண்ட்டில் கமிட் ஆகியிருக்கேன். உங்க அப்பாகிட்டே ஒரு தொகை கேட்டிருக்கேன்!' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. பணத்தையே குறியாக விசாரிக்கிறானே என்று தோன்றியது. அவள் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டவன் போல்...

'தப்பா நினைக்காதீங்க... குடும்பம் வேற ஆகப்போகுது. இந்த வயசில லோன் பண்ணி வாழ்ந்தம்னா... பின்னால நிம்மதியா இருக்கலாமில்ல...' என்று சிரித்தான்.

அவள் சற்றே சமாதானமானாள். பின் சற்று நேரம் ஷேர் மார்க்கெட் பற்றிப் பேசினார்கள்..

அவன் விடை பெற்றுக் கொண்டான்.

அவள் திரும்பி வந்தபோது விமலா... என்ன பேசினார்கள் என்று துருவித் துருவி விசாரித்தாள்.

ஷேர் மார்க்கெட் பற்றிப் பேசினோம் எனவும், குபீரென்று சிரித்தாள்.

'என்னது... ஷேர் மார்க்கெட் பற்றிப் பேசினீங்களா? நிஜமாவா?' என்று மறுபடியும் சிரித்தாள்.

நித்திலவல்லி விழித்தாள். 'அப்புறம் பேஸிக் பே என்ன? கமிட்மெண்ட் ஏதாவது இருக்கான்னு கேட்டாரு.' என்றாள்.



விமலா யோசனையில் ஆழ்ந்தாள். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.

சற்று நேரம் கழித்து அவர்கள் மதிய உணவு உண்டபோது, விமலா திடீரென்று, 'ஏன்... நித்தி... ஸ்ரீராமைப் பாத்தப்ப குப்னு உனக்கு ஒரு சந்தோஷம் வர்லையா?' என்றாள்.

'இல்லையே...' என்றாள் அவள்.

'அதுவுமில்லாம... கல்யாணம்னு ஒன்னு நடக்கறவரைக் கும் நான் எதைப்பத்தியும் யோசிக்கறதில்லேன்னு வச்சிருக் கேன்,' என்றாள்.

விமலா இழுத்து ஒரு பெருமூச்சு விட்டாள். 'அதுவும்... ஒரு வகையில் நல்லதுதான்,' என்றாள்.

'ஏன்... விமலா... உன் கல்யாணத்துக்கு முன்னாடி திவாகர் இப்படி வருவாரா என்ன?' என்றாள் நித்திலா.

'ம்... வருவாரு...' என்று சொல்லும் போதே, விமலாவின் முகத்தில் குமிழ்ச் சிரிப்பு முளைத்தது.

'வெளியே போவீங்களா... என்ன?'

'இல்லே... உன்னை மாதிரித்தான்... நான் அதுக்கெல்லாம் இடம் குடுக்கலே... ஆனா... கேண்டீன் போவோம்...' என்றாள்.

'என்ன பேசுவாரு?' என்றாள் ஆர்வமாக.

விமலாவின் முகம் குப்பென்று சிவந்தது. 'பேசவே மாட்டாரு!' என்றாள்.

'பின்னே?' என்றாள் நித்திலா.

'ஒரு காஃபி சாப்பிடற நேரம்தான் இருப்பாரு. ஆனா காஃபி குடிச்சு முடிக்கற வரைக்கும் முழுங்கற மாதிரி பார்த்துக் கிட்டிருப்பாரு. அப்புறம் சும்மா பாக்கணும்னு தோணுச்சு, வந்தேன்'னு புறப்பட்டுப் போயிடுவாரு!' என்று கிளுகிளுப் பாகச் சிரித்தாள்.

'ஓ...!' என்றாள் நித்திலா.

பிறகும் அவள் சிரித்தாள். 'கல்யாணத்துக்கு அப்புறம்... அப்படி எதுக்கு வந்தீங்கன்னு கேட்டா...

'பின்னே பேச்சு வார்த்தைக்கு அப்புறம் கல்யாணத்தை நாலு மாசம் தள்ளி வச்சுட்டாங்க. பாட்டரி வீக்கானா தேவியாரைப் பாத்து சார்ஜ் பண்ணிக்கறதுதான்,'னுட்டு சிரிக்கறாரு.'

நித்திலா ஆச்சரியப்பட்டுப் போனாள்.

'திவாகர்... அப்படியெல்லாம் பேசுவாரா... என்ன?' என்றாள்.

விமலா சிரித்தாள். தனக்குத்தானே ஏதோ ரசித்துக் கொண்ட மாதிரி இருந்தது.

'நீ சின்னப் பெண்... உனக்கும் இந்த ஆண்கள் காரியம்னு வரும்போது எப்படிப் பேசப் போறாங்கன்னு தெரியத்தானே போகுது!' என்று சிரித்தாள்.

'ஏய்... என்னை நீ டீஸ் பண்றே...' என்று செல்லமாகக் கோபித்த நித்திலா மீண்டும் கேட்டாள். 'உனக்கு அவரு நெனப்பு வருமா என்ன?' என்றாள்.

'ம்... அவரு பார்வையே கண்ணுக்கு முன்னாடி வந்து வந்து போகும்... தினமும் கொஞ்ச நேரம் தூக்கம் வராது...' என்றாள்.

தனக்கு ஏன் அப்படியெல்லாம் நேரவில்லை என்று யோசித்த நித்திலா வாய்விட்டே கேட்டு விட்டாள்.

'என்னைக் கேட்டா?' என்று சிரித்தாள் விமலா.

'ஆனா... இன்னொன்னு தெரியுமா? ஸ்ரீராம் கூட வந்தாரே சந்திரசேகர்... அவரு முகம்தான் அடிக்கடி நினைப்புக்கு வருது...' என்றாள்.



விமலா திடுக்கிட்டுப் போனாள். 'ஏய், நித்திலா, யார்கிட்ட யாவது இப்படிச் சொல்லித் தொலைக்காதே!' என்றாள் கடுமையாக.

'ஏன்... நான் ஒன்னும் தப்பாச் சொல்லலையே...' என்றாள்.

விமலா ஒரு கணம் திகைத்துப் போனாள்.

'நித்திலா எல்லாத்திலயும் ஸ்ட்ரெயிட் ஃபார்வர்ட்தான்!' என்று எண்ணிக் கொண்டாள்.

'கடவுளே! இது எந்தச் சிக்கலிலும் கொண்டு விடாமல் இருக்க வேண்டும்!' என்று வேண்டிக் கொண்டாள். ஏனோ அவளுக்கு ஸ்ரீராமைப் பிடிக்கவில்லை. நித்திலவல்லியை நினைத்துக் கவலையாக இருந்தது.

அவனால் எந்தக் கஷ்டமும் இந்த நல்ல பெண்ணுக்கு நேரக் கூடாதே என்று வெகுவாய்க் கவலைப்பட்டாள்.

அவள் என்ன வேண்டியும் கடவுள் அவள் வேண்டு கோளுக்குச் செவி சாய்க்கவில்லை என்பது இனிமேல்தானே தெரியும்.

அன்று மாலை.

தன் வீட்டில் வைத்து அப்பாவிடமும், ராகவனிடமும் ஸ்ரீராம் வந்து போனதைச் சொன்னாள்.

தங்களுக்குள் நடந்தபேச்சு வார்த்தையையும் சொன்னாள். மீண்டும் சுந்தரம் சிந்தனையிலாழ்ந்தார்.

மகள் அந்தப்புறம் போனதும் ராகவனிடம் சொன்னார். 'ராகவா... என்னவோ மனசுல ஒரு குழப்பம்... ஆனாவிசாரிச்ச வரைக்கும் எல்லாரும் நல்ல பையன்னு சொல்றாங்களே!' என்றார்.

'ஆமா... சித்தப்பா...' என்று அவனும் முணுமுணுத்தான்.

கல்யாண நாளும் நெருங்கியது.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்தது.

முதல் நாள் ரிசப்ஷன். சேர்ந்து அமர்வது என்பதற்கெல்லாம் ஏனோ சுந்தரம் ஒத்துக் கொள்ளவில்லை.

முழுச் செலவும் பெண் வீட்டார்தான் செய்தார்கள்.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்தவுடன் உணவு முடிந்து எல்லாரும் ஓய்வெடுக்கும் நேரத்தில், ஸ்ரீராமின் அம்மா வந்து சுந்தரத்தை அழைத்தார்.

'என்னம்மா..' என்றபடி அவரும் வந்தார்.

'இல்லே... ரெண்டு லட்ச ரூபா ரொக்கமா முதல் நாளே குடுக்கறதாச் சொல்லியிருந்தீங்களாம்... இப்பக் குடுத்தா தேவல.'

'குடுக்கறேம்மா... ராகவன் கொண்டு வருவான் இப்ப...' என்றார்.

அந்த நேரம் அங்கே யதேச்சையாய் வருவது போல வந்த ஸ்ரீராம் -

'என்னம்மா... என்ன கேட்கறே?' என்றான். அவரும் சொன்னார்.

'என்னம்மா, பணமா முக்கியம்? இத்தனை பேர் இருக்கற இடத்திலே அதைப் போயி கேட்டுகிட்டு. போம்மா... நீ!' என்று அதட்டினான்.

அந்தம்மாள் வேகமாக நகர்ந்தார். சுந்தரம் மனம் நிம்மதி படைத்தது. 'பரவாயில்லை' என்று நினைத்துக் கொண்டார்.

ஆனால் அந்தச் சந்தோஷம் பத்தே நிமிடம்தான் நீடித்தது. ராகவன் கையில் பெட்டியோடு வந்து இருண்ட முகத்தோடு..., 'சித்தப்பா... இங்கே வா!' என்று சைகை காட்டி அழைத்தான்.



அவரும் போனார் - தனக்கொரு அதிர்ச்சி காத்திருப்பதை அறியாமல்...



3

மாப்பிள்ளையும், அவன் அம்மாவும் ஒரு ஜன்னலின் ஓரமாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தப்புறத்தில் சுந்தரமும் ராகவனும் நிற்பதை அறியவில்லை.

'ஏண்டா... நீயே போய்க் கேளு கேளுங்கறே. அப்புறம் என்ன, அவங்க முன்னாலே மட்டும் மிரட்டறே.' அன்னைக்கு அப்படித்தான் நகையெல்லாம் ஒரிஜினலான்னு பாத்துட்டு வான்னு நீதானடா சொன்னே?'என்று கோபமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

'பேசமா இரு அம்மா. நான் அப்படித்தான் செய்யணும். இல்லேன்னா... பணத்துக்காக அலையறோம்னு நெனைச்சுக்குவாங்க. பாரும்மா, நான் சொல்றதைக் கேளு. இந்தக் கல்யாணம் முடிஞ்சதும் பத்து லட்ச ரூபாய் தேத்தியாகணும். இல்லே, ஸ்ரீராம் கம்பி எண்ண வேண்டியதுதான்!' என்றான்.

சுந்தரம் திகைத்துப் போனார்.

'ரொம்ப ஜாக்கிரதையா பணப் பிரச்சினை எதுவும் வெளிய தெரியாம, வெளியுலகத்தில் நல்ல பேர் வாங்கி வச்சிருக்கேன். கல்யாணம் மட்டும் முடிஞ்சது, நான் ராஜாதான். கஞ்சப்பய எங்கப்பனைப் பணத்துக்காகக் கெஞ்சிக்கிட்டிருக்க வேண்டியதில்லை...' என்றான் காட்டமாக.

ராகவன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

''ஸ்ரீராம் முகத்துல ஒரு நரித்தனம் தெரியுது...' என்று நித்திலா சொன்னது நினைவுக்கு வந்தது. அந்த சந்திரசேகரே மாப்பிள்ளை என்று நினைத்தேன் என்று சொன்னதும் கூடவே நினைவுக்கு வந்தது.

சற்று நேரம் யோசித்தான். பிறகு சித்தப்பாவை அந்தப்புறம் அழைத்துப் போனான்.

'சித்தப்பா... இந்தக் கல்யாணத்தை நிறுத்திடு...' என்றான் அழுத்தமாக.

சுந்தரம் அதிர்ச்சியாகிப் போனார்.

'என்னடா விளையாடறியா? மானம்... மரியாதை என்ன ஆகறது?' என்றார்.

அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல்...

'நல்லவேளை, இவன் மாப்பிள்ளையில்லை. வியாபாரி, நரி... இவனுக்குப் பொண்ணைக் குடுக்கறது நித்திலாவைக் கூறு போட்டு விக்கிறதுக்குச் சமானம்!' என்றான்.

சுந்தரம் சற்று அதிர்ந்து போனார். ஆனால் நிறுத்துவதைத் தவிர வேறு வழியும் இல்லை என்று உணர்ந்தார். 'இப்ப என்னடா செய்றது?' என்று அவர் திகைக்கவும்,

'நான் சொல்றதைச் செய்,' என்று அவனே வழியும் சொல்லிக் கொடுத்தான்.

பணப் பெட்டியைப் பத்திரப்படுத்தி விட்டு வந்தான்.

மாப்பிள்ளையும், அவன் தோழர்களும் பேசிக் கொண்டிருந்த அறைக்கு வந்தான்.

'மாப்பிள்ளை... இப்படி வாங்க... சார், நீங்களும் வாங்க...' என்று சந்திரசேகரனையும் அழைத்துப் போனான்.



அங்கே சுந்தரம் நெஞ்சைப் பிடித்தபடி சோஃபாவில் அமர்ந்து கொண்டிருந்தார்.

'மாப்பிளே! பணம் ஆகலே...' என்றான் ராகவன்.

ஸ்ரீராம் அதிர்ச்சியானான்.

'அது மட்டுமில்லே. இப்பத்த நிலையைச் சொல்லணு மில்லே. சித்தப்பாவுக்கு ஐம்பது லட்சம் கொடுக்க வேண்டிய ஒருத்தர் இன்னைக்குத் திடீர்னு ஐ.பி. குடுத்துட்டாரு. இருக்கற நிலைமையில் சித்தப்பாவே வீடு, வாசல் விக்கிற நிலைமையில இருக்காரு. நாங்க சொன்ன அளவு செய்ய முடியாது. ஆனா... ஒரு பொண்ணு வாழ்க்கை... பிச்சை போடுங்க... உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்...' என்றான் ராகவன்.

'என்னடா... ஸ்ரீராம்! பணம் கேட்டியா... என்ன?' என்றான் சந்திரசேகர் அதிர்ச்சியோடு.

ஸ்ரீராம் அதைச் சட்டை செய்யவில்லை. மாறாகச் சுந்த ரத்தைப் பார்த்து, 'கல்யாணத்தை நிறுத்திடுங்க...' என்றான்.

'மாப்பிளே!' என்றார். அதிர்ந்தார்.

'என்னத்தை மாப்பிளே... இது என்ன சினிமாவா, வாழ்க்கை. நானும் ஒண்ணும் தியாகசீலன் இல்லே..' என்றவன் தன் அப்பாவை அழைத்து,

'அப்பா! நாம நினைச்ச அளவு இங்க ஒண்ணும் இல்லை எல்லாம் வெட்ட வெளிச்சமாயிருச்சு. நம்ம அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி பாத்துக்கலாம்!' என்றான்.

மாப்பிள்ளை வீட்டார் பரபரப்பாகப் புறப்படுவதைப் பார்த்து விமலா வந்தாள். விவரம் கேட்டுப் போய்... நித்தில வல்லியிடம் சொல்லவும், அவளும் வெளியே வந்தாள்.

நித்திலாவுக்குச் சற்று அதிர்ச்சிதான். ஆனால் கூடவே, 'அப்பாடா... தப்பித்தோம்!' என்ற உணர்வும் தோன்றவும்

ஆச்சரியப்பட்டுக் கொண்டாள். அறையை விட்டு வெளியே வந்தாள்.

'ப்ளீஸ்... யோசியுங்க...' என்று மாப்பிள்ளையிடம் கெஞ்ச திர அப்பாவின் கையைப் பிடித்தாள்.

'அப்பா... யாரையும் கெஞ்ச வேண்டாம். அப்படி ஒரு வாழ்க்கை அவசியமில்லை!' என்றாள்.

ஸ்ரீராமின் கூட்டம் புறப்படுகையில், சந்திரசேகர் அவ விடம் சென்று, 'டேய் ஸ்ரீராம்! நியாயமில்லடா!' என்று வாதாடினான். 'போடா... உன்னைப் போல ஒண்ணுமில்லாத வன்னு நெனச்சியா...? எங்க அந்தஸ்துக்கு ஒத்து வர வேண்டாமா...?' என்றபடி நடந்தான்.

'டேய்... தெய்வம் கூட மன்னிக்காதுடா... பெண் பாவம்டா!' என்று அவன் மீண்டும் சொல்லவும்..

'ரொம்பப் பாவமா... இருந்தா நீயே தாலியைக் கட்டு. இப்ப உன் ஸ்டேட்டஸுக்குத்தான் சரியா இருக்கும்!' என்று மிதப்பாகச் சொல்லவும், சந்திரசேகரன் திகைத்துப் போய் நின்றான்.

'இப்படியானதுக்கப்புறம், இந்தக் கல்யாணம் நடந்தே ஆகணும் சார். அவன் என்ன சொன்னான் - நீயே தாலியக் கட்டுன்னு. ஆமா, நீங்களே தாலியக் கட்டுங்க...' என்றான் ராகவன், யாரும் எதிர்பாராத விதமாக.

'சார்... இது விளையாட்டு சமாச்சாரமில்லை. எனக்கு இரண்டு தங்கைகள் கல்யாணத்துக்கு இருக்காங்க!' என்று சந்திர சேகரன் தயங்கினான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரம் எழுந்து. 'உங்க பேரண்ட்ஸ் எங்க சார்? நான் பேசறேன்...' என்று போனார்.



இரு கைகளைக் கூப்பிக் கொண்டு அவர்களிடம் என்ன சொன்னாரோ, தெரியவில்லை. சந்திரசேகரனின் அப்பா வந்து, 'சேகர்! நீ தாலியைக் கட்டு!' என்றார்.

அவன் ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்றான்.

அதற்குப் பிறகு விஷயங்கள் வேகமாக நடந்தன.

எல்லா ஏற்பாடுகளும் தயாராய் இருந்தன என்பதால், மாப்பிள்ளை வேறு என்பதைத் தவிர, எல்லாம் சிறப்பாகவே நடந்தன.

சந்திரசேகரன் அப்பா இரவோடிரவாக இரண்டு கார்களை ஷெட்டில் அடிக்கச் செய்து உள்ளூரில் இருந்த நெருங்கிய உறவினர்களை எல்லாம் காலைக்குள்ளாகவே வரவழைத் தார்.

திருமணம் முடிந்த பிறகு தங்கள் வீட்டுக்குப் போனவுடன் சுந்தரம் மகளையும், மருமகளையும் அமர வைத்து நடந்ததை யெல்லாம் சொன்னார்.

இருவரும் மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள்.

'உண்மையில் எந்தப் பணமும் நஷ்டமாகலை. ஸ்ரீராமைக் கழற்றி விட வேண்டியிருந்தது. அதற்காகத்தான் இத்தனை யும் செய்தோம்..' என்றார்.

ராகவன் ஒரு பெட்டியைக் கொண்டு வந்து தர... 'மாப் பிள்ளை! என் திருமணப் பரிசு. ரெண்டு லட்ச ரூபா இருக்கு... உங்க சிஸ்டர்ஸ் மேரேஜ் செலவு பூராவும் என்னுது!' என்று அவன் கையில் வைத்தார்.

அவன் பெட்டியைத் திறந்து ஒரேயொரு நூறு ரூபாயை மட்டும் எடுத்துச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

'ரொம்ப தாங்க்ஸ்... மாமா. வாழ்க்கைங்கறது வியாபார மில்ல. உங்கள் மகள் கழுத்தில் தாலி கட்டுவது என்று

முடிவெடுத்தது அவளுக்காக மட்டுந்தான். என் சிஸ்டர்ஸ் மேரேஜ் என் பொறுப்பு. என் கடமை. அதை நானே பாத்துக்கறேன்...' என்று அவர் கையிலேயே திரும்ப வைத்தான்.

'இந்தப் பிரச்சினைக்கு நானும் ஒரு வகையில் பொறுப்பு. ஸ்ரீராமைப் பத்தி எங்கிட்டதான் விசாரிச்சீங்க. ரொம்ப நல்லவன்னு நான் ஸ்டிராங்காச் சொன்னேன். ஆனா... அது தவறாப் போச்சு. அதனாலதான் ஒத்துக்கிட்டேன்!' என்றான்.

'நான் சொன்னேன் இல்ல...' என்பது போல ராகவன் சித்தப்பாவைப் பாக்க... அவர் மனம் நிறையப் புன்னகைத்தார்.

அதற்குப் பிறகு சூழ்நிலை மாறியது. எல்லாரும் ஸ்ரீராமை மறந்தே போனார்கள். கலகலப்பானார்கள்.

விமலா தனிமையில் நித்திலாவிடம், 'இவரு முகந்தான் நினைப்புக்கு வருதுன்ன. அவரே மாப்பிள்ளையாயிட்டாரு, போ!' என்று கலாட்டா செய்தாள். பிறகு, 'நித்திலா... எனக்கு என்னவோ தெய்வம் உன்னைக் காப்பாத்திருச்சுன்னு தோணுது. அந்த ஸ்ரீராமை எனக்குப் பிடிக்கவேயில்லை!' என்றாள்.

'எனக்குந்தான்!' என்று நித்திலா சொல்லவும், திகைத்துப் போனாள்.

'அடிப்பாவி... அப்புறம் ஏன் ஒத்துக்கிட்டே?' என்றாள்.

'அப்பா சொன்னாச் சரியா இருக்கும்னு நெனச்சேன். அவரு அவ்வளவு சிரமப்பட்டு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்காரு. எப்படி மறுக்கிறது?'

'நல்லா... ஆச்சு போ!' என்று மீண்டும் திகைத்தாள். 'நல்ல வேளை ஆண்டவனுக்கு நன்றி சொல்லு!' என்றாள்.

நித்திலவல்லி நிஜமாகவே பூஜையறைக்குச் சென்று கடவுளுக்கு நன்றி சொன்னாள்.



அன்றே முதலிரவு என்றார்கள்.

அவன் அறையில் அமர்ந்திருந்தான். அவள் வந்தபோது கையில் ஏதோ புத்தகம் வைத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

அவளைப் பார்த்தவுடன் புத்தகத்தை மூடி வைத்தான். எழுந்து நின்றான். அவள் செய்வதறியாது நிற்கவும், 'உட்காருங்க.' என்று தன்னருகில் இடம் காட்டினான். அமர்ந்தாள். அவனும் அமர்ந்தான்.

அன்று புறப்படுவதற்கு முன்பாக அப்பா சொல்லிவிட்டுச் சென்றது நினைவுக்கு வந்தது. 'டேய் சேகர், ரெண்டு தங்கைகள் இருக்காங்க. அப்படி யிருக்கையில இப்படிக் கல்யாணம் செய்ய வேண்டியதாப் போச்சுன்னு அம்மாகிட்ட வருத்தப்பட்டியாம். ஏதாவது தியாகம் செய்றதாக நினைச்சுக்கிட்டு அந்தப் பொண்ணுக்கு அநியாயம் செஞ்சுராதே. ஏற்கெனவே, நடந்து போன விஷயங்கள்ல அந்தப் பொண்ணு அதிர்ச்சியா இருக்கும். அன்பா, நட்பா நடந்துக்க!' என்று அழுத்தமாகச் சொல்லியிருந்தார்.

'நித்திலா...' என்றான்.

'ம்...'

'முதல்ல ஒண்ணு தெளிவு செய்துக்குவமா... உங்களுக்கு இந்தக் கல்யாணத்துல ஒண்ணும் ஆட்சேபணையில்லையே...' என்றான்.

அவள் இல்லையென்று தலையாட்டினாள். 'இல்லே... எல்லாம் எதிர்பாராத விதமாய் நடந்துருச்சு... நீங்க ஸ்ரீராம் மாப்பிள்ளைன்னு ஒரு இம்ப்ரெஷன்ல இருந்திருப்பீங்க...' என்றான்.

'இல்லே... நான் கல்யாணம் முடியறவரைக்கும் எந்த நினைப்பும் வச்சுக்கறதில்லேன்னு முடிவு செஞ்சிருந்தேன்,' என்றாள்.

'ஓ...!' என்று சற்று அமைதியானான். 'தட்ஸ் ரியலி குட்!' என்று சிரித்தான்.

'உங்களுக்கு என்ன வயசு?'

'இருபத்தொன்னு.'

'எனக்கு இருபத்தைந்து!' என்றவன் சற்றுப் பெருமூச்சு விட்டான்.

'ரெண்டு சிஸ்டர்ஸுக்கும் மேரேஜ் செஞ்சு வச்சுட்டு அப்புறம் ரெண்டு வருஷத்தில் செஞ்சுக்கலாம்னு இருந்தேன்,' என்றான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவன் சிரித்தான். சிரிக்கும்போது அந்த நிறத்துக்கு அவன் பற்கள் வெண்மையாய்ப் பளீரிடப் பார்க்க அழகாக இருந்தது.

'அதுக்காக... உங்களைப் பிடிக்கலேன்னு இல்லே...' என்றான். 'வி ஆர் பிரண்ட்ஸ். ஓகே... உங்களுக்குப் பிடித்தது... பிடிக்காதது எல்லாம் சொல்லலாம்,' என்றான்.

'மாமா... அத்தை உங்க சிஸ்டர்ஸ் உஷா, நிஷா எல்லாரையும் பிடிச்சது... ஆனா ஒண்ணு பிடிக்கலே...' என்றாள்.

'என்ன?' என்று அவன் திடுக்கிட்டுப் பார்க்கவும் -

'இந்த வாங்க... போங்கன்னு பேசறீங்களே... அது...' என்றாள்.

'ஓ...' என்று அவன் சிரித்து விட்டான்.

பிறகு சற்று நேரம் இரண்டு பேருடைய அலுவலகங்களைப் பற்றிப் பேசினார்கள். இயல்பானார்கள். சற்றுச்



சிரித்துப் பேசியதற்குப் பின்பு, திடீரென்று அமைதியானார்கள்.

பேசிக் கொண்டே சற்று நெருங்கி அமர்ந்திருக்கிறான் என்பது புரியவும் அவள் தலை குனிந்து கொண்டாள்.

அவன் எதிர்பாராத விதமாக, 'வாட்ச் ஓடுதுதானே?' என்றபடி, அவள் வலது மணிக்கட்டைப் பிடிக்கவும், அவள் படபடத்துப் போனாள்.

அவனை நிமிர்ந்து பார்த்து விட்டுக் கண்கள் படபடக்கத் தலை குனிந்தாள். லேசான அதிர்ச்சி தெரிந்தது.

சட்டென்று அவன் கையை எடுத்து விட்டான், பிடிக்கவில்லையோ என்று நினைத்து. அன்று காலை நண்பர்கள் கலாட்டா செய்து கொண்டிருந்தபோது... அந்த சுதாகர் சொன்னது நினைவுக்கு வந்தது.

'டேய்... லேடீஸ் டிக்ஷனரியே வேற மாதிரி. பிடிக்கலைன்னு சொன்னா பிடிக்குதுன்னு அர்த்தம். என்னங்க நீங்க... உங்களுக்கு... அறிவே இல்லையான்னு என் வைஃப் திட்டினான்னு வச்சுக்க... அது திட்டே கிடையாது. கொஞ்சல்றா... சின்னப் பையன்... வகையாச் சிக்கிக்கிட்டே முக்கியமான விஷயத்துல வெட்கப்படறாங்க. பயப்படறாங்கன்னு ஏமாந்துராத. நீ வேற ரொம்ப சாஃப்ட் டைப். தெரிஞ்சு நடந்துக்க!' என்று அறிவுரை சொல்லிவிட்டு இடி இடி என்று சிரித்தது நினைவுக்கு வந்தது.

மெதுவான உணர்ச்சிகரமான குரலில்... 'ஒண்ணும் அப்ஜக்ஷன் இல்லையே?' என்று மீண்டும் அவன் கையைப் பிடிக்கவும்... அவள் ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்து கொண்டாள்.

அவன் விளக்கை அணைத்தான்.



## 4

மறுநாள் அவளது வீடு வந்து சேர்ந்தார்கள். அவளது வீட்டின் கால்பங்கு கூட இல்லாத அளவான வீடு.

ஒரு கிரவுண்டு பூர்வீக நிலத்தில் பின்பகுதியில் இருந்த ஒட்டு வீட்டுப் போர்ஷன்கள் இரண்டையும் வாடகைக்கு விட்டு, ஹவுஸ் லோன் புண்ணியத்தில் ஒரு வீடு கட்டியிருந்தார் சண்முகம் - அவன் அப்பா.

ஒரு ஹால், ஒரு சிறிய பெட்ரூம், சற்றே பெரிய பெட்ரூம், சின்னதாக ஒரு சமையலறை, தொட்டாற்போல் ஒரு சின்ன ஸ்டோர்ரூம், இரண்டு அட்டாச்டு பாத்ரூம் என்று அளவான வீடு.

அவளது மாமியார் பெரிய பெட்ரூம் மாத்தித் தரட்டுமா என்ற கேட்டாள்.

'இல்லைங்கத்தே... நீங்க நாலுபேர் அதை ஷேர் பண்றீங்க. எங்களுக்கு இதுவே போதும்!' என்று சொல்லி விட்டாள்..

உஷாவுக்கும், அவளுக்கும் இடையே ஒரு நட்புப் பூத்தது. நிஷாவுக்கு மட்டும், 'அக்காவின் கல்யாணம் முடிவதற்குள் அண்ணன் கல்யாணம் முடிந்ததே!' என்று சற்றுச் சருக்கென்றிருந்தது. ஆனால் அண்ணியின் குணம் பார்த்து ஒட்டிக் கொண்டாள்.

வீட்டைச் சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருந்ததைப் பார்த்துச் சந்தோஷமானாள். எந்த ஆடம்பரப் பொருட்களும் இருக்கவில்லை.



நான்காவது நாளே அவன் அலுவலகத்துக்குக் கிளம்பி னான், தனது ஸ்கூட்டரில்.

நிஷா சற்று வாயாடியாக இருந்தாள். 'ஏண்ணி, முதல் முதலா உன்னைத் தொடறப்ப அண்ணன் என்ன சொன்னாரு?' என்று கேட்டாள்.

உஷா, 'ஏய்... நிஷா! இதையெல்லாமா கேட்பாங்க?' என்று திட்டினாள். ஆனால், நித்திலா சிரித்து, 'வாட்ச் ஒடுதா என்னன்னு கேட்டாரு,' என்றாள்.

மூவரும் பக்கென்று சிரித்து விட்டார்கள். 'நிஜமாத்தான்...' என்று நித்திலா முகம் சிவக்கச் சிரிக்கவும், மறுபடியும் சிரித்தார்கள்.

'நெனச்சேன்! அண்ணன்... இப்படித்தான் ஏதாவது சொல்லிருப்பாருன்னு,' என்று நிஷா மறுபடியும் சிரித்தாள்.

பட்டப் படிப்பு முடித்து வேலை தேடிக் கொண்டிருந்தாள் நிஷா. உஷா சிவில் என்ஜினியரிங்கில் டிப்ளமா முடித் திருந்தாள். வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அம்மா தெய்வானை வீட்டில் இருந்தாள். சண்முகம் ஒரு நிறுவனத்தின் பகுதி நேர எழுத்தராகப் போய் வந்தார். காலை பத்து மணிக்குப் போனால் பிற்பகல் ஒரு மணிக்கு வந்து விடுவார்.

'உழைச்சது போதும்பா... முழு நேர வேலை வேண்டாம்!' என்று மகன் சொல்லி விட்டானாம்.

அன்றைக்குத்தான் பெண்கள் மூவருக்கும் ஒன்றாய் உட்கார்ந்து பேச நேரம் கிடைத்தது. தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, 'மளிகை எவ்வளவு வாங்கு வீர்கள்? காய்கறி எவ்வளவு வாங்குவீர்கள்?' என்றெல்லாம் கேட்டாள் நித்திலா.

'உழவர் சந்தைக்குப் போய்க் காய்கறி வாங்கிடுவோம். மாசத்துக்கு ஆயிரம் ரூபாயில் காய்கறி, எண்ணெய் எல்லாம் முடிச்சுடுவோம். மளிகை இரண்டாயிரம்.... என்று உஷா எல்லாம் தெளிவாக பட்ஜெட் சொல்வதைக் கேட்டு நித்திலாவுக்கு ஒரே ஆச்சரியம்.

தன் வீட்டில் என்ன நடக்கிறதென்று தனக்குத் தெரியாது என்பதும், தானும், ரமேஷும் ஓட்டல், ஷாப்பிங்னு ஊர் சுற்றுவது என்று கிளம்பினால் ஆயிரக் கணக்கில் செல வழிப்பதும், அவளுக்கு மனதில் தோன்ற, நடுத்தரக் குடும்பங் களின் சிரமங்கள் அவளுக்கு மனதில் உறைத்தன.

ஆழ்ந்த சிந்தனையுடன், 'உங்ககிட்ட இருந்து நிறையக் கத்துக்கணும் போலத் தெரியுது. உஷாண்ணி. எங்க வீட்டு வழக்கம் வேற. இங்கத்த வழக்கம் வேற போல இருக்கு. நீங்கதான் எல்லாம் விவரமாய்ச் சொல்லணும்,' என்று ஆத் மார்த்தமாக வேண்டிக் கொண்டாள். உஷாவும், நிஷாவும் நெகிழ்ந்து போனார்கள்.

'அதெல்லாம் ஒண்ணும் கவலைப்படாதே. எங்களுக்குத் தான் உன்னை நினைச்சுப் பாவமா இருந்துச்சு. வசதியான வீட்டுப் பொண்ணு. இங்க வசதிக் குறைவா இருக்கு மோன்னு...'

'அப்படி யெல்லாம் இல்லே. போதும். இதுக்கு மேலே என்ன வசதி வேணும். ஆனா உங்களை யெல்லாம் புரிஞ்சுக்க நீங்கதான் ஹெல்ப் பண்ணணும்!' என்றாள்.

'ஆகட்டும் அம்மணி. அருள் செய்வோம். ஆனா, அதுக்கு அப்பப்ப கொஞ்சம் லஞ்சம் கொடுக்கணுமே...' என்றாள் நிஷா.

'கொடுத்தாப் போச்சு...'என்று சிரித்தவள் -



'நான் பத்து நாள் லீவு போட்டிருக்கேன். இப்ப என்ன செய்யலாம். வீட்டைக் கொஞ்சம் மாத்தியமைக்கலாமே!' என்றாள்.

'எப்படி?' என்று சகோதரிகள் ஆர்வமானார்கள்.

'இப்போ... உங்க பெட்ருமில் ஒரு மர அலமாரில உங்க புடவையெல்லாம் வச்சிருக்கீங்க, நீங்க. எங்க அப்பா எனக்குத் தேவையே இல்லாம இரண்டு, மூணு பீரோ அனுப்பி வச்சிருக்காரு. அது ஒண்ணுல எல்லாத்தையும் அடுக்கி, ஈ ஒரு பீரோ உங்களுக்கு லஞ்சமாம்!' என்றாள்.

ஆர்வமாகச் செய்தார்கள். மரப்பீரோவை ஸ்டோருக்கு நகர்த்திச் சில சாமான்களை அதற்குள் வைக்க, ஸ்டோர் ரூமில் சற்று இடம் கிடைத்தது.

'இந்த இடம் எதுக்கு?' என்றாள் நிஷா.

'பூஜையறை!' என்றாள் நித்திலா. அதற்காக ஒரு ஷெல்ப் ஒதுக்கினார்கள்.

தங்கள் பெட்ருமில் இருந்த பீரோவைக் காலி செய்கையில் புதியதாக இருந்த புடவைகளில் உஷாவுக்கும், நிஷாவுக்கும் இருவருக்கும் தனித்தனியே நாலைந்து புடவைகளைக் கொடுத்தாள்.

'வேண்டாண்ணி!' என்று உஷா வெகுவாக மறுத்தாள்.

'பாத்திங்களா... என்னை வேறயாத்தானே நினைக்கறீங்க. ப்ளீஸ்... வாங்கிக்குங்க. எனக்கு சிஸ்டர்ஸே இல்லைன்னு ரொம்பக் கவலைப்பட்டுக்கிட்டிருந்தேன்! நீங்க கிடைச்சீங் கன்னு ரொம்ப சந்தோஷமா இருக்கு!' என்றாள்.

அவள் பட்டுப்புடவைகளைப் பார்த்து அவர்கள் மலைக்க, 'இதுவும் அப்படித்தான். நீங்க எப்ப வேணா எடுத்துக் கட்டிக்கலாம்!' என்றாள்.

'ஐயோ... அண்ணி! அப்படி மட்டும் சொன்னே... தீந்தே. உன்னோட எல்லாப் புடவையையும் எடுத்து ஒரு வழி பண்ணிடுவா இந்த நிஷா...' என்றாள் உஷா கலவரமாக.

'கட்டட்டுமே...'என்றாள். பிறகு வெட்கத்துடன் சிரித்துக் கொண்டு, 'உங்கண்ணனுக்கு சிம்பிளா இருந்தாத்தான் பிடிக்குது. அவருக்குப் பிடிச்ச மாதிரி நான் சிம்பிளா இருந்துட்டுப் போறேன்!' என்றாள். உஷாவும், நிஷாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அண்ணி, நீ ரொம்ப நல்லவளா இருக்கே. இது சினிமாக் கதை மாதிரி இருக்கு. என்னாலேயே நம்ப முடியலே!' என்றாள் நிஷா.

'அதை அப்புறம் ஆராயலாம். இப்ப இந்தக் காலி பீரோவைத் தூக்கு. நாமதான் செய்யணும்,' என்று மூணு பேரும் பீரோவை நகர்த்திக் கொண்டு வர, ஹாலில் சற்று இளைப்பாறினார்கள்.

இழுத்துக் கட்டிய புடவையுடன் மூன்று பேரும் பீரோவைச் சுற்றி நின்று ஜோக்கடித்துச் சிரித்துக் கொண்டிருக்கையில், சந்திரசேகரும் உள்ளே நுழைந்தான் -

'இப்ப இங்க என்ன நடக்குது?' என்றபடி.

'ஆஃபீஸ் போனியே... அண்ணா!' என்று நிஷா ஆச்சரியமாய்ப் பார்க்க...

'அவன் வந்தா... நாங்க விட்டுருவமா...' என்றபடி உள்ளே வந்தார் அவன் மேனேஜர்.

'உட்காருங்க...' என்று உபசரித்தார்கள் பீரோவை ஓரத்துக்கு நகர்த்தியபடி. அவனும் கைகொடுத்தான்.

'அம்மா... திடீர்க் கல்யாணம். அதனாலே அவன் லீவ் போடலை. நானே லீவ் குடுத்துட்டேன். அம்மா.... நீ வந்த



நேரம். உன் ஹஸ்பெண்டுக்கு ப்ரமோஷன். மேனேஜர் ஆயிட்டான். நான் டிரான்ஸ்பர்ல போறேன், எங்க ஊருக்கே. ஆபீஸ் கார் பிரஸண்ட் பண்ணிருக்கு!' என்று கார் சாவியை நீட்டினார்.

அவள் அவனைப் பார்த்தாள்.

கண்ணைக் காட்டவும், வாங்கிக் கொண்டாள். மானேஜர் அதைப் பார்த்துச் சிரித்தார்.

அன்று மாலை அவளது தந்தையும் தாயும் வந்தார்கள்.

'அம்மா... உனக்கென்று வந்த பணம் பரிசுத் தொகை!' என்று ஒரு பெரிய தொகையைக் கவரில் கொடுத்தார்.

நித்திலா கணவனைப் பார்க்கவும், அவன் வேறு பக்கம் பார்த்தான். ஆனால் அவளுடைய அப்பா, 'சும்மா... நீ அவரைப் பார்க்காதே... உன்னோட பணம் இது!' என்று கையில் திணித்தார்.

பிறகு சண்முகத்தைப் பார்த்து, 'சம்மந்தி... தப்பா நினைக்கக் கூடாது!' என்று சொல்லியபடி, டிரைவருக்குக் கண்ணைக் காட்ட, நிறையத் தின்பண்டங்கள், பழங்கள், அரிசி மூட்டை, பருப்பு என்று ஏதேதோ வந்து இறங்கின.

சந்திரசேகரன் ரொம்பவும் தடுக்க வேண்டாம் என்று விட்டு விட்டான்.

அன்றிரவு...

நித்திலா அவனிடம் இன்னும் 5 நாள் லீவை என்ன செய்யலாம் என்று கேட்க...

'ரெண்டு நாள் வெளியூர் கூட்டிட்டுப் போறேன். வர்றியா?' என்றான்.

'வர்றேன்,' என்றாள் உற்சாகமாய்.

போனார்கள்.

அந்த இரு நாட்களிலும் அவர்களுக்குள் ஒரு நட்பு மலர்ந்தது. ''கடவுள் எனக்குச் சில பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறான் நித்தி. அவைகளை ஓரளவுக்கு நிறைவேத்திட்டு என்னைப் பத்தி-யோசிக்கலாம்ன்னு இருந்தேன்!' என்றான்.

'இப்ப என்ன, வருத்தப்படறீங்களா? சந்தோஷப் படறீங்களா?'

'கண்டிப்பா இப்... எனக்கு வருத்தம் இல்லை. பயம் இருந்தது. இந்த ஒரு வாரத்துல பாத்தவரைக்கும் நீ நல்ல பெண். குணவதின்னு புரிஞ்சிருச்சு. மனசு கொஞ்சம் நிம்மதியாயிருக்கு...'

'அப்பாடா! என்ன சொல்லப் போறீங்களோன்னு பயந்துட்டேன், மேனேஜர் சார்...'

அவன் கன்னத்தைக் கிள்ளி விட்டுச் சிரித்தான்.

'அது சரிங்க... அஸிஸ்டென்ட் மேனேஜர் மேடம். ஆனா கூட்டுக் குடும்பத்திலே சில தியாகங்கள் செய்யணும். பொறுத்துப் போகணும். இரண்டு பெண்கள் மேரேஜ் இருக்குங்கறதுனால... ரொம்பச் சிக்கனமா இருக்க வேண்டியிருக்கு' என்றான் லேசாக ஒரு பெருமூச்சு விட்டு.

'ஐ அன்டர்ஸ்டாண்ட். என்னால எவ்வளவு முடியுமோ... அவ்வளவு கோ-ஆபரேட் பண்றேன். ஆனா எனக்குச் சிலதெல்லாம் தெரியாது. நீங்க எப்படி கைட் பண்ணினாலும் அப்படி... இருந்துக்கறேன்,' என்று சொல்லவும், நிம்மதியானான்.

'அப்புறம்... டக்...டக்னு தூக்கிக் குடுத்துப் பழக்கினா... அப்புறம் சங்கடங்கள் வரக் கூடாது!' என்றான்.

'ஏன் அப்படிச் சொல்றீங்க?' என்றாள்.

'இல்லே. என் சிஸ்டர்ஸுக்குப் புதுப் புடவைகள்ளாம் நிறைய எடுத்துக் குடுத்திருக்கே...'



'ஓ... எல்லாம் சுயநலம்தான். இப்ப எனக்கு எங்கப்பா... ஒரு பீரோ நிறையப் புடவைகள் குடுத்திருக்காரு. இங்க நீங்களும் ஒருத்தருக்குத் தனியா எதுவும் எடுக்க முடியாது. இனிமே எனக்கு ஒருத்திக்கு மட்டும் ஒரு புடவை நீங்க எடுத்துட்டு வந்தா நான் என்னோட ரெண்டு புடவைகளைக் குடுத்துருவேனாம். சிக்கனம்தானே...' என்றாள்.

'இது நஷ்ட வியாபாரமா இருக்கே... நான் ஒரு புடவை எடுத்துக் குடுத்தா நீ எனக்கு ரெண்டு புடவை லாபம் செய்து தரேங்கறே...' என்று சிரித்தான்.

'இது லாப வியாபாரம்தான். பதிலுக்கு நீங்க உங்க அன்பைக் குடுப்பீங்களே. அதுக்கு என்ன விலை போடறது?' எனவும், சற்றே உணர்ச்சி வசப்பட்டான்.

இழுத்து அணைத்துக் கொண்டான். கொஞ்சி மகிழ்ந்தான். அவளும் மகிழ்ச்சியோடு இடம் கொடுத்தாள்.

'பாத்திங்களா... இப்பவே போனஸ் கிடைச்சிருச்சு!' எனவும் சிரித்தான்.

ஆனால்... சற்றுக் கழித்து... 'சந்துரு!' என்றாள்.

'ம்...'

'உங்க குடும்ப வரவு செலவு பத்தியெல்லாம் சொல்லுங்களேன்.'

அவனது குடும்ப வரவு செலவுகளைப் பத்தியெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

ஒரு தங்கைக்குத் திருமணம் செய்யும் அளவுக்குச் சேமிப்பு செய்திருக்கிறேன் என்றபோது நெகிழ்ந்து போனாள்.

'என்ன சந்துரு! இந்த வயசுக்குரிய சந்தோஷங்களையும் அனுபவிக்கணும்!' என்றாள்.

'ம்... ரொம்ப ஒன்னும் சாமியாராவும் இருக்கிறதில்லே. கொஞ்சம் வெளியேயும் சுத்துறதுதான். ஃபாமிலியைக் கூட்டிட்டுப் போவேன். உஷா, நிஷாவுக்கு பாக்கெட் மணி கொடுப்பேன்.

'ஆமா... உஷான்னி அதைக்கூட சேவ் பண்ணித்தான் வைக்கிறாங்க...' என்றாள்.

'ஆமா... உஷா ரொம்ப ஸ்வீட் கேர்ள்... அம்மாவுக்குக் கொஞ்சம் பி.பி. வந்ததிலிருந்து அவள்தான் வீட்டை எல்லாம் கவனிக்கிறாள்,' என்றான்.

'எங்கப்பா பணம் கொடுத்தப்ப வாங்கியிருக்கலாம் தானே...'

'அப்புறம் ஸ்ரீராமுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் இருக்கும்? வேண்டாம் நித்தி. நம்ம பிரச்சினைகளை நாமே கவனிப்போம்!' என்றான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை. 'சரி... இனிமே என் சம்பளமும் வரும். ரொம்ப நெருக்கிப் பிடிக்க வேண்டாம். அதுக்காக ஆடம்பரமாய் இருக்க வேண்டாம்...' என்றாள்.

'இது நல்ல... பாலிஸி!' என்றான்.

'ஆனா, உங்க சிஸ்டர்ஸை நான் அப்பப்ப வெளியே கூட்டிட்டுப் போவேன். போதும் பொறுப்பு. அவங்களும் கொஞ்சம் என்ஜாய் செய்யட்டும்!' என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, 'அதுவும் சரிதான்!' என்றான்.

'நான் ஒன்னு சொல்லட்டுமா?'

'ம்...'

'இல்லே... ரெண்டு வயசுப் பொண்ணுங்க இருக்கற இடத்துல நாம அளவா நடந்துக்கறது நல்லது!' என்றாள்.



அவன் அவளை வியப்பாகப் பார்த்தான்.

'தாங்க்ஸ் நித்தி. நானே இதை எப்படிடா சொல்றதுன்னு யோசிச்சிட்டிருந்தேன். நமக்கு இன்னும் காலம் இருக்கு. அவங்களுக்குச் செய்ய வேண்டியதைச் செஞ்சுட்டு...'

'தட்ஸ் ரைட்... சந்துரு. ஆனா ஒரேயொரு விஷயத்துக்கு மட்டும் நீங்க ஒத்துக்கணும்,' என்றாள்.

'சொல்லு நித்தி.'

'அப்பா பரிசுப் பணம் பூராத்தையும் எனக்குக் கொடுத்திட்டார்.. கல்யாணத்துக்கு முந்தின சம்பளமெல்லாம் சேமிப்பா இருக்கு. நம்ம வீட்டுலயும் படிகள் உள்ளிருந்து போற அமைப்பாத்தான் இருக்கு. அதனாலே மேலே ஒரு ஹால், ஒரு பெட் ரூம், பத்துக்குப் பதினாறுன்னு அளவிலே இரண்டு ரூம் மட்டும் போட்டுக்கலாம். நமக்கும் பிரைவஸி கிடைக்கும்.'

அவன் யோசித்தான்.

'நல்லா யோசியுங்க, சந்துரு... அந்தப் பெரிய பெட்ரூமை அத்தை, மாமா, உஷான்னி, நிஷான்னு நாலு பேர் ஷேர் பண்ணிக்கறாங்க. ரொம்ப உறுத்தலா இருக்கு...' என்றாள்.

அவன் சற்று நேரம் யோசித்து விட்டுச் 'சரி' என்றான்.

அவள் மகிழ்ச்சியானாள்.

பிறகு அவள் சொன்னாள். 'சந்துரு! இங்கே உஷான்னியைப் பார்த்து எனக்கே வெட்கமாய்ப் போச்சு. எவ்வளவு பொறுப்பாக் காரியம் செய்றாங்க. நான் எவ்வளவு விளையாட்டுப் பொண்ணா இருந்திருக்கேன். வாழ்க்கையில எவ்வளவு பணத்தை வேஸ்ட் பண்ணியிருக்கேன். சே...' என்று நொந்து கொண்டாள்.

'அதெல்லாம் நீ வேணும்னு செய்யலை. அது உன் தப்புமில்லை. ஆனா அஸிஸ்டென்ட் மேனேஜரா ரொம்ப நல்லா பர்ஃபார்ம் செய்யறேன்னு பேசிக்கறாங்க. ஒரு பெண் திருமணத்துக்கு முன்னால வாழ்கிற வாழ்வெல்லாம் யாருக்கும் எதிராகச் செய்யப்பட்டதல்ல என்கிறார் எம்.எஸ்.உதய மூர்த்தி. அதனால டோன்ட் வொர்ரி!' என்றான்.

அவள் முகமெல்லாம் பிரகாசமாய் விட்டது.

'யு ஆர் எ ஜெம், சந்துரு!'

'இப்படிச் சும்மா... வெறும் பாராட்டு பாராட்டணுங் கறதுக்கா ஊட்டிக்குக் கூட்டிட்டு வந்தேன்!' என்று சிரித்தான்.

'உஷாண்ணியையும், நிஷாவையும் கூட்டிட்டு வந்திருக் கலாம்.' என்றாள் கவலையாக.

'போக்கரா... ஏய்! நானே ப்ரீயாய் இருக்கணும்னுதான் வந்தேன். நீ என்ன?' என்று குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கிண்டல் செய்தான்.

'போங்க சந்துரு...' என்று அவள் கோபித்துக் கொள்ள, 'சரி... சரி...' என்று அவன் சமாதானம் செய்ய ஆரம்பித்தான்.



## 5

அப்பா, அம்மா இருவரிடமும் தன்னுடைய புகுந்த வீட்டு அனுபவங்களை யெல்லாம் சொல்லிக் கொண் டிருந்தாள் நித்திலா.

'எல்லாரும் நல்லவங்கப்பா... உஷாண்ணி ரொம்பப் பொறுப்பு. நிஷா எல்லாருக்கும் செல்லம்!' என்று அவள்



பேசுவதைப் பரமேஸ்வரி ஆச்சரியமாகப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

இங்கே இருக்கும் வரைக்கும் துரும்பை நகர்த்தாத மகள் அங்கே போய் உதவிகள் செய்வதைக் கேட்டு ஆச்சரியப் பட்டாள்.

'இருடி, கொஞ்சம் டீ போட்டுட்டு வரேன்!' என்று அம்மா எழுந்தபோது, 'இரும்மா... நான் போட்டுட்டு வரேன்...' என்று எழுந்து போனாள்.

அவள் அந்தப்புறம் போனதும் பரமேஸ்வரி கணவரைப் பார்த்தாள்.

'என்னங்க இது. இப்படி மாறிப் போனா... நிஷா நிஷான்னு என்னமோ அவளை இவதான் பெத்த மாதிரிப் பேசறா.. பரவால்லைங்க... நல்ல பேரு வாங்கிடுவா... போலருக்கு!' என்று கன்னத்தில் கைவைத்துச் சிரித்தாள்.

அவரும் சிரித்தார். பிறகு, 'உன் மகளாச்சே... ஈஸ்வரி.. நீயும் என்னோட சிஸ்டர்ஸுக்குப் பொறுப்பாக் கல்யாணம் பண்ணி வச்சவளாச்சே. என்ன நீ பட்ட கஷ்டமெல்லாம் உன் மக பட வேண்டாம்னு பார்த்தேன். கடவுள் வேற மாதிரி நினைச்சிட்டாரு. அவளுக்கும் பொறுப்புகள் அமைஞ்சிருக்க. வசதியா வளர்ந்தவ!' என்ற பெருமூச்சு விட்டார்.

பரமேஸ்வரி, 'எல்லாரோடவும் பழகணும். எல்லாத்தையும் மதிக்கணும்னு சொல்லிச் சொல்லி வளர்த்தது எவ்வளவு நல்லதாப் போச்சு. நம்மகிட்ட செல்லம் கொஞ்சுவா... ஆனா... மத்தவங்ககிட்டே விட்டுக் கொடுப்பா. உங்க பொண்ணாலே எங்கயும் கண்டிப்பா பிரச்சினை வராது... தெரியுமா?' என்றாள்.

'ஏன்... அப்படிச் சொல்றே?'

'இவதான் எல்லாத்தையும் விட்டுக் குடுத்துருவாளே!' என்று சிரித்தாள். 'இப்ப வருவாள்ல அவ வாயைப் பிடுங்கறேன். பாருங்க... தெரியும்!' என்றாள்.

அதேபோல வந்தவளிடம், 'ஏய்... நித்தி...நீ சொல்றதைப் பார்த்தா... அந்த நிஷா எல்லாத்துக்கும் ஆசைப்படுவா போலருக்கு. உன்னோட பெரிய பட்டுப் புடவையெல்லாம் கட்டக் குடுக்காதே!' என்றாள் - கணவனை ஓரக் கண்ணால் பார்த்தபடி.

'அம்மா, நீ என்ன இப்படிச் சொல்றே? பாவம்... கட்டி அனுபவிக்கட்டும்மா.. அம்மா! பூட்டிப் பூட்டி வக்கிறதிலே என்ன இருக்கு? எவ்வளவு அன்பா இருக்கா தெரியுமா, அவ?' என்றாள்.

அப்பாவும், அம்மாவும் சிரிப்பதைப் பார்த்தாள், விழித்தாள்.

'அம்மா... அவ உன் வாயைப் பிடுங்கறா.. உங்கம்மா மட்டும் என்னம்மா, உங்க சின்னத்தைக்கு எல்லாத்தையும் குடுத்துருவா!' என்றார்.

'அப்பா! என்ற சிந்தனையுடன் தன்னைப் பார்த்த மகளிடம், 'என்னம்மா?' என்றார்.

'அப்பா! அத்தையும், மாமாவும் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்காங்க. இனிமேலாவது அவங்களை நல்லா வச்சுக்கணும்.. அவரோட சம்பளம் குடும்பத்தைக் கௌரவமா நடத்தவே போதுமானதா இருந்திருக்கு. இத்தனைக்கும் நடுவிலே ஒரு சிஸ்டர் மேரேஜுக்குச் சேமிச்சிருக்கார், தெரியுமா?' என்றாள் பெருமையாக. 'ஒரு கார் இருந்தா தேவலை... ஆனா அவரு வாங்கிக்க மாட்டாரு...' என்றாள்.

'எம்மா ஆபீஸ்ல கார் குடுத்துருக்காங்களே!'

'அவரு பர்ஸனலா அதை யூஸ் பண்றதில்லே.'

'உனக்குக் கார் வேணும். அவ்வளவுதானே... விடு...' என்றார். மேலே போர்ஷன் எடுப்பது பற்றிப் பேசினாள்.



'செஞ்சர்லாம்மா... அம்மா, மாப்பிள்ளைதானே எதுவும் வேண்டாங்கறார். இல்லாட்டி தூள் கிளப்பிடுவேன்!' என்றார்.

'அவசரம்... வேண்டம்ப்பா... அவங்கள்ளாம் நம்மளைப் புரிஞ்சுக்கறதுக்கு டைம் கொடுப்போம்!' என்றாள்.

'சரிம்மா... ரொம்பப் பெரிய மனுஷியாயிட்டே. நம்ம குறும்புக்கார நித்திலாவா இதுன்னு ஆச்சரியமாயிருக்கு!' என்றார்.

இரண்டு நாட்களில் அவள் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருந்ததால், 'ஒரு நாளாவது உங்க வீட்டில் இரு...' என்று கொண்டு வந்து விட்டிருந்தான் சந்திரசேகரன்.

மாலையானதும் அவன் கார் சத்தம் கேட்டதும், மகள் பரபரப்பாவதையும், முகம் மலர்வதையும் ஓடிப் போய்க் கணவனை வரவேற்பதையும், இரண்டு பேரும் தேநீர் அருந்தும் போதும் ஆஃபீஸ் கலாட்டாக்களை அவன் சொல்லக் கேட்டுச் சிரிப்பதையும் பார்த்தும் பாராமல் கவனித்துக் கொண்டிருந்த அப்பா, அம்மாவிடம்,

'நல்லவேளை... பெரிய தப்பிலேயிருந்து மகளைக் காப்பாற்றிவிட்டேன், பரமேஸ்வரி. இப்பத் தூண்டித் துருவி விசாரிச்சா... அந்த ஸ்ரீராம் பத்தி நிறைய வெளிய வருது. எல்லாரையும் நம்ப வச்சிருக்கான். ராகவன்தான் அன்னைக்கு நம்மளைக் காப்பாத்தினான்!' என்று சொல்லிக் கொண்டிருந்த போதே ராகவன் வந்தான்.

'மச்சான்... என்ன... மாமனார் வீட்டுப் பக்கம் வந்துட்டீங்க?' என்றான் ராகவன்.

'நான் கேக்க வேண்டிய கேள்வியை நீங்க கேக்கறீங்க... எங்க மாமனார் வீட்டுப்பக்கம் நீங்க எங்க வந்தீங்க?' என்றான் சந்திரசேகரன்.

'சார்... உங்க மாமனாராகறதுக்கு முன்னாடியே அவர் எனக்குச் சித்தப்பாவாச்சே... ரெண்டு வீட்டுக்கும் ஒரே பொண்ணு சார்... நித்திலா...' என்றான்.

'அப்புறம் ஏன் சிஸ்டரைப் பாக்க வர்லே?'

'இல்லே... அடிக்கடி வந்தா உங்க வீட்டில என்ன நினைப் பாங்களோன்னு...' என்று ராகவன் தயங்கினான்.

'எங்க வீடா... உங்க சிஸ்டர் வீடு, மச்சான். யு ஆர் ஆல் வேஸ் வெல்கம். அப்புறம் உங்க சிஸ்டருக்குப் பாத்த மாதிரி என் சிஸ்டர்களுக்கும் நல்ல மாப்பிள்ளைகளைப்பாருங்க!' என்றான்.

அதற்கு ரமேஷ், 'ஆனா... இந்த மச்சான் மாதிரி இல்லாமே... கொஞ்சம் சிவப்பா பாருங்க!' என்றான்.

எல்லாரும் சற்றே திடுக்கிட்டுப் போனார்கள். சந்திர சேகரன் கோபித்துக் கொள்வான் என்று நினைத்தார்கள். ஆனால் அவன் சிரித்தான். ரமேஷின் காதைத் திருகினான்.

'அடேய்... பம்பளிமாஸ்... அதுல விஷயம் இருக்குடா. நான் கொஞ்சம் கறுப்பா இருக்கறதுனாலதான் உங்கக்கா என் பக்கத்துல நிற்கும் போது கொஞ்சம் கூடுதலா அழகா... சிவப்பா தெரியறா...' என்றான். எல்லாரும் சிரித்தார்கள்.

ரமேஷ் சளைக்காமல், 'ஒரே ஒரு ஆறுதல். லக்ஷணமாய் இருக்கீங்க!' என்றான்.

'உங்கக்காவுக்கு ஏதாவது குறையிருக்கா? கேளுடா,' என்று அவளைக் குறும்பாகப் பார்த்தான்.

அவள் முகம் சிவந்தது. அவசரமாகத் தட்டுக்களை அடுக்க ஆரம்பித்தாள். ஆனால் யாருக்கும் முகம் காட்டாமல்...

'ஒரே ஒரு குறையிருக்குடா... ரமேஷ்,' என்றாள்.



சந்திரசேகரன் சற்றே துணுக்குற்றான். அவள் தொடர்ந்து, 'குறை சொல்றதுக்கு ஒண்ணுமே யில்லைங்கற ஒரே குறை தான்!' என்றாள்.

அவன் முகம் மலர்ந்தது.

'தாங்க்ஸ் மேடம்!' என்றான்.

இந்தக் கலாட்டக்களையெல்லாம் கண்டும் காணததுமாகப் பெரியவர்கள் இருவரும் ரசித்துக் கொண்டார்கள்.

தட்டுக்களை உள்ளே வைத்து விட்டு வந்த நித்திலா அப்பாவிடம், 'அப்பா! ரூம் கட்டற மேட்டரை ராகவ்கிட்டே சொல்லலையா?' என்றாள்.

ராகவன் சிவில் என்ஜினியர். நாணயமான முறையில் கட்டித் தருபவன் என்று பெயர் எடுத்திருந்தான். அதனால் தொடர்ந்து வேலைகள் இருந்தன.

பிறகு அறை கட்டுவது பற்றித் திட்டமிட்டார்கள். இப் போதைக்கு இரண்டு அறைகள் போதுமென்றான் சந்திர சேகரன்.

ராகவன் ஒரே ஒரு திருத்தம் சொன்னான். பத்துக்கு இருபதா ரெண்டு கட்டினா நாளைக்கு சிஸ்டர்ஸ் மேரேஜ் ஆனா ஹாலைத் தடுத்து ஒரு பெட்ரூம் போட்ரலாம். கீழே ஒரு சின்ன பெட்ரூம் இருக்கு. எல்லாருக்கும் பிரைவசி கிடைக்கும் என்றான். ஒத்துக் கொண்டார்கள்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான் ராகவன்.

'ஏன், மச்சான்... அந்த ஸ்ரீராம் என்ன ஆனான்?' என்றான்.

'தப்பெல்லாம் என் மேலங்கற மாதிரி ஏதோ ஆஃபீஸ்ல சொல்லியிருக்கான். கல்யாணத்துக்கு வந்தவங்க கொஞ்சம் பேர் இருந்தாங்க. அவங்கல்லாம் பணப் பிரச்சினையைப் பெரிசு பண்ணி அவனாத்தான் வெளியே போனான்னு

சொல்லிருக்காங்க... மறுபடியும் மதுரைக்கே டிரான்ஸ்ஃபர் கேட்டு லாங் லீவ் போட்டுருக்கான்...'

அவன் பேச்சு வந்தவுடன் நித்திலாவின் முகம் கறுத்துப் போனது. எதேச்சையாக எழுவது போல் எழுந்து அந்தப் பக்கம் போய் விட்டாள்.

'என்னையே நம்பவச்சுட்டான். பயங்கரமான ஆக்டர்!' என்றான் சந்திரசேகரன்.

'நல்லவேளை, மச்சான். நித்தி தப்பிச்சா. ஆனா ஒன்னு தெரியுமா? பெண் பார்க்க வந்தப்பவே நீங்க கூட வந்தீங் கல்ல அப்பவே...' என்று அவன் ஏதோ சொல்ல முயற்சிக்க, உள்ளேயிருந்து முகம் சிவக்க வந்த நித்திலா, 'அண்ணா! சொல்லாதே...' என்ற அவன் வாயைப் பொத்தினாள்.

ஆனால், அன்றைக்கு நித்திலாவுக்குத் தெரியவில்லை. ராகவனைப் பேச விட்டிருந்தால் பின்னால் வந்த பல பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம் என்று... வாழ்க்கை நிம்மதியாக இருந்திருக்குமென்று...!



## 6

ராகவன் வேகமாக வேலை ஆரம்பித்து விட்டான். அறைகள் வேகமாக உருவாகிக் கொண்டிருந்தன.

சுந்தரம் ஒரு நாள் மாலையில் வந்து, 'அம்மா... உங்க மேனேஜர் பேசினார்ம்மா. கலபத் தவணைல உங்களுக்குக் கார் குடுத்துர்றாங்களாம். அரைப்பங்குத் தொகையை ஆஃபீஸே



ஏத்துக்குதாம்!' என்றார். அவளுக்கு மட்டும் புரியும்படியாகக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு.

'அவரைக் கேக்கணும்பா...'

'ஏம்மா... ஆஃபீஸே அரேன்ஜ் செய்யும்போது அவரை என்னத்தைக் கேக்கறது?' என்ற போது, சந்திரசேகரன் அறைக்குள்ளிருந்து அவர்களை வரவேற்றான்.

'சம்பந்தியைப் பார்க்கணும்,' என்றார். இரண்டு பேரும் கோவிலுக்குப் போயிருந்தார்கள். வரும்வரை காத்திருந்தார். வந்ததற்குப் பிறகு, 'சம்பந்தி... முக்கியமான ஒரு விஷயம்!' என்றார்.

'சொல்லுங்க,' என்றார்.

'எங்க மதர் தன்னோட பேர்ல இருந்த வீட்டைப் போகும் போது நித்திலாவுக்கு எழுதி வச்சாங்க. கல்யாணம் முடிஞ்ச வுடன் வீட்டைக் கொடுத்துடணும்னு உயில் எழுதி வச்சிருக் காங்க.'

சண்முகம் திணறினார். 'எல்லாத்தையும் பொண்ணுக்கே குடுத்துட்டா...'

'எல்லாத்தையுமா...' என்று சிரித்தார். 'இன்னும் எதையுமே கொடுக்க மாப்பிள்ளை ஒத்துக்க மாட்டேங்கறாரு... அதெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம். இப்ப இந்த வீட்டை மகளுக்குக் கொடுத்தாகணும். மகனுக்கு எங்க அப்பா ஒரு வீடெழுதி வச்சிருக்கார். அதெல்லாம் கவலைப்படாதீங்க...'

சண்முகம் மகனைப் பார்த்தார்.

அவன் பேசாமல் இருப்பதைப் பார்த்தார். நித்திலா மெதுவாக, 'உயில்ங்கும்போது நாம மறுக்க முடியாது, மாமா,' என்றாள்.

சுந்தரம் சாவியை நீட்டவும், சண்முகம் தயக்கத்தோடு வாங்கிக் கொண்டார். சந்திரசேகரன் உறுதியான குரலில், 'வீட்டை நித்தி பேருக்கு எழுதிருங்க!' என்றான்.

'அது செஞ்சுக்கலாம், மாப்பிளே...' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே... உஷா சூடாக டிஃபனும், நல்ல காஃபியும் கொண்டு வந்து கொடுத்தாள்.

'உஷா... உன்னைப் பத்தி என் மக சொல்றதைக் கேட்டா எனக்கு உன் வயசுக்கேத்த ஒரு மகன் இல்லாமப் போயிருச் சேன்னு இருக்கு!' என்று சிரித்தார்.

உஷாவின் முகம் சிவந்தது. 'மாமா... அண்ணியும் ரொம்ப நல்ல டைப்தான். எவ்வளவு வசதியாய் இருந்தவங்க. இங்கே எப்படி அட்ஜஸ்ட் பண்ணிக்கறாங்க தெரியுமா?' என்றாள்.

'எப்படியோ... எல்லாரும் சந்தோஷமா இருந்தாச் சரி...' என்றபோது ராகவனின் ஃபோன் வந்தது.

'நித்தி... திடீர்னு என் அஸிஸ்டென்ட் ஒருத்தன் லீவு போட்டுட்டான். உஷா வீட்ல இருந்தபடியே எனக்கு டிரா யிங்ஸ் போட்டுத் தருவாங்களா? கேளு,' என்றான்.

உஷாவைக் கேட்டாள். அவள் அண்ணனைக் கேட்டுச் 'சரி' என்றாள். இது நடந்து பத்து நாட்களுக்குள்ளாக அவள் அப்பா ஃபோன் செய்து, 'அம்மா, என் ஃபிரண்ட் ஒருத்தன் கம் பெனிக்கு ரிசப்ஷனிஸ்ட் வேணுமாம். ஒரு மணிக்குப் போனாப் போதும். ஏழு மணிக்கு வந்தர்லாம்...' என்றார். நிஷாவும் உற்சாகமாக ஏற்றுக் கொண்டாள்.

இரண்டு நாள் கழித்து...

அந்த வெள்ளிக் கிழமை... மாமனாரையும் மாமியாரை யும் கோயிலுக்குப் புதுக் காரில் அழைத்துப் போனார்கள். நித்திலாவும், சந்திரசேகரனும், மாமியாருக்கு வெகு மகிழ்ச்சி. 'அந்தக் கோயிலுக்குப் போகலாம்... இந்தக் கோயிலுக்குப்



போகலாம்!' என்று கோயம்புத்தூரின் முக்கிய கோவில்களைச் சொன்னாள். அழைத்துப் போனார்கள்.

திரும்பி வந்தவுடன் மருமகளை அழைத்தாள் தனியாக, சின்னதாக ஸ்டோர் ரூமில் இருந்த அந்த பூஜையறையில் குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் இட்டு, 'பெரிய இடத்துப் பொண்ணா இருக்கியே... எப்படியிருப்பியோன்னு பயந்து கிடந்தேன். வயித்துல பாலை வார்த்தே நித்திலா. என் மகன் இத்தனை பாரத்தைச் சுமக்கறானேன்னு கவலையாய் இருந்தது. நீயும் நல்லவளா இருக்கக் கொண்டு பாரம் குறைஞ்சது. என் மனசு நிறைஞ்சதும்மா...' என்று வாழ்த் தினாள்.

சற்று நேரம் கழித்து, எல்லாரும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது, நித்திலா மாமியாரைப் பார்த்து, 'அத்தை! ரொம்ப சந்தோஷப்பட்டுக்காதீங்க... இனிமேதான் நான் கண்டிஷனெல்லாம் போடப் போறேன்!' என்றாள். மாமனார் துணுக்குற்றுப் பார்க்க, மாமியார் சிரித்தாள். நித்திலா புன்னகையுடன்...

'அத்தை! உங்க பி.பியைக் குறைச்சாகணும். இனிமே உங்க டயட் பூரா என் மேற்பார்வையில்தான். வாக்கிங் போக ணும்...' என்று ஒரு பட்டியல் போட, அவள் கேட்டுக் கொண்டாள்.

'இத பாரு நித்தி. நீ எது செஞ்சாலும் எங்க நல்லதுக்குத்தான் இருக்கும்னு நான் புரிஞ்சுகிட்டேன். நீ எப்படிச் சொன்னாலும் சரி!' என்றாள்.

அதற்குள் நிஷா இடைமறித்து, 'சே... ஒரு சுவாரசியமே இல்லாமப் போச்சு... எந்தச் சண்டையும் இல்லையா... இந்த வீட்டுல?' என்றாள்.

எல்லாரும் சிரித்தார்கள்.

அந்த நேரம் ராகவன் வந்தான். சந்திரசேகரன் ரிலாக்ஸ்டாக சோஃபாவில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அவன் அருகில் அமர்ந்தான்.

'என்ன மச்சான்... குடும்ப மாநாடா?' எனக்கு அனுமதியுண்டா?' என்றான்.

'தாராளமா... மச்சான் ஆச்சே...' என்று அவன் சிரித்தான்.

உஷா உடனே எழுந்து போய், அவனுக்கு ஸ்நாக்ஸும், அவனுக்குப் பிடித்த ஃபில்டர் காபியுமாய் வந்தாள்.

'உஷா, இந்தப் பதினைந்து நாட்களில் நீங்க போட்டுக் கொடுத்த வீட்டு பிளான்களுக்கான பேமெண்ட்!' என்று ஒரு செக் நீட்ட...

'அப்பாகிட்டே குடுத்துருங்க!' என்றாள்.

'சந்திரன்கிட்டே குடுத்துருப்பா...' என்றார் அவர். அவன் வாங்கி அப்பா கையில் கொடுத்து விட்டான்.

'உஷா... உனக்கு ஏதாவது வாங்கிக்க உனக்குன்னு கிடைச்ச முதல் வருவாய்...'என்றான் சந்திரசேகரன்.

'வேண்டாண்ணா, நீ மட்டும் உன்னோட வருவாய்ன்னு தனியாப் பாத்திருந்தீன்னா எங்களோட நிலைமை என்னவா இருந்திருக்கும்.-நீ பாத்து என்ன வேணா செய். என் பணம்னு பிரிச்சு மட்டும் பேசாதே!' என்று உஷா நெகிழ்ந்த குரலில் சொல்லவும், எல்லாரும் சற்று நேரம் அமைதியாகி விட்டார்கள்.

'சரிம்மா... கொடு!' என்று சந்திரசேகரன் அதை வாங்கிக் கொண்டான். மேலும் சில வரை படங்கள் வேண்டுமென்று சொல்லி, எப்படி வேண்டுமென்றும் சொன்னான் ராகவன்.

எப்போதும் மற்றப் பெண்களிடம் அளவாகப் பேசுகிற ராகவன் டிராயிங் போர்டுக்கு அருகில் நின்றபடி உஷாவிடம்



விரிவாகப் பேசுவதையும், ஜோக்கடிப்பதையும், சிரிப்பதையும் நித்திலா கவனியாதது போல் கவனித்துக் கொண்டாள்.

அந்த வாரத்தில் உஷாவின் வாழ்வில் இன்னொரு முன்னேற்றமும் ஏற்பட்டது. அன்றைக்கு ரமேஷ் அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தான். பத்தாம் வகுப்பில் இருந்தான். கணக்குப் பாடமென்றால் வேப்பங்காய். 'சை... இந்தக் கணக்கு மட்டும் எப்பப்பாரு இடக்குத்தான்!' என்று புலம்பிக் கொண்டிருந்தான்.

அப்போது நிஷா, 'ரமேஷ், உஷாக்கா கணக்கில் ரொம்ப ஸ்ட்ராங். புடிச்சுக்கோ. விட்ராதே...' எனவும், ஒரு நாள் வந்தான். அவள் சொல்லிக் கொடுக்கிற விதம் பார்த்து 'உஷாண்ணி! எப்படியும் ஒரு மணி நேரம் எனக்காக உட்காரப் போறே... நான் இன்னும் நாலைஞ்சு பேரைக் கூட்டிட்டு வரேன். எல்லா இடத்துலயும் வருஷத்துக்கு மூவாயிரம் வாங்கறாங்க. நீ இரண்டாயிரம், இரண்டாயிரத்தைந்நூறு வாங்கினா நிறைய வருவாங்க...' என்றான்.

உஷாவைக் கேட்கவேயில்லை. அவனும் நித்திலாவுமே கூடிப் பேசினார்கள்.

ஐந்து மணியிலிருந்து ஏழு மணி வரை ட்யூஷன். வாரத்துக்கு மூன்று நாள் வகுப்பு. கணக்குப்போட்டு 'நாலு பாட்ச்' என்று திட்டமிட்டார்கள். ஒரு பாட்சுக்குப் பத்துப் பேர் மட்டும் என்று ஒழுங்குபடுத்தினார்கள்.

எல்லா மாணவர்களுமே அட்வான்சாகவே கொடுத்ததால் பெரிய தொகை கிடைத்தது. மறுபடியும் குடும்பத்தினர் கூடிப் பேசினார்கள். சந்திரசேகரன், 'ஒரேயடியாக அந்தப் பணத்தைக் குடும்பச் செலவுக்கு எடுக்கக் கூடாது. உடனடியாக நகை வாங்கி விடுங்கள். நான் ஒரு இருபத்தைந்து பவுன்

போடுகிறேன். இதையெல்லாம் சேர்த்து ஒரு இருபத்தைந்து பவுன் வாங்குங்கள்!' என்றான். ஒத்துக் கொண்டார்கள்.

நிஷா இடையில் புகுந்து, 'வர்ற மாப்பிளை தொடர்ந்து ட்யூஷன் எடுக்கச் சம்மதிக்கணுமே!' என்றாள் கவலையுடன்.

அன்றைக்கும் சரியாக ராகவன் வந்திருந்தான். அமைதியாக அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரம் கழித்து அவர்கள் போர்டுக்கு அருகில் நின்று டிஸ்கஸ் செய்து கொண்டிருந்தார்கள். வழக்கம் போல்தானே... என்று மற்றவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ராகவன் மெல்லிய குரலில், 'உஷா... நீங்க தொடர்ந்து ட்யூஷன் எடுக்கறதுல எனக்கொண்ணும் ஆட்சேபணையில்லை!' என்றான்..

உஷா திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். அவன் அவளைப் பார்க்காமலே, டிராயிங் போர்டில் கோடுகள் போடுவது போன்ற பாவனையுடன், 'இல்லே... எனக்கும் ட்யூஷன் எடுப்பீங்களான்னு கேட்டேன்!' என்றான்.

உஷா மெதுவாகத் தன்னை மீட்டுக் கொண்டாள். முகம் சிவந்து போனது. 'எங்க வீட்டில் ஜாதகம் பாப்பாங்க...' என்றாள் கலவரமான குரலில்.

'அதெல்லாம் பாத்தாச்சு... ஒன்பது பொருத்தம்...' என்றான்.

'அண்ணனைக் கேக்கணும்...'

'அது ஒண்ணும் பிரச்சனையில்லை கேட்டுக்கலாம்...' என்றான்.

அவள் கைகள் லேசாக நடுங்குவதைப் பார்த்தவுடன், 'ப்ளீஸ்... காட்டிக் குடுத்துராதீங்க...' என்றான்.

அவள் பேசாமல் நிற்கவும், 'சரி, நான் நாளைக்கு வரேன், இந்த நேரத்துக்கு. உங்களுக்குச் சம்மதம்னா நீங்க மஞ்சள்



ரோஸ் ஒண்ணு குடியிருக்கணும். இல்லேன்னா, இஷ்டமில்லைன்னு எடுத்துப்பேன். ஆனா... எப்பவும் நாம ஃப்ரெண்ட்ஸ்!' என்றான். இடத்தைவிட்டு நகர்ந்து விட்டான்.

சற்று நேரம் பேருக்கு இருந்து விட்டுக் கிளம்பி விட்டான்.

அன்றைக்கு இரவு நித்திலா தங்கள் அறைக்குப் போய்க் கொண்டிருந்த போது, உஷா தயங்கியபடி வந்தாள். 'அண்ணி, உங்கிட்ட பேசணும்...' என்றாள்.

ராகவன் சொன்னதைச் சொன்னாள். நித்திலா ஆச்சரியமானாள். 'உங்கிட்டே ஃப்ரியா பழகறாரேன்னு எனக்கே ஆச்சரியம்தான். எதையும் எங்கிட்ட டிஸ்கஸ் பண்ற அண்ணன், இதை மட்டும் பேசலே...' என்றாள் வியப்புடன்.

'ஒருவேளை... எனக்கு இஷ்டமில்லேன்னா விட்ரலாம்னு நினைச்சாரோ என்னமோ!' என்று உஷா விட்டுக் கொடுக்காமல் பேசக் கண்டு, உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

அன்றிரவு கணவனிடம் பேசினாள். அவன் வெகுவாக யோசித்தான்.

'நித்திலா... எனக்குக் கொஞ்சம் கவலையா இருக்கு. அவங்க தகுதி வேற, எங்க தகுதி வேற!' என்றான்.

'அப்படி நினைக்காதீங்க, சந்துரு. அண்ணன் உஷாண்ணியின் குணம் பார்த்துத்தான் லைக் பண்றாருன்னு நெனைக்கறேன். நாமளும் ஒண்ணும் வெறும் கையா அனுப்பப் போறதில்லையே... ஓரளவுக்குச் செய்யத்தானே போறோம். சித்தப்பா... சித்தி மாதிரிக் கிடைக்காது தெரியுமா? அண்ணனும் ரொம்ப மெச்சூர்ட்தான். உங்களை விட ரெண்டு வயது பெரியவர். கெட்டிக்காரர். உஷாண்ணிக்கு இதைவிட நல்ல சம்பந்தம் கிடைக்காதுங்க...' என்றாள்.

அவன் இன்னும் யோசித்தான்.

'அண்ணனே ஜாதகம் கூடப் பாத்து வச்சிருக்காம்!' என்று அவள் சொல்லவும், பட்டென்று சிரித்து விட்டான்.

'மச்சான்... பரவாயில்லையே...' என்று படுக்கையில் சாய்ந்தபடி சிரித்தான். பிறகும் சற்று யோசித்து விட்டு, 'சரி... நித்தி... உஷாவுக்குச் சம்மதம்னா மஞ்சள் ரோஸ் வாங்கிக் குடுத்துரு' என்று புன்னகைத்தான்.

நித்திலா உற்சாகத்தில் குதிக்காத குறைதான்.

'நித்தி...' என்று சந்திரசேகரன் கிறக்கக் குரலில் அழைக்கவும்.

'போச்சு... வம்பு... வந்தாச்சு...' என்று அவள் அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

'ஹேய்... நீ பயங்கரமான ஆளு... நான் பணமா வாங்கிக்க மாட்டேன்னு தெரிஞ்சு யோசிச்சு... யோசிச்சு... ஒன்னொன்னா செய்யறே இல்லே? தாங்க்ஸ் நித்தி... ஃபார் ஆல் தட் யு ஹேவ் டன்...' என்று நெகிழ்ந்தான்.

'நமக்குள்ளே எதுக்குங்க... தாங்க்ஸ். இது என்னோட குடும்பமும்தானே...' என்றாள். அவளும் உணர்ச்சிவசமாக.

'எல்லாப் பொண்ணுங்களும் இப்படி உன்னை மாதிரி இயல்பா இருந்தா குடும்பங்களுக்குள்ள பிரச்சினைகளே வராது, தெரியுமா?' என்றான்.

'நீங்கதான் முதல்லயே சொல்லிட்டீங்களே. கூட்டுக் குடும்பம்னா விட்டுக் கொடுக்கணும். ஆனா... ஒரு விதத்தில் நானும் லக்கிதான். இங்கயும் எல்லாரும் அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்கறாங்களே!' என்றாள்.

'இல்லே... நித்தி... கல்யாணம் முடிஞ்சதும் நிஷா கொஞ்சம் கோபமா இருந்தா. ஆனா, எப்படியோ நீ கூல் பண்ணிட்டே...



'இப்படித்தான் ஆஃபீஸ்லயும் எல்லாரையும் கவர் பண்ணீடுவீங்களாம்... பேசிக்கறாங்க...' என்று சிரித்தான்.

அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து, 'வேற என்ன பேசிக்கறாங்க?' என்றாள்.

'வேறயா? இவனுக்கு வந்த வாழ்வு பாருடான்னு பேசிக்குவாங்களாயிருக்கும்!' என்று சிரித்தான்.

'அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே! நீங்களும் ரொம்ப டேலன்டட் மேனேஜராம். கேள்விப்பட்டேன். நீங்க வந்த துக்கு அப்புறம்தான் சேல்ஸ் ஸ்டெபிலைஸ் ஆகியிருக் காம்...' என்றாள்.

'ஆனா, வேற ஒரு விஷயத்துல ஸ்டெபிலிட்டியே இல்லாமப் போச்சு, நித்தி!' என்றான் கவலையாக.

'எதுல?' என்று வியப்பாகப் பார்க்கவும் -

'நீ பக்கத்துல வந்தாலே... ஒண்ணும் ஓட மாட்டேங்குது. அப்பா, அம்மா... முன்னால எங்கயாவது வம்பு பண்ணீடுவேனோன்னு பயமாய் இருக்கு...' என்று குரல் தேய்ந்து கொண்டு போக அவள் சிரித்து,

'அதெல்லாம் சரிங்க... ஜி எம் சார்... காலையில பூ மார்க்கெட்டுக்குப் போய் எல்லா கலர்லயும் கலந்து ரோஜாப்பூ வாங்கிட்டு வாங்க...' மஞ்சள் கலர் கொஞ்சம் நிறைய இருக்கற மாதிரிப் பாத்துக்குங்க!' என்றாள்.

'உத்தரவு ஏ.எம். மேடம்...' என்றான். சேர்ந்து சிரித்தார்கள்.

மறுநாள் காலை...

ராகவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை போலும்... ஏதோ வேலையாக வருவது போல் காலையிலேயே வந்தான். சந்திரசேகரனும், நித்திலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

உஷா வெளியே வரவேயில்லை. ராகவன் தவிப்பைப் பார்த்து நித்திலாவுக்குப் பாவமாகப் போனது. உள்ளே போய், 'அண்ணி, பாவம் அண்ணன் ரொம்பத் தவிக்கறாரு!' என்றாள்.

'சேகர் அண்ணன்?' என்று உஷா அவள் முகம் பார்க்கவும்,

'ஓ.கே. சொல்லியாச்சு. என் பொறுப்பு.' என்று சொல்லவும், உஷாவின் முகத்தில் நிம்மதி தெரிந்தது.

வெளியே வந்தாள். 'வாங்க,' என்றாள். மறுபடி உள்ளே போய் விட்டாள். நித்திலா கணவனிடம், 'ஏங்க, நம்ப உஷாண்ணிக்குப் பாக்கற மாப்பிள்ளை சிவில் என்ஜினியரா இருந்தா நல்லாயிருக்குமில்லே?' என்றாள்.

ராகவன் தங்கையின் முகம் பார்த்தான். அவள் அவனைக் கவனியாதது போல் சத்தமாக, 'உஷாண்ணி, ஏதோ ரோஜாப்பூ கேட்டீங்களே... அதிலயும் மஞ்சள் ரோஸ் முக்கியமா வேணும்னீங்களாம்... உங்க அண்ணன் வாங்கிட்டு வந்திருக்காரு.. வந்து எடுத்துக்குங்க...' என்றாள் சீரியஸாக.

உஷா தயக்கத்துடன் வெளியே வந்தாள். ராகவன் முகம் பளிச்சென்று மலர்வதைப் பார்த்தவுடன், சந்திரசேகரனுக்கே சந்தோஷம் பரவியது.

மனைவியிடம், 'நித்தி... அந்த ஃபைலைக் கேட்டேனே, எடுத்துக் குடு...' என்று எழுந்தான். திறமையாக அறைக்கு முன்னால் நின்றபடி சற்று நேரம் யாரும் வராமல் பார்த்துக் கொண்டார்கள் - கணவனும், மனைவியும்.

லேசாகக் கைகள் நடுங்க அந்தக் கவரில் இருந்த மஞ்சள் ரோஜாவை எடுத்து உஷா சூடிக் கொள்வதை ராகவன் டைனிங் டேபிள் சேரில் அமர்ந்தபடி ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் முகத்தை ஒரு விநாடி பார்த்தவள் வேறு பக்கம் பார்த்தாள்.



'தாங்க்ஸ்... உஷா...' என்றான். தன் கையால் இன்னுமொரு பூவை எடுத்து நீட்டினான். முகம் சிவக்க வாங்கிக் கொண்டாள். நகர முற்பட்டாள்.

'உஷா, ஒரு நிமிஷம் நின்று பேசக் கூடாதா?' என்றான் கரகரத்த குரலில்.

அவள் மௌனமாக நின்றாள். 'நித்திக்கும் உங்கண்ணனுக்கும் சொல்லிட்டே போலிருக்கு.

.....

'தட்ஸ் குட். நான் எப்படிடா ஆரம்பிக்கறதுன்னு இருந்தேன். தாங்க்ஸ் உஷா. அப்புறம்...'என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்கவும்.

'எதுவானாலும் அண்ணன்கிட்டே பேசிக்குங்க,' என்றபடி நகர,

'போச்சுரா... உங்கிட்ட பேசறதை யெல்லாம் எப்படி உங்கண்ணன்கிட்டே...' எனவும், அவள் முகம் சிவக்க உள்ளே போய் விட்டாள்..

அவன் சிரித்துக் கொண்டே எழுந்து வெளியே வந்தான்.

'என்ன சொல்றா... உஷா?' என்று சந்திரசேகரன் சிரிக்கவும்,

அவன் கடகடவென்று சிரித்து, 'எதுவானாலும் அண்ணன் கிட்டே பேசறதாம்,' என்றான்.

ஒரு கணம் திகைத்த அண்ணன் பின் புன்னகைத்தான். 'பேசுவோம்... பெரியவங்களை வச்சு!' என்றான்.

'சரீ மச்சான், நான் வரேன்,' என்று ராகவன் நகர,

'ஒரு நிமிஷம்...' என்று அழைத்தான் சந்திரசேகரன்.

'நிலத்தைப் பார்த்து நடங்க... மச்சான்!' என்று சிரிக்கவும், ராகவன் முகம் சிவக்கச் சிரித்து விட்டுப் போனான்.

'உங்கண்ணனைப் பார்த்தா எனக்குப் பொறாமையாய் இருக்கு நித்தி...' என்றான் சந்திரசேகரன்.

'ஏன்?' என்று மனைவி கேட்க.

'இந்த திரில் எல்லாம் எனக்குக் கிடைக்கலையே!' என்று அவன் சொல்லச் சொல்ல, நித்தி, 'எனக்கு என்னமோ தலை சுத்தறமாதிரி இருக்குங்க!' என்று உள்ளே போய் விட்டாள்.

அவள் போவதைச் சந்திரசேகரன் சிந்தனையுடன் பார்த்தான்.



# 7

**வ**ந்த ஒன்றரை மாதத்துக்குள்ளாகத் தன் பெரிய மகனுக்கும் வழி செய்து விட்டாள் தன் மருமகள் என்று தெய்வானை மிகவும் மகிழ்ந்தாள். நித்திலாவைப் பெரிதும் தாங்கி வைத்துக் கொண்டாள்.

பேச்சு வார்த்தை முடிந்திருந்தது. திருமணம் மூன்று மாதம் கழித்து என்று முடிவு செய்திருந்தார்கள். ராகவன் எப்போதும் போல் வந்து போய்க் கொண்டிருந்தான். ஆனால், வந்த வேகத்தில் போய்விடுவான்.

நிஷா ஒரு நாள் அவனிடம், 'மாமா... உங்க அஸின் டென்ட்கிட்டே குடுத்தனுப்பிச்சாலே... பிளானைக் கொண்டு வந்து குடுத்துட்டுப் போறான்...' என்று கிண்டல் செய்தாள். ஆனால் சிரித்துக் கொண்டே அந்தப்புறம் போனாள்.

ராகவன் நிஷா என்ன கிண்டல் செய்தாலும் சிரித்துக் கொள்வான். உஷா காஃபி கொண்டு வந்து கொடுக்கும்போது அவளிடம் பதில் சொல்லுவான்.



'உஷா... பிளான் குடுக்கறதுக்கா வர்றேன்? உன்னைப் பாத்துட்டுப் போனா... கொஞ்சம் நல்லா இருக்கும்... அதென்ன... சேர்ந்தாப்பலே ரெண்டு நாள் பாக்கலேன்னா... ரொம்பக் கஷ்டமா போயிடுது...' என்று சிரித்தான்.

உஷா ஒன்றும் பேசமாட்டாள். முகம் சிவக்க மௌனமாக நிற்பாள். வெட்கத்துடன் புன்னகைப்பாள்.

அன்று சுற்று முற்றும் பார்த்து விட்டு, 'என்ன உஷா, ஒருத்தரையும் காணோம்?' என்று விசாரித்தான்.

'அம்மாவும் அப்பாவும் கோயிலுக்குப் போனாங்க. அண்ணனும், அண்ணியும் கடைக்குப் போனாங்க. துணி எடுக்க...' என்றாள்.

'என்ன விசேஷம்?'

'ஒண்ணுமில்லே... நாளன்னைக்கு எனக்குப் பிறந்த நாள்...'

'ஓ சொல்லவேயில்லை?'

'வழக்கமா வர்றதுதானே!' என்று மென்மையாகப் புன்னகைத்தாள். அவன் அவளைப் பரிவாகப் பார்த்தான். பிறகு,

'உஷா... உன்னைப் பத்தி யோசிக்கறதேயில்லை இல்லை?'

'நான் எதுக்கு யோசிக்கணும்? அன்பான அண்ணன், நல்ல அண்ணின்னு கடவுள் எனக்கு எல்லாம் நல்லதாக் குடுத்துருக்கான். இப்ப உங்களையும் குடுத்திருக்கான்!' என்று மெல்லிய குரலில் சிரித்தாள்.

அவன் ஆழ்ந்த உணர்வுடன் பரிவாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் வெட்கம் புரிந்து எப்போதும் போய்விடுவது போல் இன்றைக்கும் போய்விட்டாள்.

**அ**திகாலையிலேயே குளித்து விட்டுச் சாமி கும்பிட்டு வந்தபோது அண்ணனும், அண்ணியும் பரிசுகளுடன் நிற்கக் கண்டாள்.

அண்ணன் அழகான ஒரு மோதிரம் கொடுத்தான். நித்திலா ஒரு வாட்ச் கொடுத்தாள். அப்பா, அம்மா கையில் கொடுத்து புது டிரஸ் கொடுக்கச் செய்தார்கள்.

'தாங்க்ஸ் அண்ணா, அண்ணி!' என்று நித்திலாவை அணைத்துக் கொண்டாள். சிரித்துக் கொண்டே திரும்பினால், 'பொக்கே'வுடன் ராகவன் நின்று கொண்டிருந்தான்.

'இத பார்ரா... மச்சான் கன காரியமா காலையிலேயே வந்து நிக்கறாரு...' என்று சந்திரசேகரன் கலாட்டா செய்தான்.

'இதவிட என்ன வேலையாம்?' என்று அவனும் சளைக்காமல் பதில் சொன்னான். புதுப் புடவைப் பார்சலை நீட்டினான்.

'தேங்க்யூ...' என்று வாங்கிக் கொண்டாள். அறைக்குப் போனவள் பின்னாலேயே வந்து நித்திலா... 'உஷாண்ணி! அண்ணன் எடுத்ததை முதல்ல கட்டுங்க!' என்று சொல்லிப் போனாள்.

அழகிய பிரவுன் நிறத்தில் மெல்லிய வெள்ளை மல்லிகைப் பூக்கள் போட்ட பிரிண்டட் சில்க் புடவை. ரெடிமேட் பிளவுஸ் சரியாக இருந்தது. உஷா முகம் சிவந்து போனாள்.

உள்ளே வந்த நித்திலா ஆச்சரியப்பட்டாள். 'அண்ணி, அண்ணன் செலக்ஷன் சூப்பர்!' என்று சகோதரனிடம் வந்து, 'ரெடிமேட் பிளவுஸா?' என்று கிண்டல் செய்ய, ராகவன், 'இல்லைம்மா. அங்கே, கிட்டத்தட்ட உஷா மாதிரி ஒரு பெண் இருந்தாங்க... அவங்களைக் காட்டி...' என்றவன் வெட்கத்துடன் சிரித்து விட்டான்.

'அண்ணா... சரிண்ணா!' என்றாள் நித்திலா. கோவிலுக்கு அழைத்துப் போகிறேன் என்று கேட்டான். அனுமதித்தார்கள்.

'மச்சான், லஞ்ச் நம்ம வீட்டுல வந்துரணும்...' என்றான் சந்திரசேகரன்.

காலையில் கோவிலுக்கு அழைத்துப் போனான். பேரூர் போய் வந்தார்கள். பிறகு ஒரு நல்ல ஓட்டலில் ஏ.சி. அறையில் டேபிள் புக் செய்திருந்தான்.



எதிர் எதிரே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஸ்வீட் எது வேண்டுமென்று கேட்ட போது அவள் குலாப் ஜாமூன் என்றாள்.

அவள் ஸ்பூனால் மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், 'உஷா, இதென்ன... அங்க பாரு...' என்று எதையோ காட்டி அவள் திரும்பிய நேரத்தில் அவளது கிண்ணத்தைத் தன் பக்கம் நகர்த்திக் கொண்டான்.

வேறு ஆர்டர் செய்தான். 'தித்திப்பு அதிகமாக இருக்கே!' என்று கலாட்டா செய்தான்.

அவள் பதட்டம் பார்த்து, 'சும்மா... ஒரு கலாட்டாவுக்காக. ரிலாக்ஸ், உஷா. என்ன நீ இப்படிப் பயப்படறே, என்கிட்டே!' என்று அமைதி அடைய வைத்தான்.

பிறகு பொதுப்படையாகப் பேசினான். ஒரு இன்ஜினியர் அளவுக்குத் தங்கள் துறையில் அவள் லேட்டஸ்ட் புத்தகங்கள் படித்து வைத்திருப்பதைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

அங்கேயே வைத்து இன்னொரு பரிசுப் பார்சலை நீட்டினான். அவள் திறந்து பார்க்க... அழகான முத்தும், பவளமும் பதித்த நெக்லஸ் வளையல்... கம்மல்... மோதிரம்... என்று ஒரு செட் இருந்தது. அவள் திகைத்துப் போனாள்.

'இவ்வளவு காஸ்ட்லியா?' என்றாள் கேள்விக் குறியுடன்.

அவன் 'விலை மதிப்பில்லாத என் எதிர்கால மனைவிக்கு டியர்...' என்று ஏர் இந்தியா வணக்கம் போடவும், அவள் நாணம் கொண்டு தலை குனிந்தாள்.

'இப்படி நீ வெட்கப்படறதைப் பார்த்தாலே ஜிவ்வுன்னு பறக்கற மாதிரி இருக்கு...' என்று விசிலடித்தான்.

'ஏதோ... நல்லவர்ன்னு நம்பி அனுப்பியிருக்காங்க என்ஜினியர் சார்...' என்று முணுமுணுத்தாள் உஷா, குறும்பாக.

'ஐயோ... நல்லவன்தாம்மா... எந்தத் தொல்லையும் செய்ய மாட்டேன்...' என்றான். அவள் வேறு பக்கம் பார்த்தாள்.

பிறகு, 'ஏன், உஷா? உனக்கு நகையெல்லாம் எத்தனை பவுன் போடறாங்களாம்?' என்று கேட்டான்.

'அண்ணன் இருபத்தைஞ்சு பவுன் ரெடி செஞ்சு வச்சிருந்தாங்க. இப்ப இந்த ட்யூஷன் அமவுண்ட் அது இதுன்னு சேர்த்து ஒரு இருபத்தைஞ்சு பவுன் வாங்கியிருக்கு...' என்றாள்.

'அவ்வளவெல்லாம் தேவையில்லே. உங்க அண்ணனை ரொம்ப சிரமப்படுத்த வேண்டாம்.'

'நான் எங்க வீட்டில ஒரு இருபதிலிருந்து இருபத்தைஞ்சு பவுன் போடுவாங்கன்னுதான் சொல்லியிருக்கேன். நானும் கொஞ்சம் வாங்கித் தரேன். இதெல்லாம் பர்சனல் சேமிப்பு. சரியா? அதனால, ஒரு இருபத்தஞ்சு பவுன் நகையை நிஷாவுக்குக் குடுத்துரு!' என்றான்.

அவள் கண்களை அகல விரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

'நிஜமாவா?' என்றாள்.

'நிஜமாத்தான்... நித்தியும் ஏதோ நகையா பிரஸண்ட் பண்றானாம். சித்தப்பா, சித்தியும் நகையாத்தான் செய்யப் போறாங்க. இதுவே தேவைக்கு மேலே... சரியா? இப்பவே நீ கட்டின புடவையோட வந்தாலும் எனக்குச் சம்மதம்தான்!' என்றான்.

மலைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இப்படித்தான் உங்க அண்ணன்கிட்டே சொன்னேன்.

''என்ன மச்சான் நான் கையாலாகாதவனா என்ன? என் சிஸ்டரை அப்படி அனுப்பிடுவேனா?'ன்னு ரொம்ப வருத்தப்



பட்டுட்டாரு. அதனாலதான், இதெல்லாம் அனுமதிச்சிருக்கேன்... தெரியுதா? ஆனா, கல்யாணச் செலவுல பாதி எங்களுதுன்னு ஸ்ட்ரிக்டாச் சொல்லிட்டேன்,' என்றான்.

உஷா நெகிழ்ந்து போனாள். 'இவ்வளவுக்கெல்லாம் எனக்கு என்ன தகுதி இருக்கு?' என்றாள் உணர்ச்சி வசப்பட்ட குரலில்.

'வேறென்ன தகுதி வேணும்? இந்த வயசிலேயே எவ்வளவு பொறுப்பு, தாய் மாதிரி அரவணைப்புன்னு உன்னைப் பத்தி நித்தி சொன்னதுலயே சுருண்டுட்டேன். அப்புறம்... என் மனசுக்குப் பிடிச்சிருக்கு... வேறென்ன வேணுமாம்?' என்றான்.

பேச்சற்றுப் போய் அமர்ந்திருந்தாள். அவனும் அவளை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வை தாங்காமல் அவள் சட்டென்று எழுந்து கைகழுவப் போனாள். அவனும் பின்னாலேயே எழுந்து வந்தான். கைகழுவினார்கள்.

திரும்பிய வேகத்தில் அவன் மேல் இடித்துக் கொண்டாள். 'ஐயோ...நான் தொடலப்பா... நீயாத்தான் இடிக்கறே!' என்று கலாட்டா செய்தான்.

'ப்ளீஸ்... ராகவ்...' என்றாள் வெட்கம் பொங்க.

அந்த அழைப்பில் அவன் கிறங்கினான். 'ஹேய்... இன்னொரு தடவை அப்படிக் கூப்பிடு!' எனக் கையைப் பிடிக்க, 'விடுங்க, ராகவ்!' என்று வெட்கத்துடன் நகர்ந்து விட்டாள்.

அவன் சிரித்துக் கொண்டே பின் தொடர்ந்தான்.

முகமெல்லாம் பொலிவுடன் அவன் வாங்கிக் கொடுத்த நகைகளை அணிந்து கொண்டு அவனோடு வந்திறங்கிய தங்கையைப் பார்த்துச் சந்திரசேகரன் பூரித்துப் போனான்.

'நித்தி.... என்ன இப்படி உஷா முகத்துல ஒரு தேஜஸ்...'என்று மனைவியிடம் கிசுகிசுத்தான்.

'ம்... ராகவ் அண்ணாவைத்தான் கேட்கணும்!' என்றாள் அவள்.

உணவுண்டு முடிந்ததும் உள்ளறையில் இருந்த உஷா விடம் விடைபெற்றுக் கொள்ள வந்தான் ராகவ்.

எல்லோரும் தனிமை கொடுத்து விலகிப் போயிருந் தார்கள்.

'உஷா...'என்றான் கிறக்கமாக.

'ம்...!'

'எனக்கொன்னும் பரிசு கிடையாதா? உன் பிறந்த நாளைக்கு...'

'என்ன வேணும்? என்று அவள் கேட்டு முடிப்பதற்குள், அவன் அவளைத் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தான். நெற்றியில் ஒரேயொரு முறை முத்தமிட்டான். பிறகு குனிந்து தன் கன்னம் காட்டி நின்றான். அவள் தயக்கத்துடன் லேசாக இதழ் பதிக்கவும், கலகலவென்று சிரித்து நிமிர்ந்தான்.

'யப்பா போதும்டாப்பா... கல்யாணம் வரைக்கும் தாங்கும்!' என்று போய் விட்டான்.

உஷா படபடப்பாக நின்றாள். சற்று நேரம் கழித்து வந்த நித்திலா அண்ணன் ஏதோ வம்பு செய்திருக்கிறான் என்று புரிந்து கொண்டாள்.

'வாங்க அண்ணி, எங்கெங்கே போனீங்க? எல்லாம் விவரமாச் சொல்லு...'என்று ஹாலுக்கு அழைத்துப் போனாள்.

அவள் சொன்னதையெல்லாம் கேட்டுச் சேகரன், நிஷா, நித்திலா மூவரும் மகிழ்ந்து போனார்கள்.



அன்று மாலை ராகவனின் அப்பாவும், அம்மாவும் வேறு வந்து, 'மருமகளுக்குப் பிறந்த நாளாம்...' என்று பரிசுகள் கொடுத்தார்கள். எல்லாரையும் ஓட்டலுக்கு அழைத்துப் போனார்கள்.

அன்றிரவு... திரும்பி வந்தவுடன் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தபோது எதையோ எடுக்க எழுந்த நித்திலா, 'தலை சுத்துது!' என்று அமர்ந்தாள்.

எல்லாரும் பரபரப்பானார்கள்.

ராகவன் பதறிப்போய் டாக்டரை வரவழைத்தான். லேடி டாக்டர் வந்து பார்த்து விட்டுச் சந்திரசேகரனைப் பார்த்துச் சிரித்தார்.

'ஹலோ... அப்பாவாகப் போறீங்க!' என்றார்.

ரமேஷ் சந்தோஷத்தில் குதித்தான். ராகவ், 'மச்சான்! பயங்கரமான ஆளு, நீ...' என்று சந்திரசேகரனைக் கேலி செய்தான்.

வீட்டில் மகிழ்ச்சியும் குதூகலமும் குப்பென்று சூழ... சந்திரசேகரன் ஆசையாய் மனைவியைப் பார்க்க... அவள் வெட்கத்துடன் முறுவலித்தாள்.



## 8

உஷாவின் திருமணம் வெகு விமர்சையாக நடந்தது.

நித்திலா ஐந்தாவது மாதத்தில் இருந்தாள். சற்றே மேடிட்ட வயிறுடன் அவள் எல்லாவற்றையும் மேற்பார்வை செய்த விதத்தில் ஒரு ஆளுமை தெரிந்தது.

தேவையற்ற ஆடம்பரங்கள் இல்லாமல் அழகாக நடந்த அந்தத் திருமணத்தை உறவினர்கள் எல்லாரும் பாராட்டி னார்கள்.

உஷாவிடம் ராகவன் திருமணப் பரிசாக என்ன வேண்டும் என்று கேட்டான்.

'உங்க எஸ்டிமேட் எவ்வளவு?' என்றாள்.

'ஐயாயிரம்!' என்றான்.

'என்னைப் போல நல்ல சகோதரன் கிடைக்காத ஒரு ஏழைப் பெண்ணுக்கு ஒரு தாலியும், செயினும் வாங்கிக் கொடுக்க லாம்!' என்றாள்.

அவன் திகைத்துப் போய்ச் சந்திரசேகரனிடம் சொன்னான். அவன் நித்திலாவிடம் சொல்ல...

'அட எனக்கு ஏன் இது தோணாமல் போச்சு?' என்று எண்ணிக் கொண்டாள்.

எல்லாரும் கூடிப் பேசி, உஷா, நிஷா, நித்திலா, சந்திர சேகரன், ராகவ் எல்லாரும் தங்கள் வருமானத்தில் ஒரு ஷேர் போட்டு ஏழைப் பெண்கள் மூணு பேருக்கு வருஷத்தில் அரைப்பவுனில் தாலியும், இரண்டரைப் பவுனில் செயினும் வாங்கிக் கொடுப்பது என்று முடிவு செய்தார்கள்.

எங்களையும் சேத்துக்குங்க என்று சுந்தரமும், ராகவின் அப்பா நடராஜனும் சொல்ல, எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்தது.

'உஷா! யு ஆர் வெரி ஸ்வீட்!' என்று பாராட்டிக் கொண்டான் ராகவ்.

தாய்மையின் பூரிப்புடன் நின்ற நித்திலா, 'அண்ணா, நானும் பக்கத்திலதான் நிக்கறேன். ரொம்பத்தான் வழியாதே...' என்றாள்.

'உன்னை யார் நேரந் தெரியாமல பக்கத்துல நிக்கச் சொன்னா? என்ன வஞ்சம் வேணாத் தரேன். அந்தப் பக்கம்



போவியாம்!' என்று சொல்ல, அவள் சிரித்துக் கொண்டே நகர்ந்தாள்.

நடந்தது எல்லாவற்றையும் ராபர்ட் விவரமாகச் சொல்லக் கேட்டுக் கொண்டிருந்தான் ஸ்ரீராம்.

'அப்போ எல்லாம் முழுகிப் போச்சுன்னு அந்த சுந்தரம் சொன்னதெல்லாம் பொய்யா...?'

'அப்படித்தான் தெரியுது. சேகரனுக்குக் கார் வாங்கிக் குடுத்திருக்காங்க. மேலே ரூம் போட்டுக் குடுத்திருக்காங்க. வீடு வேற எழுதி வச்சிருக்காங்க. எல்லாம் உன்னோட மடத்தனத்தால விட்டுட்டே!' என்றான்.

'அப்படியில்லடா. ஏற்கெனவே எனக்குக் கடன். இதுல ஒண்ணுமில்லாதவளைக் கட்டிகிட்டு என்ன செய்ய?'

'சரி... விடு... இனிமே என்ன செய்ய முடியும்? சேகரனுக்குக் குடுப்பினையிருக்கு... உனக்கு இல்லே...' என்றான் ராபர்ட்.

மதுரைக்கு ஸ்ரீராம் வந்ததற்குப் பிறகு ஆறுமாதம் கழித்து கோயம்புத்தூர் பிராஞ்சிலிருந்து வந்த ராபர்ட்டிடம் பேசிக் கொண்டிருந்தான்.

ராபர்ட்டிடம் மீண்டும் எல்லா நிலைமைகளையும் விரி வாகக் கேட்டுக் கொண்டான். கண நேரத்தில் ஏமாந்து விட் டோம் என்ற எண்ணத்தை அவனால் தாங்கவே முடிய வில்லை.

உள்ளுக்குள் பொறாமை நெருப்பு தகதகவென்று எரிந்தது.

தான் இழந்த வாய்ப்பை எண்ணிக் கொண்டு உள்ளுக்குள் தகித்துக் கொண்டிருந்த அவனுக்கு வாகாய் ஒரு விஷயம் கிடைத்தது.

ஏதோ ஃபைல்களை அளைந்து கொண்டிருந்தபோது அந்த ரிப்போர்ட் கிடைத்தது. அது சந்திரசேகரனும், அவனும் ஒரு

முறை பைக்கில் பயணம் செய்த போது ஒரு சிறு விபத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆனார்கள். அப்போது செய்யப்பட்ட பரிசோதனையின் ரிப்போர்ட்.

அதை வைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தான். ஒரு திட்டம் உருவாகியது. விகாரமாகப் புன்னகைத்துக் கொண்டான். வாய்ப்புக்காகக் காத்திருந்தான்.

வளைகாப்பு வெகுசிறப்பாக நடந்து முடிந்தது.

அம்மா வீட்டுக்குக் கிளம்பிய மனைவியிடம் தங்கள் அறையில் வைத்து, 'ஏய்... நித்தி.... நீ இல்லாம எப்படி இருப்பேன்?' என்று உருகிக் கொண்டிருந்தான் சந்திரசேகரன்.

அவள் சிரித்தாள். 'பேருக்கு ரெண்டு நாள் போயிட்டு வரேன். இங்கயும் அங்கயும் மாத்தி மாத்தி இருக்கேன்...' என்றாள்.

'நான் வேற அடுத்த வாரம் மதுரைக்குப் போறேன்!' என்று அவன் சொல்லவும், அவள் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

'என்ன பார்க்கறே, அந்த ஸ்ரீராம் அங்க இருக்கானேன்னா... இருந்துட்டுப் போறான். நம்மளை என்ன பண்ணுவான்?' என்று சொல்லவும் சமாதானமானாள்.

அன்றைக்கு அவன் என்ன செய்யக்கூடும் என்பது பற்றி இருவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

இன்ஸ்பெக்ஷன் முடித்து ஓட்டலில் தங்கியிருந்தான் சந்திரசேகரன்.

அழைப்பு மணி அடித்தது. திறந்தால் ஸ்ரீராம் நின்றிருந்தான்.

ஒன்றும் பேசாமல் வழி விட்டான். உள்ளே வந்தவன் சந்திரசேகரனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான்.



சந்திரசேகரன் திகைத்துப் போய் நின்றான்.

'நான் உனக்குப் பெரிய துரோகம் செய்துட்டேன்!' என்று கதறினான் ஸ்ரீராம்.

சந்திரசேகரன் சற்று இறுகிய முகத்துடன் அமர்ந்திருந்தான். சற்றே இளகினான்.

'போனது போகட்டும். விடு... இப்போ நான் நல்லாத்தான் இருக்கேன்...'

'ஆமா... தெரியும்... நான் அதையும் கெடுக்கக் கூடாது!' என்று ஏதோ சொல்ல வந்தவன் நிறுத்தினான்.

'சொல்லிடு, என்னென்ன சொல்ல வந்தியோ அத்தனையும் சொல்லிடு,' என்றான் சந்திரசேகரன்.

'எப்படிடா சொல்வேன். உங்க கல்யாணத்துக்கு முன்னாலேயே எங்களுக்குள் எல்லாம் முடிஞ்சிருச்சுன்னு சொல்லச் சொல்றியா?' என்றான்.

சந்திரசேகரன் நம்பவில்லை. எரிச்சலாகப் பார்த்தான். 'என்னடா? அடுத்த நாடகமா?' என்றான்.

'இல்லை... நான் பொய் சொல்லலை. இந்த ரிப்போர்ட்டை பாரு!' என்று கொடுத்தான்.

அந்த டெஸ்ட் ரிப்போர்ட்டைப் பார்த்துக் கொண்டே வந்த சந்திரசேகரனின் கண்கள் கடைசி ரிப்போர்ட்டை பார்த்தவுடன் நிலை குத்தின. மௌனித்துப் போனான்.

ஏதோ... பேச வந்த ஸ்ரீராமிடம், 'பேசாதே,' என்பது போல் சைகை காட்டினான். நீண்ட யோசனையில் ஆழ்ந்தான்.

'தெரியுதா? உன் வைஃப் வயித்துல வளர்றது உன் குழந்தை யில்லை. அந்த ஆக்ஸிடென்ட்டப்பவே உனக்குக் குழந்தை பெறும் சக்தி இல்லாமப் போயிடுச்சு. ஆனா... ஒண்ணு சொல்லணும்டா... எங்களுக்குள் நடந்தது

என்னுடைய வற்புறுத்தலால்தான். ரொம்ப கம்பெல் செய்தேன்னுதான் ஒத்துக்கிட்டா...' என்றான், ஸ்ரீராம் - அவனுடைய மௌனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு.

சந்திரசேகரன் இன்னலைப் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு இரும்புக் குரலில்,

'பாரு... ஸ்ரீராம்...' கல்யாணத்துக்கு முன்னால எது நடந்திருந்தாலும் சரி... அதைப்பத்தி எனக்குக் கவலையில்லை. அப்படியே அது என் குழந்தையில்லேன்னாலும் சரி, நோ ரிட்ரீடிங். பின்னோக்கிப் போறதுங்கறது இல்ல. நீயும் ஒரு நல்ல பொண்ணாப் பாத்துக் கல்யாணம் செய்துகிட்டு நிம்மதியாயிரு.' என்றான்.

'நீ போகலாம்,' என்பது போல் சைகை காட்டினான். ரிப்போர்ட்டைத் தன்னிடம் வைத்துக் கொண்டான். போனவனைச் சொடுக்குப் போட்டு அழைத்தான்.

'இதையெல்லாம் வச்சுக்கிட்டு ஏதாவது குடும்பத்திலே கலகம் பண்ணினே. சும்மாயிருக்கமாட்டேன். ரெண்டு லட்ச ரூபா வரை உன்னோட தில்லுமுல்லுகளைக் கண்டுபிடிச்சு வச்சிருக்கேன். வெளிய விட்டேன் யு வில் பி இம்மீடியட்லி அரெஸ்டட். குழந்தைக்கு யார் தந்தையா இருந்தாலும் சரி, அது என் நித்திக்குப் பிறக்கும் குழந்தை. அதை நான் வளர்ப்பேன். யு அண்டர்ஸ்டாண்ட்...' என்றான்.

ஸ்ரீராம் முகம் வெளிறிப் போய் வெளியே போனான்.

∴ ∴ ∴

**ம**துரைக்குப் போய் வந்ததிலிருந்து கணவனிடம் சற்றே மாறுதல் உணர்ந்தாள் நித்திலவல்லி. எப்போதும் போல்தான் அவளைப் பூவாய்த் தாங்கினான். ஆனால், அவன் கண்களில் வெறுமை தெரிந்தது.

ஏதோ ஒரு ஆழ்ந்த வருத்தம் அவனுக்குள் இருப்பதாய் உணர்ந்தாள். எப்போதும் அவன் சிரித்தால் கண்களும் சேர்ந்து சிரிக்கும்.



இப்போதெல்லாம் அவன் சிரிப்பு கண்களை எட்டுவதேயில்லை.

'என்ன சந்துரு... ஏதாவது வருத்தமா?' என்றாள்.

'இல்லை... நித்தி... மத்த பிராஞ்சுகளுக்கு இன்ஸ்பெக்ஷன் போற டியூட்டி வேண்டாம்னு பாக்கறேன். பிடிக்கலை!' என்றான்.

பிறகு, 'பாரு... அடுத்த மாசம் சரியாக உன் டெலிவரி சமயம் டெல்லியில் இருக்கணும் போல இருக்கு!' என்றான்.

'இதுவா பிரச்சினை? போயிட்டு வாங்க... எனக்குத்தான் இத்தனை பேரு இருக்காங்களே... பாத்துப்பாங்க. ஐயோ... சந்துரு... பெரிய குழந்தை நீங்க...' என்று கொஞ்சினாள்.

எந்த விகல்பமும் இல்லாமல் தன்னைக் கொஞ்சுகிற மனைவியை ஆழ்ந்து பார்த்தான்.

அந்த ஸ்ரீராம் பயல் ஏதோ தில்லுமுல்லு செய்கிறான் என்று உள்மனது ஓலமிட்டது. 'ஆனால், அந்த ரிப்போர்ட்... அது ஜெனுயின் ஆக உள்ளதே!' என்று எண்ணிக் குழம்பிப் போனான்.

குழப்பத்தோடேயே டெல்லி கிளம்பினான். குழந்தை பிறக்கட்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து கொண்டான்.



## 9

'**சொ**ல்லுங்க... மச்சான்,' என்றான் சந்திரசேகரன்.

ராகவன் அந்தப்புறம் லைனில் இருந்தான். 'சேகர்... நித்திக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு. இப்பத்தான் ராத்திரி

பத்து மணிக்கு. அப்படியே உங்களை மாதிரி இருக்கான், நிறமும் கூட உங்களை மாதிரி!' என்றான்.

'என்னது? என்னை மாதிரியா?' என்றான் சேகரன் ஆச்சரியமாய்.

'இதுக்கென்ன ஆச்சரியப்படுறீங்க... உங்களுக்கு மூக்குக் கிட்டே லேசா ஒரு வளைவு விழுமே, அதுகூட அதேமாதிரி மினியேச்சர்... சந்திரசேகரன்!' என்று ராகவன் சிரிக்க -

சந்திரசேகரனும் எல்லாக் கட்டுக்களிலிருந்தும் விடுபட் டவன் போல் சிரித்தான்.

'அப்படியா? பயலை இப்பவே பாக்கணும் போல இருக்கே இங்க கான்ஃபரன்ஸ் முடிக்க இரண்டு நாளாகுமே!' என்று தவித்தான்.

'நீங்க மெதுவா... வாங்க. ஒண்ணும் பிராப்ளமில்லை' என்றான் ராகவன்.

பிறந்த நேரம், நட்சத்திரம் என்று விவரங்கள் கேட்டுக் கொண்டான்.

வானத்தில் மிதப்பது போல் உணர்ந்தான். கண்டிப்பாக அந்த ஸ்ரீராம் ஏதோ தில்லுமுல்லு செய்திருக்கிறான் என்று உள்மனது சொன்னது உண்மையாகிப் போனது.

'இர்ரா... டேய், இரு. உனக்கு இருக்கு!' என்று கறுவிக் கொண் டான். பிறகு அதை மறந்தவனாய் மேலதிகாரிகளிடம் பேசி அன்று நள்ளிரவிலேயே விமானத்தில் புறப்பட்டான்.

அதிகாலை ஆறு மணிக்கே வந்து நிற்கிற கணவனைப் பார்த்து ஆச்சரியமானாள் நித்திலா.

'ஃப்ளைட்டில் வந்தேன். மகனைப் பார்க்க!' என்று கலகல வெனச் சிரித்தபடி குழந்தையின் நெற்றியில் முத்தமிட்டுக் கொஞ்சுகிற அவனைப் பரிவாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்



'என்ன... நித்தி... என்னை மாதிரிக் கறுப்பாப் பொறந் துட்டானே... ஆனா... அது எனக்குச் சந்தோஷம்தான்!' என்று சிரித்தான்.

'மாமியார் நிற்பதைக் கூடச் சட்டை செய்யாமல், அவன் மனைவியை நெருங்க, அவர் சரேலென்று வெளியேறினார்.

தன் மனைவியை மார்பில் சாய்த்துக் கொண்டு, அவள் முகம் நோக்கிக் குனிந்து முத்தமாரி பொழிந்தான்.

'ஐயோ... என்ன நீங்க... ஆஸ்பத்திரின்னு கூடப் பாக் காம...' என்று அவள் வெட்கப்பட்டாள்.

'எதுக்குப் பாக்கணும். யு ஆர் மை வைஃப் மேடம்!' என்றான். குறும்பாகச் சிரித்தான்.

பல நாட்களுக்குப் பிறகு அவன் அப்படிச் சிரிப்பதைப் பார்த்த நித்திலா மனம் நெகிழ்ந்தாள். மகனுக்குச் சின்னதாக ஒரு செயின் போட்டான்.

'தாங்க்ஸ்... எ லாட் நித்திம்மா...' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டான்.

'அத்தை... குழந்தையை எப்படி வச்சுக்கணும்? சொல்லிக் குடுங்க,' என்று கைகளில் ஏந்திக் கொண்டான்.

குழந்தையும் கால்களை ஆட்ட, அந்தத் தொடுகையில் சிலிர்த்துக் கொண்டான்.

மனது ஒரு நிலைப்பட்டது.

அன்று அவன் மனச்சிக்கலுக்கு வேறு விடைகளும் கூடக் கிடைத்தன.

விமலா அன்று மாலை குழந்தையைப் பார்க்க வந்தாள்.

'ஹேய்... நீ பயங்கரமான ஆளுடி. யாரு முகம் தெரியுதுன்னு சொன்னியோ, கடைசியில அந்த முகத்தையே வாரிசாக்கிக் கொண்டு வந்துட்டே!' என்று சிரித்தாள்.

அவன் திரும்பி ஷெல்பில் பழங்களை அடுக்கிக் கொண் டிருந்தான். அந்த வார்த்தையைக் கேட்டதும் உஷாரானான்.

விமலாவிடம் இயல்பாகப் பேசுவது போல் பேசிக் கொண்டே கேண்டீன் அழைத்துப் போனான். அவள் வாயி லிருந்தே விவரம் வரவழைத்தான்.

'அதென்னமோ... அந்த முகம்ன்னு சொன்னீங்களே...?' என்றான்.

'ஐயோ... அதையேன் கேக்கறீங்க.... ஒரு தடவை ஸ்ரீராம் ஆஃபீசுக்கு வந்தாரு. இவ இன்ட்ரஸ்டே இல்லாமப் போய்ப் பேசிட்டு வந்தா. என்னன்னு கேட்டா... ஏன்னு தெரியலே. அந்தச் சந்திரசேகர் முகம்தான் அடிக்கடி மனசுல வருதுங்கறா. கடைசியில நீங்களே மாப்பிள்ளையாயிட்டீங்க!' என்றான்.

'அப்படியா? ரொம்ப சுவாரசியமாய் இருக்கே...' என்றான் ஆர்வமாய்.

'அதுமட்டுமில்ல... ஸ்ரீராமோட நடக்கறதா இருந்த கல்யாணம் நின்னு போனதும் நான் போய், 'நல்ல வேளை! நித்தி, தப்பிச்சே. அந்த ஸ்ரீராமை எனக்குப் பிடிக்கவேயில்லேங்க றேன்... எனக்கும்தாங்கறா. அப்புறம் ஏன் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேங்கறேன்... அப்பா பாத்த மாப்பிளையாச்சே அதான்ங்கறா.''

அவன் தீவிரமாக, மௌனமாகக் கேட்டுக் கொண்டான்.

'நல்ல வேளைங்க...நித்தி... தப்பிச்சா!' என்று விமலா வாய்க்கு வாய் சொன்னாள். 'அவள் மட்டுமா? நானுந்தான் தப்பிச்சேன். உங்க பேச்சைக் கேட்டதனால!' என்று எண்ணிக் கொண்டான்.

அன்றிரவு ஆஸ்பத்திரியில் இருந்து மனமில்லாமல் வீட்டுக்குப் புறப்படுகையில் ராகவன் வேறு இன்னொரு செய்தி சொன்னான்.



'சேகர்... பெண் பார்க்க வந்தன்னைக்கு நீதான் மாப் பிளைன்னு நித்தி நெனச்சுட்டா. அப்புறம் சமாதான மாயிட்டா. ஆனா எனக்கு அந்தச் சந்திரசேகர் முகத்திலே ஒரு நேர்மை தெரியுது. இந்த ஸ்ரீராம் முகத்தில் ஒரு நரித்தனம் தெரியுதுன்னு சொன்னா. கடைசியில அவ சொன்ன மாதிரியே அவன் ஒரு நரிங்கறதை நிரூபிச்சிட்டான்!' என்றான்.

இதையெல்லாம் கேட்கக் கேட்கத் தன் உள் மனதின் குரல் சரிதான் என்று முழுமையாக அவனுக்குத் தீர்மானமானது.

ஆனால் ஒரே ஒரு விஷயம் தெளிவு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது என்றும் எண்ணிக் கொண்டான்.



## 10

இரவு உறக்கமே பிடிக்கவில்லை.

திரும்பத் திரும்ப அந்த ரிப்போர்ட்டை வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான்.

பேர் மாறிப் போய்விட்டது. ஆள் மாறிப்போய் விட்டது என்றெல்லாம் சொல்வதற்கு இது என்ன சினிமாவா?

அதிலும் இரத்தப் பரிசோதனை அது இது என்ற முடிவுகளைப் போலவே இந்த ரிப்போர்ட்டிலும் அந்த ஆஸ் பத்திரியின் தெளிவான ரிப்போர்ட் ஆகத்தான் இருந்தது.

யோசித்து யோசித்து ஒன்றும் புரியவில்லை. புலப்பட வில்லை.

உடனடியாக ஒரு முடிவெடுத்தான். ஆஸ்பத்திரிக்கு ஃபோன் போட்டான்.

'நித்திலா... நான் அவசரமாக ரெண்டு நாள் வெளியூர் போறேன். வந்தவுடனே வர்றேன். என்ன? ' டேக் கேர்...' என்றான்.

'என்ன விஷயமா?'

'அஃபிஷியல் அண்ட் கான்ஃபிடென்ஷியல்!'

'ஓ.கே., ஓ.கே.' என்றவள், பிறகு தழைந்த குரலில், 'என்னங்க...'என்றாள்.

'ம்... சொல்லு...'

'ரொம்ப நாள் கழிச்சு இன்னைக்குத்தான் உங்க பழைய சிரிப்பைச் சிரிச்சீங்க... ஏதாவது பிராப்ளம் இருந்ததா என்ன?'

அவன் சிரித்தான். 'அதெல்லாம் ஒண்ணுமில்லை நித்தி... நாந்தான் சொன்னேனே இந்த இன்ஸ்பெக்ஷன் போய்த் தப்புங்களைக் கண்டுபிடிச்சு, அதன் பேரில் நடவடிக்கை எடுக்கறப்ப மனசுக்குக் கஷ்டமா இருந்துச்சு. அவ்வளவுதான்,' என்றவன் ஆழ்ந்த குரலில்,

'நித்தி...!' என்றான்.

'ம்...!'

'மகனைப் பார்த்தவுடன் ரொம்பப் பெருமையா இருந்துச்சு தெரியுமா? என்னையே கண்ணாடியில பாத்துக்கற மாதிரி இருந்துச்சு. தாங்க்ஸ் நித்தி. தாங்க்யூ வெரி மச்!'

'சந்துரு...!' என்று நெகிழ்ந்தாள்.

'பாருங்க... உங்களை மாதிரியே சிரிக்கறான். எவ்வளவு பெரிய அற்புதம் இல்ல. இது.... இந்தக் குழந்தைங்கற படைப்பு...' என்றாள்.

மேலும் சற்று நேரம் தங்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள். பிறகு,



'சரி... நித்தி, நான் மறுபடியும் கான்டாக்ட் செய்யறேன்,' என்று வைத்தான்.

∴ ∴ ∴

அந்த நேரம்.

ஆஸ்பத்திரியில் கூட்டம். கூட்டம் ஓயும்வரை காத்திருந்தான். அதற்குள் அங்கே தெரிந்த நண்பர் ஒருவர் டாக்டராய் இருந்தது தெரிய வந்தது.

அணுகினான். அந்த பழைய ஃபைலைக் கண்டுபிடித்தார்கள்.

அந்த ஃபைலில் அந்தக் குறிப்பிட்ட ரிப்போர்ட் இல்லை. கம்ப்யூட்டரில் தேடினார்கள். அதிலும் இல்லை.

'என்ன... ராஜன், அது மட்டும் எங்கே போயிரும்?' என்றான் சந்திரசேகரன்.

ராஜன் பேசவில்லை. சற்று நேரம் அந்த ரிப்போர்ட்டை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, 'சந்திரன்... இது போலி ரிப்போர்ட்!' என்றார்.

அவன் திகைத்துப் போய் அவரைப் பார்த்தான்.

'ரொம்பத் திறமையாய்த் தயாரிக்கப்பட்டிருக்கு. அதுதான் நானும் யோசிக்கறேன். கேட்டாலொழிய அப்படி டெஸ்ட் அவசியமேயில்லையே. உங்களுக்கும் தெரியாம... அப்படியொரு டெஸ்ட் எதுக்குன்னு யோசிச்சகிட்டிருக்கேன்.'

அவன் செயலிழந்து போய் அமர்ந்திருந்தான்.

கொஞ்சம் ஏமாந்திருந்தால் தனக்கும்... நித்திலாவுக்கும் இடையே எவ்வளவு பெரிய பிளவை ஏற்படுத்தியிருக்கும்! தான் மட்டும் பொறுமையாய் இருந்திராவிட்டால், தன்னைப் போலவே குழந்தை பிறக்காமல் இருந்திருந்தால், என்னென்ன நேர்ந்திருக்கும்! நினைத்துப் பார்க்கவே அச்சமாய் இருந்தது.

அப்படியென்ன தவறு செய்தேன்? அவன் வேண்டாமென்று உதறிவிட்டுப் போன பெண்ணின் மானம்

காப்பாற்றினேன் என்று நினைத்து நினைத்துச் சந்திரசேகரன் வெகுவாய் வருத்தப்பட்டுப் போனான்.

'இப்படியொரு ரிப்போர்ட் தயாரிக்கிற ஆள் ரொம்ப டேன்ஜரஸ். யாரவன், சொல்லுங்க... அவன் மேல நட வடிக்கை எடுக்கணும்,' என்று கேட்டார் ராஜன்.

'வேண்டாம் சார். இதெல்லாம் தெரிய நேர்ந்தால் நித்தில ரொம்ப வருத்தப்படுவாள்!' என்று விவரம் சொன்னான். முழுவதும் கேட்டதும் ராஜன் மலைத்துப் போனார்.

'சார்... ஒரு நல்ல பெண்ணோட வாழ்க்கையில் விளை யாடணும்னு நினைக்கிற எந்த நயவஞ்சகனும் உருப்பட்டது கிடையாது.நீங்க வருத்தப்படாதீங்க!' என்று தேற்றினார்.

ஊருக்குத் திரும்பினான்.

நித்திலையும், குழந்தையையும் பார்த்து விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வழியிலே காரை நிறுத்தி செல்ஃபோனில் சென்னையிலிருந்த மேலதிகாரிக்குத் தொடர்பு கொண்டான்.

'சார், ஸ்ரீராம் ரெண்டு லட்ச ரூபா கையாடல் செஞ் சிருக்கான்!' என்று முழுமையாக விவரம் சொன்னான்.

அவர் அந்தப்புறம் இருந்து, 'ஏற்கெனவே ஒரு தரம் செஞ்சிருக்கான். வார்னிங் கொடுத்தேன். இப்பவும் அதே தப்பைச் செஞ்சிருக்கான். நீங்க ரெகார்ட்ஸைக் கூரியரில் அனுப்புங்க!' என்றார்.

வீட்டுக்கு வந்தவுடன் நித்திலாவுக்கு ஃபோன் செய்து 'நித்தி... ஸ்ரீராம் கையாடல் செஞ்ச விவரத்தை ஆஃபீசுக்குச் சொல்லிட்டேன்,' என்றான்.

அந்தப் பக்கம் நித்திலா, 'சந்துரு, அந்த ஸ்ரீராம் மேட்டரே எனக்கு வேண்டாம்!' என்று பேச்சை மாற்றினாள்.



அப்போதுதான் சந்திரசேகரனுக்கு அது நினைவுக்கு வந்தது. 'எப்போது ஸ்ரீராமைப் பற்றிப் பேசினாலும்... நித்திலா நகர்ந்து விடுவாள் அல்லது பேச்சை மாற்றி விடுகிறாள். எதனால் இருக்கும்?' என்று கேள்வி தோன்றியது.

கேட்க வேண்டும். அவளிடம் கேட்க வேண்டும் என்றெண்ணிக் கொண்டான்.

இரண்டு நாள் கழித்து

இரவு பன்னிரண்டு மணியிருக்கும். செல்ஃபோன் ஒலித்தது. எடுத்தான். ஸ்ரீராம்.

'டேய்... சேகர்! என்னை மாட்டிவுட்டுட்டே இல்லே. மெட்ராஸ் கிழவன் போலீசில் ரிப்போர்ட் பண்ணீட்டான். சும்மா விட மாட்டேன்டா!' என்றான்.

'போதும்... ஸ்ரீராம், ரொம்ப மிரட்டாதே. உன்னோட எல்லாத் தில்லுமுல்லுகளும் வெட்ட வெளிச்சமாயிடுச்சு. சிவா ஆஸ்பத்திரியிலே உன் மேலே கம்ப்ளெயின்ட் குடுக்கத் தயாராயிருக்காங்க. நாந்தான் நிறுத்தி வச்சிருக்கேன். இப்பவும் ஒரு வாய்ப்புக் குடுக்கறேன். பெரியவர்கிட்டே நான் பேசறேன். பணத்தைக் கட்டு. மேல நடவடிக்கை இல்லாமல் பாத்துக்கறேன். அதை விட்டுட்டு மேல மேல சீண்டாதே...' என்று டொக்கென்று வைத்து விட்டான்.

❖ ❖ ❖

சென்னை மேலதிகாரியிடம் பேசினான்.

'வேண்டாம்... சார்... நேம் வெளிய வந்தா கம்பெனி பேர் கெட்டுடும். ரெசிக்னேஷன் லெட்டர் வாங்கீட்டுப் புகாரை வாபஸ் வாங்குங்க!' என்று ஆலோசனை சொன்னான்.

'ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரெடி பண்ணிட்டானாம். இன்னும் ஐம்பதாயிரம் ரெடி செய்யணுமாம்.'

'நான் அந்த நாய்ப் பயலுக்கு ஒரு ஹெல்ப்பும் பண்றதா இல்லை. பணத்தைக் கட்டட்டும். அப்புறம் பாக்கலாம்,' என்றார் அவர், கடுப்பாக.

சந்திரசேகரன் ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

பிறகு... அடுத்த வாரத்தில் தானே இருபத்தைந்தாயிரம் கட்டினான். தன் பெயரைச் சொல்ல வேண்டாம் என்றான். அப்போதும் பெரியவர் புகாரை வாபஸ் வாங்கவில்லை.

மேலும் பதினைந்து நாட்கள் சென்ற பின் ஸ்ரீராம் ஃபோன் செய்தான். அப்போது நல்ல நாள் என்பதற்காக நித்திலாவை இரண்டு நாட்கள் அவர்கள் வீட்டிற்கு அழைத்திருந்தார்கள்.

'டேய்... சேகரா, வெளியே வந்துட்டேன். கடைசி இருபத்தைந்தாயிரம் யார் காட்டினாங்க தெரியுமா? உன்னோட அருமை நித்திலவல்லி... ராகவன்கிட்டே குடுத்துக் கட்டியிருக்கா!' என்று விகாரமாகச் சிரித்தான்.

வைத்து விட்டான்.

செல்ஃபோனை ஆஃப் செய்யும்போதுதான் கவனித்தான். உள்ளூர் அழைப்பு. கோயம்புத்தூரில் இருக்கிறான். திடுக்கிட்டுப் போனான். காரை வீடு நோக்கித் திருப்பினான். நினைத்த மாதிரியே நித்திலா மட்டும்தான் இருந்தாள்.

ஸ்ரீராம் ஹாலில் நின்று கொண்டிருந்தான்.

சந்திரசேகரனைப் பார்த்தவுடன், 'சந்துரு... இந்தக் குள்ள நரி என்னென்னமோ சொல்றான்!' என்று ஓடி வந்து அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

வலது கையால் அணைத்துப் பிடித்துக் கொண்டு, ஸ்ரீராமைப் பார்த்தான். அவன் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது.

'என்ன சொன்னேன்? எதுக்காக இருபத்தைந்தாயிரம் கட்டினேன்னு கேட்டேன்,' என்றான் அவன் அசராமல்.

சந்திரசேகரனின் முகம் இறுகியது.

'கேக்கறான் இல்ல... சொல்லு, நித்தி!' என்றான்.



அவள் இருவரையும் மாற்றி மாற்றிப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

'தப்போ... டைரட்டோ... இவன் கூட வந்ததினாலேதானே நீங்க எனக்குக் கிடைச்சீங்க... அந்த நன்றிக் கடனுக்காகத் தான்!' என்றாள்.

ஸ்ரீராமின் முகம் விழுந்தது. சந்திரசேகரன் தொடர்ந்தான்.

'இதையும் தெரிஞ்சுக்க. இன்னொரு இருபத்தைந்தாயிரம் யார்... கட்டினா தெரியுமா? நான்தான். ஏன்னு கேக்கறியா? நித்தி... சொன்னாளே, அதே காரணந்தான். உன்னோட வரப் போய்த்தானே இந்த அருமையான பெண் எனக்குக் கிடைச்சா. அதுக்குத்தான்!' என்றான்.

வெளியே போ என்று வழிகாட்டினான். இரண்டு அடி எட்டி வைத்தவனைச் சந்திரசேகரன் மறுபடியும் அழைத்தான்.

'பாரு... ஸ்ரீராம், உனக்குக் கிடைச்ச பொக்கிஷத்தை நீ கை நழுவ விட்டுட்டே. அது உன் தப்புங்கறதை உணர்ந்துக்க. உன்னுடைய கஷ்டங்களுக்கு நீயேதான் காரணம். சும்மா மத்தவங்களைக் குறை சொல்லாதே...' என்றான்.

'போ!' என்பது போல் சைகை காட்ட... அவன் போய் விட்டான்.

நித்திலவல்லி அவன் மார்பில் முகம் புதைத்து அழுதாள்.

'நித்தி... பச்சை உடம்பு... நித்தி, அழாதே!' என்றான்.

அவள் தேம்பிக் கொண்டே அவனைப் பார்த்தாள்.

'அந்த நரி... என்னென்னமோ சொல்லீருக்கான்.நீங்களும் நம்பியிருக்கீங்க!' என்றாள்.

அவள் முகத்தில் தெரிந்த ஆழ்ந்த வேதனை பார்த்த அவன் திகைத்துப் போய் நின்றான்.

அவள் விலகி உள்ளே போய் விட்டாள்.



# 11

'ப்ளீஸ்... நித்தி அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்க!' என்று கெஞ்சினான்.

'என்னத்தை அண்டர்ஸ்டாண்ட் பண்றது?' என்று அவள் கோபமாகக் கேட்டாள்.

'நீங்க எப்படி அப்படி நினைக்கலாம்?' என்றாள்.

'பாரு... நித்தி... நீ எனக்கு நிச்சயிக்கப்படலை. ஸ்ரீராமுக்குத்தான் நிச்சயிக்கப்பட்டிருந்தே. யு வேர் நாட் கமிட்டட் டு மீ. அப்படியிருக்கையிலே தப்பா.... ரைட்டான்னு அலசற உரிமை எனக்கிருக்குல...''

அவன் பேச்சில் இருந்த நியாயம் புரிந்தது. அமைதியானாள். ஆனால், கேட்டாள்.

'கேட்டுத் தெளிவாக்கியிருக்கலாம் இல்லே...'

'என்னன்னு கேக்கறது? கல்யாணத்துக்கு முந்தின உன்னோட வாழ்க்கை பத்திக் கேக்க எனக்கு என்ன ரைட் இருந்தது. அது மட்டுமில்லே. ஸ்ரீராம் ரொம்பக் கெட்டிக்காரன். நைச்சியமாய்ப் பேசிப் பணிய வச்சிருக்கலாம். என்னையே நம்ப வச்சவனாச்சே...'

'....'

'நாளைக்குக் கல்யாணம் செஞ்சுக்கப் போறவந்தானேன்னு நீ...'

'ப்ளீஸ். சொல்லாதீங்க...' என்றாள் வேதனையுடன்.



'சாரி... நித்தி... பேசி முடிச்சரலாம். நீயும் கொஞ்சம் விட்டுக் கொடுக்கற டைப்..' என்று அவன் தொடருமுன்னே -

'உளறாதீங்க சந்துரு. எல்லாத்தையுமா விட்டுக் கொடுப்பாங்க?' என்று சீறினாள்.

அவன் குற்றம் செய்த சிறுவனைப் போல் நின்றான்.

'பாரு, நித்தி. சொன்னாக் கசப்பா இருக்கும். ஆனா இன்னைக்கு நிறைய இடங்கள்ல டேட்டிங் இலைமறைவு காய்மறைவாக இருக்கு. அதுவுமில்லாம ஒரு தரம் என்னை ரெண்டு மாசம் கம்பெனியிலிருந்து வெஸ்டர்ன் கண்ட்ரீஸ் அனுப்பியிருந்தாங்க. அங்க உலகத்தின் பல்வேறு விதமான வாழ்க்கை முறையைப் பார்த்தேன். நம்ம நாட்டிலதான் பெண்களை இப்படிப் பொத்திப் பொத்தி அடைக்கிறோம். நீயும் ஒரு அஸிஸ்டன்ட் மேனேஜர் லெவல்ல இருக்கறவ... கேக்கறது நாகரீகமில்லை நித்தி...' என்றான்.

'அது மட்டுமில்ல... நித்தி,' என்று தன்னைப் பற்றி அவன் தயாரித்து வைத்திருந்த ரிப்போர்ட்டைப் பற்றிச் சொன்னான்.

'சொன்னான், அந்த நரி!' என்றாள். பிறகு, 'இந்த விஷயத்துல நீங்க செஞ்ச எல்லாம் தப்புதான். ஆனா ஒரே ஒரு ஆறுதல்... நடந்தது. எதுவாக இருந்தாலும் சரி, நித்திதான் என் மனைவின்னு சொன்னீங்களாம்!' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

'பின்னே... ஏன்? மூணு மாசம் உள்ள வச்சு வருத்தப் பட்டீங்க.'

'நித்தி... நான் அதுக்கு வருத்தப்படலை. இன்ஃபாக்ட் அப்படி ஏதாவது நடந்திருந்தாலும் அது உன் வாழ்க்கையில் ஒரு விபத்துன்னு நான் எடுத்துக்கத் தயாராய் இருந்தேன். ஆனா, என்னைப் பத்தி அவன் தயாரிச்ச ரிப்போர்ட். அது மட்டும் உண்மையாய் இருந்திருந்தா, நான் உனக்கு ஒரு

பெரிய கொடுமை செஞ்சதாத்தானே அர்த்தம்? உனக்குத் தாய்மை மறுக்கப்பட்டிருக்கும்.'

'அதான்... பெரிய கருணைப் பிரபுவாயிற்றே. அவன் குழந்தையாயிருந்தாலும் சரின்னு ஏத்துக்கத் தயாராயிட் டீங்க...' என்றாள் கசப்புடன்.

'இ'ம்... சரி... நித்தி...'

'....'

'நித்தி! என்னதான் மோசமானவனாயிருந்தாலும், அவனுக் கும் வாய் கூசாமச் சொல்ல வர்லே. என்ன சொன்னாங் தெரியுமா? நாந்தான் கம்பெல் செய்தேன்னான்.'

'பேசாதீங்க... சந்துரு. கம்பளிப் பூச்சி ஊர்ற மாதிரி இருக்கு...' என்று மறுபடியும் சீறினாள்.

அவன் அமைதியாகி விட்டான்.

'எல்லாம் என் தலையெழுத்து!' என்று புலம்பிக் கொண்டாள்.

அவன் செய்வதறியாது பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நிமிடத்திற்குப் பிறகு, சந்திரசேகரன் அவளைப் பார்த்து, 'நீ மட்டும் என்ன? எப்ப அவன் பேச்சு வந்தாலும் அங்கிருந்து போயிடுவே. முகம் கறுத்துப் போகும்!' என்றான்.

அவள் வெகு கடுப்புடன் அவனைப் பார்த்தாள்.

'பின்னே கேவலம்... பணத்துக்காக என்னைக் கல்யாணம் செய்யணும்னு நினைச்சவன் ஆச்சே. அவனைப் பற்றி சந்தோஷமாவா பேசிக்கிட்டிருப்பேன்!' என்றாள்.

'ஓ...!' என்றான். திகைத்துப் போய்.

'என்ன... ஓ!' என்றாள்.

அவன் செய்வதறியாது நின்றான்.

அவனுக்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை தங்களுடைய திருமணம் திடீர்த் திருமணம் என்கிறபோது



அவனைக் குற்றம் சொல்ல ஒன்றுமில்லை. எல்லாத் தவறும் விதியின் குற்றம்தான்.

தகுதியில்லாத ஒருவனுக்குத் தான் நிச்சயிக்கப்பட்டது தான் என்ற வேதனையுடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். வெகுவாக வருத்தப்பட்டாள்.

சந்திரசேகரன் அவள் வேதனை புரிந்து அணைத்துக் கொண்டான்.

'போகட்டும்... விடு, நித்தி. நீ சொன்ன மாதிரி நரிகிட்ட போய் நாகரீகம் எதிர்பார்க்க முடியுமா? அவனுக்குத் தெரிஞ்ச மாதிரி அவன் நடந்துக்கிட்டான்,' என்று தேற்றினான்.

'அவன் நல்லாயிருக்க மாட்டாங்க!' என்றாள்.

'வேண்டாம் நித்தி. உன் வாயால் அப்படிச் சொல்லாதே. என்ன இருந்தாலும் எனக்கு ஒரு சமயம் நண்பனாக இருந் தவன். எங்கேயோ பொழச்சுட்டுப் போறான், போ!' என்றான்.

இரண்டு காயம்பட்ட உள்ளங்களும் பேசிப் பேசித் தங்கள் காயங்களை ஆற்றிக் கொள்ள, சந்திரசேகரன் கடைசியில் சொன்னான்.

'பாரு... நித்தி... காலையிலே எழுந்து தலைக்குக் குளி. கோயிலுக்குப் போகலாம். ஸ்ரீராம் என்ற நினைப்பையே இதோட தலை முழுகிடுவோம். தெய்வம் பாத்துக்கட்டும். நாம நிம்மதியா இருப்போம். இப்பவும் நான் சொல்றேன். அவன் இல்லேன்னா நீயும் நானும் ஒருத்தரை ஒருத்தர் சந்திச்சிருக்கவே மாட்டோம் இல்ல...' என்றான்.

'ஆமாங்க... தெய்வமே பாத்துக்கட்டும்!' என்றாள் அவளும்.

எப்போதும் நின்று கொல்லும் தெய்வம் ஸ்ரீராம் விஷயத் தில் உடனடியாகத் தன் பார்வையை வீசியது போலும்.

நடந்து போய்க் கொண்டிருந்த அவன் மீது ஒரு லாரி மோத தூக்கி எறியப்பட்டு மயங்கிக் கிடந்தான்.



## 12

ராகவனும், உஷாவும் காரில் வந்து கொண்டிருந்தார்கள்.

உஷாவும், ராகவனும் இப்போது மிகவும் பிஸியாகி விட்டார்கள். உஷா காலையில் சமையல் முடித்தபின், வீட்டில் இருந்தபடியே டிராயிங் போட்டுக் கொடுத்தாள். பகலுண முடிந்த பின், சற்று ஓய்வெடுத்து மீண்டும் டிஃபன் செய் எடுத்துக் கொண்டு ராகவனின் அலுவலகத்துக்குப் போ விடுவாள். காரோட்டக் கற்றுக் கொண்டிருந்தாள்.

தனது அலுவலகத்திலே ஒரு அறையை அவள் ட்யூஷ னுக்கு ஒதுக்கியிருந்தான் ராகவன். ஐந்து மணியிலிருந்து ஏ மணி வரை ட்யூஷன் முடித்து விட்டு வந்தாளானால், அவனு வந்து சேருவான்.

நான்கைந்து இடங்களில் கட்டிட வேலைகள் நடந் கொண்டிருந்தன. ஒரு சுற்றுப் பார்த்து விட்டு அலுவலக வந்து அங்கேயே டிஃபன் சாப்பிடுவான். சற்று நேர கட்டிடங்களைப் பற்றிப் பேசுவார்கள்.

உஷா செலவு குறைவாகவும், தரமாகவும் செய்வதற் நிறையக் கருத்துக்கள் கொடுத்தாள். பெண்களின் தேவைக ஒரு வீட்டிற்குள்ளேயே இடம் நிறைய மிச்சமாகிற வகையி ஷெல்ஃபுக்கள் எப்படி அமைக்கலாம் என்று ஐடியாவு கொடுத்தாள்.



அவளுடைய கருத்துக்கள் வீடு கட்டிக் கொள்வோருக்குப் பிடித்துப் போனால் ராகவனிடமிருந்து அவளுக்குப் பாராட் டும், பரிசுகளும் கிடைக்கும்.

அண்ணனைப் போல அல்லாமல் ராகவன் கொஞ்சம் ரசனையான ஆள் என்று வந்தவுடனே புரிந்து கொண்டாள். அத்தையும், மாமாவும் ரசித்துக் கொள்வதைப் போலவே, அவளும் ரசித்துக் கொள்வாள். தனியாக இருக்கும் போது பதில் கொடுப்பாள். தங்கள் தனிமையின் போது அவள் கொடுக்கிற நெத்தியடிப் பதில்களை ரசித்துக் கொள்வான். நினைத்து நினைத்துச் சிரித்துக் கொள்வான்.

இன்று சனிக் கிழமை.

நேரத்திலேயே ட்யூஷனை முடித்து விட்டு இருவருமாகச் சற்று வெளியே ஷாப்பிங் போனார்கள். பிறகு அண்ணனைப் பார்த்துவிட்டு வரலாமே என்று வந்து கொண்டிருந்தார்கள்.

'ஏங்க?' என்றாள்.

'ஏங்க!' என்றான் அவனும் கிண்டலாக.

'இல்லே... அண்ணனோட பையன் பாத்தீங்களா? அப் படியே அண்ணன் மாதிரியே இல்லே?' என்றாள்.

'ம்...!' என்று ராகவன் சோகப் பெருமூச்சு விட்டான்.

அவள் கேள்விக் குறியுடன் பார்க்கவும் -

'நித்திலா எப்ப இப்படியொரு ஸ்டேட்மெண்ட் சொல்லப் போறாளோ, தெரியலை!' என்றான்.

உஷாவின் முகம் சிவந்தது.

'அநேகமாக எப்பன்னு இந்த மாசத்துக்குள்ள தெரிஞ்சுடும்!' என்றாள் மெல்ல.

'ஹேய் உஷா! நிஜமாவா?' என்று அவன் காரை ஓரம் கட்டினான். தன் இடது கரத்தால் இழுத்து அணைத்துக் கொண்டான். நெற்றியில் இதழ் பதித்தான்.

'விடுங்க... இதென்ன ரோட்டிலே?' என்று வெட்கத்துடன் விலகினாள். 'இந்த மாசக் கடைசியிலதான் டெஸ்ட்டுக்குப் போகணும்,' என்றாள்.

'இதே வீடா இருந்தா ட்ரீட்மெண்டே வேற செல்லம்மா!' என்றான். முகமெல்லாம் சிரிப்பாய் இருந்தான்.

'நல்ல வேளை, தப்பிச்சேன்...' என்றாள்.

பேசிக் கொண்டே காரை எடுத்தான். சற்று தூரம் போயிருப் பார்கள்.. ரோட்டின் இடது ஓரத்தில் குறுக்காக ஒரு ஆள் கிடப்பது தெரிந்தது.

'உஷா! ஒரு ஆள் கிடக்கிற மாதிரித் தெரியலே?' என்றான் ராகவன்.

'ஆமாங்க...!' என்றாள் உஷா கலவரமாக. காரை நிறுத்தி னான். 'நீ வர வேண்டாம். இரு!' என்று இறங்கிப் பார்த்தான் ஹெட்லைட்டைப் போடச் சொன்னான்.

அருகில் போய்ப் பார்த்தான். அதிர்ந்து போனான். கிடந்தது ஸ்ரீராம்.

நிதானமாக நிமிர்ந்தான். முகத்தில் கோபம் கொப் பளித்தது. திரும்பி நடந்தான். காரில் ஏறி ஸ்டார்ட் செய்ய முயற்சித்த போது உஷா ஸ்டியரிங்கைப் பிடித்தாள்.

'ஏங்க...?' என்றாள்.

'உஷா... கிடக்கறது யார் தெரியுமா? ஸ்ரீராம். அந்த நாய் செத்துத் தொலைஞ்சா இந்த உலகத்துக்கு லாபம்தான்..' என்றான், வெறுப்புடன்..

அவன் செய்த டெஸ்ட் ரிப்போர்ட் ஊழலை மட்டும் கோடி காட்டியிருந்தான் சந்திரசேகரன்.

சொல்லி விட்டு, 'மச்சான்... நாம ரெண்டு பேரும் நண்பர்களைப் போலப் பழகுகிறோம் என்கிறதாலே



சொன்னேன். உஷாவுக்குக் கண்டிப்பாகத் தெரியவேண்டாம்!' என்று வேண்டுகோள் வைத்திருந்தான்.

அந்தக் கோபம் உள்ளுக்குள்ளேயே ஊறிக் கிடந்தது.

உஷா அவனை அதிர்ச்சியாய்ப் பார்த்தாள்.

'என்னத்தைப் பாக்கறே நீ? அந்த நாய் நம்ம குடும்பத்து அமைதியைத் தொலைக்க என்னென்ன செய்திருக்கான், தெரியுமா?' என்று கடுகடுத்தான்.

உஷா அமைதியுடன் அவனைப் பார்த்தாள். 'இருக்கட் டுங்க. ஆனா தண்டனை குடுக்க நாம யாரு... பாருங்க ஒரு உயிர் வரப் போகுதுன்னு நாம எவ்வளவு சந்தோஷப் பட்டோம். இந்த நல்ல நியூஸைப் பங்கிட்டுக்கிற இந்த நேரத்துல இன்னொரு உயிருக்குத் துரோகமா?' என்றாள், கெஞ்சலாக.

ராகவன் சற்று நேரம் தலையைத் தாங்கிப் பிடித்தபடி யோசித்தான்.

'சே... செண்டிமெண்டலா... அடிச்சுட்டாடா!' என்று நொந்து கொண்டான். காரை நிறுத்திவிட்டு, 'சரி... நீ ஓட்டு. நான் பின் ஸீட்டிலே அவனைப் படுக்க வைக்கிறேன்,' என்றான்.

ஹாஸ்பிட்டலில் சேர்த்தார்கள். உஷாவைக் கொண்டு போய் வீட்டில் விட்டு அவன் இரவெல்லாம் கூட இருந்தான். அதிகாலையில் கண்டம் தாண்டி விட்டான் என்றார்கள். ஆனால்... அந்த ஆஸ்பத்திரியிலே இருந்த அவன் டாக்டர் நண்பர் வந்து அவனிடம் தனியாகச் சற்றுப் பேசி விட்டு,

'இவன் பொழைச்சதுக்குப் பேசாம செத்தே இருக்கலாம்...' என்றார்.

'ஏன்?' என்றான் ராகவன்.

'ஏனா? இனி தினம் தினம் சாகப்போறான். ட்ரீட்மெண்ட்டுக் காக பிளட் டெஸ்ட் பண்ணினமில்லே? ஹெச் ஐ வி பாசிட்டிவ்.'

'அட, கடவுளே!' என்று ராகவனே திகைத்துப் போனான். எப்படிப்பட்ட இக்கட்டிலிருந்து கடவுள் தங்கையைக் காப்பாற்றி இருக்கிறான் என்பது புரியவும், ஒரு பக்கம் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ஸ்ரீராமை நினைத்து ஆழ்ந்த பரிதாபமும் ஏற்பட்டது.

முழுவதையும் கேட்ட சந்திரசேகரனும் திகைத்துப் போனான்.

மறுநாள் ஒரு ஓட்டலில் பகலுணவு சாப்பிட்டபடி மாமனும், மைத்துனனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'ராகவ்.... மச்சான்... நித்தி எவ்வளவு நல்ல பெண். அவளுக்கு ஏன் நிச்சயிக்கப்பட்ட கல்யாணம் நின்று போக ணும்ன்னு நெறையத் தடவை நான் யோசித்தது உண்டு. ம்... கடவுளின் கணக்கு யாருக்குப் புரியும்...' என்று நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

சற்றுக் கழித்துப் பேசினான்.

'ஆனா... நித்திக்கு இப்ப ஸ்ரீராமுக்கு ஹெல்ப் பண்றோங்கற விஷயத்தையே சொல்ல வேண்டாம். அவன் பேரைக் கேட்டாலே அவ ரொம்ப வருத்தப்படறா!' என்றான் சந்திரசேகரன்.

'அதுவும் சரிதான்...' என்றான் ராகவன்.

முழு நினைவு வந்து சற்றுத் தேறிய பின் மெதுவாக ஸ்ரீராமிடம் உண்மை சொல்லப்பட்டபோது, அவன் கதறி அழுதான்.

'என்னை எதுக்குக் காப்பாத்தினீங்க?' என்று வெடித்து அழுதான்.

சந்திரசேகரனும் அவனும் தனியாக இருந்த போது, 'ஒரு நல்ல பெண்ணைப் பத்திக் களங்கம் சொன்னேனே. ஆண்டவன் தண்டனை கொடுத்துட்டான். ஆண்டவன் மன்னிக்



கலே... நீயாவது மன்னிப்பியாடா...' என்று அவன் கரம் பிடித்துக் கொண்டு அழுதான்.

'அப்படியெல்லாம் இல்லேப்பா. உன்னை நான் எப்பவோ மன்னிச்சாச்சு. ஆனாலும்... இப்படி நேர்ந்திருக்க வேண்டாம்!' என்று சந்திரசேகரனும் கண்ணீர் விட்டு அழுதான்.

'நல்ல வேளை, நித்திலா தப்பிச்சது. கூட்டிட்டு வாடா... காலில் விழுந்து கதறி மன்னிப்புக் கேட்டுப் பிராயச்சித்தம் செய்துக்கறேன்...' என்று மீண்டும் அழுதான்.

சந்திரசேகரனின் மவுனம் பார்த்து... 'ஆமாடா... பாக்கற துக்குக் கூடத் தகுதியில்லாதவன்தான் நான்!' என்று வருந்திக் கொண்டான்.

'அதுக்கில்லே... நானும், ராகவ் மச்சானும் உனக்கு ஹெல்ப் பண்றோம்னு இன்னும் நித்திக்குத் தெரியாது... நீ இங்க இருக்கறது... அடிபட்டது எதுவும் அவளுக்குத் தெரியாது...' என்றான்.

'ஓ...!' என்று சற்று அமைதியானான்.

எவ்வளவு கூசாமல் அந்தப் பெண்ணை பற்றிச் சொன் னோம். அதுதான்... அதுதான்... இப்படி என்று தன்னையே அறைந்து கொண்டு அழுதான்.

'சந்திரா... அப்படியொண்ணும் தினம்... தினம் தப்பு செஞ்ச வனில்லடா நான்... ஏதோ ரெண்டு, மூணு தடவை. அதுல எந்த அம்மிணி எனக்கு இப்படி வரம் குடுத்தாளோ. ஆமா... தப்புல ஒரு தடவை என்ன, ஓராயிரம் தடவை என்ன!' என்று அழுதான். ஆனால் அப்படிச் சொல்லும்போதே அவன் மனதில் களங்கமற்ற இன்னும் ஒரு உருவம் நிழலாடியது. கலக்கம் தோன்றியது. பிறகு தொடர்ந்தது.

'நீ கூட ஒரு தடவை. இந்த மாதிரி விஷயங்கள் பத்திப் பேச்சு வந்தப்போ... மனைவின்னா நம்ப லைஃப் பார்ட்னர்.

விஷயங்கள்னா அவளுக்காகத்தான். அவளுக்கான சிலதெல்லாம் அவளுக்கே உரியவைன்னு சொன்னியே... அப்ப நானும்... சுதாகரனும் எப்படிக் கிண்டலாச் சிரிச்சோம்! அதுதான்டா இன்னைக்கு விதி என்னைப் பார்த்துச் சிரிக்குது!' என்று வறண்ட குரலில் புலம்பினான். அழுது அழுது ஓய்ந்தான்.

பத்து நாளில் டிஸ்சார்ஜ் என்றார்கள். இனி...வாழ்க்கை ஓராண்டும் இருக்கலாம். ஐந்தாண்டும் இருக்கலாம். எல்லாம் விதியின் வண்ணம் என்றார்கள்.

மதுரைக்குப் போக விருப்பமில்லை என்றான். ராகவனும், சந்திரசேகரனும் கலந்தாலோசித்தார்கள். உஷாவிடம் மட்டும் விஷயம் சொன்னார்கள்.

உஷா அன்றிரவு கணவனின் தோளில் சாய்ந்து கொண்டு, 'ராகவ்... ஒரு உயிரின் மதிப்பு என்னன்னு ஒவ்வொரு தாய்க்கும் தெரியும். நாளைக்கு நித்திலா அண்ணிக்குத் தெரிஞ்சாக் கூட அவ ஒன்னும் சொல்ல மாட்டா. அடைக்கலமாக வந்த உயிரை காப்பத்தறது நம்ம கடமை!' என்றாள்.

ராகவன் அவளை ஆழ்ந்து பார்த்தான். அணைத்துக் கொண்டு முத்தமாரி பொழிந்தான். 'சில சமயம் பெண்கள் நீங்கள் ரொம்ப உயரத்துக்குப் போய் விடுகிறீர்கள்!' என்று பாராட்டிக் கொண்டான்.

ஊருக்கு வெளியே சற்றுத் தள்ளி அவனுக்கு ஒரு சைட் இருந்தது. எட்டு செண்ட் இடம். அதிலே ஒரு பெரிய அறை எல்லா வசதிகளுடனும் கெஸ்ட் ஹவுஸ் மாதிரி இருந்தது. அதிலே அவனைத் தங்க வைத்தார்கள்.

அவனே தன் தேவைகளைப் பார்த்துக் கொண்டான்.

ஒரு வாரம் சென்றிருக்கும். ஒரு பகல் நேரம். ராகவனுடன் உஷாவும் வந்தாள். ஒரு டிஃபன் கேரியருடன்.



'நீங்களே சமைத்துக் கொள்கிறீர்களாம். வாய்க்கு ருசியாய் சமைச்சுக் கொண்டு வந்திருக்கேன். சாப்பிடுங்க!' என்று வாழையிலை போட்டுப் பரிமாறினாள்.

அந்த நேரம் அலுவலக இடைவேளையில் சந்திர சேகரனும் வந்தான்.

ஸ்ரீராம் ஆசையோடு அள்ளிச் சாப்பிடுவதை ஆதுரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். கண்கள் கலங்கின.

ராகவன் ஸ்ரீராமைக் கவனிக்கவேயில்லை. தாய்மையின் பரிவோடு பரிமாறுகிற தன் மனைவியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனம் பெருமையாலும் பெருமிதத்தாலும் நிறைந்தது.



## 13

உற்றார் உறவினரை அழைத்துப் பெரிய மண்டபத்தில் கல்யாண ஏற்பாடுகள் பாதி நிறைவுற்ற நிலையில் திடீரென்று கல்யாணம் நின்று போனால் அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு மனக் கஷ்டம் இருந்திருக்கும்.

ஒருவழியாக ஒரு நல்லவன் கிடைத்து நல்லபடியாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கும் போது, தானே வேண்டாமென்று உதறிவிட்டு வந்தவளின் வாழ்க்கையில் நுழைந்து குழப்பம் வேறு விளைவித்தோமே. எந்த வகையில் நியாயம்? அடுத்தவர்கள் உணர்வுகளோடு விளையாடுகிற அதிகாரத்தை நமக்கு யார் கொடுத்தார்கள்? நல்ல இரத்தம்

ஓடிக் கொண்டிருந்த கொழுப்புத்தானே? அதற்குத்தான் ஆண்டவன் வாழ்க்கையில் அருமையைப் புரிய வைத்திருக்கிறான் என்று பலதையும் நினைத்து வேதனையால் வெந்து பொசுங்கிக் கொண்டிருந்தான் ஸ்ரீராம்.

அன்று மாலை செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தான். ராகவனும், சேகரும் அவனுக்கு இருக்க இடம் கொடுத்து எல்லாக் கவனிப்பும் செய்தாலும், அவனுக்குச் செய்வதற்கு ஏதாவது ஒன்று தேவையாக இருந்தது. நிறையத் தொட்டிகளில் பூச்செடிகளின் நாற்றுகளை வாங்கி வைத்து நீரூற்றிப் பராமரித்தான்.

ஆட்கள் வருகிற அரவம் பார்த்துத் திரும்பிப் பார்த்தான். அவன் அம்மாவும் அப்பாவும்..

சிலையாய் நின்றான். அம்மா கதறிக் கொண்டு வந்து அவனை அணைத்துக் கொண்டாள். அப்பாவும் கலங்கிய கண்களோடு நிற்கக் கண்டான்.

முகத்தில் லேசான தாடியுடன் அவன் இருந்த நிலை பார்த்து அவர்கள் மனம் வாடிப் போனார்கள்.

'உங்களுக்கு யார் சொன்னார்கள்?' என்றான்.

'சேகர்தான் சொன்னான். திடீரென்று ஆளே காணாமல் போயிட்டே. என்ன பண்றதுன்னே தெரியலே. அப்பா சேகர் ஆஃபிசுக்கே போய்ப் பார்த்தாரு. ரொம்பத் தயக்கத்துக்கப்புறம் சொன்னான். ஏப்பா... இப்படின்னு தெரிஞ்சா ஒதுக்கிருவோம்னு நெனச்சுட்டியா என்ன?' என்றார் அப்பா தழுதழுத்த குரலில்.

'இல்லேப்பா உங்களுக்கு மனவேதனை எதுக்கு? இந்த நோயை நீங்க என்னென்ன சொல்லிக்குவீங்க?' என்றான் அவன், சொல்ல வொண்ணாத வேதனையுடன்.



'ஸ்ரீராம், முடிஞ்சு போனதைப் பத்தி என்ன பேச்சு? ஆகறதைப் பார்ப்போம். மதுரைக்கே.... போகலாம்... வா...' என்றார்.

'நான் வர்லப்பா!' என்றான்.

'சரி... அப்ப.... நாங்க அங்க இருக்குறதையெல்லாம் வித்துட்டு இங்க வந்துர்றோம்...' என்றார் அப்பா.

'இப்ப.. இப்படிச் சொல்றீங்களே? அப்ப அவனோட வயசுக் காலத்திலே கேட்டப்ப கொஞ்சம் பணம் குடுத்திருந்தீங்கன்னா... அவன் வெளியில கடன் வாங்கிப் பழகியிருப்பானா என்ன? கண்டிப்பு... கண்டிப்புன்னு ஓவர் கண்டிப்பினாலே அவனைக் கெடுத்தீங்க...' என்று அம்மா அழுதாள்.

'ஆமாப்பா, இந்த நிலைமைக்கு நீங்களும் ஒரு காரணம். வெளியில எல்லாம் ஸ்ரீராமுக்கென்ன பணக்காரன்னு நெனச்சாங்க. ஆனா... நீங்க என்னோட நியாயமான ஆசைகளுக்குக் கூடப் பணம் குடுக்க மறுத்தீங்க. அதற்காக நான் என்னென்னவோ செய்ய வேண்டி வந்தது. அதிலிருந்து பழகினது தான்... எல்லாம்...' என்று கதறினான்.

'நான் இப்படியாகும்னு நெனச்சேனா? எல்லாம் பின்னால உனக்குத்தானேன்னு நெனச்சேன்!' என்று அவரும் கதறி அழுதார்.

'கொடுத்துடுங்கப்பா... எல்லாத்தையும் இரண்டு மகளுகளுக்கும் கொடுத்துடுங்க...' என்றான்.

அம்மாவும், அப்பாவும் வேத்னையுடன் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

'ராஜா... ஸ்ரீமதியும், ஸ்ரீதேவியும் நேத்து வந்தாங்கடா. அண்ணனுக்கு இப்படியா யிருச்சேன்னு கவலையை விட, அண்ணனோட, சொத்தையும் எங்களுக்கே பங்கு போட்டுக் கொடுங்கன்னு கேக்கறாங்கடா!' என்று அம்மா அழுதாள்.

ஸ்ரீராம் கசப்புடன் சிரித்துக் கொண்டான். 'குடுத்துருங்கம்மா!' என்றான். 'கேவலம் பணத்துக்காகத்தானே ஒரு பொண்ணோட மனசை நான் நோகடிச்சேன். அதனால... எல்லாம் அனுபவிச்சுத்தான் ஆகணும்!' என்றான்.

'ஸ்ரீராம்... நீ என்ன செய்யச் சொல்றியோ... நான் செய்யறண்டா... ஆனா நீ... இருக்கறவரைக்கும் நீ யாரையும் அண்டிப் பிழைக்கிற நிலைமை உனக்கு வேண்டாம்டா...' என்று அப்பா வெடித்து அழுதார்.

'அப்பா... ஒண்ணு செய்ங்க... எல்லாச் சொத்தையும் நாலாப் பிரிச்சு ஒரு பங்கு உங்க காலத்துக்கும் வச்சுக்குங்க. ரெண்டு பங்கை சிஸ்டர்ஸுக்குக் குடுத்துருங்க. ஒரு பங்கை எனக்குக் குடுங்க. நான் என்னைப் போலத் தெரிஞ்சும், தெரியாமலும் இதுல மாட்டிக்கிட்டவங்க... பத்துப் பேருக்குச் செய்து அந்த நிம்மதியிலாவது சாகிறேன்...' என்றான்.

'சரிப்பா...' என்றார். 'ஆனா ஒரு மாற்றம். ஒரு பங்கு உனக்குக் குடுக்கறேன். மத்த ரெண்டு பங்குல அப்பப்பத் தேவையான உதவிகள் வேணா உன் சிஸ்டர்ஸுக்குச் செய்யறேன். முழுசாக் குடுக்கறது எங்களுக்குப் பிறகுதான்...' என்றார், மனம் நொந்தவராய்.

பிறகு வெகு நேரம் பேசினார்கள். அழுதார்கள். அவன் சற்று நேரம் அம்மாவின் மடியில் ஆசையுடன் படுத்துக் கொண்டான். பிறகு,

'சரிம்மா.. நீங்க கிளம்புங்க. என்னைப் பத்திக் கவலைப் படாதீங்க.... எனக்கு ஒரு குறையும் இல்லே...' என்றான். சிரித்தான். உயிரே இல்லாத புன்னகையைப் பார்த்து அவர்கள் மீண்டும் அழுதார்கள். வற்புறுத்திப் புறப்படச் செய்தான்.

சற்று நேரத்தில் சந்திரசேகரன் வந்தான். நடந்ததெல்லாம் உணர்ச்சியற்ற குரலில் விவரித்தான் ஸ்ரீராம். சேகரும் மிகவும்



வருத்தப்பட்டான். அந்த நேரம் ராகவனும், உஷாவும் வந்தார்கள்.

'ஸ்ரீ... அண்ணா... உங்களுக்காக நான் கொஞ்சம் புக்ஸ் கொண்டு வந்திருக்கேன்!' என்று நீட்டினாள்.

'ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், வள்ளலார்... ஓஷோ...' என்று புத்தகங்களைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டான்.

'தாங்க்ஸ் உஷா!' என்றான்.

'இன்னைக்கு எத்தனை பூப் பூத்திருக்கு...' என்று எண்ணினாள் உஷா. அவன் நோயைப் பற்றியே பேசாமல் கலகல வென்று பல பொது விஷயங்களைப் பேசிச் சிரிக்கச் செய்கிற தங்கையைச் சந்திரசேகரன் மென்மையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'அண்ணா...நீங்க ஒரு போராட்டத்திலே இருக்கீங்க... முடிவு எதானா என்ன, தைரியமா சந்திக்கணும். ஒரு போர் வீரன் மாதிரி...' என்று அவனுக்குத் தைரியமூட்டினாள்.

ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். 'எனக்கு ஹெச்.ஐ.வி.. பாசிட்டிவ்'என்று ரிசல்ட் வந்து ஐந்து ஆண்டுகள் ஆகிறது. ஆனால் முறையான யோகப் பயிற்சி, சரியான உணவு முறைகள், தியானம், நல்ல சிந்தனைகள் என்று கடைப்பிடித்து நல்ல விதமாகவே இருக்கிறேன்!' என்று எழுதியிருந்தார்.

அதை ஸ்ரீராமுக்குக் காட்டினாள். நம்பிக்கை ஊட்டுகிற மாதிரிப் பேசினாள். ராகவனும், உஷாவும் அவ்வப்போது வந்து இப்படித் தைரியம் கொடுப்பதாக ஸ்ரீராம் சந்திர சேகரனிடம் சொல்லியிருந்தான். இன்று நேரிலேயே அதைப் பார்த்துக் கொண்டான் சந்திரசேகரன்.

'டேய் சேகர், உஷாவும், ராகவ்வும் வந்துட்டுப் போனாலே பெரிய ஆத்ம பலம் கிடைக்குது!' என்று மகிழ்ச்சியாகச் சொல்லிக் கொண்டான்.

அவர்களெல்லாம் புறப்படும்போது, 'ராகவ்... உஷா சொல்றது சரிதான். இதுவரைக்கும்... முறையில்லாத வாழ்க்கை வாழ்ந்தாச்சு... இனிமேலாவது... வாழும் வரைக்கும் முறையா இருந்துக்கறேன்டா!' என்று சொல்லிக் கொண்டான் ஸ்ரீராம்.

திரும்பும் போது... காரை ஓட்டிக் கொண்டே சேகரன் சிந்தனையிலாழ்ந்தான்.

'பாவம்... ஸ்ரீராம்.... வாழ்க்கைதான் அவனை எப்படிப் பழிவாங்கிவிட்டது!' என்றான். ஆனால் உஷா இவ்வளவுக்குச் சிந்திக்கிறாளே என்று ஆச்சரியமாக இருந்தது. எப்படி மாரல் சப்போர்ட் கொடுக்கிறாள் என்று எண்ணி ஆச்சரியப்பட்டுக் கொண்டான். பெருமையும், பெருமிதமும் கூட ஏற்பட்டது.

ஸ்ரீராம் வந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. சேகரின் மகன் ரவீந்திரனுக்கும் ஐந்து மாதங்கள் ஆகியிருந்தது. உஷாவும் இப்போது உண்டாகியிருந்தாள். மூன்று மாதங்கள். இந்த மாதத்தில் நித்திலாவைத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்துவிட வேண்டுமென்று அம்மாவும், அப்பாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நாளுக்காக ஆசையுடன் காத்திருக்க ஆரம்பித்தான் சந்திரசேகரன். நித்திலவல்லியும் கூட...

ரவீந்திரனைக் கையில் ஆசையுடன் ஏந்திக் கொண்டிருந்தான் சந்திரசேகரன். கடந்த ஒரு மாதமாக நித்திலாவும் வேலைக்குப் போக ஆரம்பித்ததால், இடையில் பகலில் ஒரு முறை வீட்டுக்கு வந்து விட்டுச் செல்வாள். பிறகு கணவனின் வீட்டுக்குப் போனதற்குப் பின்பு மீண்டும் மூன்று மாதம்



விடுமுறை போட்டுக் கொள்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாள். இன்று பகலில் வீட்டுக்கு வந்தவள் சந்திரசேகரனுக்கு அவசரமாய் ஃபோன் செய்தாள்.

'என்ன நித்தி...?' என்றான் பதட்டமாக. அந்தப் பக்கம் அவள் குரல் உற்சாகமாக ஒலித்தது.

'ரவி.... நம்ம ரவியில்லே... அவன் குப்புற விழுந்துட்டான்... இப்பத்தான்...' என்றாள்.

சந்திரசேகரன் ஒரு நிமிடம் திகைத்தான். பிறகு சிரித்து விட்டான். 'நல்ல வேளை, நான் என்னமோ, ஏதோன்னு பயந்துட்டேன்!' என்றான்.

'சந்துரு...நீங்க லீவு போட்டுட்டு வாங்க!' என்றாள்.

சந்திரசேகரன் அதிகம் விடுமுறை எடுப்பதில்லை. நித்திலாவும் ஸ்ரீராமின் பிரச்சினைக்குப் பிறகு இப்போதுதான் மனசு தேறி வருகிறாள். 'சரி, விடுமுறைதான்... எடுப்போமே...' என்று நினைத்து விடுமுறை எடுத்துக் கொண்டு வந்தான்.

'இவனைப் பாத்தீங்களா... இங்க வச்சிருந்த புத்தகத்தை எல்லாம் இழுத்துப்போட்டுட்டான்!' என்று மகனின் செயல்களை மகிழ்ச்சியோடு அவள் விவரிப்பதை மென்மையாகப் புன்னகைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான்.

தானும் மகனைக் கையில் எடுத்துக் கொண்டு கொஞ்சி மகிழ்ந்தான்.

'நித்தி.... அந்த வீட்டுக்குப் போனா... ரொம்ப கஷ்டமா இருக்கு. ஒரே வெறுமையாக இருக்கு. அதான். இந்த ஞாயிற்றுக் கிழமை அங்க அழைச்சுட்டுப் போயிர்றதா.. ஏற்பாடு.' என்றான்.

'ம்... வந்தர்றேன்... நீங்கதான் இங்க வந்து தங்க மாட்டேங்கறீங்களே!' என்றாள்.

'இல்ல நித்தி... அம்மாவுக்குத் திடீர்னு உடம்பு கிடம்பு முடியாமப் போனா பொறுப்பா யாராவது இருக்கணுமில்லே. உஷா இருந்தாத் தேவலாம். நிஷா பயப்படுவா...' என்றான். பிறகு அவளருகில் நெருங்கி, 'நித்தி.... நீயில்லாம ரொம்ப கஷ்டமாக இருக்கு. ஐ மிஸ் யு வெரிமச்...' என்றான் ஏக்கமான குரலில்.

அவள் அவனைப் பார்த்து அன்பாகப் புன்னகைத்தாள். 'ஆமாங்க. எனக்கு இவன் இருக்கறதனாலே நேரமே போதலை. ஆனா, உங்களுக்குக் கஷ்டம்தான். பாருங்க. அந்த பால் பாட்டிலை இழுக்கறான். பாருங்க... புடிங்க... புடிங்க...' என்று விலாங்கு மீனாய் நழுவுகிற மகனைக் கையில் பிடித்தாள். இரண்டு பேரும் சிரித்தார்கள்.

'சந்துரு... அப்படியே உங்க முகம்தான்!' என்று சிரித்தவள் முகம் ஒரு கணம் கறுத்துப் போனது.

'அப்படி மட்டும்.... இல்லாமப் போயிருந்தா...?' என்று ஒரு கணம் நடுங்கினாள்..

நெஞ்சில் கத்தியால் செருகப்பட்டது போல் ஒரு கணம் சந்திரசேகரனும் துடித்தான். பிறகு, 'மறந்துரு... நித்தி...ஐ'ம் சாரி. வேண்டாம். நித்தி, ரொம்ப வருத்தப்படாதே. உன் வருத்தம் ஒருவேளை அவனுக்குத் தண்டனையாய் விடியுமோ என்னமோ...' என்றான்.

'அவனுக்குத் தண்டனை கிடைச்சா எனக்கென்ன? இல்லாட்டிப் போனா எனக்கென்ன? நான் வேதனைப்பட்டது நிஜம்தானே!' என்றாள் நித்திலா கடுங்கோபத்துடன்.

'அவனும் வேதனைப்படறான் நித்தி!' என்றான் சந்திரசேகரன். நித்திலா சட்டென்று நின்றாள். 'அவன் வேதனைப் படறது உங்களுக்கெப்படித் தெரியும்? மறுபடியும் ஏதாவது தொடர்புன்னுட்டு வரானா என்ன? பயங்கரத் தில்லுமுல்லுக் காரனாச்சே!' என்றாள்.



'இல்லயில்லை... வேதனைப் படுவான்னு சொன்னேன்!' என்றான், அவசரமாக.

பிறகுதான் நித்திலா நிம்மதியானாள்.

'சந்துரு... எப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையை நமக்கு ஏற்படுத்திட்டான். நீங்க அப்படி நினைச்சீங்களேன்னு உங்களையும் நான் கோபப்பட முடியாது. உங்களையும் வருத்திப் போட்டானே...'என்றாள்.

'நித்தி... நான் ஒண்ணு சொல்லட்டா...'

'ம்!'

'இப்ப... நீ குழந்தைக்குப் பாலூட்டற தாய். உன் மனசில் நல்ல எண்ணங்கள்தான் இருக்கணும். எந்த ஃப்ரஸ்ட்ரேஷனும் இருக்கக் கூடாது. அதனால கடவுள்கிட்டே அவனை மன்னிக்கிற சக்தியைக் குடுன்னு வேண்டிக்க. உனக்கும் மனசு அமைதியாயிடும்...' என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'தினம் அப்படித்தான் வேண்டிக்கறேங்க. ஆனாலும்... ஆனாலும்...' என்று தவித்தாள்.

'எல்லாம் சரியாயிடும், நித்தி... டிரை டு ஃபர்கெட்!' என்று அணைத்துக் கொண்டான்.

பேச்சை மாற்றி... 'நித்தி! இந்தப் பயலுக்கு ஆறேழு மாதமாவது ஆகிற வரைக்குமாவது உன்னைத் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு. பாக்கறேன்... இவன் பண்ற குறும்பைப் பார்த்தா... அடுத்ததுக்கு இப்பவே அச்சாரம் போடலாம்னு இருக்கு...' என்றான், கிறக்கமாய்ச் சிரித்தான்.

'நோ... மிஸ்டர் சந்துரு. ரெண்டு வருஷம் வரைக்கும் எந்தப் பேச்சும் கிடையாது...'

'ஹேய்...!' என்றான், அவன் அதிர்ச்சியாக.

என்றாள்.

'அடுத்த குழந்தைக்குச் சொன்னேன் சார்...' என்றான். அவன்

'அதானே...!'என்று அவன் நிம்மதியானான். அதைப் பார்த்துச் சிரித்தாள்.

'சரி... நீ அங்க வந்து சேரு...' என்று புன்னகைத்தான்.



## 14

நாலைந்து முறை வாசலுக்கு வந்து வந்து பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரசேகரன். உஷாவும், ராகவனும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

'சேகர்... போதும்ப்பா... வந்துருவாங்க. வா, உட்காரு' என்றான் ராகவ்.

'சும்மாயிருங்க, மச்சான். எத்தனை நாள்... கிட்டத்தட்ட முக்கால் வருஷம். உங்க, தங்கச்சியை அங்க விட்டுட்டு இருந்தாச்சு. அவனவன் பாடு அவனவனுக்கில்ல தெரியும்!' என்றான் சேகரன்.

ராகவன் சிரித்தான். உஷா, அண்ணன் பேசுகிற தோர ணையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, அந்தப் பக்கம் போய் விட்டாள்.

'சிரிக்காதீங்க... மச்சான். உஷாவை நாலு நாள் சேர்ந்தாப் பல இங்க இருக்க விட மாட்டேங்கறீங்க. நீங்க வந்து என்னைப் பாத்துச் சிரிக்கறீங்க...'என்றான்.

'புரியுது... புரியுது..' என்றான் ராகவன். பிறகு சிந்தனை வயப்பட்டவனாக, 'ஏன் மச்சான், கல்யாணத்துக்கு முன்னா



..ப்ரீயாய் இருந்தோம். ஆனா இப்ப... எட்டு மணியானாலே இருப்புக் கொள்றதில்லே. அப்படியென்ன எப்பவும் டூயட் பாடிட்டா இருக்கோம்... இருந்தாலும் வீட்டுக்கு வந்து சேர்ந்து அவங்க முகம் பார்த்தா ஒரு நிம்மதி இல்லே...' என்றான்.

'அது என்னமோ... அப்படித்தான்!' என்றான் சேகரன். இரண்டு பேரும் அனுபவித்துச் சிரித்தார்கள்.

'அது மட்டுமில்லே... மச்சான். எப்பக் குழந்தைன்னு பேச்சு ஆரம்பமாச்சோ... அப்ப இருந்தே, அந்தக் குழந்தை... செக் அப்ன்னு அதிலேதான் மனசு போகும். வேற நினைப்பே வராது. நீங்கதான் அதெல்லாம் அனுபவிக்கப் போறீங்களே!' என்றான் கனவில் ஆழ்ந்தவன் போல்.

ராகவனும் லயித்துக் கேட்க ஆரம்பித்தான்.

'ஒவ்வொரு நாளும்...நித்தி முகத்திலே ஏற்பட்ட மாறுதல், உடம்பிலே ஏற்பட்ட மாறுதல், அந்த குழந்தைக்காக அவங்க படற கஷ்டம், அதையே சுகமாக ஏத்துக்கறது... எல்லாம் மகத்தான அனுபவம், மச்சான். அதனாலதான் இதைப் பெத்துப் பிழைக்கறதுன்னு சொல்றாங்களோ!' என்றான்.

சற்று நேரம் அமைதியானான். ஏழு மாதமிருக்கும். ஒரு நாள் நித்திலா தனக்குத் தானே சிரித்துக் கொண்டிருந்தாள்.

'என்ன நித்தி?'என்றான் சேகரன்.

'உங்க...மகன் உள்ளே ஒரே ரகளை...'என்று அவள் அவன் தோளில் முகம் புதைத்துச் சிரிக்க... தாய்மையின் பூரிப்பும் மகிழ்ச்சியும் அவள் முகத்தைத் தங்கம் போல் ஜொலிக்கச் செய்ய... அதைப் பார்த்துக் கிறங்கி நின்றான் சேகரன். குழந்தை பிறந்த பிறகு இன்னொரு நாள் பாலூட்டிக் கொண்டிருக்கையில் அவள் முகம் பார்த்து அதிசயித்தான்.

எல்லையற்ற அமைதியும், நிறைவும் அவள் முகத்தில் பொலிவதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிற வேளை

யில்... குழந்தை அவள் புடவையை விலக்கித் தலையை வெளியே நீட்டி அவனைப் பார்த்துச் சிரிக்க... அந்தக் சிரிப்பில் உலகத்தையே மறந்து போனான்.

அதை யெல்லாம் தனக்குள் நினைத்துக் கொண்டு... மௌனத்தில் ஆழ்ந்த சந்திரசேகரனைப் பார்த்து, ராகவன் அவன் கனவைக் கலைக்காமல் எழுந்து உஷாவைத் தேடிக் கொண்டு போனான்.

உஷா... அண்ணியை வரவேற்க ஆரத்தி தயாரித்துக் கொண் டிருந்தாள். நித்திலாவின் வீட்டுச் சமையற்காரரை உதவிக்கு வைத்துக் கொண்டு உஷா விருந்து தயாரித்துக் கொண்டிருந் தாள். நிஷாவும் கூட உதவி செய்து கொண்டிருந்தாள்.

தெய்வானையும், சண்முகமும் நித்திலாவை முறைப்படி அழைத்து வரப் போயிருந்தார்கள். லேசாக எட்டிப் பார்க்கிற ராகவனை ஓரக்கண்ணால் பார்த்த நிஷா, 'அக்கா! மாமாவுக்கு அங்க இருப்புக்கொள்ளலை. எட்டிஎட்டிப் பாக்கறார். போய் என்னான்னு கேட்டுட்டுவா!' என்று அனுப்பினாள்.

'உஷா! ஏதாவது சந்தேகம் இருந்தா நித்தியை நல்லா விவரம் கேட்டுக்கோ...' என்றான் கவலையாக.

'எதைப் பத்தி?' என்றாள், உஷா ஆச்சரியமாக.

'அதான் இப்ப கேரியிங் ஆக இருக்கயே... அதைப் பத்தித்தான்...' என்றான், வெகு சிரத்தையாக.

அவன் முகம் பார்த்த உஷாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஆனால், அவன் கவலைப்படுகிற விதம் பார்த்துத் தன் மேல் வைத்திருக்கிற நேசம் புரிந்தது. அதனால், கேலியாக ஏதோ சொல்ல வந்தவள், அதை நிறுத்தி, 'சரிங்க,' என்றாள் சீரியஸாக.

கார் வரும் சத்தம் கேட்டுப் பரபரப்பானார்கள்.

நெருங்கிய உறவினர்களை மட்டும் அழைத்திருந்தார்கள் - நித்திலாவை வீட்டுக்கு அழைத்து வரும் நிகழ்ச்சிக்கு.





ராகவன் காரிலிருந்து நித்திலா குழந்தையோடு இறங்குவ திலிருந்து வீடியோ எடுக்க ஆரம்பித்தான். ஒரு ஃபாரின் காமிரா கையில் வைத்திருந்தான். எல்லாரும் போன பின் நெருங்கிய வட்டம் இருந்தார்கள்.

'அடுத்ததாக உஷாவுக்கு வளைகாப்பு நடத்தணும். அப்புறம் இந்த நிஷாவுக்கு ஒரு மாப்பிள்ளை பாக்கணும்...' என்றார் சுந்தரம்.

'ஏன்... அங்கிள், இந்த ரமேஷ் மட்டும் கொஞ்சம் முன்னாடி பொறந்திருக்கக் கூடாது? வேற மாப்பிள்ளையே தேடி யலைய வேண்டாம்!' என்று அவனை வம்பிழுத்தாள் நிஷா.

'ஐயோ... நிஷாக்கா. ஒருவேளை அப்படிப் பொறந்திருந் தேன்னு வச்சுக்க. நீதான் பொண்ணுன்னு தெரிஞ்சிருந்தா... காவித்துணி, கமண்டலம்னு ஓடிப்போயிருப்பேன்!' என்றான் ரமேஷ்.

வெடிச் சிரிப்புக் கிளம்பியது.

'என்னடா, எங்க நிஷாவைப் பார்த்தா உனக்கு அப்படித் தெரியுதா?' என்று நித்திலா அவன் காதை முறுக்க -

'என்ன அண்ணி? எங்க பையனை நீ எப்படிக் கை தொடலாம்?' என்று உஷா ரமேஷுக்கு ஆதரவாகக் கிளம்ப... ஒரே கலாட்டாவாக இருந்தது.

ஏழு மணி வாக்கில் அப்பாவும், அம்மாவும் கிளம்ப, வழியனுப்பினாள் நித்திலா.

'பாரப்பா... அங்க இருந்தப்ப அஞ்சு மணியிலிருந்தே... வாசலைப் பாத்துக்கிட்டிருப்பா... இன்னைக்குப் பாரு... முகத்திலே எவ்வளவு மலர்ச்சி!' என்று அப்பாவே கலாட்டா செய்ய, தன் மனைவி முகம் சிவப்பதைக் கண்டும் காணா தவன் போல் ரசித்துக் கொண்டான் சந்திரசேகரன்.

சுந்தரம் புறப்படும்போது, 'மாப்பிள்ளை, இந்தப் பயல் சிரிப்பே கண்ணுக்குள் நிக்குது. பாக்காம எப்படி இருப்போம்! வீடே வெறிச்சுன்னு இருக்கும்!' என்று வெகுவாகக் கலங்கினார்.

'அதுக்கென்ன மாமா... தினமும் சாயங்காலம் நீங்க இங்க வாங்க. இல்லே, நாங்க அங்க வர்றோம்,' என்று தேற்றினான் சேகரன்.

மனமில்லாமல் கிளம்பினார்கள்.

உஷாவும், ராகவனும் இரவு ஒன்பது மணிக்குக் கிளம்பினார்கள்.

'இருந்துட்டுப் போகலாமில்லே!' என்று நித்திலா வெகுவாக வற்புறுத்தினாள். ஆனால் ராகவன், 'இல்ல நித்தி, இன்னைக்கு எனக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு. இந்த சனிக் கிழமை வர்றோம். தங்கறோம், என்ன?' என்று கிளம்பினான்.

போகும் வழியில் உஷா, 'ஏங்க, நித்தி அப்படி வற்புறுத்தினாளே. இருந்துட்டு வந்திருக்கலாமில்ல...' என்றாள் ஆற்றாமையுடன்.

'இருந்திருக்கலாம்...' என்று இழுத்த ராகவன், குபீரென்று சிரித்தான்.

புரியாமல் பார்த்த உஷாவிடம், 'உஷா, உங்க அண்ணன் ஒன்பது மாசமாச்சு. பத்து மாசமாச்சு... அம்மா வீட்ல விட்டுட்டு வந்துன்னு ஒரே புலம்பல். இப்ப போய் நாம இடைஞ்சலா உட்காரலாமா?' என்று சிரித்தான்.

'அட... ஆமா... அது எனக்குத் தோணலே...' என்று உஷா மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

அதே நேரத்தில் -

மகனை உறங்க வைத்துவிட்டு வந்த நித்திலாவைத் தன் கையணைப்பில் வைத்துக் கொண்டு சந்திரசேகரன் மென்மையாகச் சிரித்தான்.

'நித்தி.... எவ்வளவு நாளாச்சில்ல... நாம இப்படி ஃப்ரீயா இருந்து?' என்றான்.



'ம்...' என்று அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். சேகரன் அவள் களைப்பைப் பார்த்தான். மெதுவாகப் புன்னகைத்துக் கொண்டான்.

காலையில் இருந்து கவனித்துக் கொண்டிருந்தான். மகனுக்குப் பாலூட்ட, அவன் நனைத்து விட்டால், உடை மாற்றி அவனுக்கு உணவூட்டி என்று களைப்பில்லாமல் தன் வாரிசுக்கு அவள் செய்கிற பணிவிடையைக் கண்டு கொண்டிருந்தான்.

வழக்கமாக எல்லாரிடமும் ஒட்டிக் கொள்கிற குழந்தை இன்று அந்நிய முகங்கள் பார்த்ததிலோ, இடமாற்றத்தாலோ அவளை விடவில்லை. சிணுங்கிக் கொண்டிருந்தான். உஷாவிடமும் போக மறுத்தான்.

சேகரன்தான் வாங்கி மடியில் வைத்துக் கொண்டு அவளைச் சாப்பிட அனுப்பினான். பிறகு தோளில் சாய்த்து வைத்துக் கொண்டு, 'நீ போய்க் கொஞ்சம் ரெஸ்ட் எடு....' என்று அனுப்பினான். அவன் மடியில் சற்றே உறங்கினான் ரவீந்திரன்.

அவளும் சற்றுக் கண்ணயர்ந்தாள். கொஞ்ச நேரம் கூட இருக்காது. விழித்துக் கொண்டு அழுதான். உடனே, தன்னிச்சையாய்த் தூக்கம் கலைந்து ஓடி வந்தாள், நித்திலா. அதைப் பார்த்துச் சேகரனுக்கே பாவமாகிப் போனது.

இப்போதுதான் எல்லாரும் போனதற்குப் பிறகு, வீடு அமைதியானது. குழந்தையும் உறங்கினான். அதற்கப்புறம் தான் அவன் அருகிலேயே வந்தாள்.

'பாவம்... நீங்க... ரொம்ப ஏங்கிப் போயிருப்பீங்க!' என்றாள் தூக்கக் கலக்கத்துடன்.

'ஆமாடா...' என்று அவள் நெற்றியில் இதழ் பதித்தவன் அன்புடன் தலையைக் கோதிக் கொடுத்தான். அவள் தன்னை மீறிய தூக்கத்தில் அவன் கையணைப்பில் சுருண்டு கொண்டாள்..

சந்திரசேகரன் அமைதியாக அவள் முதுகைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தான். பத்து நிமிடம் போயிருக்கும். அவளை நன்றாகப் படுக்கச் செய்தான்.

அவள் திடுக்கிட்டு விழித்து, 'சந்துரு... நீங்க...' என்று கேள்விக் குறியாய்ப் பார்க்கவும்... அவன் அருகில் படுத்து அவள் நெற்றியில் மீண்டும் ஒரு முறை முத்தமிட்டுப் பின் தொடர்ந்தான்.

'யு ஆர் வெரி டயர்ட் நித்தி. தூங்கு. நீயும் பையனும் இப்ப எங்கூட இருக்கீங்களே. அதுவே போதும், தூங்கு!' என்று தூங்கச் செய்தான்.

அவள் அயர்ந்து உறங்கிவிட்டாள். இடையில் ஒரு முறை மகன் சிணுங்கிய போது கூட அவனே தொட்டிலை ஆட்டி உறங்க வைத்தான். மனைவியின் உறக்கம் கெடாமல் பார்த்துக் கொண்டான்.

'இன்னும்...மகனுக்கு ஒன்றிரண்டு மாதங்கள் போகட்டும். அவளுக்குச் சற்று உடம்பு தேறட்டும்!' என்று எண்ணிக் கொண்டான். நேற்றிரவு கூட மனதில் பொங்கிய தாபம் எங்கே போனதென்று தெரியவில்லை.

எல்லாம்... எல்லாம் இரண்டாம் பட்சமாகிப் போனதை குறித்து அவனுக்கே ஆச்சரியமாகிப் போனது... என்றால்...

காலை ஆறு மணிக்கு விழித்த மனைவி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த கணவனைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டாள்.

மகனை எடுத்து அவன் அருகில் படுக்க வைத்துவிட்டுக் குளித்து விட்டுக் கீழே போனாள்.

ரவீந்திரனுக்குப் பாலும்... சேகருக்குத் தேநீரும் எடுத்துக் கொண்டு வந்து மேலே பார்த்தால் சேகர், 'நித்தி... நனைச்சுட்டான்!' என்று செய்வதறியாது விழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சிரித்து விட்டாள்.



சேகரன் குழந்தைப் பராமரிப்புக்கான பாடங்களை அவளிடம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான். 'முதல்ல...இதை எப்படி மாத்தறதுன்னு சொல்லிக் குடு!' என்றபடி.



15

**வீ**டியோ முழுவதையும் ஆர்வமாகப் பார்த்துமுடித்தான் ஸ்ரீராம்.

'சிஸ்டரை இப்படிப் பார்க்க எவ்வளவு நிறைவா இருக்கு!' என்றான், கண்கள் பனிக்க.

சந்திரசேகரன் அவனைப் பார்த்துப் பரிவாகப் புன்னகைத்தான். பிறகு ஒருபெருமூச்சு விட்டான்.

'ஆனா... ஸ்ரீராம், நித்திலா இன்னமும் உன் மேல கோபமாத்தான் இருக்கா. ஒரு பெரிய நிறுவனத்துல அசிஸ்டன்ட் மேனேஜர் லெவல்ல இருக்கா... பலரோடயும் பழகறா.. ஆனா இந்த விஷயத்தை அவளால ஜீரணிக்க முடியலே.'

ஸ்ரீராமின் கண் கலங்கியது. 'எவ்வளவு பெரிய தப்புப் பண்ணீட்டேன்டா, சந்துரு. ஒரு நல்ல பெண்ணின் ஒழுக்கத்தைக் குறை சொல்லீட்டேன்டா. ரொம்பத் தப்புடா...' என்றான்.

'அதைவிட அதை நீங்க நம்பினீங்களேன்னு என் மேலயும் வருத்தம்தான்!' என்றான்.

சற்று நேரம் அமைதியானார்கள். 'காலம்தான் அந்தப் புண்ணை ஆற வைக்கணும்!' என்றான் சந்திரசேகரன்.

'கூட்டிட்டு வாடா. கால்லே விழுந்து கதறி மன்னிப்புக் கேட்டுக்கறேன். ஆனா, ஒண்ணு சொல்றேன்டா, தப்பாச் சொன்னேனே தவிர அந்தக் கால கட்டத்துல நித்தியோட

புகழ், பணம் இதைச் சுத்தியெல்லாம்தான் என் நினைப்பு இருந்ததே தவிர, அந்த மாதிரி நினைப்பு வர்லை!' என்றான்.

சந்திரசேகரன் சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தான். பிறகு சொன்னான். 'அப்படி இருந்திருந்தால்தான் என்ன செய்ய முடியும்? ஆண் - பெண் ஈர்ப்புங்கறது சகஜமான விஷயம் தான். ஆனா... அதை முறைப்படுத்திக்க வேண்டியது கடமை!' என்றான்.

ஸ்ரீராம் வியப்பான பார்வையோடு அவனைக் கவனிக்க ஆரம்பித்தான்.

'என்ன பாக்கறே? எனக்கும் ரெண்டு சிஸ்டர்ஸ் இருக் காங்க. இதைப் பத்தியெல்லாம் நான் ரொம்ப யோசிச்சிருக் கேன். ஒவ்வொரு தடவை ஒருத்தன் வந்து பெண் பார்த்துட்டுப் போறப்பவும் பதில் வர்ற வரைக்கும் கனவுகளும் அது உடைபடறதும்... இருக்கா இல்லையா? அதனாலதான் நான் உஷாவை யாரையும் பெண் பார்க்க அனுமதிக்கவேயில்லை.'

மீண்டும் அமைதியானார்கள். சற்று கழித்துச் சந்திரசேகரன் சொன்னான்: 'சிலதெல்லாம் டிஸ்கஸ் பண்ணாம இருக்கறதே நல்லது!' என்றான்.

ஸ்ரீராம் சற்று மேலும் கீழும் நடந்தான். பிறகு, 'ஆனா நித்தியை நான் இப்ப சகோதரியா... தாயாத்தான் நேசிக்க றேன். அவ மன்னிப்பை வாங்காம சாகமாட்டேன்!' என்றான், தீவிரமாக.

மீண்டும் சந்திரசேகரன் புன்னகைத்தான்.

'இங்க பார் ஸ்ரீராம்... ஹெச்.ஐ.வி. பாசிட்டிவ்ங்கறதுனால நீ நாளைக்கே போயிடப் போறதில்லே. இது ஒரு நோயுமில்லை. அதனால இந்த தாடி... கீடியெல்லாம் வழிச் செறிஞ்சுட்டு ட்ரிம்மாயிரு. நானும், ராகவ்வும் உனக்கு ஒரு சின்னத் தொழில் அமைச்சுத் தரப் போறோம்!' என்றான்.

'அப்படியா?'



'ஆமாப்பா... முறையா யோகா... நல்லா சத்தான உணவு, உடற்பயிற்சி, நல்ல சிந்தனைகள் இருந்தா இன்னும் பத்துப் பன்னிரண்டு வருஷம் கூட இருக்கலாம். யார் கண்டா? அதுக்குள்ள யாராவது மருந்து கண்டு பிடிச்சுடுவாங்களா யிருக்கும்!' என்றான்.

நிராசை மறைந்து, நம்பிக்கை தோன்ற, அவன் முகத்தைப் பார்த்தான் ஸ்ரீராம்.

'அப்படியா... சொல்றே?'

'ஆமாமப்பா... இப்ப நானும், ராகவனும்தான் எய்ட்ஸ் பத்தி நிறைய லிட்ரேச்சர் படிக்கறோம். இந்தா... இதை யெல்லாம் படி...' என்று தான் கொண்டுவந்திருந்த பிரசுரங் களை நிறையக் கொடுத்தான்.

அவனுடன் சற்று நேரம் சீட்டு விளையாடினான்.

ஸ்ரீராம் அன்றைக்குத்தான் கலகலவென்று சிரித்தான்.

'ரொம்ப நோயாளியாய் அடைபட்டுக் கிடக்காதே. இதை யெல்லாம் படிக்கப் படிக்கத்தான் எங்களுக்கே விஷயங்கள் புரியுது. எய்ட்ஸ்ன்னா நோயில்லே. நோய் எதிர்ப்புச் சக்தி குறையுது. அவ்வளவுதான்,' என்று தட்டிக் கொடுத்தான். சற்று நேரம் கழித்துப் புறப்பட்டான்.

புறப்பட்ட அவன் இரு கைகளையும் பிடித்துத் தன் இரு கண்களிலும் ஒன்றிக் கொண்டான் ஸ்ரீராம்.

'டேய்.... நீ என் நண்பனாகக் கிடைச்சது என் பாக்கியம்டா. நான் உனக்குக் கிடைச்ச வாழ்க்கையைக் கெடுக்கப் பார்த் தேன். ஆனா... நீ கெட்டுப் போன என்னோட வாழ்க்கையைச் சீராக்கப் பாக்கறே!' என்றான்.

சந்திரசேகரன் உண்மையிலேயே இப்போது எய்ட்ஸ் நோயைப் பற்றி நிறையப் படிக்க ஆரம்பித்தான். ஹார்ட் அட்டாக் வந்து ஒரு இளைஞன் இறந்து போனான் என்று போன வாரம் கேள்விப்பட்டான்.

'எல்லாருக்குத்தான் சாவு. ஸ்ரீராமுக்குச் சற்று முன்கூட்டியே எதனால் சாகப் போகிறோம் என்று தெரிந்து விட்டது. அவ்வளவுதான்!' என்று எண்ணிக் கசப்புடன் புன்னகைத்துக் கொண்டான்.

'எய்ட்ஸ்' பற்றிப் படிக்க ஆரம்பித்ததிலிருந்து, வேறு சில விஷயங்களும் கூட அவனுக்குப் புரிய ஆரம்பித்திருந்தன.

ஆரோக்கியமான காதல் வாழ்க்கை, அதன் அவசியம், அதிலிருக்கிற நியாயம் - இவையெல்லாம் கூட அவனுக்குப் புரிந்தது. அந்தக் காதலில் இருந்து முகிழ்க்கிற தாய்மை, பரிவு இவற்றையெல்லாம் நித்தியிடம் பார்க்கப் பார்க்க, அவனுக்கு அவள்பால் முழுமையான காதல் பொங்கியது.

சந்திரசேகரனுக்கு ஒரு இலக்கியவாதி நண்பன் இருந்தான் - மோகன் என்று. அவனிடம் இதை யெல்லாம் பகிர்ந்து கொண்டபோது, அவன் சொன்னான் 'டேய்.... சேகர்! நம்ம தமிழிலக்கியங்களில் இவையெல்லாம் விரிவாகப் பேசப் பட்டிருக்குடா. திருக்குறளில் காமத்துப் பால் படிச்சுப் பாரு. அகப்பொருள் தொடர்பான இலக்கியங்கள் படிச்சுப் பாரு. எல்லாம் இருக்குடா!' என்று.

'பல விஷயங்கள் - நம்மிடம் இருக்கிற விஷயங்கள் முறை யாகச் சமுதாயத்துக்குள் எடுத்துச் சொல்லப்படவில்லைடா!' என்றும் அவனே சொன்னான்.

இன்றைக்கு இது தொடர்பான விஷயங்களைப் பற்றிய சிந்தனையில் இருந்ததாலோ என்னவோ, ஒரு மாதிரியான எதிர்பார்ப்பில் இருந்தான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் மகன் தாவிக் கொண்டு வர, வாங்கிக் கொண்டான். சற்று வைத்திருந்த பிறகு, 'நித்திம்மா.. குளிச்சுட்டு வரேன்,' என்று போனான்.



பிறகு உணவருந்தி ஓய்வாகக் குழந்தையிடம் சற்று விளை யாடினான். நித்திலா வந்து இரண்டு மாதமாகி இருந்தது.

வந்த புதிதில் இரண்டு மூன்று முறை இரவில் விழிப்பான். தவழ ஆரம்பித்திருந்தான். அவன் பின்னால் ஓடுவதற்கு ஆள் மாற்றி ஆள் தேவையிருந்தது. ஆனால் அந்தக் குழந்தையின் சிரிப்பு வீட்டையே கலகலப்பாக்கியது. அவனோடு கொஞ்சிச் சிரித்து அம்மாவின் பி.பி.கூடக் குறைவாகி இருந்தது.

இப்போதுதான் பகலில் ஆட்டம் போடுவதால் என்னவோ இரவில் ஆழ்ந்து உறங்கினான். அதுவும் இந்த இரண்டு மூன்று நாட்களாகத்தான்.

நித்திலாவின் அலைச்சல் பார்க்க அவனுக்கே பாவமாய் இருந்தது. அவனும் பொறுப்பைப் பங்கிட்டுக் கொண்டான்.

அன்று என்னவோ நித்தியும் ஃப்ரெஷ்ஷாய் இருந்தாள். குழந்தையையும் எடுத்துக் கொண்டு எட்டு மணி வாக்கில் சற்று தூரம் காலார நடந்து விட்டு வந்தார்கள்.

அலுவலகக் கலாட்டாக்களையெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தான் சந்திரசேகரன். அவளும் கலகலப்பாகச் சிரித்துக் கொண்டு வந்தாள். பிறகு, 'இன்னைக்கு உங்க மகன் என்ன செஞ்சான் தெரியுமா? அந்த ஷூ ராக்கையெல்லாம் இழுத்துத் தள்ளிட்டான். அப்புறம் அதைத் தூக்கி வெளியே போர்டிகோவிலே வச்சேன்,' என்று மற்றவர்கள் கேட்டால் ஒன்றுமே யில்லை என்று நினைக்கிற விஷயங்களை அவர்கள் கன காரியமாகப் பரிமாறிக் கொண்டார்கள்.

அன்றிரவு...

மகன் உறங்கிய பின்பு தூளியில் கிடத்தி விட்டுத் திரும்பி னாள் நித்திலா. சந்திரசேகரன் அவளை ஆழமாகப் பார்த்துக் கொண்டு எதிரில் நின்று கொண்டிருந்தான்.

'என்னவாம்?' என்றாள் நித்திலா, குறும்புப் புன்னகையுடன்.

'ஹேய்... என்ன இப்படிக் கேட்கறே? மகன் மகன்னு அவனையே நினைக்கறே. அவனோட பரிதாபத்துக்குரிய அப்பாவையும் நினைச்சுப்பாரு. கொஞ்சம்.. இரக்கம் காட்டு!' என்று மயக்கக் குரலில் மென்மையாகப் பேசிக் கொண்டு, அவன் அவளை அணைத்துக் கொண்டான்.

முகம் முழுக்கத் தன் அன்பு மழையைப் பொழிந்தான். அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். சற்றே வேகமாக அவன் அணைக்கையில் அவள் முகம் சட்டென்று பீதியால் வெளுத்தது. சட்டென்று விலகிக் கொண்டாள்.

'ஹேய்! என்ன இது?' என்று அவளைக் கொஞ்சிக் கொண்டிருந்தவன் சட்டென்று நிறுத்தினான்.

அவள் இரு கண்களிலும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

'வேண்டாம், சந்துரு. ப்ளீஸ்...' என்றாள்.

அவன் ஏமாற்றத்துடன் அவளைப் பார்த்தான்.

'ஹேய், எத்தனை நாளைக்குப் பிறகு...' என்று மீண்டும் அவள் முகம் பார்த்தவன் திகைத்தான். அங்கே மிதமிஞ்சிய கலக்கம் தெரிந்தது.

'நித்தி! என்ன ஆச்சு?' என்றான் கலவரமாக.

'எனக்கு... எனக்குப் பிடிக்கலே..' என்றாள்.

'சரி... சரி... பரவால்லே, விடு.' என்றான்.

லேசாக அணைத்துக் கொண்டான். 'சரி, கொஞ்ச நாள் போகட்டும்.' என்று தேற்றினான்.

அவள் அவன் மார்பில் முகம் பதித்துத் தேம்பினாளே யொழிய, காரணம் சொல்லவில்லை.

'என்ன குழப்பம் நித்தி?'என்று இரண்டு மூன்று முறை கேட்ட பிறகு,



'எனக்கு... எனக்கே தெரியல. திடீர்னு அந்த ஸ்ரீராம் அப்படிச் சொன்னானே. அதையும் இவர் நம்பினாரேன்னு தோணிடுச்சு. எனக்கு இண்ட்ரஸ்ட் போயிடுச்சு!' என்றாள்.

அவன் திடுக்கிட்டுப் போனான். திகைத்துப் போனான்.

ஸ்ரீராம் தப்பாகப் பழி சொன்னதற்குப் பிறகு குழந்தை வளர்ப்பில் ஆழ்ந்திருந்ததாலோ என்னவோ, அவர்களுக்குள் எதுவும் நிகழவில்லை. இன்றைக்கு முதல் முறையாக என்பதால் அவளுக்கு அந்த நினைப்பு வந்து விட்டது போலும் என்று எண்ணித் தேற்றிக் கொண்டான்.

'காயம்... ஆழமாக இருக்கிறது. மெதுமெதுவாக அவளை அதிலிருந்து விடுவிக்கவேண்டும்.' என்று எண்ணிக் கொண்டான்.

'ஓகே... ஓ...கே... டலன்ட் மேட்டர். பரவாயில்லை. தூங்கு!' என்று அவனே தேற்றினான். முதுகில் தட்டிக் கொடுத்தான். தூக்கத்தில் கூட லேசாகத் தேம்புகிற அவளைப் பார்த்து நெகிழ்ந்து போனான்.

சற்றுக் கழித்து திடுக்கென்று விழித்த அவள் குற்ற மனப் பான்மையுடன் அவனைப் பார்த்து, 'சந்துரு... கோப மில்லையே...' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

'இல்லை... நித்தி...நீ என் லைஃப் பார்ட்னர் நித்தி. மறுப்பதற்கும் உரிமை உனக்கு இருக்கு.' என்றான். லேசாக நெற்றியில் முத்தமிட்டான்.

அவள் உறக்கத்தில் ஆழ்கையில்.

'மறுப்பதற்கு மட்டுமல்ல, நித்தி! கேட்பதற்கும் உனக்கு உரிமையிருக்கு!' என்றான்.

சற்று நேரம் விட்டம் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான். பிறகு நீண்டதாக ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுப் படுக்கையில் சாய்ந்தான். உறங்கி விட்டான்.

மறுநாள் காலை...

லேசான அச்சத்துடன் அவன் முகத்தை முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் நித்திலா.

தன் கணவனிடம் இப்போதெல்லாம் ஒரு மாற்றம் தெரிவதை உணர்ந்தாள். 'ஃபிலாசபர்' என்று தன்னைக் கலாட்டா செய்து கொண்டிருந்தவன், தானே சில சமயங்களில் தத்துவம் பேசுகிறான். ஆனால், அதே சமயத்தில் எல்லா உணர்வுகளையும் சற்று ஆழமாகவே, தீவிரமாகவே, ஆனால் பரபரப்பில்லாமல் வெளிப்படுத்துகிறான்.

நேற்றிரவு நிகழ்விற்குப் பின் தன்னிடம் கோபம் காட்டுவான் என்று எதிர்பார்த்தாள். ஆனால், வழக்கம் போல், குழந்தையைக் கொஞ்சிக் கொண்டு, விளையாடிக் கொண்டிருந்தான்.

வழக்கம் போல் புறப்படுவதற்கு முன் அவள் நெற்றியில் முத்தமிட்டு விட்டுப் புறப்பட்டான்.

அவன் அறையை விட்டு வெளியேறுவதற்கு முன், அவன் தோள் தொட்டுத் திருப்பினாள்.

'கோபமாக ரெண்டு திட்டுத் திட்டியிருக்கலாமில்லே. அடி கூட வச்சிருக்கலாம்!' என்றாள், முணுமுணுப்பாக.

அவன் சிரித்தான். 'மக்கு!' என்று கன்னத்தைத் தட்டினான்.

'காலம் எங்கே போயிடப் போகுது. நம்ம அந்தரங்கத்தில் யு அண்ட் ஐ. நீ மற்றும் நான்தான். அப்புறம் என்ன அவசரம்?' என்றான். புறப்பட்டான்.

வழியனுப்பி வைத்து விட்டு வந்த பிறகு அவனது வார்த்தைகள்... அவனது 'நீ மற்றும் நான்தான்'என்ற வார்த்தைகள் காதுகளில் ஒலிக்க ஆரம்பித்தன. அதில் ஏதோ ஒரு பொருள் இருக்கிற மாதிரித் தோன்றியது.

யோசிக்க ஆரம்பித்தாள்.



பதினோரு மணியிருக்கும். உஷா வந்தாள். நித்திலாவைக் காணவில்லை.

தேடி வந்தாள். முகம் இருண்டு போய் அமர்ந்திருந்த நித்திலாவைப் பார்த்து, 'என்ன நித்தி?' என்றாள்.

அவளைப் பார்த்தவுடன் நித்திலா வெடித்தாள்.

'உஷாண்ணி' என்று அவள் தோளில் முகம் புதைத்து அழுதாள்.

உஷா திகைத்து நின்றாள்.



## 16

பல சமயங்களில் உஷாவை நித்திலா ஒரு தோழியாகவும், நல்ல ஆலோசகராகவும் கருதியது உண்டு.

தன்னைப் போல் அல்லாமல், நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து பொறுப்புகளைச் சுமந்து அனுபவம் பெற்றவள் என்று ஒரு மரியாதை கூட உண்டு. தனக்குப் பின்னால் திருமணம் ஆகியிருந்தாலும், விவேகத்தில் தன்னைக் காட்டிலும் ஒரு மடங்கு மேல் என்றும் கூட நினைப்பதுண்டு.

உஷா நித்திலாவை யோசனையுடன் பார்த்தாள். சற்றும் தயங்காமல் அணைத்துக் கொண்டாள்.

'என்ன நித்தி?' என்று ஆதரவாகக் கேட்டாள்.

'உங்க.. உங்க அண்ணன் நேற்று ரொம்ப ஆசையுடன்...' என்று ஆரம்பித்தவள், மறுபடியும் அழுதாள்.

'சொல்லு, அண்ணி? என்று மெது மெதுவாக விவரம் வரவழைத்தாள் உஷா.

அவளே சற்று அதிர்ந்து போனாள். தங்கள் குடும்பத்துக்கு ஏதோ பாதகம் செய்திருக்கிறான் ஸ்ரீராம் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் முழுமையாகத் தெரியாது.

'உஷாண்ணி! உங்ககிட்ட இந்தச் சமயத்துல சொல்லக் கூடாதுதான். ஆனா, இதை நான் நம்ம பெரியவங்க கிட்டே எதுவும் பேச முடியாது...' என்ற பீடிகையுடன் நித்திலா சொல்லச் சொல்ல உஷா விவரம் கேட்டுக் கொண்டாள்.

ஸ்ரீராமின் நோய் பற்றி அறிந்த பிறகு முதலில் அதிர்ந்தாலும், பின்னர் எப்படி மனம் தெளிந்தாளோ, அதேபோல் அவனது தில்லுமுல்லுகளைக் கேட்ட பிறகும்... இப்பொழுது அவன் இருக்கிற நிலையினாலோ என்னவோ, கடைசியில் அவளிடம் மனிதாபிமானம் வந்து நின்றது.

'நித்தி... உன் மேலயும்... தப்பில்லே. அண்ணன் மேலயும் தப்பில்லே. சூழ்நிலையைத்தான் சொல்லணும்,' என்றாள்.

'அது எனக்கும் புரியுது. ஆனால் இவரும் நம்பிட்டாரே. அதுதான்...' என்றாள் மீண்டும் தவிப்புடன்.

'நல்லா யோசிச்சுப் பாரு நித்தி. அந்த மெடிக்கல் ரிப்போர்ட் பார்த்து அண்ணனே குழம்பிட்டாரு. அப்படியிருக்கப்போ. அவரு கேட்ட மாதிரி உனக்கும் ஸ்ரீராமுக்குந்தானே கல்யாணம் நிச்சயமாயிருந்தது?'என்றாள்.

நித்திலா மௌனமாய் அமர்ந்திருந்தாள். உஷா, 'நித்தி... உங்கண்ணன் எவ்வளவு மெச்சூர்ட்! ஆனா அவரே கல்யாணத்துக்கு முன்னே கொஞ்சம் தடுமாறினார், தெரியுமா?' என்றாள் முகம் சிவக்க.

நித்திலா வியப்பாய்ப் பார்த்தாள். 'ஆமா... அந்தப் பிறந்த நாளைக்கு... கொஞ்சமே கொஞ்சம் எல்லை மீறினார். தெரியுமா?' என்றாள்.

'ஓ...!' என்றாள்.



'அது மட்டுமில்லே... வெளியில எவ்வளவு பொறுப்பா இருக்காரு. அமைதியா இருக்காரு. அத்தனைக்கும் வீட்ல கலாட்டாதான். என்கிட்டே ரொம்பத் தீவிரமான அன்புதான்!' என்றாள், மீண்டும் முகம் சிவக்க.

பெருத்த வியப்புடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள் நித்திலா.

'ஆமா... உங்கண்ணன் கூட அப்படித்தான்!' என்றாள்.

இருவரும் ரசித்துச் சிரித்துக் கொண்டார்கள்.

'போதும் நித்தி. போனதைப் போட்டுக் குழப்பிக்காதே! விட்டு.' என்றாள்.

நித்திலாவின் மனம் அமைதி அடைந்தது. ஆனால் உஷா தொடர்ந்து. 'ஆனா... அண்ணன் முந்தி அடிக்கடி என்கிட்டே, 'உஷா! நித்தி எவ்வளவு நல்ல பொண்ணு... அவ கல்யாணம் ஏன் திடீர்னு நின்று போகணும்'னு? சொல்வாரு.

நித்திலா மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'நித்தி... கடவுள் எல்லாத்துக்கும் ஒரு கணக்கு வச்சிருக்கான் போலும். அந்தக் கேள்விக்குப் பின்னாலே விடை கிடைச்சது!' என்றாள்.

'புரியலே!' என்றாள் நித்திலா.

'உன்னை வருத்தப்படுத்திய பாவத்திற்கு ஸ்ரீராம் வேண்டு மட்டும் அனுபவிச்சுட்டார். அனுபவிக்கறாரு...' என்றாள்.

'வ்வாட்...?' என்று அதிர்ந்தாள் நித்திலா.

பிறகு மெதுமெதுவாக நடந்தது அனைத்தையும் சொன்னாள் உஷா.

முழுவதும் கேட்டு முடித்த பின்பு நித்திலாவுக்குக் குழப்ப மாகிப் போனது. கலவையான உணர்வுகள் மனதில் தோன்றின.

'பாவம், ஸ்ரீராம்! ஏன், உஷாண்ணி?' என்றாள். பிறகு, வேதனையுடன், 'எனக்கு மட்டும் ஏன் இப்படியொரு சிக்கல் வந்ததுன்னு நானும் யோசிச்சது உண்டு.' என்றாள்.

'எப்படி மயிரிழையிலே தப்பிச்சிருக்கே! இன்னைக்குத் தான் வெளிப்படையா நமக்குத் தெரியும். ஆனா, என்னைக்கு அந்த வைரஸ் நுழைஞ்சதோ... யாருக்குத் தெரியும்? கல்யாணம் மட்டும் நடந்திருந்தா...' என்றாள். உடலே நடுங்கியது உஷாவுக்கு.

இப்போது நித்திலா தேற்றினாள். சற்று நேரம் விரிவாக அதுபற்றிப் பேசினார்கள். கடைசியாக நித்திலாவின் நெற்றியில் லேசாக முத்தமிட்டு விட்டு உஷா சொன்னாள்.

'உனக்கு எத்தனை சிக்கல் வந்ததுங்கறதை மறந்துடு. அதிலெல்லாம் இருந்து கடவுள் எப்படி மீட்டாருங்கறதை யோசிச்சுக்க!' என்றாள்.

நித்திலா சரியென்பது போல் தலையாட்டிக் கொண்டாள்.

'ஏன்கறதையும் யோசிச்சப் பாரு!' என்றாள் உஷா, குறும்புப் புன்னகையுடன்.

மீண்டும் நித்திலா அவள் முகம் பார்க்க, 'எங்க சேகர் அண்ணனை வாழ்நாள் முழுக்க மகிழ்ச்சியாய் வச்சுக்கவும் நீயும் நிம்மதியான வாழ்க்கை வாழவும்தான்!' என்று கலகலவெனச் சிரித்தாள் உஷா.

தாய்மையின் பூரிப்போடு அவள் சிரிக்கிற அழகைப் பார்த்து நித்திலாவும் புன்னகைத்தாள்.

'ரொம்ப தாங்க்ஸ் அண்ணி!' என்றாள்.

நித்திலாவுக்கு மனம் தெளிந்தாற்போல் இருந்தது.

ஃ ஃ ஃ

ரவீந்திரனும், அவளும் பகலில் உறங்கினார்கள். மாலையானவுடன் மகனைக் குளிக்க வைத்து உடைமாற்றி, அவளும் தன்னைச் சீர்திருத்திக் கொண்டு, கணவன் வருகைக்காகக் காத்திருந்தாள்.



எந்தப் பொருளின் பேரைச் சொன்னாலும் அடையாளம் காட்டினான் ரவீந்திரன். அவனுக்குப் புரிகிறதோ இல்லையோ அவனுடன் நிறையப் பேசுவாள் நித்தி. அதுதான் நல்லதாம். புத்தகங்களில் படித்திருந்தாள்.

கீழே வந்தாள். மாமனார் குழந்தையை வாங்கிக் கொண்டார். நிஷா வருவதற்கு ஏழு மணியாகும்.

'அத்தை... நீங்க ரெண்டு பேரும் இவனைப் பாத்துக்குங்க. நான் டிஃபன் செய்யறேன்...' என்றாள்.

'சரிம்மா. பாரு. உருளைக்கிழங்கு வேக வச்சிருக்கேன். மாவு பிசைஞ்சு வச்சிருக்கேன். நீ தேய்ச்சு பொரிச்சு எடுத்தாரியா?' என்றாள்.

'சரிங்கத்தை.' என்றாள். நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. சந்திரசேகரன் வரவேயில்லை. அவள் வேலை முடித்து எல்லாருக்கும் சாப்பிடக் கொடுத்து முடிப்பதற்குள் நிஷாவும் வந்தாள்.

'தாத்தா... எப்படி மிரட்டுவாங்க?' என்று கேட்டால் குழந்தை ஆள் காட்டி விரலைக் காட்டி மிரட்டுவது போல் சைகை செய்வதை... 'அப்பா எப்படிச் சிரிப்பாரு' என்றால், அவன் 'ய்யீ' என்று காட்டுவதையும் பார்த்து எல்லாரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவளும் சிரித்துக் கொண்டிருந்தாள். ஆனால், மனசு மட்டும் கணவனின் வருகைக்காக ஏங்கிக் கொண்டிருந்தது. பத்து மணியாகிவிட்டது தகவலும் எதுவும் கொடுக்கவில்லை.

தெய்வானை, 'சரிம்மா... நீ போய்ப் படுத்துக்க...' என்று அனுப்பவும், தங்கள் அறைக்கு வந்தாள். ரவீந்திரன் இன்றைக்குப் போட்ட ஆட்டத்திற்கு விரைவில் உறங்கிவிட்டான். இப்போதெல்லாம் சந்திரசேகரனின் அருகில் படுத்துக் கொள்ளவே விரும்பினான். அவனுக்கும் மகனைத் தன் கையணைப்பில் படுக்க வைத்துக் கொண்டு உறங்கிவிடுவது பிரியமாக இருந்தது.

தன்னையும் அறியாமல் உறங்கி விட்டாள் நித்திலா.

பதினோரு மணி இருக்கும். சேகரன் உள்ளே நுழைந்தான்.

அரவம் கேட்டு விழித்தாள் நித்திலா. உறக்கக் கலக்கத்தி லேயே, 'மணி எத்தனைங்க?' என்றாள்.

'பதினொன்று!' என்றவன் டையைக் கழற்றி வீசி விட்டு உடை மாற்றி வந்தான்.

'சாப்பிடலயா?' என்று அவள் எழவும், 'வேண்டாம், தூங்கு. அம்மா எழுந்திருச்சு வந்து சாப்பிடக் குடுத்தாங்க!' என்றான்.

'ஓ...'என்றாள். படுத்துக் கொண்டாள். பிறகு மெதுவாக, 'இவ்வளவு நேரம்...?' என்றாள் கேள்வி போல.

'ஆமா... வேலை இருந்துச்சு...' என்றான்.

அவன் குரல் கேட்ட மாத்திரத்தில் மந்திரம் போட்டாற் போல் விழித்துக் கொண்டான் ரவீந்திரன்.

'ப்பா...' என்று தாவிக் கொண்டான். சந்திரசேகரனும் அவனை மார்பில் சாய்த்துக் கொண்டான். கால் நீட்டி, அமர்ந்தான். சற்று நேரம் குழந்தையுடன் விளையாடினான், கொஞ்சி மகிழ்ந்தான். பிறகு அவனை உறங்க வைத்தான், தூளியில் படுக்க வைத்தான். பிறகு வந்து படுத்துக் கொண்டான்.

கணவனின் முகம் களைப்பாக இருப்பதைப் பார்த்து நித்திலா ஏதும் பேசவில்லை. விட்டம் பார்த்தபடி ஆனால் தூங்காமல் படுத்துக் கொண்டிருந்த அவனைக் கேள்விக்குறியுடன் பார்த்தாள்.

'சாயங்காலமே வருவீங்கன்னு ஆசையாய்க் காத்திருந் தேன்!' என்றாள்.

அவன் எதுவும் சொல்லவில்லை.

'தகவலாவது சொல்லியிருக்கலாமில்லே...' என்றாள்.

அவள் சற்றே எரிச்சலானது மாதிரித் தெரிந்தது.

'குடுக்க முடியலை. விடேன்,' என்றான்.



'எவ்வளவு எதிர்பார்த்தேன்..' என்றாள் ஆதங்கத்துடன். அவன் மார்பில் ஒன்டிக் கொண்டாள். அவன் முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல்... ஆனால் இடக்கையால் லேசாக அணைத்துக் கொண்டான். மெதுவாக அவன் கழுத்தில் முத்த மிட்டபோது அவன் அவளைக் குனிந்து வெறுமையாகப் பார்த்தான்.

'ஐ' ம் நாட் இன் மூட்...நித்தி... தூங்கு, பேசாம...' என்றான்.

அவனுக்கு நேற்றைய நிகழ்வுகளின் கோபம் என்று அவள் நினைத்தாள்.

'உங்களுக்குக் கோபம்தானே?' என்றாள், கொஞ்சலாக. பிறகு, 'சரி, இன்னைக்கும்...' என்றாள்.

'ஆமா... திடீர்னு அழுவே... இன்னைக்குச் சமாதானப் படுத்தற தெம்பெல்லாம் இல்லை. தூங்கு பேசாம...'என்றான் மறுபடியும் வறண்ட குரலில்.

அவளுக்கும் கோபம் வந்தது. 'நான் எவ்வளவு ஆசை யாய்க் காத்திருந்தேன். எங்க போனேன்னு கூடச் சொல்ல மாட்டேங்கறீங்க. அந்த ஸ்ரீராமைப் பாக்கப் போயிருப் பீங்க...' என்றாள் தன்னையும் மறந்து.

அவன் எழுந்து உட்கார்ந்தான். 'யார் சொன்னாங்க உனக்கு?' என்றான்.

'நீங்க சொல்லலேன்னா தெரியாமப் போயிடுமா? எங்கிட் டயே மறைக்கறீங்க?

'பாரு நித்தி. நான் இப்ப சண்டை போடற மூட்ல இல்லை!' என்று கோபமாக எழுந்து போய் ஜன்னலருகில் நின்று கொண்டான். வெகு நேரம் திரும்பிப் பார்க்கவேயில்லை.

பிறகு திரும்பி வந்தபோது நித்திலா தூங்கியிருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் கோடாக ஓடியிருந்தது.

அவன் தன்னையே நொந்து கொண்டான். அவளை வாரி அணைத்துக் கொண்டான்.

'சாரி நித்திம்மா...' என்று மெல்லிய குரலில் சொன்னான்.

அவன் தொடுதலை உணர்ந்ததும் அவள் தூக்கம் லேசாகக் கலைந்தது. அவன் 'சாரி' சொல்வதைக் கேட்டு, 'பரவால்லைங்க!' என்றாள் தூக்கக் கலக்கத்திலேயே.

அவன் அவள் நெற்றியில் முத்தமிட்டு இறுக அணைத்துக் கொள்ள, அவளும் ஒண்டிக் கொண்டாள். அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

அவள் முகம் பார்த்துக் கொண்டிருந்தான்.

'பாவம்... அவள் செய்யாத தவறுகளுக்காகத் தண்டனை அனுபவிக்கிறாள்!' என்று நினைத்தவுடனே இன்னொன்றும் நினைத்துக் கொண்டான்.

'பரவாயில்லை. வெறும் மன வேதனைதான். அதுவும் சரியாகிவிடும். அந்தத் திருமணம் மட்டும் நடந்திருந்தால்...' என்று நினைத்தவுடன் அவனுக்கே உடல் நடுங்கியது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

'பரவாயில்லை. அவள் மனசு தெளியட்டும். ஆண்டுக் கணக்கானாலும் சரி!' என்று உறுதி சொல்லிக் கொண்டான். அவள் ஆழ்ந்த உறக்கத்திற்குப் போன பின்புதான் அவனும் படுத்தான்.



## 17

அன்றைக்கு நித்திலா விழித்தபோது மணி ஏழாகியிருந்தது. திரும்பிப் பார்த்தாள். கணவனைக் காணவில்லை. எழுந்து பார்த்தாள். அரவமே காணவில்லை. குழந்தையின் சத்தமும் கேட்கவில்லை. முகம் திருத்திக் கொண்டு கீழே வந்தாள்.



சண்முகம் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டிருந்தார்.

'வா... நித்தி!' என்றாள் தெய்வானை.

'சேகரன் நேரத்திலயே என்னமோ வேலைன்னு போயிட்டான். உனக்கு அப்புறமா ஃபோன் செய்யறேன்னான்.' என்றார் சண்முகம்.

'என் நித்தி... உடம்புக்கு ஒண்ணுமில்லையே. 'அம்மா... அவ இப்படி எப்பவும் டயர்டா இருந்து நான் பாத்ததில்லே. எழுப்பாதீங்க!'ன்னு இவனை எங்கிட்டே விட்டுட்டுப் போனான்!' என்றாள்.

'இல்லீங்கத்தே. கொஞ்சம் டயர்ட் அவ்வளவுதான். எழுப்பியிருக்கலாமில்ல?' என்றாள்.

'பரவால்லே, விடு. நீயுந்தான் குழந்தையோடவே அல்லாடறே. இந்தப் பய வேற படுத்தறான்!' என்று பேரனைக் கொஞ்சிக் கொண்டார் சண்முகம்.

போய்க் குளித்து விட்டுக் கீழே வந்தாள். சந்திரசேகரன் என்ன சொன்னானோ தெரியவில்லை. அவளை வேலையே செய்யவிடவில்லை. நிஷா டிஃபன் செய்து முடிக்க, மாமியார் சாப்பாடு செய்ய ஆரம்பித்திருந்தார். கொஞ்சம் உதவி செய்து விட்டு மேலே வந்தாள்.

பையனை வாக்கரில் நிற்க வைத்திருந்தார்கள். நிஷா தான் கவனித்துக் கொள்கிறேன் என்றாள். மணி பார்த்தாள் ஒன்பதாகி யிருந்தது. உஷாவுக்கு ஃபோன் போட்டாள்.

'உஷாண்ணி, என்ன பிராப்ளம்? அண்ணனுக்கு ஏதாவது தெரியுமா? இவரு சாயங்காலம் லேட்டா வந்தாரு காலையிலயும் சீக்கிரம் போயிட்டாரு!' என்று விசாரித்தாள்.

'ஓ... உனக்குத் தெரியாது இல்ல அண்ணி, ஸ்ரீராமுக்கு வைரஸ் ஃபீவராம். ஆஸ்பிட்டல்ல அட்மிட் செஞ்சிருக்கு' என்றாள்.

'இவரு சொல்லலை,' என்றவள், 'ஒருவேளை எனக்கு பிடிக்காதுன்னு விட்டிருப்பார்,' என்றாள்.

'ஆமா நித்தி. பிளட் குடுக்கணுமாம். இவங்க ரெண்டு பேரும் எங்கெங்கயோ டிரை செய்றாங்க. கிடைக்கலே!' என்றான்.

'என்ன குரூப்?' என்று கேட்டாள்.

'ஏ குரூப்,' என்றாள் உஷா.

'சரிங்கண்ணி. நான் அப்புறம் கூப்பிடறேன்,' என்று வைத்தான்.

அதே சமயம்...

சந்திரசேகரன் ராகவனிடம் ஆஸ்பத்திரியில் சொல்லிக் கொண்டிருந்தான்.

'மச்சான்! நித்திக்கு விஷயம் தெரிஞ்சு போச்சு. கோபமா யிருந்த மாதிரி இருந்தது. அதான் காலையில் சீக்கிரமே ஓடி வந்துட்டேன்,' என்று.

ராகவன் சிரித்தான். 'இல்ல... சேகர், அப்படியெல்லாம் ஒண்ணும் பயப்படாதே... உஷாதான் சொல்லியிருக்கா!' என்றான்.

'ஓ...!'

''ஆமா... ஏதோ அக்கேஷன் வந்தது. சொல்லீட்டேன்னா,' என்றான்.

'எப்படி ரியாக்ட் செய்தாளாம்?'

'முதல்ல கொஞ்சம் கோபம்தான். அப்புறம் அவன் நிலைமை தெரிஞ்சு அமைதியாயிட்டாளாம்.'

'அப்படியா சங்கதி?' என்றான் சந்திரசேகரன்.

'ஆமா, நீயா எதுவும் கேட்காதே.. அவளாப் பேசினாப் பேசு,' என்றான்.

'சரி, எனக்கு ஆஃபீஸுக்கு நேரமாச்சு. நான் கிளம்பறேன்,' என்று கிளம்பினான்.



'சரி, நீ கிளம்பு. பிளட்டுக்குத்தான் என்ன செய்யறதுன்னு தெரியலே. நான் பாக்கறேன், போ...' என்று அனுப்பி வைத்தான் ராகவன்..

பத்து மணியிருக்கும். அலுவலகத்திற்கே ஃபோன் செய்தான் ராகவன்.

'சேகர்! பிளட் கிடைச்சிடுச்சு!' என்றான்.

'அப்படியா?' என்றான் சந்தோஷமாக.

'யார் தெரியுமா... ஏற்பாடு? நம்ம நித்திலாதான்!' என்றான் ராகவன்.

'நித்தியா... நிஜம்மாவா?' என்றான் நம்ப முடியாமல்.

'அட நிஜமாத்தாம்ப்பா. விமலா இல்லே, அவ ஹஸ்பெண்டாம். வந்துட்டாரு. இப்ப பிளட் குடுத்துட்டிருக்காரு. கூட இன்னொருத்தரையும் அவரே கூட்டிட்டு வந்துட்டாரு,' என்றான்.

'சரி, மச்சான். பிராப்ளம் பாதி தீர்ந்தது. எப்படிடா சொல்றதுன்னு முழிச்சிட்டிருந்தேன்.'

'அப்பவே உஷா சொன்னாளே, அவளும் ஒரு தாய்தான். ஒரு உயிரோட அருமை அவளுக்கும் தெரியும். மன்னிச்சுடுவான்னு!' என்றான் ராகவன்.

'ஆமா... என் நித்தி... ரொம்ப பெருந்தன்மையானவதான்!' என்று சன்னக் குரலில் சொல்லியபடி ரிசீவரை வைத்தான்.

உடனே நித்திலாவை அழைத்தான். அந்தப் பக்கம் மூட் அவுட் ஆகி அமர்ந்திருந்தாள் நித்திலா. 'ஹலோ' என்ற அவன் குரல் கேட்டதும் குளிர்ந்து போனாள்.

'என்னங்க. சொல்லாமக்கூடப் போயிட்டீங்க!' என்றாள் தாபத்துடன்.

'சாரி நித்தி... நீ கோபமா இருக்கேன்னு நான் நினைச்சுட்டேன்.'

'நீங்கதான் ராத்திரியே சாரி சொன்னீங்களே. அது கனவில்லையே!' என்றாள்.

'கனவில்லை... நித்தி... நிஜந்தான். நீ எங்க ஸ்ரீராம் விஷயத்துக்காகக் கோபிச்சுப்பியோன்னுதான் கோபம் மாதிரி நடிச்சேன்.' என்றான்.

'எங்கிட்டயே நடிச்சீங்களா?' என்றாள் இறங்கிய குரலில்.

'பின்னே உங்கிட்ட என்னால கோபப்பட முடியுமா?' என்று அவன் சிரிக்கவும்தான் அவள் அமைதியடைந்தாள்.

'சரி, இன்னைக்கு... என்ன?' என்று அவன் சமாதானம் செய்கையில் அவள் அந்தப் பக்கம் தடுத்தாள்.

'பரவால்லே சந்துரு... அது எங்கே போகுது. நீங்க ஸ்ரீராமைக் கவனிங்க. பாவம், வீட்டுக்கு வந்து சேரட்டும்,' என்றாள்.

'நித்தி! யு ஆர் வெரி ஸ்வீட். கண்ணம்மா!' என்றான்.

தங்களின் வெகு அந்தரங்கமான நேரங்களில்தான் அவன் அந்த மாதிரி அழைப்பது. இந்தப் பக்கம் அவள் முகம் சிவந்தாள்.

'ஹேய்... என்ன பேச்சைக் காணோம்...' என்றான்.

'நீங்க அந்த மாதிரிக் கூப்பிடறதைக் கேட்டு... எவ்வளவு நாளாச்சு...' என்றாள்.

'எவ்வளவு நாளா? கிட்டத்தட்ட ஒண்ணரை வருடம் தேவியாரே...' என்றான்.

அவள் அடிக் குரலில் சிரித்தாள்.

'ஹேய்! நான் லீவுபோட்டுட்டு வரட்டுமா?' என்றான்.

'வந்து...?'

'என்னச் தை வந்து... புரியாத மாதிரிக் கேட்கறே...' என்றான்.

'இங்க பாருங்க. உங்க மகனை. எல்லாத்தையும் தலை கீழாத் திருப்பிக்கிட்டிருக்கான். இவனை வச்சுக்கிட்டு இப்ப நீங்க லீவு போட்டுட்டு வந்து என்ன செய்ய?' என்றாள்.



'ஆமா...' என்று அவன் அடங்கி விட்டான்.

'சரிங்க, பொறுத்தது பொறுத்தீங்க.... இன்னும் ரெண்டு நாள்தானே!' என்றாள்.

'நித்தி!'

'ம்...?'

'ம்... ஸ்ரீராம் உன்னைப் பார்க்கணும்னு கேட்கறான். மன்னிப்புக் கேட்கணுமாம். ரொம்ப வருத்தப்படறான்!' என்றான் மெல்லிய குரலில்.

அவள் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தாள். பிறகு, 'வர்றேன்!' என்றாள்.

அந்தப்புறம் அவன் மகிழ்ச்சியானான்.

'ஒருவேளை, இதைச் சொன்னால் அவன் சீக்கிரம் உடம்பு தேறக் கூடும்!' என்றான்.

'சரிங்க... வைக்கட்டுமா?'

'ஹேய்...!' என்றான் கிறக்கமாக.

'ம்...' என்றாள்.

'கோபம் இல்லைன்னு ஆச்சே! கொஞ்சம் கவனிக்கறது!' என்றான்.

'ஐயோ... கறுப்ஸ்! வீட்டுக்கு வாங்க. நிறையவே கவனிக் கறேன். ரவி ரீசிவரைப் பிடுங்கறான். இரு ரவி...' என்று அவள் அந்தப் பக்கம் மகனை அணைத்தபடி ரிசீவரை வைத்தாள்.

திடீரென்று சுற்றிலும் வெளிச்சமானது போல் உணர்ந்தாள். சந்திரசேகரனை மிகவும் மகிழ்ச்சியான நேரங்களில்தான் கறுப்ஸ் என்று அழைப்பாள்.

அவனுந்தான் அந்த அழைப்பைக் கேட்டு எத்தனை நாளாயிற்று என்று எண்ணிக் கொண்டான்.

இந்தப் பெண்களைத்தான் எப்படிப் புரிந்து கொள்வது? அவ்வளவு வேதனைப்பட்டாள். ஆனால், அதே ஸ்ரீராமுக்கு நோய் என்று தெரிந்ததும் உடனே இரத்தம் கொடுக்க ஆள் பிடித்து அனுப்புகிறாள். அவனிடமும்தான் அப்படிக் கோபம் காட்டினாள். ஆனால், உண்மை தெரிந்ததும் உடனே விட்டுக் கொடுக்கிறாள்.

அந்தப் பக்கம் நித்திலாவும் மனங் குளிர்ந்து போனாள்.

சந்திரசேகரனுக்குக் கோபம் வந்து இதுவரை அவள் பார்த்ததில்லை. பொதுவாக மென்மையானவன். தன்னிடம் மட்டுந்தான் வேகம் காட்டுவான் என்று அவ்வப்போது மனதுக்குள் நினைத்துச் சிரித்துக் கொள்வாள். கோபம் வரவும் பயந்து போனாள்.

கடைசியில் ஸ்ரீராம் விஷயம் தனக்குப் பிடிக்காது என்று நினைத்துக் கொண்டு அப்படி நடித்திருக்கிறான். ராகவன் வேறு சற்று நேரத்துக்கு முன்பு ஃபோன் செய்தான்.

'என்ன நித்தி, சேகர் அப்படிப் பயந்துக்கறாரு. உன்னோட கோபத்தைச் சமாளிக்க முடியாதுன்னு காலையில நேரமே வந்துட்டேங்கறாரு...' என்று கலாட்டா செய்தான்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. குபீரென்று சிரித்தாள். அம்மா சிரிப்பதைப் பார்த்து ரவீந்திரனும் சிரித்தான். களைப் பெல்லாம் பறந்து போனது. மகனை நடக்கச் செய்து, கூட ஓடி, கீழே வந்தாள். நிஷாவும் சேர்ந்து கொண்டாள்.

'நிஷாத்தை முகம் எப்படி யிருக்கும்?' என்று கேட்டால் ரவீந்திரன் முகத்தை ஒடுக்கிக் கொண்டு காட்டுவான். நிஷா கோபம் வந்தாற் போல மிரட்டுவாள். நடிப்பாள். அவனும் திரும்ப மிரட்டுவான். அந்த நாடகம் இப்போதும் நடக்க நித்திலா ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம் விமலா வந்தாள்.



'ஹாய் விமலா...' என்று ஆசையுடன் வரவேற்றாள் நித்திலா.

'அண்ணி! நீங்க அவங்ககிட்டே பேசுங்க. நான் இவனைப் பாத்துக்கறேன்,' என்று நிஷா முன்வர, விமலாவை மாடிக்கு அழைத்துப் போனாள்.

சற்று நேரத்தில் தெய்வானை 'நித்தி' என்று குரல் கொடுக்க நித்திலா கீழே போக அவள் விமலாவுக்கு காஃபியும், டிஃபனும் கொடுத்தனுப்ப, அதையெல்லாம் ஆச்சரியமாகப் பார்த்தாள் விமலா.

'என்ன... இப்படி அட்ஜஸ்ட் பண்ணிக்கறீங்க? பரவா யில்லை. எங்க மாமியார்... என் ஃபிரண்ட்ஸ் யாராவது வந்தா 'வா!' என்று ஒத்தைச் சொல்லில் கூப்பிட்டுட்டு உள்ளே போயிடுவாங்க தெரியுமா?' என்றாள்.

'திவாகர்...?' என்றாள் நித்திலா.

'ம்... அவரு வந்து கலகலன்னு பேசுவாரு. அவரோட அண்டர்ஸ்டாண்டிங்லதான் எங்க ஜாயின்ட் ஃபேமிலி ஓடுது. இல்லேன்னா எப்பவோ... ஜாயின்ட்ல விரிசல் விழுந் திருக்கும்!' என்றாள் விமலா சிரித்தபடி.

'நாமளும் கொஞ்சம் விட்டுக் குடுக்கணும்!' என்றாள் நித்திலா.

'அதெல்லாம் எவ்வளவோ ட்ரை பண்ணியாச்சு. சரி, அதை விடு. நான் கேள்விப்பட்டது நிஜமா? ஸ்ரீராமுக்கு...' என்று விசாரித்தாள்.

'ஆமா விமலா, பாவம்!' என்று அனுதாபப்பட்டாள் நித்திலா.

'திவாகர் பிளட் குடுக்கப் போனதுனால தெரிஞ்சது. யாருக்கும் சொல்ல வேண்டாம்னு சொன்னாரு. பாவம் இல்ல. அவனை நல்லவன்னு சொல்ல முடியாது. ஆனா இப்படி ஆகியிருக்க வேண்டாம்!' என்று வெகுவாக வருத்தப் பட்டாள்.

இரண்டு பேரும் சற்று நேரம் பேசிவருத்தப்பட்டார்கள். பிறகு நித்திலா, 'சரி, நம்மால முடிஞ்ச ஹெல்ப் பண்ணுவோம். ஆனா... இது தொற்று நோய் கிடையாது தெரியுமா?' என்று தனக்குத் தெரிந்த விவரங்களைச் சொன்னாள். 'அதனால அவங்களுக்குத் தேவை மாரல் சப்போர்ட். முடிஞ்ச வரைக்கும் கொடுப்போம்!' என்றாள்.

பிறகு வேறு ஏதோ பேச்சு வர நித்திலா விமலாவிடம், 'ஏன் விமலா, உங்க திவாகர் எப்பவாவது கோபிச்சுக்குவாரா என்ன?' என்று கேட்டாள்.

'அதெல்லாம் மம்மாணியாக் கோபிச்சுக்குவாரு. அதில யும் அய்யா ஆசையாய்ப் பக்கத்துல வரும்போது நாம ஏதோ ஒரு சலிப்பில முடியாதுன்னுட்டா கோபம் ரொம்ப வரும். ரெண்டு நாளைக்குப் பேச மாட்டாரு. வறுத்தெடுத்துடுவாரு!' என்று சிரித்தாள்.

'அப்புறம்?' என்றாள் நித்திலா.

'அப்புறம்? ஏய் என்ன நீ கதையா கேக்கறே!' என்று சிரித்தாள். 'அப்புறம், அப்புறம் என்ன? சரண்டர்தான். ஆனா... அதுக்கப்புறம் கிஃப்ட், புடவைன்னு அமர்க்களப் படும்!' என்று ரசித்துச் சிரித்தாள்.

நித்திலாவும் சிரித்தாள். 'அதெல்லாம் இங்கே எப்ப வேண்ணாலும் கிடைக்கும். நேத்தைக்குத்தான் என்னமோ கோபப்பட்டாரா... ரொம்பப் பயந்துட்டேன். ஆனா உனக்குக் கோபம்னு நான் நினைச்சேன்கறார்!' என்றாள்.

'உன்கிட்டே யாருமே கோபப்பட முடியாது நித்தி...' என்றாள் விமலா.

'ஏன்?' என்றாள் நித்திலா ஆச்சரியமாக.

'நீ ரொம்ப நல்லவ, நித்தி. பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சம்... உன்னோட வசதி எனக்கு இருந்தா ஏகப்பட்ட லொள்ளு பண்ணிடுவேன். அதுதான் கடவுள் அளந்து வச்சிட்டான்!' என்றாள் விமலா.



அப்படி வெளிப்படையாகப் பேசுவதனால்தான் விமலாவை நித்திலாவுக்கு மிகவும் பிடிக்கும். விமலா புறப்படுகிறேன் என்று சொல்லும் போது ரவீந்திரனுக்கு அவன் அப்பா வாங்கிக் குவித்திருந்த விளையாட்டுப் பொருட்களில் இரண்டு மூன்றை பாக் செய்து கொடுத்தாள்.

மீண்டும் புறப்படும்போது, 'கோபப்பட்டார்ன்னா சொன்னே? அப்ப இன்னைக்கு அவரு சரண்டர்தான்!' என்று சிரித்துப் போனாள்.

நித்திலா... ஆசையாய்க் காத்திருந்தாள்.

அன்றும் சந்திரசேகரன் தாமதமாக, அவள் உறங்கிய பின்தான் வந்தான்.



## 18

ஐ.சி. யூனிட்டில் இருந்தவனை அறைக்கு மாற்றியிருந்தார்கள். சற்றுத் தேறியிருந்தான் ஸ்ரீராம்.

ராகவனும், சந்திரசேகரனும் செய்கிற உதவிகளுக்காக வெகுவாக நன்றி சொல்லிக் கொண்டிருந்தான். இப்போது சந்திரசேகரன் -

'பாரு ஸ்ரீராம், இது ஒன்னும் தொத்து நோயில்லை. அதனால பயப்பட வேண்டியதில்லை. நீ தாராளமா வெளியில போயிட்டு வரலாம்,' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அப்போது ஸ்ரீராமின் அம்மாவும், அப்பாவும் நுழைந் தார்கள். அம்மா, ஸ்ரீராமைத் தழுவிக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

அப்பா, 'பாரு. ஸ்ரீராம், நான் இந்த வியாதியைப் பத்தின எல்லா விஷயங்களையும் சேகரிச்சுப் படிச்சுட்டேன். சொல்லப் போனா இது நோயே... இல்லே... அதனால

நாங்களும் கோயமுத்தூர் வரப்போறோம்.. உன்னோடவே இருக்கப் போறோம்...' என்றார்கள்.

'சரிப்பா...' என்றான் ஸ்ரீராம். முதலில் அவனும் பயந்து விட்டான். பிறகு எய்ட்ஸ் நோய் பற்றிய பல்வேறு விவரங்களைச் சேகரித்துக் கொண்டான். ஓரளவு துணிவு வந்து விட்டது. அவனையும் தனிமை கொன்றது. தனிமை உணர்வைப் போக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

ஒருநாள் சந்திரசேகரனிடம், 'உங்களுக்கெல்லாம்தான் சாவு சஸ்பென்ஸ். எனக்கு இல்லவே இல்லை!' என்றான் சிரித்தபடி.

சந்திரசேகரன் ஒருகணம் துணுக்குற்றான். பிறகு, 'அப்படி யெல்லாம் சொல்ல முடியாது. நாளைக்கே மருந்து கண்டு பிடிச்சாலும் ஆச்சு. இப்ப ஆராய்ச்சியில வெள்ளணுக்களைக் கொல்லாம எச்.ஐ.வி. கிருமியை மட்டும் கொல்றதுக்காக மருந்து தேடிக்கிட்டிருக்காங்க. அதனாலே காலம் பிடிக்குது!' என்றான்.

'எப்படியோப்பா என்னால நீங்கள்ளாம் இது பத்தின நாலெட்ஜ்ல எக்ஸ்பர்ட் ஆயிட்டீங்க!' என்று சிரித்தான்.

அந்த நேரத்தில் அங்கு வந்த டாக்டருடனும் சற்றுப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்,

'மிஸ்டர் ஸ்ரீராம், உங்க கேஸ்ல பரவாயில்லை. உங்களைச் சுத்தி படிச்சவங்க நிறைய இருக்கறதுனால... அண்டர்ஸ்டாண்ட் செஞ்சுட்டு மாரல் சப்போர்ட் குடுக்கறாங்க. ஆனா, சில பேர் வீட்ல சத்தமா வெளியேத்திர்றாங்க. சில பேர் தற்கொலை பண்ணிக்க டிரை பண்றாங்க!' என்றார் வருத்தத்துடன்.

எல்லாரும் சற்று மௌனமானார்கள். அப்போது ஸ்ரீராமின் அப்பா சொன்னார்.

'பாரு ஸ்ரீராம், இப்ப நீ தங்கியிருக்கிறியே அதுக்குப் பக்கத்து வீட்டை நான் விலை பேசியாச்சு. நாம அங்க இருந்துக்கலாம்,' என்றார்.



அப்போது ஸ்ரீராம், ராகவனிடம், 'ஏன், ராகவ், உங்க இடத்தை எனக்கு விலைக்குக் குடுப்பீங்களா?' என்றான்.

ராகவன் புரியாமல் பார்த்தான். 'இல்லை. நான் எங்கப்பா, அம்மாவோட தங்கிக்கிட்டு இங்க கைவிடப்பட்ட எய்ட்ஸ் நோயாளிகளுக்கு ஒரு புகலிடம் ஏற்படுத்தலாம்னு பாக்க றேன்,' என்றான்.

ராகவனும், சந்திரசேகரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'ஆமா... என்னால முடிஞ்சது. நீங்க வேற ஏதோ தொழில் பிளான் பண்றீங்களே, அதையும் ஆரம்பிக்கலாம். எங் கப்பா எனக்காகத் தர்ற என் பங்குச் சொத்தில் ஒரு டிரஸ்ட் ஆரம்பிச்சு, அரசாங்க உதவி வாங்கி இதுக்காகப் பயன் படுத்தலாம்னு பாக்கறேன்,' என்றான்.

சந்திரசேகரனும், ராகவனும் சந்தோஷமானார்கள்.

'செய் ஸ்ரீராம். உஷா கூட வாழ்க்கைன்னா ஒரு நிறைவு இருக்கணும். அர்த்தம் இருக்கணும்பா. இன்னும் சொல்லப் போனா பாதி விலை குடு. போதும்... மீதியை உன் பர்ப்பஸ்க்கு யூஸ் பண்ணிக்கோ!' என்றான்.

பக்கத்தில் இருந்த டாக்டர் நரேன் மகிழ்ச்சியானார்.

'நீங்க செய்யப் போறது பெரிய காரியம் தெரியுமா? நிறையப் பேர் சேவை நிறுவனங்கள்ங்கற பேரில ஃபண்ட்ஸ் வாங்கி என்னென்னவோ நடக்குது. அதை விடுங்க...நீங்க இதைத் தொடருங்க,' என்றார்.

மடமடவென்று திட்டங்கள் போட்டார்கள். ஒரு புதிய மறுவாழ்வு இல்லத்திற்கான திட்டம் உருவாகியது.

ஸ்ரீராம் இன்னொன்றும் சொன்னான். 'சார் வேணும்னா, கல்லூரி மாணவர்கள்கிட்டே... ஏன், ஸ்கூல் லெவல்ல கூட இதைப் பத்தி மாணவர்களுக்குப் பிரச்சாரம் செய்யறேன். ஆனா, பப்ளிசிட்டி வேண்டாம். பாருங்க... எந்தக் கவலையும்

இல்லாத அந்தக் காலம் இனி வருமா என்ன?' என்றபோது, எல்லையில்லா ஏக்கம் அவன் குரலில் தெரிந்தது.

எல்லாரும் ஒரு கணம் கண்கலங்கினார்கள். பிறகு அவனே தொடர்ந்தான்.

'ஆனா ஒரு விஷயத்துல நான் பாக்கியம் செஞ்சுருக்கேன். 'ச்சீ' என்று அருவருப்போட ஒதுக்காத என் நண்பர்கள், அவங்க கருணை. இத பாருங்க... இந்தச் சந்திரசேகரனுடைய வாழ்க்கைக்கே நான் வேட்டு வைக்கப் பார்த்தேன். ஆனா, அவன் பெருந்தன்மையால என்னைப் பழிவாங்கிட்டான்!' என்று ஒரு கணம் குலுங்கி அழுதான்.

'போதும்... விடு ஸ்ரீராம். உடம்புக்கு நல்லதில்லே. நீயும், நானும் ரொம்ப ஃப்ரெண்ட்ஸாய் இருந்தவங்கதானே! இடையிலே ஏதோ பணத் தேவை. உனக்கு அப்படிப் புத்தி போயிடுச்சு, விடு. அதையெல்லாம் நான் மறந்தாச்சு!' என்றான்.

ஸ்ரீராம் சற்றே சமாதானமானான்.

'அது மட்டுமில்லை... நித்தியும் உன்னை மன்னிச்சாச்சு. உன்னைப் பாக்க வரேன்னு சொல்லியிருக்கா. இன்ஃபாக்ட், ரத்தம் குடுக்கவே அவதான் ஆள் ஏற்பாடு செஞ்சா, தெரியுமா?' என்று சந்திரசேகரன் சொன்ன மறுகணம் ஸ்ரீராமின் முகம் தெளிவாக மாறியது. பிரகாசமானது.

'நிஜமாவாடா... நிஜமாவா சொல்றே. ஏன் ராகவன், அப்படியா?' என்று மகிழ்ந்து போனான்.

'அட ஆமாங்கறேன்,' என்றான் சந்திரசேகரன்.

'அப்ப சரி... நித்தி என்னை மன்னிச்சாச்சுன்னா சரி. எனக்கு யானை பலம் வந்த மாதிரி இருக்கு. இனிமே தெம்பாயிடுவேன். உசிரோட இருக்கற நிமிஷம் வரைக்கும் நாலு பேருக்கு உதவி செஞ்சு நிம்மதியாய் இருப்பேன்!' என்று அவன் சந்திரசேகரனின் இரு கைகளையும் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.



சற்றுக் கழித்துச் சந்திரசேகரும், டாக்டரும் வெராண்டாவில் பேசிக் கொண்டிருந்தபோது, 'நித்தி! என்னை மன்னிக்க மாட்டியா?'ன்னு அப்பப்ப புலம்பிக்கிட்டிருந்தாரு 'உயிர் வாழ்றதுல எனக்கு இன்ட்ரஸ்டே போயிடுச்சு'ன்னெல்லாம் சொல்லிக் கிட்டிருந்தாரு!' என்றார்.

பிறகு சிந்தனையுடன், 'இனி அந்த நிராசை போயிடும்.. ஒரு நிம்மதி வந்துரும். ஹி ஈவன் மைட் லிவ் லாங்கர்!' என்றார்.

சந்திரசேகரன் சற்று நெகிழ்ந்து போனான். நித்திலாவிடம் விவரமாக இதை யெல்லாம் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

∴ ∴ ∴

'**பாதி** விலை யென்ன? உங்களுக்கிருக்கிற சொத்துக்குச் சும்மாவே கொடுக்கலாம்!' என்றாள் உஷா, ராகவனிடம் அன்றிரவு.

'ஏய்... என்ன உங்களுக்கிருக்கிறதுங்கற... நம்மளுக்கிருக்கிற... சொத்துக்குன்னு சொல்லு!' என்றான் ராகவன்.

'சரி... நம்மளுக்கிருக்கிறது.. சரி. அதுதான் சாக்குன்னு எதுக்கு இப்படி இடிக்கறீங்க!' என்று சிரித்தாள்.

'அதுக்கு மேலே என்ன செய்ய முடியும். கொஞ்சம் ப்ரொசீட் செஞ்சா உன் மகனோ... மகளோ, 'ஏய்யா... என்ன எங்கம்மாவை இப்படி ட்ரீட் பண்றேன்னு சண்டைக்கு வந்துட மாட்டாங்களா!' என்று பயந்தவன் போல் சொன்னான்.

'அந்தப் பயம் இருந்தா சரி!' என்றாள் உஷா.

'ஏய்... நீ... இப்படியெல்லாம் வாயடிக்கறேன்னு சொன்னா நித்தி நம்பவே மாட்டேங்கறா!' என்றான் ராகவன்.

'ஆமா... உங்களைக் கூடத்தான் பயங்கர வம்புக்கார ஆளுன்னு சொன்னா... போங்க உஷாண்ணி,' பொய் சொல்றீங்க... அப்படீங்கறா. வேஷம், அத்தனையும் வேஷம்!' என்று அவன் அரும்பு மீசை நீவிக் கொஞ்ச, இரண்டு பேரும் ரசித்துச் சிரித்தார்கள்.

'இதப்பார் உஷா... மனசுக்குப் பிடிச்சா... ஹீரோ... பிடிக்காமப் போனா வில்லன். ஆனா ஹீரோவும், அதே வேலையைத்தான் செய்றான்.. ஆனா ஹீரோயினுக்கு அது பிடிக்குது இல்லையா?' எனவும், அவன் தத்துவம் கேட்டு உஷா சிரித்தாள்.

பிறகு ராகவ் சீரியஸாகச் சொன்னான். 'உஷா! நீ கேட்ட மாதிரி சும்மாவே குடுத்திருக்கலாம். ஆனா, பாக்கலாம். ஸ்ரீராம் இப்ப ஒரு ஆரம்ப உற்சாகத்துனால சொல்றானா... இல்லே... தொடர்ந்து செய்றானான்னு. தொடர்ந்து செஞ்சா, தொகையைத் திருப்பிக் குடுத்தரலாம்...' என்றான்.

'ரொம்ப விவரம்தான்!' என்று உஷா சிரித்தாள்.

∴ ∴ ∴

**க**ணவன் சீக்கிரம் வரவும் மகிழ்ச்சியானாள் நித்திலவல்லி.

மகனைத் தோளில் ஏந்திக் கொண்டு நடனம் ஆடி, யானையாகி அவன் நேரம் செலவழிக்கிற விதத்தைப் பார்த்து நிறைவாய் மனதுக்குள் பதிய வைத்துக் கொண்டாள்.

அவர்கள் போட்ட ஆட்டத்தில் ரவீந்திரன் விரைவாய் உறங்கி விட்டான். சந்திசேகரன் முகத்தில் இன்றைக்கு மகிழ்ச்சி பொங்கி வழிந்த மாதிரித் தெரிந்தது.

'என்னங்க... இன்னைக்கு ஒரே உற்சாகம்!' என்றாள், அவன் தோளில் சாய்ந்து கொண்டு.

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். பிறகு ஆஸ்பத்திரியில நடந்த பேச்சுக்களையெல்லாம் சொன்னான். நித்திலாவும் சந்தோஷமானாள்.

'அப்படியா? ஸ்ரீராம் அந்த அளவுக்கு மனம் தெளிந்து விட்டானா? சந்தோஷப்பட வேண்டியதுதான்!'

அன்றைக்கும் ஏனோ சந்திரசேகரன் அவளை நெருங்க வில்லை. 'நான் மனதில் ஒன்னு நினைத்திருக்கிறேன், நித்தி... அது முடியட்டும். அப்புறம்...' என்று அவளிடம் சொன்னான்.



அவள் சிந்தனையுடன் அவனைப் பார்த்தாள்.

'என்ன நித்தி கோபமா?' என்றான்.

'நீங்க.... எது செஞ்சாலும் சரியாத்தான் இருக்கும்... எனக்கொண்ணும் கோபம் இல்லை!' என்றாள் அவள்.

'தாங்க்ஸ் நித்தி...' என்று உணர்ச்சி வசப்பட்டவனாய் லேசாக முத்தமிட்டு அணைத்துக் கொண்டு உறங்கினான்.



## 19

**டா**க்டர்களே அதிசயப்பட்டனர். ஸ்ரீராம் விரைவாய்த் தேறியதைப் பார்த்து.

டாக்டர் அவர்களிடம் சொன்னார். 'இதுவரைக்கும் உயிர் வாழ்றதுல அர்த்தம் இல்லைன்னுட்டு இருந்தாரு ஸ்ரீராம். ஆனா இப்ப ஏதோ மன மாற்றம் வந்திருக்கு!' என்று.

சந்திரசேகரனுக்குப் புரிந்தது. நித்திலா மன்னிக்கத் தயாராகி விட்டாள் என்ற மகிழ்ச்சிதானே அது என்று.

அதற்குப் பிறகு நான்கே நாட்களில் வீடு வந்து சேர்ந்தான் ஸ்ரீராம்.

நித்திலாவும், சந்திரசேகரனும் காரில் வந்து இறங்கினார்கள்.

இன்னமும் ஸ்ரீராம் அந்த அறையில்தான் தங்கியிருந்தான். வாசல் வரை வந்த நித்திலவல்லி உள்ளே செல்லத் தயங்கினாள். 'வா... நித்தி... தயங்காம வா!' என்று அழைத்துப் போனான் சந்திரசேகரன்.

ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஸ்ரீராம் நிமிர்ந்து பார்த்தான். பார்வை அப்படி உறைந்து நின்றது. நிலவு ஏதோ

சட்டம் போலத் தெரிய, ஒரு ஆளுயரம் புகைப்படத்தில் நிற்பது போல் நித்திலா நின்றாள். பின்னால் கையில் குழந்தையுடன் நின்றான் சந்திரசேகரன்.

'நித்திலா... வாங்க!' என்றான். எழுந்து நின்றான்.

தயங்கி நின்றாள். பிறகு உள்ளே சென்றாள். ஸ்ரீராமின் முகத்தைப் பார்த்தாள். அந்த நிமிடம் தான் ஒரு தாயாய் உணர்ந்தாள். உலகத்துக் கருணையெல்லாம் அவள் முகத்தில் பொங்கியது.

'நல்லாருக்கீங்களா?' என்றாள்.

'இருக்கேன், நித்திலா. உட்காருங்க!' என்றான். திரும்பிப் பார்த்தான். சந்திரசேகரன் வெளியே நிற்பதைப் பார்த்து, 'வாங்க சந்துரு!' என்று அழைத்தான்.

நடந்தது எதையுமே பேசாமல் பொதுப்படையாகப் பேசினாள். கலகலப்பாக்கினாள். உடனே சூழ்நிலை மாறியது. அந்த நேரம் ராகவனும், உஷாவும் வந்தார்கள். உஷா ஏதோ டிஃபன் கொண்டு வந்திருந்தாள்.

'நான் காஃபி போட்டுத் தரட்டுமா?' என்றான் ஸ்ரீராம்.

'ப்ளீஸ்...' என்றான் சந்திரசேகரன். நித்திலா ஒரு வாய் அருந்திப் பார்த்து விட்டு, 'உஷாண்ணி! பரவால்லே. ஸ்ரீராம் காஃபி குணம், மணம் எல்லாம் நிறைந்துதான் இருக்கு!' என்று சிரித்தாள்.

'அப்பாடா?' என்று சிரித்தான் ஸ்ரீராம். பிறகு மெதுவாக, 'ரகசியம் சொல்லட்டுமா?' இன்ஸ்டன்ட் காஃபி!' என்றான்.

'அதுதானே பார்த்தேன்!' என்று ராகவன் சிரித்தான்.

பிறகு உஷா பரிமாற எல்லாரும் சாப்பிட்டார்கள். குழந்தையைத் தயங்கியபடியே பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீராம். அதைப் பார்த்த நித்திலா, 'ரவி! மாமாகிட்டே போ!' என்று கையில் கொடுத்தாள்.



குழந்தையும் ஒட்டிக் கொண்டான். பழைய நாட்களில் ஆஃபீஸ் கலாட்டாக்களை யெல்லாம் பேசினார்கள்.

'நித்தி! இன்ஸ்பெக்ஷனுக்கு பாம்பே பிராஞ்சிலே இருந்து ஆள் வந்தா சரியான குடைச்சல் குடைவாங்க. அதுல ஒருத்தன் குல்கர்னின்னு. ஆனா, கடைசியில கொஞ்சம் பழகிட்டார்னு வை. தமிழ்ல வாழ்த்துச் சொல்றதுன்னா எப்படின்னு கேட்டான். இவன் ஹலோ நாய்ப்பயலேன்னு சொல்லணும்னு சொல்லிக் குடுத்துட்டான்.

'அவர் மெட்ராஸில் பெரியவர்கிட்டே போய் அப்படிச் சொல்லி அவர் அங்கேயிருந்து வாங்கு வாங்குன்னு வாங்கி... போதும் போதும்னு ஆச்சு!'என்று சிரித்தார்கள்.

நித்திலாவும் தன் பங்குக்கு ஆஃபீஸ் கதை சொன்னாள். உஷா ட்யூஷன் கலாட்டக்களைச் சொல்ல, ராகவன் கட்டிடம் கட்டும் இடங்களின் பிரச்சினைகளையெல்லாம் சொன்னான்.

'ஏகப்பட்ட சவடால் பேசுகிற அந்தச் சரவணன் வீட்டில் எப்படிப் பெட்டிப் பாம்பாய் அடங்கி விடுகிறார்' என்று பேசிச் சிரித்தார்கள்.

நீ கூடத்தான் உஷாண்ணி பின்னாலயே கர்ணம் போடறே!' என்று நித்திலா சிரிக்க.

'உங்க வீட்டுக்கார்ரன் மட்டும் என்னவாம். உன்னை வீட்டுக்குக் கூட்டிட்டு வர அன்னைக்கு ஒன்பது மாசமாச்சு. பத்து மாசமாச்சுன்னு ஒரே புலம்பல்தான்!' என்றான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

தானும் இருக்கிற வரைக்கும் ஒழுக்கமாக இருந்திருந்தால் இப்படியெல்லாம் பேசிக் கொள்ள ஒரு வாழ்க்கை கிடைத்திருக்கும் என்று எண்ணிக் கொண்டான் ஸ்ரீராம். ஸ்ரீராம் குழந்தையை மடியை விட்டு இறக்கவே யில்லை.

அவனிடம் மழலை பேசி வார்த்தைகள் சொல்லிக் கொடுத்துத் தனி உலகத்தில் இருந்தான். பிறகு ஒரு வழியாகக் கிளம்பினார்கள். புறப்படும்போது, 'ஒரு நிமிடம் நித்திலா!' என்றான் ஸ்ரீராம்.

என்னவோ சொல்லப்போகிறான் என்று நினைக்க அவன் சற்றும் தயங்காமல் நெடுஞ்சாண் கிடையாக அவள் காலில் விழுந்தான்.

'நீ ரொம்பப் பெருந்தன்மையானவ நித்திலா. உன் பெருந்தன்மையாலேயே என்னைப் பழிவாங்கிட்டே!' என்று கரைந்து அழுதான். எல்லாரும் திகைத்து நின்றார்கள். குழந்தையைச் சந்திரசேகர் கையில் கொடுத்து விட்டு ஸ்ரீராமைத் தொட்டுத் தூக்கி நிறுத்தினாள் நித்திலா.

அவன் மண்டியிட்டபடியே அழுதான்..

'மறந்துடுங்க ஸ்ரீராம். என்னை நிமிர்ந்து பாருங்க. நான் இப்ப ஒரு தாய். உங்களையும் பார்க்கும் போது எனக்கு இன்னொரு ரவியாத்தான் தெரியுது. ஒரு வேளை நீங்க பழைய துன்மார்க்கன் ஸ்ரீராமா இருந்திருந்தா என்னாலே நிம்மதியா இருக்க முடியாம போயிருக்கும். ஆனா நீங்க மனசு மாறியதுக்கப்புறம் எனக்கும் பாரம் இறங்கிடுச்சு. இப்ப நான் தினமும் என்ன வேண்டிக்கறேன் தெரியுமா? யாராவது ஒரு மருந்து சீக்கிரம் கண்டுபிடிக்கணும். எத்தனையோ உயிர்கள் இதுல சிக்கிட்டு அவஸ்தைப் படறாங்களே, அவங்க ளெல்லாம் வெளிய வரட்டும்னுதான் வேண்டிக்கறேன்!' என்றாள்.

அவன் மெதுமெதுவாகத் தேம்புவதை நிறுத்தினான். அவள் மெதுவாகக் குனிந்து அவன் தலையில் தடவிக் கொடுத்தாள். புறங்கையில் முத்தமிட்டாள்.

'ஒரு பாதிக்கப்பட்ட பெண்ணா உங்களுக்கு நான் சாபம் கூடக் கொடுத்தேன். ஆனா... ஒரு தாயா இப்ப உங்களுக்கு



மனப்பூர்வமா மன்னிப்புக் குடுத்துட்டேன். என் பிரார்த் தனையில் உங்களையும் சேத்துக்கறேன்...' என்றாள்.

அந்தக் கணத்தில் அவள் முகத்தில் தெரிந்த கம்பீரம், கருணை சந்திரசேகரனையே ஒரு நிமிடம் அச்சுறுத்தியது.

'உங்களுக்குக் குணமாகத்தான் போகுது. நடக்கும் ஸ்ரீராம்... இது நடக்கும். நம்பிக்கைதான் வாழ்க்கை. தைரிய மாய் இருங்க!' என்றாள். திரும்பி வாசல் நோக்கி நடந்தாள்.

நான்கே நாட்களில் பக்கத்து வீட்டுக்கு அவர்கள் பெற் றோர்கள் வந்து சேர்ந்தார்கள்.

ஸ்ரீராம் இருந்த அறையில் எந்த விதத்திலும் ஆதரவு இல்லாத நான்கு எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்டு வந்து சேர்த்தார் டாக்டர்.

ஒரு சிறிய அச்சகம் தொடங்கினார்கள். ஸ்கிரீன் பிரிண்டிங் வேலையும் ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீராம் டாக்டரிடமும், மற்றவர்களிடமும் சொன்னான்.

'சார் நீங்க மருத்துவ முகாம் போற இடங்களுக்கு நாங்களும் வர்றோம். இளைஞர்களை மட்டும் தனியாய்க் கூட்டி நாங்க இதைப் பத்தி சொல்றோம். இனிக் கடந்து போன கணங்கள் எவ்வளவு ஏங்கினாலும் கிடைக்கவா போகிறது. இளமை எவ்வளவு பொன்னானது என்பதை யெல்லாம் எடுத்துச் சொல்கிறோம்,' என்று முன் வந்த போது, டாக்டர் வெகு ஆச்சரியப்பட்டுப் போனார்.

'சார்.... இது பெரிய விஷயம். நேரடியா வந்து சொன்னீங் கன்னா... இட் வில் ஹேவ் ட்ரமண்டஸ் எஃபெக்ட்!' என்றார்கள் டாக்டர்கள்.

'இந்தப் பிறவிக்கு இப்படியாவது புண்ணியம் சேர்க் கிறேன்,' என்றான் ஸ்ரீராம்.

இதைக் கேள்விப்பட்ட ராகவனும், சந்திரசேகரனும் வெகு வாக ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்தார்கள்.

சத்தம் இல்லாமல், விளம்பரம் இல்லாமல் எய்ட்ஸ் நோய் வாய்ப்பட்ட திக்கற்றவர்களுக்கு அங்கே ஒரு இல்லம் உருவாகியது. ஆனால் ஸ்ரீராமின் மனதுக்குள் மட்டும் அந்த உறுத்தல் பெரிதாகிக் கொண்டே வந்தது.



## 20

ராகவன் சைட்டில் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்று சனிக்கிழமை. மாலை ஐந்து மணியாகிவிட்டது. வேலை நடக்கிற இடங்களுக்கெல்லாம் போய்க் கூலி கொடுத்து விட்டு வர வேண்டியிருந்தது.

ஐந்து இடங்களில் வேலை நடந்து கொண்டிருந்தது. ஐந்தாவது சைட்டில் நின்று கொண்டிருந்தான்.

செல்ஃபோன் மணி அடித்தது. பேசினான். உஷா கலவரமான குரலில், 'ராகவ்! நீங்க உடனே புறப்பட்டு ஆஃபீஸுக்கு வாங்க,' என்றாள்.

'ஏம்மா?' என்றான் வழக்கமான அன்புக் குரலில்.

'இல்லே... ஸ்ரீதேவி, ஸ்ரீமதி இவங்க ரெண்டுபேரோட ஹஸ்பெண்ட்ஸும் இங்க வந்து உட்கார்ந்திருக்காங்க. ரொம்பக் கோபமா என்னென்னவோ பேசறாங்க. எனக்கு இதெல்லாம் பழக்கமில்லே. நீங்க சித்த வாங்க,' என்றாள்..

'சரி... நீ ஃபோனை சபாபதிகிட்டே குடு,' என்றான்.



சபாபதி அவர்கள் கம்பெனியில் மேனேஜர், பி.ஏ. என்று ஆல் இன் ஆல் ஆக இருந்தான்.

'என்னப்பா சபா?' என்றான்.

'சார், மேடம் சொல்றது கரெக்ட்தான். ஆளுக ரெண்டு பேரும் ஏதோ அடிதடிக்கு பிளான் பண்ணி வந்த மாதிரி இருக்கு,' என்றான்.

'சரி....நீ ஸ்ரீராமுக்குத் தகவல் குடு. நான் சேகருக்கு ஃபோன் செஞ்சுட்டு இப்ப வரேன்,' என்றவன், மறுபடியும் உஷாவிடம் பேசினான்.

'உஷா, ஒண்ணும் பயப்படாதே. எதுவானாலும் அவரைக் கேளுங்கன்னு சொல்லிடு,' என்றான்.

ஸ்ரீராமுக்கு ஃபோன் செய்து பேசினான். பிறகு புறப்பட்டான்

'நீங்க யார் சார் எங்க மச்சானுக்கு இடம் குடுத்து வச்சுக்கிறதுக்கு? அம்மா, அப்பாவையும் நைசாக நகர்த்திட்டு வந்துட்டீங்க. உங்க சொத்தை வேற அவரு தலையில கட்டியிருக்கீங்க. நான் கராத்தேயில சாம்பியன்... தெரியுமா?' என்று கத்தினான், ஸ்ரீதேவியின் கணவன் கண்ணப்பன். ராமலிங்கம் அதற்கு மேல் முறைத்தான்.

ராகவன் கேலியாகச் சிரித்தான். சரியாக அந்த நேரம் சபாபதி, 'சார், ஐ.ஜி. லைனில்!' என்று ஹேண்ட் செட்டைக் கொண்டு வந்து நீட்டினான்.

'வணக்கம் சார். அந்தப் பக்கத்து சைட்காரன்தானே... வழிக்கு வந்துட்டான். இல்ல சார். அடிதடின்னா நம்மாளுகளும் எல்லாம் தயாராத்தான் இருந்தாங்க. நான் அதை லைக் பண்ணலே, எதுக்கும் உங்ககிட்டே ஒரு வார்த்தை சொல்லிடலாம்னுதான் சொல்லிட்டேன். இல்லல்ல...நீங்க யாரையும் அனுப்பி என்கொயர் பண்ண வேண்டாம். என்னது? தட்டியெறியறதா

அதெல்லாம் வேண்டாம் சார். பேசியே சரி செய்வோம்.' என்று சிரித்து ஆஃப் செய்தான்.

கண்ணப்பனும், ராமலிங்கமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அடங்கி விட்டார்கள்.

'பாருங்க... சார். ஸ்ரீராம் ஒன்னும் குழந்தையில்லை. நாங்க இடுப்பிலே தூக்கி உட்கார வச்சுக் கொண்டு போயிர்றதுக்கு. அவரு விருப்பப் பட்டாரு. இடம் கொடுத்தோம். மத்த குடுக்கல் வாங்கல் எல்லாம் எங்க இஷ்டம். அது பத்தி எதுவாவது விளக்கம் வேணும்னா நீங்க அவரைத்தான் கேக்கணும்.' என்றான்.

சரியாக அந்த நேரத்துக்கு ஸ்ரீராம் உள்ளே நுழைந்தான்.

'என்ன வேணும் உங்களுக்கு?' என்றான்.

'இல்லே... ஏன் மதுரையை விட்டுட்டு இங்கே...' என்றார்கள் இறங்கிய குரலில்.

இவ்வளவு நேரம் தை...தை... என்றவர்கள், ஸ்ரீராமைக் கண்டவுடன் அமைதியாகி விட்டார்கள். அவனிடம் பயம் இருந்தது போலும் என்று எண்ணிக் கொண்டான் ராகவன். அதற்குள் சந்திரசேகரும் நித்திலாவும் கூட வந்தார்கள்.

'பாருங்க மச்சான், எனக்கு எதுவானா என்ன, நான் எங்கே இருந்தா என்ன, உங்களுக்கு எது வேணுமோ அது கிடைக்கும். உங்களுக்கென்ன... பணம்தானே வேணும்... வாங்கிக்குங்க!' என்றான்..

அவர்கள் வாயடைத்துப் போனார்கள். 'நீங்க கோபமா இருக்கீங்க!' என்றான் இராமலிங்கம்.

'பின்னே... என் மேலஅக்கறையினாலயா வந்தீங்க. பணம் பிடிங்கிட்டுப் போகத்தானே வந்தீங்க. வாங்கிட்டுப் போங்க!' என்றான். அந்த நேரத்தில் ஸ்ரீராமின் முகத்தில் படிந்திருந்த வேதனை பார்க்கச் சகியாததாக இருந்தது.



'ஸ்ரீதேவியும், ஸ்ரீமதியும் உங்க அண்ணன் சொத்தையும் எங்களுக்கே பங்கு போட்டுக் குடுங்கன்னு கேட்டாங்களாம். அவ்வளவுதானே! வாங்கிக்குங்க. என் ஃபிரண்ட்ஸ் யாரையும் தொல்லை செய்யாதீங்க. தொலையுங்க!' என்று கத்தினான்.

சோஃபாவில் அமர்ந்து வெடித்து அழுதான். 'ப்ளீஸ்... ஸ்ரீ அண்ணா! அழாதீங்க!' என்று நித்திலாவும், உஷாவும் தேற்றினார்கள்.

அவன் நிமிர்ந்து தன் மைத்துனன்களைப் பார்த்தான்.

'இவங்க குடும்பத்துக்கு நான் எவ்வளவு இடைஞ்சல் செஞ்சிருக்கேன் தெரியுமா? ஆனா... இவங்க என்னை அரவணைச்சு இடம் குடுத்து... அவங்க மனுஷங்களா? நீங்க மனுஷங்களா? சே...' என்று நொந்து கொண்டான்.

சந்திரசேகரன் நண்பன் என்ற முறையில் அவர்களின் குடும்பத்தோடு ஏற்கெனவே சற்றுப் பழகியிருந்தான்.

'பொறுடா ஸ்ரீராம். நான் அவங்ககிட்டே பேசறேன். பாருங்க ராமு சார், நீங்க ஏதோ குழப்பத்தில் இருக்கீங்க. ஸ்ரீக்கு இப்படி ஆயிடுச்சேன்னு அதிர்ச்சியில எதையெதையோ பேசறீங்க!' என்றான்.

அவர்கள் குழப்பத்தோடு அவனைப் பார்த்தார்கள். பிறகு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள்.

'சார், பயப்படாதீங்க. நாங்களும் முதலில் பயந்துதான் போனோம். ஆனா, நிறைய அதைப் பத்தி படிச்சோம். அதனால பயம் தெளிஞ்சிருச்சு...' என்றான்.

கண்ணப்பன் சொன்னார். 'சார்! எங்க பெரியவங்களுக்கெல்லாம் இது தெரியாது. தெரிஞ்சா என்னென்ன சொல்வாங்களோ... அதனாலதான் பணத்தைக் காட்டியாவது வாயை அடைக்கலாம்னு...' என்று இழுத்தார்.

'தேவையில்லை. நீங்க அவங்ககிட்ட எதுக்குப் போயி இதையெல்லாம் சொல்றீங்க. வெளிப் பார்வைக்கு எந்த வித்தியாசமும் இருக்கப் போறதில்லை. பிரச்சினை

என்னன்னா, எச்.ஐ.வி.ங்கற வைரஸ் இவர் உடம்பில நுழைஞ்சிடுச்சு. அது நுழையக் கூடிய வழிகள் நிறைய இருக்கு. அதுல ஒண்ணுதான் செக்ஸ். இவனுக்கு ஒரு ஆக்ஸிடெண்டில் அடிபட்டு ரத்தம் கொடுத்தப்ப உள்ள நுழைஞ்சிடுச்சு...' என்று ஒரே அடியாக அடித்தான் சந்திரசேகரன்.

யாரும் ஒன்றும் பேசவில்லை. அவனே தொடர்ந்தான்.

'இந்த வைரஸ் என்ன செய்யும்னா நம்ம உடம்பிலிருக்கிற இரத்தத்தில் இருக்கிற வெள்ளணுக்களைக் கொஞ்சம் கொஞ்சமா அழிக்கும். இந்த வெள்ளணுக்கள்தான் நம் உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தியைக் குடுக்குது. அதுவே, அழிஞ்சதுன்னா... அவங்களுக்கு எந்த நோய் வேண்ணா தாக்கலாம். அதுக்காகப் பயப்படத் தேவையில்லே. சில பேர் பத்துப் பன்னிரண்டு வருஷம் உயிரோட கூட இருக்காங்க. அதோட மட்டுமில்ல. இது தொத்து நோயல்ல. அவங்களை நாம ஒதுக்கி வைக்க வேண்டியதில்லே. சாதாரணமா அவங்க நம்மோட இருக்கலாம். அப்புறம் ஏன் போய் இதை எல்லார்கிட்டயும் சொல்லிக்கணும்?' என்றான்.

'அது கரெக்ட்தான்... ஆனா...'

'என்னங்க கண்ணப்பன். உங்க மாமனாரே இதைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டுத் தெளிவாயிட்டாரு!' என்று சிரித்தான் சந்திரசேகரன்.

ஸ்ரீராம் தொடர்ந்தான். 'நீங்க நெனக்கற மாதிரி என் பணம் எதையும் இவங்க வாங்கிக்கறதில்லை. அவங்கதான் எனக்கு ஹெல்ப் பண்றாங்க.. ராகவன் அவரோட இடத்தை எனக்குப் பாதிவிலைக்குக் குடுக்கறாரு. பக்கத்து இடத்தையும் சகாயமாப் பேசி முடிச்சுக் குடுத்திருக்காரு!' என்றான்.

ராமலிங்கமும், கண்ணப்பனும் மீண்டும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஸ்ரீராம் மறுபடியும் தொடர்ந்தான்.



'மச்சான்... நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டியதில்லை. அப்பாகிட்ட கூட இப்பவே சொத்தையெல்லாம் பிரிச்சுக் குடுத்திருங்கன்னுதான் சொன்னேன். அவரு நாலு பங்காப் பிரிச்சு வச்சிருக்காரு. ஒரு பங்கு அவங்களுக்கு, ஒன்று எனக்கு. மீதி ரெண்டு பங்கு உங்களுக்காம். என்ன? முதல்ல எனக்கப்புறம்தான் எல்லாருக்கும்னு சொல்லுவாரு. ஆனா நான் இப்ப முன்னாடி போயிடுவேங்கறதால எனக்கு மட்டும் முன்னதா குடுக்கற பங்கைக் குடுக்கறாரு!' என்றான் புன்னகையோடு.

எல்லாரும் ஒரு நிமிடம் கண்கலங்கினார்கள். கண்ணப்பனுக்கும், இராமலிங்கத்துக்கும் வந்தபோது இருந்த கோபம் அடங்கியிருந்தது. ஸ்ரீராம் மேல் இரக்கம் மேலிட்டது. இராமலிங்கம் சொன்னான்.

'உங்க தங்கை மேலே கோபம் வேண்டாம். நான் அவளைப் படுத்தின பாட்டிலே உங்களுக்கென்ன, சொத்துதானே வேணும் எங்க அண்ணனுடைய சொத்தையும் சேத்து வாங்கித் தர்றேன்னுட்டு வெறுப்பாத்தான் அப்படி வந்து கேட்டுட்டா!' என்றான்.

அதற்குப் பிறகு, ராகவன், உஷா, சந்திரசேகரன், நித்திலா எல்லாரும் விளக்கமாகப் பேசியதில் அவர்கள் தெளிவானார்கள். கலகலப்பானார்கள்.

'சரீ... மச்சான். உங்க மனசுக்கு எப்படிப் பிடித்தமோ அப்படி இருங்க!' என்றார்கள்.

அப்போது ராகவன், 'அது சரி... வந்தது வந்தீங்க. ஸ்ரீராம் கல்யாணத்துக்கு இருந்துட்டுப் போங்க!' என்றான் சிரித்தபடி.

'வாட்?' என்றார்கள்.

'ஆமா...நாளைக்கு காலையில மருதமலையில கல்யாணம்!' என்றான் சந்திரசேகரன்.

வியப்பில் கண் மலர்ந்து நின்றார்கள்.



## 21

கவிதா பார்க்க அழகாக இருந்தாள். கிராமத்து எளிமையும், யதார்த்தமும் உள்ளவளாக இருந்தாள்.

ஸ்ரீராம் கடந்த ஒரு வருடத்தில் மதுரையில் இருந்தபோது நண்பன் சுப்பிரமணியன் கிராமத்துக்கு அடிக்கடி போவான். அழகான சிறிய கிராமம். உடுமலைப் பேட்டைப் பக்கம் இருந்தது. போனால் ஒரிரு நாள் தங்கிவிட்டு வருவான். அவனும் ஒரு கம்பெனியில் சேல்ஸ் ரெப்ரஸன்டேடிவ் ஆக இருந்தான்.

வெளியூருக்குச் செல்வதாய் இருந்தால் தெரிவித்து விடுவான். இவன் போக மாட்டான். கிராமத்து வீடு பெரிய வீடு. ஸ்ரீராமும் அவனும் முன்னால் கூடத்துக்கு அருகில் இருக்கிற அறையில் தங்கிக் கொள்வார்கள்.

சந்திரசேகரன் அடிக்கடி சொல்வது போல் ஸ்ரீராம் நைச்சியமான தன்னுடைய பேச்சால் எல்லாரையும் கவர்ந்து விட்டான். கவிதா கிராமத்து வழக்கம் போல் அதிகம் அவன் முன்னால் வர மாட்டாள்.

அவனும் அவளைக் கவனித்துப் பார்த்ததில்லை. அந்த ஊர் ஆற்றங்கரை அவனுக்குப் பிடித்தம். நண்பகலில் அங்கே போய் விடுவார்கள். வீட்டில் இருக்கமாட்டார்கள். ஆற்றுக்குப் பக்கத்திலும் அவர்களுக்கு ஒரு வீடு இருந்தது. அங்கேயும் தங்கிக் கொள்வார்கள்.

அந்த வெள்ளிக் கிழமை மணி தகவல் எதுவும் தெரிவிக்காமல் விட்டு விட்டான். அதனால் ஊரில் இருப்பான்



என்று நினைத்து இவனும் போய்விட்டான். இவன் போய்ச் சேரும்போதே மணி பதினொன்று ஆகிவிட்டது.

அன்றைக்கு அவர்கள் வீட்டில் கவிதா மட்டும்தான் இருந்தாள். அவர்கள் பெற்றோர்கள் அன்றைக்கு ஏதோ கல்யாணத்துக்குப் போயிருந்தார்கள். மணியும் இருக்கவில்லை. உறவுக்காரக் கிழவி ஒருத்திதான் கவிதாவுக்குத் துணையாக இருந்தாள்.

அந்த அம்மாவைப் பார்த்தவுடன் ஸ்ரீராமுக்குச் சிரிப்புத் தான் வந்தது. கண்ணும் தெரியாமல் அரைக் குருடாய்... அரைச் செவிடாய். இந்தக் கிழவி என்ன பாதுகாப்புக் கொடுக்கும் என்று எண்ணிக் கொண்டான்.

'சரிம்மா... நான் புறப்படறேன்.' என்று கிளம்பினான்.

'வேண்டாங்க... இந்நேரத்தில் போக வேண்டாம். காலையில போங்க!' என்றாள்.

டிஃபன் கொடுத்தாள்.

வழக்கம் போல் முன்னறையில் தங்கிக் கொண்டான்.

மணி ரெண்டு மணி. தண்ணீர்த் தாகம் எடுத்தது என்று பின்னால் போனான். கவிதா தண்ணீர் கொடுத்தாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லையென்று கூடத்தில் சத்தமில்லாமல் டி.வியைப் போட்டுக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாள் போலும்.

இவன் போய்த் தண்ணீர் கேட்டவுடன் கொண்டு வந்து கொடுத்தாள். ஸ்ரீராமின் வழக்கமான வக்கிரம் விழித்துக் கொண்டது. படத்தைப் பார்த்தான். ஏதோ காதல் படம். 'நானும் பார்க்கட்டுமா?' என்று கூட ஒரு சேரில் உட்கார்ந்தான்.

அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

சற்று நேரத்தில் படம் முடிந்தது. என்றாலும் நள்ளிரவுப் படம் என்பதால் காட்சிகள் சற்று அதீதமாகவே இருந்தன. நல்ல பிள்ளை போல் திரும்ப அறைக்கு வந்து விட்டான்.

தனியாக ஒரு ஆண்மகனுடன் அப்படி ஒரு படம் பார்க்க நேர்ந்த கவிதா கண்டிப்பாக டிஸ்டர்ப் ஆகியிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும். இரை தேடும் புலி போல் காத்துக் கொண்டிருந்தான். எட்டிப் பார்த்தான். அவள் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

மீண்டும் போய்க் கொஞ்சம் தண்ணீர் வேண்டுமென்று கேட்டான்.

அவள் கொண்டு வருவதற்குள் அறைக்கு வந்து விட்டான். என்ன செய்வதென்று தெரியாமல் அவன் அறைக்கே கொண்டு வந்தாள்.

'சே... அப்படி படம் பார்த்திருக்கக் கூடாது. அதுவும் உன்னைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு!' என்று கிளுகிளுப்பாய்ச் சிரித்தான்.

அவள் திகைத்துப் பார்க்க, அவன் அவளைத் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தான்.

எல்லாம் முடிந்த பிறகு கலக்கத்திலே போகிற அவளைப் பார்த்து, 'பயப்படாதே! நான் உன்னைக் கல்யாணம் செய்துக் கறேன். அதுவரைக்கும் யார்கிட்டயும் சொல்லாதே!' என்றான்.

அந்தக் கிராமத்துப் பெண் அதை முழுமையாக நம்பினாள். நெருங்கிய தோழி ஒருத்தியிடம் மட்டும் சொன்னாள்.

'சித்த சும்மார்றி... கவிதா. என்கிட்ட சொன்ன மாதிரி யாரு கிட்டயும் சொல்லிப் போடாதே. உங்க அப்பன் அம்மா வுக்குத் தெரிஞ்சது உசிரையே விட்டுப் போடுவாங்க. டவுனுக் காரன்களை நம்ப முடியாதுடி. வந்தாத்தான் நிஜம்!' என்றாள்.

அவள் சொன்ன மாதிரியே ஆகிப் போனது. ஆனால், அவர்கள் எதிர்பாராததும் ஒன்று நடந்தது.

அந்த ஊரில் ஒருநாள் ஒரு எயிட்ஸ் விழிப்புணர்வு முகாம் நடந்தது. அதில் எல்லாருக்கும் இலவசமாக இரத்தப் பரி



சோதனை செய்தார்கள். அவங்களுக்கு உணவுபரிமாற, உதவி செய்ய என்று போன கவிதாவும், அவள் தோழியும் விளை யாட்டாக இரத்தப் பரிசோதனை செய்து கொண்டார்கள்.

இரண்டு நாள் கழித்து அந்த சேவை மையத்திலிருந்து ஒரு பெண் வந்து கவிதாவை அழைத்து விஷயத்தைச் சொன்ன போது கவிதா கதிகலங்கிப் போனாள்.

இந்த நோய் வரக்கூடிய வழிகளைப் பற்றி விவரமாக அந்தப் பெண்ணிடமே கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

ஸ்ரீராம் தான் இந்தச் சொத்தைத் தனக்குத் தானம் செய்திருக் கிறான் என்று புரிந்த போது எல்லையில்லாத ஆத்திரம் பொங்கியது.

அவனை உண்டு இல்லை என்று செய்துவிட வேண்டும் என்று தற்கொலை செய்து கொள்கிறேன் என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

அவன் வீட்டுக்குப் போனாள். கோயமுத்தூரில் இருப்ப தாக வேலையாட்கள் சொன்னார்கள். விலாசம் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தே விட்டாள்.

'எனக்கு வழி சொல்லு!' என்று நின்றாள்.

ஸ்ரீராம் செய்வதறியாது விழித்தான். 'எவ்வளவு பெரிய கொடுமை செய்துவிட்டோம்!' என்று கதறி அழுதான்.

அவன் அழுகை பார்த்து அவள் கொஞ்சம் மனம் தெளிந் தாள்.

'சரி... ஆனது ஆச்சு. நான் உங்களையே கல்யாணம் செய்துக்கறேன். உங்களுக்கே ஆக்கிப் போட்டு, புள்ளை பெத்து ஓ! அது வேற அந்தப் பாவம் எதுக்கு?' என்று விரக்தியாகச் சிரித்தாள்.

மீண்டும் ராகவன், சந்திரசேகரன், ஸ்ரீராம் என்று கூடிப் பேசினார்கள்.

சந்திரசேகரன் அவன் தந்தையிடம் போய்ப் பேசினான். டாக்டரிடம் கலந்தாலோசித்தார்கள். முடிவு செய்தார்கள்.

அந்த நேரம் ஸ்ரீராமின் அப்பா ராகவனிடம், 'அப்பா, நான் இதைப் பேசக்கூடாது... விதி இப்படியாயிப் போச்சு. இது மாதிரி வேற யாருக்காவது இவனால...' என்று நிறுத்தினார்.

ராகவன் கேட்டபோது, மீண்டும் ஸ்ரீராம் அவமான உணர்வுடன் நின்றான். பிறகு, 'இல்ல... கவிதாதான் கல்யாணமாகாத பொண்ணு. மத்தவங்க நாந்தான் சொன்னேனே, ஒரு ரெண்டு மூணு தரம்தான் தப்பு நடந்துச்சு. அதில இது ஒண்ணு. மத்தவங்க ரெண்டு பேரும் இந்தத் தொழில்தான்!' என்றான்.

அப்போது சேகரன், 'டேய் ஸ்ரீராம்! வெட்கம் பார்க்காம அவங்க யாருன்னு சொல்லிப் போடறா. அவங்களால இது யார் யாருக்குப் போய்ச் சேர்ந்திருக்குமோ, இனியாவது அதைத் தடுக்கலாம்,' என்றான்.

மதுரையில் இரண்டு இடம் சொன்னான். உடனடியாக டாக்டர்களிடம் சொல்லி மதுரையில் உள்ள ஒரு சேவை அமைப்புக்குத் தகவல் கொடுத்து ஒரு புண்ணியம் தேடிக் கொண்டார்கள்.

பிறகு கல்யாண ஏற்பாடுகளை இரண்டே நாளில் செய்தார்கள்.

கவிதாவின் கழுத்தில் தாலி கட்டி முடித்தான் ஸ்ரீராம்.

கவிதாவுக்குச் சகோதரனாக ராகவனே நின்று எல்லாம் செய்தான்.

அன்றிரவு ஸ்ரீராம் தன் மனைவியிடம் தனது தவறுகள் எல்லாவற்றையும் சொன்னான்.

கவிதா பொறுமையாகக் கேட்டுக் கொண்டு, 'அதுக்குத் தான் கடவுள் தண்டனை குடுத்துப் போட்டானே!' என்றாள்.

'உனக்கும்... சேர்த்தில்ல... கொடுத்துட்டான்!' என்றான் ஸ்ரீராம் வருத்தத்துடன்.



'எனக்குச் செஞ்சதைவிடப் பெரிய கொடுமை அந்தநித்திலாவுக்குச் செஞ்சு போட்டீங்க. நடக்காத ஒண்ணு நடந்தாச் சொல்லி... அந்த உறுத்தல் அந்த அக்காவுக்கு இந்தமாதிரி நேரத்துல ஞாபகம் வந்தா. அவங்க குடும்ப வாழ்க்கை என்ன ஆகும்?' என்றாள்.

ஸ்ரீராம் அதிர்ந்து போனான்.

'ஆனா... உங்களுக்கும் ஒரு கல்யாணம் ஆயிருச்சுங்க. அப்படியே எதாவது சங்கடம் இருந்தாலும் தெளிஞ்சுடுங்க!' என்றாள். பிறகு, 'சரிங்க. இருக்கற வரைக்கும் சந்தோஷமா இருப்போம். சாகும்போதும் சந்தோஷமா சாவோம்!' என்று அவன் மார்பில் ஒண்டிக் கொண்டாள்.

'முதலிரவுலே யாராவது இப்படி சாவைப் பத்தி பேசுவாங்களா, கவி?' என்றான்.

'ஏன்னு சொல்லுங்க?' என்றாள் அவள்.

'ஏன்?' என்றான்.

'ஏன்னா நாம் இதையே முறையா முதலிரவா வச்சுக்கலே. அதனாலதான்...' என்றாள்.

அவள் சொல்வதின் உண்மை தாக்கச் சிந்தனையிலாழ்ந்தான்.



## 22

நிலவு பால் போல் பொழிந்து கொண்டிருந்தது.

நித்திலா தங்கள் அறையின் பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். சந்திரசேகரன் வந்து விட்டான். 'இரு நித்தி... குளித்து விட்டு வருகிறேன்,' என்று போயிருந்தான்.

பிறகு குழந்தையை எடுத்துக் கொண்டு சற்று தூரம் காலார நடந்தார்கள். திரும்பி வந்து, சற்று நேரத்திலேயே ரவி உறங்கிவிட்டான். ரவியைத் தூளியில் கிடத்திவிட்டுச் சற்றே வெட்கம் நிறைந்த முகத்துடன் தன்னை நோக்கி வருகிற மனைவியை ஆழப் பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரசேகரன்.

'நான் தாய்... உன்னை மன்னிக்கிறேன்!' என்று அவள் கம்பீரமாகச் சென்ற வாரத்தில் ஸ்ரீராம் முன்னால் நின்றது நினைவுக்கு வந்தது. பெருமிதத்துடன் புன்னகைத்துக் கொண்டான்.

திடீரென்று நிகழ்ந்த தங்கள் திருமணத்தில் உறவே முழுமையாகப் புரியாமல் இருந்த கணங்களில் கூட அவளுக்குத் தன் முகம்தானே மனதில் படிந்திருந்தது. தன்னைத்தான் மாப்பிள்ளை என்று நினைத்துக் கொண்டாள் என்பதெல்லாம் இப்பொழுது நினைத்தாலும் வியப்பாக இருந்தது.

எவ்வளவு வசதியான பெண். தனது மத்தியதரக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு, அதை இயல்பாய் ஏற்றுக் கொண்டு தனது தங்கைகளோடு ஒத்துப் போய்க் குடும்பத்தையே நிமிர்த்தி...

அவன் மனம் நெகிழ்ந்தது. துன்பமே தெரியாமல் வளர்ந்தவளை ஸ்ரீராமின் வார்த்தைகள் எவ்வளவு தாக்கியிருக்க வேண்டும் என்று நினைத்த போது வருத்தமும் பொங்கியது.

ஆனால், அந்தக் கணங்கள் எல்லாம் இனிமேல் நினைக்கவும் தகாத கணங்கள். இப்போது... நிகழ்காலம். இனி நினைக்க வேண்டியது எதிர்காலம்தான்.

கட்டிலில் அமர்ந்திருந்த அவன் எழுந்து அவளை அணைத்துக் கொண்டான்.

'ஹேய் நித்தி...' என்று கன்னத்தில் கன்னம் இழைத்துக் கொஞ்சினான். அவள் வெட்கம் ததும்ப இழைந்து கொடுத்தாள்.



'ஹேய்... இன்னைக்கு ஏதாவது கலாட்டா பண்ணீராதே. நம்மால தாங்க முடியாதுப்பா!' என்று அவன் சிரிக்க, அவள் சிந்தனையுடன் சற்றே விலகி அவன் முகம் பார்த்தாள். பிறகு அவன் மார்பில் முகம் பதித்துச் சிரித்தாள்.

அவன் கிறக்கமாய் அவளைப் பார்த்தான். 'லொள்ளுதான் கறுப்ஸுக்கு!' என்று அவளும் அடிக் குரலில் சிரித்தாள்.

'நீங்கதானே ஏதோ மனசிலே வச்சுகிட்டு அன்னைக்கு வேண்டாம்னீங்க!' என்றாள்.

அவன் அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டு கட்டிலில் கால் நீட்டி அமர்ந்து கொண்டான்.

'ஆமா... நித்தி... நீ ஒரு முறையாவது ஸ்ரீராமைச் சந்திக்கணும். உன் மனக் கலக்கத்தை கிளியர் செய்துக்கணும்னு நினைச்சேன்,' என்றான்.

'ஓ...!' என்றாள். 'அதுதான் அன்னைக்கு நீ மற்றும் நான்'னு சொன்னீங்களா?

'ஆமா, ஒரு கணவனும், மனைவியும் தனியாய் இருக்கும் போது, வேறு ஒருத்தரின் நினைவு இடையிலே - நல்லதோ, கெட்டதோ - வரக்கூடாது. நித்தி! அதனாலதான் நீ ஸ்ரீராமைப் பாக்கணும்னு நெனச்சேன்.'

அவள் ஒரு நிமிடம் மவுனமாக இருந்தாள். பிறகு, 'சந்துரு! எனக்கு அவரைப் பாக்கிற வரைக்கும் ரொம்ப வருத்தமா கலக்கமா, ஏன் அருவருப்பாகக் கூட இருந்தது. ஆனா, ஹெல்ப்லெஸ்ஸா... பாவமா... என்னைப் பாத்தவுடனே எல்லாமே மறந்து போச்சு. மாறிப் போச்சு. தெரியுமா?' ஸ்ரீராமும் பாவம்தான்!' என்றாள்.

'ஆமாம்டி... எல்லாரும் பாவம். நான் மட்டும்தான் பாவம் இல்லை!' என்று அவன் சிரிக்க.

'என்ன மரியாதை குறையுது?' என்றாள் பொய்க் கோபத்துடன்.

'மரியாதைக்கு இங்கு என்ன வேலை, கண்ணம்மா...' என்று அவன் மீண்டும் சிரித்தான்.

மெல்லக் குனிந்து அவன் முகத்தில் முத்திரைகள் பதித்த வண்ணம். 'நீயும்தான் பயங்கரமான ஆளு. கல்யாணத்துக்கு முன்னயே என் முகம்தான் வந்து வந்து போச்சன்னு விமலா வுக்குச் சொல்லியிருக்கே. ராகவனுக்குச் சொல்லியிருக்கே. எனக்கு மட்டும் சொல்லலே!' என்றான்.

'சொன்னா... வம்பாச்சே!' என்றாள் அவள்.

'நித்தி...நிஜம்மாச் சொல்லு. இவர் கறுப்பாச்சேன்னு உனக்குத் தோணினதே இல்லையா?' என்றான் சந்திரசேகரன்.

அவள் சீரியஸாகச் சொன்னாள். 'எனக்குத் தோணவே இல்லை, சந்துரு. ஏன் உங்களை எனக்குப் பிடிச்சப் போச் சுன்னு தெரியலை. ஆனா, பிடிச்சிருக்கு. அவ்வளவுதான்!' என்றாள் நித்திலா.

'ஆமா... நித்தி.. உஷா கூட கொஞ்சம் மாநிறம்தான். ஆனா, ராகவன் அவகிட்டே உருகி வழியறதைப் பார்த்தா ரொம்ப ஆச்சரியமாய் இருக்கு!' என்றான்.

அவள் அவன் சட்டைக் காலரைத் திருகிக் கொண்டே, 'ராகவ் அண்ணா சொல்றாரு. உங்க ரெண்டு பேருக்கும் மனசு ரொம்ப அழகாம். அதனாலதான் எல்லாருக்கும் உங்களைப் பிடிக்குதாம்...' என்றாள்.

'எல்லாரையும் விடு. உனக்குப் பிடிச்சதே, அதைச் சொல்லு...'என்றான்.

'அதானே எனக்கு ஏன் பிடிச்சது?' என்று குறும்பாக அவள் முகம் பார்க்க, அவன் குலுங்கிச் சிரித்தான். இப்போது அவன் சொன்னான்.

'நித்தி...நீயும் ரொம்ப நல்லவள்தாள்! உன்னோட அழகு, பணவசதி இதெல்லாம் ஒரு கர்வத்தைக் கொடுக்கக் கூடிய விஷயங்கள். ஆனா நீ அப்படி எதுவும் இல்லாமல் நடந்துக் கறே. சுபர்ப் கர்ல்!' என்று கொஞ்சி மகிழ்ந்தான்.



'நித்தி... அன்னைக்கு மாமாவும் அத்தையும் சொல்றாங்க. வீட்டுல விளையாட்டுப் பிள்ளையா இருந்தா. துரும்பு அசைக்க மாட்டா. ஆனா, எல்லாம் தெரிஞ்சு வச்சிருப்பா. செல்லமா வளர்ந்தவ. அப்படிப்பட்டவ இப்ப என்னமோ உஷா, நிஷா, மாமா, அத்தைன்னு இவங்களைப் பத்தித்தான் எப்பப் பாரு பேசறான்னு அப்படி ஆச்சரியப்பட்டாங்க!' என்றான்.

'ஆமா... சந்துரு. ஒரு நடுத்தரக் குடும்பத்துக்கு ஒரு வீடு கட்டி முடிக்கறது எவ்வளவு பெரிய விஷயம். அதுக்காக எவ்வளவு தியாகங்கள் செய்யறாங்கன்னு அத்தை விவரமா சொன்னப்ப நான் ரொம்ப மூவ் ஆயிட்டேன்.'

அவன் மௌனமாக அவள் இரு தோள்களையும் தன் இரு கைகளாலும் தடவியபடி கேட்டுக் கொண்டிருந்தான். 'நீங் களும் கூட உங்க வயசுக்கேயுள்ள சந்தோஷங்களையெல்லாம் குடும்பத்துக்காக எவ்வளவு விட்டுக் குடுத்துருக்கீங்க!' என்றாள்.

'அதெல்லாம்... பழைய கதை நித்தி. இனிமே எந்தச் சந்தோஷத்தையும் விட்டு வைக்கறதா இல்லை!' என்றான்.

'தட்ஸ் குட்!' என்று அவனைப் போலவே சொல்லிச் சிரித்தாள். 'ஏய்'என்று அவன் வேகமாக அணைத்து அடக்கிக் கொண்டான்.

'எவ்வளவு நாளாச்சு நித்தி இப்படி...' என்று உருகிக் கொண்டான்.

'இப்படின்னா எப்படி?'

'இப்படின்னா அப்படித்தான். இதையெல்லாம் சொல்ல முடியுமா...'என்று மீண்டும் அவன் சிரித்தான். பிறகு தீவிர மாக, 'நித்தி... நீங்களும் நம்பினீங்களே'ன்னு கேட்டுட் வேதனையாய்ப் பாத்தயே. அதை நினைச்சு எத்தனை நா தூங்கல தெரியுமா?' என்றான் ஆழ்ந்த வருத்தத்துடன்.

'லெட்ஸ் ஃபர்கெட் சந்துரு!' என்றாள் நித்திலா. ஆனால், பிறகு சொன்னாள். 'ஆனா...உங்க பக்கமும் நியாயம் இருந்தது சந்துரு. ஆனா, எனக்குக் கோபமெல்லாம் விதியின் மேல்தான். எப்படி அப்பா அப்படி ஏமாந்து போனாரு. அதிலும் பணத் துக்காகத்தான் ஸ்ரீராம் என்னைக் கல்யாணம் செய்யணும்னு நினைச்சிருக்கார்ன்னவுடனே தாங்கவே முடியலை..' என்றாள்.

'ஓகே... ஓகே... மறந்துடு!' என்றான். பிறகு அவனே தொடர்ந்து. 'ஆனா ஸ்ரீராமைப் பாத்ததுக்கப்புறமும் கூட ஏன் தயக்கம்?' என்றான்.

'இல்லைங்க. ஸ்ரீராம் என்னை வந்து பார்த்து எல்லா விஷயத்தையும் கிளப்பி விட்டுட்டுப் போனப்ப நான் நொந்து போய், 'அவன் நல்லாயிருக்க மாட்டான்னு சாபம் விட்டேனே. ஞாபகம் இருக்கா? ஒரு வேளை அதனாலதான் அப்படி ஆயிட்டாரோன்னு ஒரு உறுத்தல்!' என்றாள்.

'நித்தி...நீ சாபம் விடறதுக்கு முன்னாடியே அவன் தன் பாவங்களுக்குச் சம்பளம் வாங்கிட்டான் போல இருக்கு. அந்த கவிதாவைப் பாரு. பாவம் இல்ல. என்ன அப்படிக் கண்ட் ரோல் பண்ண முடியாம...' என்று சற்றுக் கோபப்பட்டான். பிறகு அவனே -

'ஆனா நித்தி... இந்த நோய் கேஸ் அது... இதுன்னு போய் நிறையத் தெரிஞ்சுகட்டோம்!' என்றான்.

'இதெல்லாம் ரொம்ப இன்ட்ரஸ்டாத் தெரிஞ்சுப்பீங்களே!' என்று கிண்டல் செய்தாள். அவன்சிரித்தான். பிறகு தொடர்ந்தான்.

'அவங்க கணக்குப்படி இந்த உணர்வு இயற்கைதானாம். பசிக்குச் சாப்பிடறமே அது மாதிரிதான்!' என்றான்.

நித்திலா யோசனையுடன் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

'நீங்க சொல்றது சரிதான். ஆனால் பசிக்குன்னு நாம எதை வேண்ணாலும் சாப்பிடறமா என்ன? நேரம் பாத்து, சரியாச் சமைச்சு, அப்புறம்தானே சாப்பிடறோம்?' என்றாள்.



'ஆமா...நித்தி... நீ சொல்றது ரொம்ப உண்மை. கிடைச்ச இடத்தில எல்லாத்தையும் சாப்பிட்டா. அப்புறம் இந்த ஸ்ரீராம் கதை மாதிரிதான்!' என்றான்.

'.....'

'ஆனா, இப்ப ரொம்ப வருத்தப்படறதைப் பார்த்துத்தான் இவ்வளவும் செய்ய வேண்டியிருக்கு!' என்றான்.

அவள் அவனை முறைத்தாள்.

'என்ன நீங்களே பாடஞ் சொல்லிட்டு நீங்களே மீர்றீங்க!' என்றாள்.

'என்னத்தை மீறினேன்?' என்றான் புரியாமல்.

'நீங்க அன்னைக்கு என்ன சொன்னீங்க. 'நீ மற்றும் நான்'னு. இப்ப என்ன இங்க வந்துட்டு ஸ்ரீராம், கவிதா, உஷா, தோலான் துருத்தின்னுகிட்டு!'' என்று மிரட்டினாள்.

'ஐயோ... தப்புதான்டா சாமி!' என்று அவன் பயந்தவன் போல் நடித்தான். பிறகு நெருக்கமாக இழைந்தான்.

'இது மட்டும் தப்பில்லையாக்கும்!' என்றாள் குறும்பாக.

'இல்லை... நடக்கிற விதத்திலே நடக்க வேண்டியவங் களுக்குள்ளே நடந்தால்... இது தப்பில்லே... இதுக்குப் பேருதான் இல்லறம்!' என்று சிரித்தான்.

'ஆமா... நம்மோட அந்த இல்லறத்துல 'நீ மற்றும் நான்தான்!' என்று அவன் மீண்டும் சிரித்தான்.

அவள் குதூகலமாக அடைக்கலமாகிக் கொண்டாள்.

# எங்கேயும் போகவில்லை




'ரேஷன் கார்டுக்கு முத்திரை வைக்க நாளைக்குக் கடைசி நாள். நானும் ஒரு மாசமா கரடியாக் கத்திக்கிட்டிருக்கேன். நீங்க ஏன்னு கூடக் கேட்க மாட்டேங்கறீங்க!' என்று கத்திக் கொண்டிருந்தாள் சுவேதா.

'நீ மனுஷியாகக் கத்தினாப் புரிஞ்சிருக்கும். கரடியாக் கத்தினா எப்படிப் புரியும்?' என்று நேரங்கெட்ட நேரத்தில் ஜோக்கடித்தான் அவள் கணவன் ராஜேந்திரன்.

'விளையாடாதீங்க. என்ன எப்பப் பாரு விளையாட்டு?'' என்று திரும்பியவள் கைபட்டு ரசம் கூட்டி வைத்திருந்த பாத்திரம் உருண்டு சென்றது. போச்சு, இனி மறுபடியும் ஆதியோடந்தமாக ஆரம்பிக்க வேண்டும். அந்தக் கோபமும் அவளுக்குச் சேர்ந்து கொண்டது.

''உங்களுக்கு எத்தனை சொன்னாலும் புரியாதுங்க. என்னோட கஷ்டத்தைப் புரிஞ்சுக்க இந்த வீட்லே ஆளே இல்லை. சமையலா நானே அழணும். என்ன பொழப்பு இது?'' என்று அவளுள் பொங்கிய கோபம் வார்த்தைகளும், அழுகையுமாய் வெடித்தது.

எரிச்சலாகக் கரண்டியை வீசிவிட்டு ஹாலில் உட்கார்ந்தாள்.



எப்போதும் போலக் காலை நேரப் பரபரப்பு என்று எண்ணிக் கொண்டிருந்த கணவனுக்கு அவள் நிஜமாகவே கோபத்தில் இருக்கிறாள் எனப் புரியவும் ஷேவ் செய்து கொண்டு இருந்தவன் அதை நிறுத்திவிட்டு அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''பாக்காதீங்க... சும்மா, இன்னைக்கு வெறும் சாம்பார்தான். பொரியலும் கிடையாது. ரசமும் கிடையாது!'' என்றாள் வெகு கடுப்பாக.

அவனுக்கும் லேசாகக் கோபம் வந்தது. ''ஆமா... இல்லாட்டா இங்கே தினமும் வகை வகையா செஞ்சு பரிமாறியாக்கும்!'' என்றான்.

''ஏன்.. ஏன்..? நேத்திக்குச் சாயங்காலம் பூரி, மசாலா அப்பாவும், மகளும் வெட்டலே? முந்தா நாள் சாயங்காலம் வெஜிடபிள் பிரியாணி சாப்பிடலே?'' என்று அவள் பொரிந்தாள்.

ராஜேந்திரனுக்கு உள்ளுக்குள் பாவம்! அவள் செய்தாள்தான் என்று தோன்றியது. ஆனால், வீம்பு அதைக் காட்டிக் கொள்ள விடாமல் தடுத்தது. அவன் உடனே தன் பங்குக்கு வேறொரு பாயிண்ட்டைப் பிடித்தான்.

''நேரம் பத்தலே, நேரம் பத்தலேங்கறியே... காலைல உங்கப்பாவை உட்கார்த்தி வைத்து அப்படி ஃபில்டர் காபி போட்டுக் கொடுக்கலைன்னா என்ன? அதுக்கு மட்டும் நேரம் இருக்குதாக்கும்!'' என்றான்.

''அடப் பாவி... மனுஷா!'' என்பது போல் பார்த்து அழுகை வெடிக்கக் கேட்டாள்.

''நாள் முழுக்க.. நாள் முழுக்க ஒரு ரெண்டரை வயசு குழந்தையை வச்சுக்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? கொஞ்சமாவது நன்றியிருக்கா? இப்படிப் பேசறீங்களே? மாமனார் வயசானவர்ன்னு கூட வச்சுப் பாக்காம சொல்றீங்களே?'' என்றாள்.

"என்னத்தை வச்சப் பாக்கறது? அவங்க மட்டும் மருமகன்தானேன்னு வாடகை வாங்காம இருக்காங்களா? சொளையா நம்மகிட்டே இரண்டாயிரம் ரூபா... வாடகை... வாங்கலே. அது மட்டும் நல்லாவா இருக்கு?"

சொல்லி முடித்த பிறகுதான் ராஜேந்திரன் விளையாட்டாக ஆரம்பித்த சண்டை வெகு சீரியஸாக மாறிக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

சுவேதாவும், ராஜேந்திரனும் மாமனாருக்குச் சொந்தமான வீடுகள் ஒன்றில்தான் குடியிருந்தார்கள்.

இரண்டரை வயதில் ஒரு பெண் குழந்தை. ஐஸ்வர்யா என்று பெயர் வைத்திருந்தார்கள்.

கல்யாணமான புதிதில் அவனுடைய அம்மா, அப்பாவுடன்தான் இருந்தார்கள். சுவேதா கொஞ்சம் நல்ல டைப்தான். அரசு வேலையில் இருந்தாள். முதலில் தனியார் கம்பெனியில்தான் இருந்தாள். அதற்குப் பிறகு அரசு வேலை கிடைத்துச் சேர்ந்து விட்டாள்.

திருமணத்திற்குப் பிறகு ஓராண்டுக்குப் பிறகே உண்டானாள். ராஜேந்திரனுக்கு இரண்டு சகோதரிகள். சாந்தா, என்றும் லக்ஷ்மி என்றும். சாந்தா சிறியவள், லக்ஷ்மி பெரியவள். இருவரும் திருமணமாகிப் போய்விட்டார்கள். ஆனால், லக்ஷ்மி ஏதாவது குட்டிக்கலகம் செய்து கொண்டு இருப்பாள். ராஜேந்திரனின் அம்மா, அப்பாவுக்கே அவள் குணம் பிடிக்காது. சுவேதாவையும் அவனையும் தனிக் குடித்தனம் போகச் சொல்லி அவர்களே அனுப்பி வைத்தார்கள்.

அந்த சமயத்தில் டெல்லியில் வேலையாக இருந்த சுவேதாவின் அண்ணன் சந்தோஷ்குமார் வந்திருந்தான்.

"அங்கயும் இங்கயும் போக வேண்டாம்... இங்கயே வந்துடுங்க..." என்றான்.



வந்தார்கள்.

அவர்கள் முதலில் வாடகை வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். ஆனால் சந்தோஷ்குமார் அப்பாவுடைய பென்ஷன் போக இந்த மூன்று வீட்டு வாடகையை வாங்கிக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்திருந்தான் என்பது ராஜேந்திரனுக்குத் தெரியும். அதனால், வாடகை கொடுப்பதுதான் நல்லது என்று வாடகை கொடுத்து விடுவான்.

ஒரு வீட்டுக்கு வாடகையை வீட்டுவரி, மற்ற பராமரிப்புச் செலவுகளுக்கு என்று ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த இரண்டு வீட்டு வாடகையை வைத்துக் கொண்டுதான் சுவேதாவின் தாய் தந்தையர் காலம் ஓட்டிக் கொண்டிருந்தார்கள் என்பதெல்லாம் அவனுக்கும் தெரியும். சந்தோஷ்குமார் தேவையானபோது பணம் அனுப்புவான்.

சே... கோபம்.. வருகிற நேரத்தில் தேடித் தேடி ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்வது இயல்புதான். என்றாலும் இது அளவு மீறிப்போய்விட்டது என்று அவனுக்கே புரிந்தது. ஆனால், பேசியாகி விட்டது. இனி என்ன செய்ய?

அவள் ஆழ்ந்த வருத்தத்துடன் அவனைப் பார்த்தாள்.

"நீங்கதானே... குடுக்கறேன்னீங்க..." என்றாள்.

"ஆமா... எதுக்கு... வயசானவங்க வயத்துல அடிக்கிறீங்கன்னு... நீயே நாளைக்குக் கேட்பே.. அவங்கதானே... வேண்டாம்னு அழுத்தம் திருத்தமாச் சொல்லணும்..." என்றான்.

"இதுக்குக் கணக்குப் பேசறீங்களே? உங்க மகளுக்கு, இங்க இல்லேன்னா வேற எங்கே இந்த மாதிரி ஒரு அட்டென்ஷன் கிடைக்கும்? அதை யோசிச்சிப் பாருங்க..." என்றாள்.

"ஏன்... அவ எனக்கு மட்டும் மக..? உனக்கும்தானே?" என்றான். பிறகு எழுந்தான் பாத்ரூம் கதவை அறைந்து சாத்திக் கொண்டான்.

அவள் அழுது கொண்டே செய்த சாப்பாட்டை டிபன் பாக்ஸ்களில் போட்டு விட்டு, நான் போகிறேன் என்று கூடச் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுப் போய்விட்டாள்.

ராஜேந்திரன் டிரஸ் மாற்றி வெளியே வந்தவன், அவள் போய் விட்டதை அறிந்து கோபத்தின் உச்சிக்கே போய் விட்டான்.

கடியாரத்தைப் பார்த்தான். ஓ.. பஸ்ஸுக்கு நேரமாகி விட்டது. அவளுடைய அலுவலகம் மேட்டுப்பாளையம் ரோட்டிலிருந்து உள்ளே செல்கிற ஒரு கிராமத்தில் இருந்தது.

இந்த பஸ்ஸை விட்டால்.. அடுத்து ஒரு மணி நேரம் கழித்துத்தான் பஸ். ஒரு ஸ்கூட்டி வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

வீடு ஒன்று சொந்தமாகக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று வெறியில் இருந்தான். அதனால் வெகு சிக்கனம் பார்ப்பான்.

ஸ்கூட்டியும்... கிடையாது. மண்ணாங்கட்டியும் கிடையாது என்று லகான் போட்டு வைத்து விட்டான்.

டேபிளில் தட்டு வைத்து, பக்கத்தில் டிபன் பாக்ஸில் இட்லிகள் வைத்திருந்தாள். அள்ளிப் போட்டுக் கொண்டு ரேஷன் கார்டைத் தேடினான். கிடைக்கவில்லை. சனியன்.. இது.. வேற என்று சலித்துக் கொண்டான். சரி, நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று புறப்பட்டான்.

பைக்கை உதைத்தான்.

சே.. என்னடா.. வாழ்க்கை.. இது என்று கோபம் கோபமாக வந்தது.

* * *

**வ**ண்டி பழகிய பாதையில் ஓடிக் கொண்டிருந்தது. கைகள் அனிச்சையாக இயங்கிக் கொண்டிருந்தன.



அவளுக்கும் எப்போது பார்த்தாலும் வேலை. நமக்கும் எப்போது பார்த்தாலும் வேலை. செவன் இயர்ஸ் இட்ச் என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அது போல ஒரு சலிப்பு ஆரம்பித்து விட்டதா என்ன?

அந்தக் காதல், அன்பு, கொஞ்சல், கெஞ்சல் எல்லாம் எங்கே போனது?

அலுவலகத்திலும் சோர்ந்து போய் அமர்ந்து கொண் டிருந்தான். பக்கத்து சீட்டு சுப்பிரமணி வந்து, "என்னப்பா... ராஜேந்திரா... வீட்ல சண்டையா?" என்றான்.

'ஆமாப்பா...' என்றான் இவன் பெருமூச்சுடன். நடந்ததைச் சொன்னான். அவன் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு அவன் பங்குக்கு ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

"வேண்டாம்ப்பா.. பேசாம சரண்டராயிடு. குழந்தை வளர்க்கறதுங்கறது பெரிய விஷயம். ரெண்டு பெரியவங்க இருக்கறதுனால தப்பிச்சே. ஒரே ஒரு நாள் அவங்கெல்லாம் ஊருக்குப் போனப்ப குழந்தையை வச்சுக்க முடியாம நீ பட்ட அவஸ்தையைச் சொன்னாயே.. ஞாபகமிருக்கா... நாங்க வேலையாளுங்களை வச்சு வளர்க்கறதுக்குள்ள பட்ட பாடு இருக்கே... வேண்டாம்டா... சாமி.. நினைக்கவே கஷ்டமா இருக்கு..." என்றவன் மேனேஜர் அழைக்கவும் எழுந்து போனான்.

ஒரேயொரு நாள்... காலையிலிருந்து குழந்தை ஐஸ்வர்யாவைச் சமாளிப்பதற்குள் உன்பாடு என்பாடு என்றாகி விட்டது.

பால் காய்ச்சத் தெரியாமல், ஈரத்துணி மாற்றத் தெரியாமல், தலைவாரி விடத் தெரியாமல் திண்டாடித் திகைத்துப் போனான்.

பக்கத்து வீட்டு அக்கா வந்து கொஞ்சம் உதவி செய்ததால் தப்பித்தான். அதற்குப் பிறகு தானே கொஞ்சம் சமையல் கற்றுக் கொண்டான்.

'ஆமடா... சாமி... குழந்தை வளர்க்கறதுங்கறது பெரிய கஷ்டம்தான். பேசாம சரண்டராகி விட வேண்டியதுதான்!' என்று எண்ணிக் கொண்டு போனான்.

ஆனால், கதை அவன் நினைத்ததற்கு நேர் மாறாகிப் போனது.

* * *

'ஹலோ.. மேடம்!' என்று விசிலடித்துக் கொண்டு உள்ளே வந்த ராஜேந்திரனை கவேதா திரும்பியும் பார்க்கவில்லை.

இன்னும் கோபத்தில் இருக்கிறாள் என்று புரிந்து கொண்டான்.

''ஹேய்... சாரி. காலைல ஏதோ டென்ஷனில் பேசிட்டேன்!'' என்றான்.

அவள் முறைத்தாள். ''டென்ஷன்னா.. என்ன வேணா... பேசிடலாமா?'' என்றாள்.

அவன் பதில் பேசவில்லை.

''கேவலம் காபி குடிக்கறதுக்கு வழியில்லாம எங்கப்பா இங்க வர்றாருன்னு நெனைச்சீங்களா? நான் போடற காபி அவருக்குப் பிடிக்கும். அதுக்காக ஆசையா வர்றாரு. எவ்வளவு கேவலமாகப் பேசிட்டீங்க!'' என்றாள்.

''ஐ' ம் சாரி...'' என்றான் உண்மையான வருத்தத்துடன்.

அதற்குப் பிறகு அவள் ஒன்றும் பேச வில்லை. என்றாலும் உள்ளே கனன்று கொண்டுதான் இருந்தது.

அவனும் அதற்குப் பிறகு அவள் போக்கில் விட்டு விட்டான். மாமனார் வீட்டுக்கு அவனே போய்க் குழந்தையை எடுத்து வந்தான்.

குழந்தையைக் கொஞ்சிக் கொண்டு, விளையாடிக் கொண்டு நேரம் போக்கினான்.

''என்னடா... கண்ணம்மா... சாப்பிட்டே?'' என்றான்.



''ப்பா... மத்தியானம் பருப்பும் நெய்யும் பிசைஞ்சு பாட்டி ஊட்டி விட்டாங்க. இப்ப... பால் பாயசம் கேட்டேனா. பாட்டி வெச்சுத் தந்தாங்க!'' என்றாள்.

''பாட்டியைத் தொந்தரவு பண்ணக் கூடாதும்மா...!'' என்றான்.

''இல்லயே... என் ராஜாத்திக்கு இல்லாத பால் பாயசமா? இப்பவே வச்சுத் தரேன்னு வச்சுத் தந்தாங்களே!'' என்றாள்.

ராஜேந்திரனுக்குச் சுருக்கென்றது. மனைவியை லேசாகக் குற்ற மனப்பான்மையுடன் திரும்பிப் பார்த்தான்.

அவள் குறுகுறுவென்று, 'பார்த்திங்களா?' என்பது போல் பார்ப்பதைக் கண்டவுடன் வெடுக்கென்று முகம் திரும்பிக் கொண்டான்.

இப்பவும் கிடைத்த அர்ச்சனை யெல்லாம் மௌனமாக வாங்கிக் கொண்டான். கடைசியாக, ''ஆயிரக் கணக்கில் சம்பளம் கொடுத்தாலும் இப்படிப் பாசம் கிடைக்குமா? சட்டுன்னு பேசிட்டீங்க!'' என்று அவள் கண்களில் கண்ணீர் வரவும் அவன் திகைத்து விட்டான்.

''ஹேய்! நான்தான் சாரின்னு சொல்லிட்டேனே. பேசினதுக்கப்புறம் நானே ரொம்ப ஃபீல் பண்ணிட்டேன். நீ வேற குத்திக் குத்திக் காட்டாதே...'' என்று வருத்தத்துடன் தேற்றினான்.

அதற்குப் பிறகுதான் அமைதியானாள். ஆனால் வீம்பாக விலகியே இருந்தாள். அவனும் கோபம் ஆறட்டும் என்று ஒதுங்கியே இருந்தான்.

## 2

இரண்டு நாட்கள் அமைதியாகக் கழிந்தன. வேலைகள் பாட்டுக்கு நடந்தன. மறுநாள் மாலையில்தான் சற்று சுமுகமாகப் பேச ஆரம்பித்தாள் கவேதா.

இரண்டு பேரும் சற்று ஓய்வாக அமர்ந்து தேநீர் அருந்தினார்கள். அதற்குப் பிறகு அவளுக்கு வேலை ஆரம்பித்து விடும். இரவு டிபன், மறுநாளுக்குத் தேவையானவற்றை எடுத்து வைப்பது என்று இருவருக்கும் வேலை இருக்கும். பரபரப்பாகி விடுவார்கள்.

திடீரென்று நினைவு வந்தவனாக, "ஏய்.. சுவேதா.. ரேஷன் கார்டு எங்கே... நேத்தே கொண்டு போய் முத்திரை வாங்கிடலாம்னு பார்த்தேன்..." என்றான்.

"வாங்கியாச்சு..." என்றாள் சுவேதா.

"பரவாயில்லையே.. பர்மிஷன் போட்டியா என்ன!"

"பர்மிஷன் கிடைக்கலே. பியூன் பரமசிவம் கிட்டே ஒரு நூறு ரூபாய் குடுத்தேன். போய் வாங்கிட்டு வந்துட்டான்," என்றாள்.

"இதுக்கு... நூறு ரூபாயா? ரெண்டு நாள் பெட்ரோல் செலவுக்கு ஆகியிருக்கும். நானே செஞ்சிருப்பேன் இல்ல. அதுக்குள்ள என்ன அவசரம்?" என்று கோபமானான்.

"என்ன அவசரமா? லாஸ்ட் டேட்ங்க!" என்றாள் அவளும் கடுப்பாக.

"சுவேதா.. உனக்கு என்னைக்குப் பணத்தோட அருமை புரியப் போகுதோ..?" என்றான்.

"இத பாருங்க... எப்பப் பாரு பணம். பணம்னு பறக்கறீங்க. பொண்டாட்டி வேலைக்கும் போகணும், எதுலயும் விட்டுக் குடுக்கக் கூடாதுன்னா நடக்காது... தெரியுங்களா?"

"என்ன.. எப்பப் பாரு இதையே சொல்றே? நீ வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கறேங்கற திமிரா..." என்றான்.

சொல்லி முடித்த பின் அன்றைக்குப் போலவே வருத்தப் பட்டான். ஏன்.. வார்த்தைகள்.. இப்படித் தவறாகவே.. போய்க் கொண்டிருக்கின்றன... என்று.



அவள் எழுந்தாள்.. "வேண்ணா.. என்னோட இரண்டாயிரம் ரூபாயில் கழிச்சுக்கங்க!" என்றாள். குழந்தையைத் தூக்கிக் கொண்டு, "எனக்குத் தலையை வலிக்குது... அம்மா வீட்டிலே போய் ரெஸ்ட்... எடுத்துட்டு வரேன்," என்று போய்விட்டாள்.

* * *

மறுநாளும் அங்கேயே இருந்து கொண்டாள்.

அவனும் போகவில்லை... பெற்றோர்கள் பட்டும் படாமலும் இருந்து கொண்டார்கள். இரண்டே வீடு தள்ளி இருக்கிற அம்மா வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டு அழிச்சாட்டியம் செய்கிற அவளை நினைத்துச் சிரிப்பும், வரும், கோபமும் வரும்.

மாமியார் காலையில் டிபன், ஆபீசுக்குச் சாப்பாடு என்று கொண்டு வந்து கூடையில் வைத்து விட்டுப் போனாள்.

வழக்கம் போல் வண்டியோட்டும் போது சிந்தனையில் ஆழ்ந்தான். சுவேதா திருமணத்துக்கு முன்பு தனியார் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தபோது அலுவலக வேலையாக இவர்கள் அலுவலகத்திற்கு வருவாள். தூரத்து உறவு என்று அவனுக்குத் தெரியும். ஆனால் அதிகம் பழக்கம் இல்லை.

எளிமையாக ஆனால் அழகாக இருப்பாள். அவனிடம் ஓரிரு வார்த்தைகள் பேசுவதுண்டு. அவர்கள் அலுவலகத்தில் விஸ்வநாதன் என்றொரு கிளார்க் இருந்தான். ஆண்கள் மட்டும் தனியாக இருக்கிற நேரங்களில் பெண்களைக் கமெண்ட் அடிப்பான். ஆனால், அலுவலகத்தில் வேலை செய்பவர்களின் உறவினர்கள் என்றால் மட்டும் எதுவும் பேச மாட்டான்.

ஒரு நாள் சுவேதாவைப் பற்றி ஏதோ சொன்னபோது, "விசுவநாதா... சும்மாயிரு... சுவேதா.. நம்ம சொந்தக்காரப் பொண்ணு... முறைப் பொண்ணு வேற..." என்றான்.

விசுவநாதன் கப்சிப்.. அதோடு நிற்காமல் சுவேதாவிடமே போய், "சாரி... மேடம். நீங்க ராஜேந்திரனுக்கு முறைப் பெண்ணாமே. அது தெரியாம... அது தெரியாம.. நான் ஏதோ கமெண்ட் அடிச்சுட்டேன். ராஜேந்திரனுக்குக் கோபம் வந்துதே பார்க்கணும்..." என்று சொல்லிக் கலாட்டாவாகச் சிரிக்க, சுவேதாக்கே ஆச்சரியமாகிப் போனது. இனந் தெரியாத ஒரு மகிழ்ச்சியும் உள்ளத்தில் ஏற்பட்டது.

ராஜேந்திரனிடம் அடுத்த முறை வந்தபோது நன்றி சொன்னாள். விஸ்வநாதன் இப்படிப் போய் சுவேதாவிடமே உளறி வைப்பான் என்று எதிர்பார்க்கவில்லை. சற்றே அசடு வழிந்தபடி -

"இல்லே! அவன் கொஞ்சம் லிமிட் மீறிப் பேசுவான். சொந்தக்காரங்கன்னா அப்படிப் பேச மாட்டான். அதுதான்..." என்றான் புன்னகைத்தபடி.

சற்று வேறு விஷயங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு நகர்ந்து விட்டாள்.

அவள் முகத்தில் புன்னகையுடன் நகர்வதை அவன் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

வேலைகளில் ஆழ்ந்து விட்டான். மற்ற எல்லாமும் மறந்து போனது.

* * *

இரவு வெறுமையாக இருந்தது.

தன் இடுப்பின் மேல் கால் போட்டுக் கொண்டு உறங்குகிற குழந்தை ஐஸ்வர்யாவும் இல்லை. மனைவியும் இன்னும் முறுக்கிக் கொண்டு வரவில்லை.

இரவு ஒன்பது மணியாகி விட்டது. அவனும் போய்ப் பார்க்கவில்லை. அவளே வரட்டும் என்று வீம்பாகப் படுக்கைக்குப் போய் விட்டான். ஆனால் பழைய நினைவுகள் அலை மோதின.



அன்றைக்கு நான்காண்டுகளுக்கு முன்பு.. ஒரு நாள் அவனது அலுவலகத்திற்கு வேலையாக வந்து போனாள் சுவேதா. அழகான ரோஸ் கலரில் அவள் அணிந்திருந்த சுடிதார் அவளுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

தன்னையும் மீறித் தன் பார்வை அவளைத் தொடர்வதை உணர்ந்து உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

வழக்கம் போல் அவள் டேபிளுக்கும் வந்து ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினாள்.

அவள் புறப்படும்போது அவன் எழுந்து அவளோடு சற்று தூரம் சென்றான்.

புறப்படும் நேரம், "சுவேதா! உங்களுக்கு இந்தச் சுடிதார் நல்லா சூட் ஆகுது. யு ஆர் லுக்கிங் பியூட்டி...ஃபுல்!" என்றான்.

அவள் முகம் சிவந்து போனது.

'ஓ! தாங்க்யூ...!' என்றாள். சற்று நேரம் ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்றார்கள்.

பிறகு மௌனமாகத் தலையாட்டி விடைபெற்றுக் கொண்டு போய் விட்டாள்.

அன்றிரவு.

வீட்டில் உணவருந்தும் போது அம்மாவிடம், "ஏம்மா... நம்ம சாந்தாவுக்கு ஏதாவது மாப்பிள்ளை பார்க்கிற ஐடியா.. இருக்கா...?" என்றான்.

அம்மாவும், அப்பாவும் ஒருவரை ஒருவர் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

"ஏப்பா?" என்றாள் அம்மா ரஞ்சிதம்.

'இல்லே... அவளுக்கும் இருபத்திரண்டு வயசு முடிந்தது இல்லே...? சும்மா இருந்தா எப்படி?" என்றான்.

"அது சரி... உனக்கும் இருபத்தேழு ஆரம்பிச்சாச்சு. உனக்கும் பார்க்கணுமில்ல."

ராஜேந்திரன் அம்மாவைத் தீர்க்கமாகப் பார்த்தான்.

''அம்மா... நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே! முதல்ல சாந்தாவுக்கு நல்ல மாப்பிள்ளை பார்க்கலாம். அவ கல்யாணம் முடிஞ்சதுக்கப்புறம் என்னோட விஷயம்... பார்க்கலாம்...'' என்றான்.

ரஞ்சிதத்தின் முகம் மலர்ந்தது. இதுவரை என்னோட கல்யாணம்தானே... பார்க்கலாம் என்று பிடி கொடுக்காமல் நழுவிக் கொண்டிருந்த மகன் இப்போது ஒத்துக் கொள்கிறாற் போல் பேசுகிறானே என்று மகிழ்ச்சியானாள்.

''அது சரிப்பா.. சாந்தா கல்யாணம்னா.. திடீர்னு.. பணம் வேணுமே?'' என்றாள் கவலையாக.

''அப்பா.. உங்களாலே என்னப்பா.. முடியும்?'' என்றான்.

அப்பா கல்யாணசுந்தரம் விழித்தார்.. ''என்கிட்டே என்னப்பா.. இருக்கு... அப்பப்ப அரியர் கிடைச்ச பணத்திலே கொஞ்சம்.. நகை செஞ்சு வச்சிருக்கேன்... ஒரு ஐம்பதாயிரம் சேத்து வச்சிருக்கேன். மீதி போஸ்ட் ஆபீஸ்ல இருக்கிற ஃபிக்ஸட்ல இருந்துதான் எடுக்கணும்,'' என்றார்.

அவர் சொன்னது உண்மைதான். முப்பத்து மூன்று ஆண்டுகள் சர்வீஸ் போட்டுக் கிடைத்த ஓய்வு காலப் பணப் பலனில் பெரும் பகுதியை வைத்துத்தான் பெரிய மகளுக்குக் கல்யாணம் செய்திருந்தார். ஒரு ஒன்றரை லட்சம் ரூபாய் டெபாசிட் செய்திருந்தார். மாதம் நாலாயிரம் பென்ஷன் தொகையில் அவர்கள் இருவருக்கும் மருத்துவச் செலவு போக வீட்டுக்குச் செலவு செய்வார்.

நல்லவேளையாக ராஜேந்திரன் ஐந்து ஆண்டுகளாக நல்ல சம்பளமுள்ள வேலையில் இருந்ததால் குடும்பக் கவலைகளை அவன் பார்த்துக் கொண்டான். இப்போது தங்கையின் திருமணத்திற்கும் அவனிடம் செலவு செய்யச் சொல்லிக் கேட்பதா என்றுதான் மலைத்துப் போயிருந்தார்கள். அந்தப் பேச்செடுக்கவே தயங்கிக் கொண்டிருந்தார்கள்.



ராஜேந்திரன் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு ஆழ்ந்த குரலில் சொன்னான்.

''அப்பா..! உங்க ஃபிக்ஸட் அப்படியே இருக்கட்டும். அதில் எடுக்க வேண்டாம். நாளைக்கு நிலைமை எப்படியோ... எதுக்கும் உங்களுக்குன்னு கொஞ்சம் பணம் இருக்கணும்,'' என்றான்.

அப்போது சமையலறைக் கதவருகில் சாந்தா நின்றாள்.

''அண்ணா! என்கிட்டே கொஞ்சம் பணம் இருக்கு!'' என்றாள்.

ராஜேந்திரனின் முகம் மலர்ந்தது. சிரித்தான். ''உள்ள வாடா. ஏன் அங்கேயே நிக்கறே? அம்மா.. உன் மககிட்டே பணம் இருக்காம். எவ்வளவுன்னு கேளு.'' என்று சிரித்தான். அவன் அருகில் வந்து அமர்ந்தாள். ''முப்பதாயிரம் இருக்கு. அது போகக் கொஞ்சம் நகை சேர்த்திருக்கேன்,'' என்றாள்.

''அப்படிப் போடு...'' என்று மீண்டும் சிரித்தான்.

வீட்டுக்கு அருகிலேயே இருந்த ஒரு நர்சரியில் வேலை பார்த்தாள். மாதம் இரண்டாயிரத்தைந்நூறு சம்பளம் தந்தார்கள். அதில் வீட்டுக்கு ஒரு ஆயிரம் கொடுப்பாள். மீதியைச் சேமித்திருக்கிறாள் போலும்.

அருகில் அமர்ந்திருந்த தங்கையின் தலையை வாஞ்சையாய்த் தடவிக் கொடுத்தான் ராஜேந்திரன்.

''சரிடா... உன் பணத்துக்குப் பூராவும் நகை வாங்கிக்க...'' என்றான்.

அவள் தலையாட்டினாள். பிறகு பெற்றோரைப் பார்த்துச் சொன்னான்.

''ஒன்னும் கவலைப்பட வேண்டாம். அஞ்சு வருஷமா... மாசம் அஞ்சாயிரம் ரெக்கரிங்ல போட்டு வச்சிருக்கேன். கையில வட்டியோட தாராளமா வரும். சாந்தா கல்யாணத்தை நல்ல விதமா மூணு ரூபாயில முடிக்கலாம்..'' என்றான்.

''மூணு ரூபாய்னா...?''

''மூணு இலட்சம்மா...!'' என்றான். எல்லாரும் வாயைப் பிளந்தார்கள்.

''ஆமாம்மா... லக்ஷ்மிக்காவை நல்ல இடத்துல குடுத்திருக்கு. இவளையும் நல்ல இடமாப் பாத்துச் சேத்துட்டோம்னா நிம்மதியாயிரும், இல்லே?'' என்றான்.

மற்ற மூவரும் நெகிழ்ந்து போனார்கள். அவன் அதைக் கவனிக்கவேயில்லை. தொடர்ந்து திட்டம் போட்டான்.

''இப்ப மொத்தமா எவ்வளவு நகை தேறும்?'' என்றான்.

அம்மாவும் மகளும் கணக்குப் போட்டார்கள். முப்பத்தைஞ்சு பவுன் தேறும் என்றார்கள்.

''நல்லதாய்ப் போச்சு ஒரு பதினைந்து பவுன் வாங்கிக்கலாம். ஆனா.. கல்யாணத்துல ஆடம்பரங்களைக் குறைச்சுக்கணும்!'' என்றான் கண்டிப்பான குரலில்.

''சரியப்பா...'' என்றார்கள் அம்மாவும்... அப்பாவும்.. கோரஸாக.

அவன் எழுந்தான். அம்மா நெகிழ்ந்த குரலில் 'தம்பி' என்று அழைத்தாள்.

''என்னம்மா...?'' என்று நின்றான்.

''உன்னை மகனாப் பெத்ததுக்கு இன்னைக்கு என் வயிறு குளிர்ந்துச்சப்பா...'' என்றாள்.

''அடாடா! என்னம்மா, இது என் கடமைதானே.. அப்பா சர்வீஸ்ல இருக்கற வரைக்கும் நீங்க எங்களைப் பாத்துப் பாத்து வளர்க்கலையா?'' என்றான்.

''சரி... சரி. நோ செண்டிமெண்ட்ஸ்!'' என்று அறைக்கு நகர்ந்து விட்டான்.

அவனது அறை வாசலில் நிழலாடவும் திரும்பிப் பார்த்தான். தங்கை நின்று கொண்டிருந்தாள்.



''உள்ள வா.. என்றான். ''என்ன, நீ உன் பங்குக்கு.. செண்டிமெண்ட்டா?'' என்று புன்னகைத்தான்.

''அண்ணா! நீ சிக்கனமாயிருன்னு சொல்லும் போதெல்லாம் எனக்குக் கோபம் வரும். இப்பப் புரியுதுண்ணா..'' என்றாள்.

''நீயும் நல்ல பொண்ணுதாம்மா.. லக்ஷ்மிக்கா மாதிரி அது வேணும் இது வேணும்னு நீ எப்பவும் தொல்லை செஞ்சதில்லே. யு ஆர் வெரி ஸ்வீட்!'' என்றான்.

''தாங்க்ஸ் அண்ணா!'' என்றாள். பிறகு சற்று நேரம் ஒற்றை விரலைக் கன்னத்தில் வைத்துக் கொண்டு யோசிப்பவள் போல் நடித்தாள்.

''அப்ப... நானும் உனக்கு ஏதாவது செய்யணுமே...'' என்றாள்.

ஆச்சரியமும், சுவாரசியமுமாகப் பார்த்தான்.

''என்ன செய்வே?'' என்றான்.

''ஒரு வேளை... உனக்கும் மனசுக்குப் பிடிச்ச பொண்ணு இருந்தா...சொல்லு.. முடிச்சு வைக்கிறேன்!'' என்றாள்.

''சரிங்க, பெரியம்மா. நேரம் வரும்போது சொல்றேன்,'' என்றான். முகத்தில் எதையும் காட்டாமல், கட்டிலில் காலை நீட்டி அமர்ந்து கொண்டு, சட்டம் தொடர்பான ஏதோ ஒரு புத்தகத்தைக் . கையிலெடுத்தான்.

''சரி.. சரி.. பேட்டி முடிஞ்சதுன்னு சொல்றே!'' என்று நகர்ந்தாள்.

சமையலறையில் இருந்த அம்மாவிடம் போனதும் அவளுக்கு ஒரு சந்தேகம் வந்தது. தனக்கும், அண்ணனுக்கும் நடந்த உரையாடலைச் சொன்னவள்,

''ஏம்மா.. அண்ணன் யாரையாவது மனசுல வச்சிருக்குமோ.. நான் கேட்டதுக்கு அப்படியெல்லாம்.. ஒண்ணுமில்லேன்னுதானே சொல்லணும். நேரம் வரும்போது சொல்றேன்னு சொல்லுது...'' என்றாள் யோசனையாக.

அம்மாவும் கைக்காரியத்தை விட்டு விட்டு நின்றாள். "இருக்குமோ... அவன் யாரை செலக்ட் பண்ணினாலும் கரெக்டாத்தான் இருக்கும். ஒருவேளை.. அந்த நாகராஜ் அண்ணனோட பொண்ணு சுவேதாவா இருக்குமோ? அன்னைக்கு அந்தப் பொண்ணு என்ன முறையாகணும் னெல்லாம் விசாரிச்சுகிட்டிருந்தான்,'' என்றாள்.

''கண்டு பிடிக்கிறேன்...'' என்று சாந்தா கலகலவென்று சிரித்தாள்.




ராஜேந்திரன் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தான். அந்த நிறுவனம் ஒரு ஏஜென்சி போலச் செயல்பட்டு வந்தது. தனியார் வங்கிகளில் வசூலாகாத தொகையைச் சட்ட ரீதியாக அணுகி வசூல் செய்து தருவது, கன்சல்டன்சி, பெரிய நிறுவனங்களுக்கு நிதி ஏற்பாடு செய்து கொடுப்பது என்று பல்வேறு வகையான செயல்களில் ஈடுபட்டு இருந்தது அந்த நிறுவனம்.

அநேகமாக அடுத்த ஓரிரு ஆண்டுகளில் அஸிஸ்டன்ட் மேனேஜர் ஆகும் வாய்ப்பு இருந்தது. அதற்கு உதவிகரமாக இருப்பதற்காக மாலை நேரக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் படித்து வைத்திருந்தான். அந்த நிறுவனத்தோடு தொடர்புடைய பல நிதி நிறுவனங்களில் சுவேதா வேலை செய்து வந்த நிறுவனமும் ஒன்று. அந்தத் தொடர்பில்தான் சில முக்கிய விஷயங்களைக் கேட்டு வர வேண்டியிருந்தால் கம்பெனி காரிலேயே மேலாளர் அனுப்பி வைப்பார்.

அந்த வாரத்தில் அவள் வந்தபோது, ராஜேந்திரன் அலுவலகத்திற்கு வெளியே அவளுடன் வந்து, ''சுவேதா! காண்டீன்ல ஒரு காஃபி சாப்பிடலாமா? என்றான். அவள் வியப்பாகப் பார்த்து விட்டு, 'ம்.. சாப்பிடலாமே!'' என்றாள்.

அப்போதுதான் சாந்தாவிற்கு மாப்பிள்ளை பார்ப்பதாகவும் நல்ல வரன் இருந்தால் சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக்



கொண்டான். அவளும் தன் வீட்டுப் பெரியவர்களிடம் சொல்வதாகச் சொன்னாள். பிறகு திடீரென்று, 'எங்க பெரியம்மாவோட மூத்தாரோட பையன் ஒரு டாக்டர் அண்ணன் இருக்காரு... பார்க்கலாமா...?' என்றாள்.

''டாக்டரா? ரொம்ப எதிர்பார்ப்பு இருக்குமே!'' என்றான்.

''இல்லல்லே... அவங்க ரொம்பக் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவங்க. நடுத்தரக் குடும்பம். அதனாலே. எதிர்பார்ப்புகள் பெரிசா இருக்காது. ஏன்னா... அவரும் ரெண்டு சிஸ்டர் ஸுக்கு மேரேஜ் செஞ்சு குடுத்திருக்காரு!'' என்றாள்.

''சரி.. அப்ப எதுக்கும் விசாரிங்க,'' என்றான்.

சுவேதா அவள் வீட்டுப் பெரியவர்களிடம் பேசினாள்.

''அட... நம்ம ரஞ்சிதத்துப் பெண்ணா! அப்ப பார்க்கலாமே!'' என்று அவள் தந்தையும் உற்சாகமாக இறங்கினார். இரு குடும்பங்களும் மிக நெருக்கமானார்கள். அதிலும் சாந்தா சுவேதாவிடம் எளிதாக நட்புக் கொண்டாள்.

இருவரும் தோழிகளாகக் கூட ஆகி விட்டார்கள்.

''அண்ணன் அப்படிச் சொன்னாங்க. இப்படிச் சொன் னாங்க...'' என்று அவள் சொல்வதை யெல்லாம் சுவேதா ஆர்வமாகக் கேட்டுக் கொண்டாள். அவளுக்கும் அண்ணன் மேல் ஆர்வம் இருப்பதைச் சாந்தா புரிந்து கொண்டாள்.

''அண்ணா... சுவேதாவை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்சு. ரொம்ப நல்ல டைப். இல்லே?'' என்றாள் ராஜேந்திரனிடம்.

''ம்... உனக்குப் பிடிக்காமயா போகும்? மாப்பிள்ளை கொண்டு வந்தவளாச்சே!'' என்று கிண்டல் செய்தான் ராஜேந்திரன்.

''அது சரி.. எனக்குப் பிடிச்சா அது நியாயம். உனக்கு ஏன் ரொம்பப் பிடிக்குது?'' என்றாள்.

ராஜேந்திரன் முகம் சட்டென்று சிவந்து போனது.

"நீ என்ன சொல்றே?" என்றான் ஒன்றும் புரியாதவன் போல்

"ஹேய்! ஹேய் அண்ணா, நடிக்காதே! உண்மையை ஒத்துக்கயேன் அண்ணா. இதுல ஒண்ணும் தப்பில்லையே. உனக்கும் ஒரு வாழ்க்கை அமையணும்தானே. இந்தக் கல்யாணம் முடிஞ்சவுடன் மூணே மாசத்தில் உங்க கல்யாணம் வச்சுக்கலாம். நான் அம்மா.. அப்பாகிட்டே பேசறேன்," என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

"என்னண்ணா ஒண்ணும் பேச மாட்டேங்கறே.. வேண்டாம்னா.. சொல்லு.. வேற பொண்ணு பாக்கலாம்.." என்றாள் குறும்பாக.

அவன் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தான். "ஏய்.. சாந்தா.. அப்படி எல்லாம் எதுவும் செஞ்சிராதே!" என்றான் அவசரமாக.

"அப்படிச் சொல்லு!" என்று சிரித்தாள். லேசாக மார்பை நீவியபடி சற்றே வெட்கத்துடன் ராஜேந்திரன் அவளைப் பார்த்தான். பிறகு -

"ஆமா.. சுவேதாவை எனக்குப் பிடிச்சிருக்கு. அவளைத் தவிர.. வேற ஒரு பெண்ணை இனி அந்த இடத்திலே நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது!" என்றான்.

"அண்ணா!..." என்று கலகலவென்று சிரித்தாள். நகர முற்பட்டாள்.

"டேய், சாந்தா! இரு. அவசரப்பட்டு அம்மாகிட்டே சொல்லாதே. உன்னோட நிச்சயம் முடியட்டும்... அப்புறம் பேசலாம்," என்றான். பிறகு,

"ஏண்ணா! சுவேதாகிட்டே இது பத்திப் பேசினியா?" என்றாள்.



"இல்லைம்மா. சட்டுன்னு ஒரு பொண்ணுகிட்டே போய் அப்படிப் போட்டு உடைக்கறது நாகரீகமான்னு தெரியலே அதுதான் தயங்கிகிட்டிருக்கேன்!" என்றான்.

சாந்தா அண்ணனைப் பெருமையாகப் பார்த்தாள். பிறகு சொன்னாள். "ஆனா.. சுவேதாவுக்கும் உன்னைப் பிடிச் சிருக்குற மாதிரித்தான் தெரியுது. *நான் வேணா பல்ஸ் பாக்கட்டுமா...?" என்றாள்.

"நேரில் சொல்லத் தைரியமில்லைன்னு நெனைச்சுட் டான்னா...? சரி.. என்ன செய்யணுன்னு பாக்கலாம்," என்று அப்போதைக்குப் பேச்சை முடித்தான்.

* * *

டாக்டர் மாப்பிள்ளை வீட்டிலிருந்து பெண் பார்க்க வருவதாகத் தகவல் அனுப்பி வந்து பார்த்து விட்டுச் சென்றார்கள்.

டாக்டரின் பெயர் பாலகிருஷ்ணன். பெண் பார்க்க வந்து விட்டுச் சென்ற இரண்டாவது நாள் மாலை அலுவலகம் வந்தான்.

"சார்... உங்க தங்கையை எனக்குப் பிடிச்சிருக்கு. ஓ.கே.தான். சுவேதா வேற ரொம்பப் புகழ்றா உங்க சிஸ்டரை. அதனால பெரியவங்க ஏற்பாடுகள்ல இறங்கட்டும்," என்றான்.

ராஜேந்திரன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். "ரொம்பத் தாங்க்ஸ்.. சார்!" என்றான்.

"பாலு... யு கேன் கால் மீ பாலு.. ஐ வில் கால் யு ராஜா.. ஓ.கே.?" என்றான்.

இருவரும் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"ஆனா.. உங்ககிட்டே சில விஷயங்கள் பேசணும்.." என்றான்.

ராஜேந்திரனுக்கு உள்ளூரப் பயம் கிளம்பியது. ஆனால் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. ஆபீஸ் காண்டீனுக்கு அழைத்துப் போய் ஸ்வீட் வாங்கிக் கொடுத்தான்.

பாலகிருஷ்ணன் தொடர்ந்தான். "நகை ஐம்பது பவுன் போடுவீங்களாம். கல்யாண மொத்தச் செலவு பெரிய மூணு ரூபா பிளான் செஞ்சிருக்கிங்களாம்!" என்றான்.

எப்படித் தெரியும் என்பது போல் பார்க்க, "சுவேதா சொன்னா!" என்றான். மேலும் தொடர்ந்தான்.

"பாருங்க.. ராஜா... ஒரு நாள் கல்யாணத்துக்காக அவ்வளவு செலவு செய்யத் தேவையில்லை. அதனால வீடு நாளா முகூர்த்தம் வைங்க. முதல் நாள் சடங்குகளுக்கு நெருங்கின ஒரு நூறு குடும்பங்கள் போதும். காலையில் கல்யாணம் கம் ரிசப்ஷன். மொத்தம் ஒன்றரைக்குள்ள அடக்குங்க. தட்ஸ் மோர் தேன் இனஃப்!" என்றான்.

ராஜேந்திரன் முகம் மலர்ந்தது. "தட்ஸ் வெரி நைஸ். ஆனா, அவளுக்குன்னு ஒரு அமௌண்ட் ஒதுக்கிட்டேன்," என்றான்.

"தெரியும். உங்க அஞ்சு வருஷ உழைப்பு. கல்யாணச் செலவுல நாங்க பாதி... குடுத்துடுவோம்!" என்றான்.

ராஜேந்திரன் வாயடைத்துப் போனான். "நான்.. இப்ப எதுக்கு வந்தேன்னா.. அந்தச் சடங்கு இந்தச் சடங்குன்னு ஏத்தி விடுவாங்க. அனாவசியச் செலவுகளை அவாய்ட் செஞ்சர்லாம். இந்த ஜவுளி, உப்பு, மஞ்சள் வாங்கறது இதுக்கெல்லாம்.. ஃபர்ஸ்ட் ரவுண்ட் ரிலேடிவ்ஸ் மட்டும் போதும்.. ஓ.கே.?" என்றான்.

அந்தக் கணம் முதல் இருவரும் நண்பர்களாகி விட்டார்கள்.

அதன் பிறகு சுவேதா அடிக்கடி வருவதும் சாந்தா அவர்கள் வீட்டுக்குப் போவதும் வழக்கமாகிப் போனது. ஆனால், வாய் விட்டு அவளிடம் சொல்கிற தைரியம் அவனுக்கு வரவில்லை.



ஆனால், அவள் வருகைக்காக ஏங்குவான். இரண்டு, மூன்று நாட்கள் வரவில்லை என்றால் தங்கையின் முகத்தைப் பார்ப்பான்.

அவள் அதைப் புரிந்து கொண்டு, "சுவேதாதானே? நாளைக்கு வருவா..." என்று கேலி செய்வாள். புன்னகைத்து விட்டு நகர்ந்து விடுவான்.

* * *

**சா**ந்தாவுக்கு நிச்சயம் முடிந்து ஒரு மாதம் இருக்கும்.

ஒரு நாள் பகல் பத்தரை மணிக்கு சுவேதாவிடமிருந்து ஃபோன் வந்தது.

ஒரு முக்கிய விஷயம் பேசணும் கோணியம்மன் கோயிலுக்கு வர முடியுமா? - என்று.

விடுமுறை எடுத்துக் கொண்டு கிளம்பினான். அவள் உள்ளே கோவில் வாசலில் நின்று கொண்டு இருந்தாள். சற்றுப் பரபரப்பாக இருந்தாள்.

அவன் பைக்கை நிறுத்திவிட்டு, "என்ன சுவேதா?" என்றான்.

"சாமி கும்பிட்டு அப்புறம் பேசலாம்," என்றாள்.

கும்பிட்டு வந்து ஒருபுறம் அமர்ந்தார்கள். அவள் கையிலிருந்து ஒரு உறையை நீட்டினாள்.

அரசு வேலைக்கான உத்தரவு. தற்போது அவள் பணியாற்றிய தனியார் வங்கியில் மாதம் ஐந்தாயிரம் தந்தார்கள். அரசு வேலை என்றாலும் கோவையிலேயே நிரந்தரமாக இருந்து கொள்கிற மாதிரியான வேலை என்றாள்.

"உன் இஷ்டம் எப்படியோ.. அப்படிச் செய்.." என்றான்.

"இல்லே.. நீங்க சரின்னு சொன்னாதானே டெஸிஷன் எடுக்க முடியும்!" என்று தயக்கத்துடன் நிறுத்தினாள்.

அவள் வார்த்தைகளின் பொருள் முழுவதுமாகப் புரிய அவன் முகம் மலர்ந்தது. முகமும் சிவந்தது. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் ஒரு கணம் பார்த்துக் கொண்டார்கள். பின்னர் அவள் பார்வை தாழ்ந்தது. அவன் சட்டென்று கலகலப்பாகச் சிரித்தான் ரிலாக்ஸானான்.

''ஓ! அப்படியா?'' என்றாள். பிறகு -

''இப்ப இல்லே. எப்பவுமே உனக்குப் பிடிச்சதைச் செய்யலாம். உனக்கு இந்த வேலை பிடிக்கும்னா போகலாம். இல்லே. வேலைக்கே போகப் பிடிக்கலேன்னாலும்... சரி.. உன் இஷ்டம்தான்!'' என்றான்.

''அப்பாடா!'' என்று சிரித்தாள். 'என்ன?' என்பது போல அவன் பார்க்க... ''இதுக்காவது நேரடியா பதில் சொன்னீங்களே!'' என்றாள்.

அவன் சற்றே வெட்கத்துடன் சிரித்தான். பிறகு, ''வேற என்ன சொல்லணும்?'' என்றான் - ஒரு விதமான பார்வையுடன்.

''பின்னே? அவளைத் தவிர வேறு யாரையும் அந்த இடத்திலே நினைக்கக் கூடப் பார்க்க முடியாதுன்னு.. தங்கை கிட்டே சொல்றீங்க?'' என்றபடி வேறு பக்கம் பார்த்தாள்.

அவன் வண்டிச் சாவியைக் கையில் சுழற்றிக் கொண்டே, ''சட்டுன்னு எப்படி ஒரு பொண்ணு கிட்டே... நேரடியாகச் சொல்றதுன்னு ஒரு தயக்கம்தான். இனி அம்மாகிட்டே சொல்லி மேற்கொண்டு பேசலாம்னு இருந்தேன்,'' என்று இழுத்தான். இழுத்து ஒரு பெருமூச்சு விட்டான்.

அவள் சிரித்தாள். அவன் சிரிக்கவில்லை.

''சுவேதா.. இது உனக்குப் புரியாது. எனக்கும் ரெண்டு சிஸ்டர்ஸ் இருக்காங்க. இப்ப உன் அண்ணனுக்கு நாம ரெண்டு பேரும் இப்படி மீட் பண்றது தெரிஞ்சா எப்படி இருக்குமோ?'' என்றான்.



அவள் கையில் இருந்த கவரை நீட்டியபடி, ''அண்ணன் கிட்டே பேசி அவரோட பர்மிஷன் வாங்கிட்டுத்தான் வந்தேன்,'' என்றாள்.

நிஜமாகவே அவன் மலைத்துப் போனான். பிறகு பாரமிறங்கியவனைப் போல் கலகலவென்று சிரித்தான்.

''அட்ரா.. சக்கை! செம தைரியம்தான்!'' என்றான்.

''இல்லே.. ஆர்டர் வந்து ரெண்டு நாளாச்சு. யோசனையாவே இருந்தேன். என்னம்மா விஷயம்னு அண்ணன் கேட்டாங்க. சுவேதாவோட அண்ணன் ப்ரபோஸ் பண்ணுவாரு போல இருக்கு. அதான்.. னு இழுத்தேன். அண்ணன் ஒரு நிமிஷம் திகைச்சுப் போயிட்டாரு. அப்புறம் அடடா சுவேதாக் குட்டிக்குக் கல்யாணம் செய்யணுமில்லேன்னு கொஞ்சம் கலாட்டா செஞ்சாரு. அப்புறம் இதென்னம்மா. பெரிய விஷயம். மாப்பிள்ளையைப் போன் பண்ணி வரச் சொல்லிப் பேசி முடிவெடுங்கன்னாரு,'' என்றாள்.

''பரவாயில்லையே. உங்க அண்ணன்!'' என்று சிரித்தான். அதற்குப் பிறகு இருவரும் கலகலப்பாகி விட்டார்கள்.

பக்கத்தில் இருந்த ஓட்டல் ஒன்றுக்கு மதிய உணவுக்கு அழைத்துச் சென்றான். சற்று நேரம் பேசி மகிழ்ந்தார்கள். பேச்சுக்கு நடுவே -

''நடு ராத்திரியில் கூட முழிச்சேன்னா.. உன் நினைப்பு வந்தா அதுக்கப்புறம் தூக்கம் கிடையாது, தெரியுமா?'' என்றான், கிறக்கமான குரலில்.

அவள் தலை குனிந்து கொண்டாள். ''அதுதான் உடனே சொல்லிட்டீங்களாக்கும்!'' என்றாள்.

''சொல்றது பெரிய விஷயமில்லே. ஏன்டா. ஊரான் வீட்டுப் பெண்ணைக் கண்டா.. உனக்கு அப்படித் தோணுதான்னு ஒரு அறை விட்டேன்னு... வச்சுக்க...'' என்று அவன் சிரிக்க, அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து விட்டுத் தலை குனிந்து கொண்டாள்.

''ஆனா.. உங்களோட அந்த நாகரீகமான தயக்கம்தான்... எனக்கு ரொம்பப் பிடிச்சது!'' என்றாள்.

அவன் ஒன்றும் பேசாமல் அவளை ஆழ்ந்து பார்க்கவும் -

''போதும். இது ஹோட்டல். அப்படிப் பார்க்காதீங்க...'' என்றாள்.

அவன் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான்.

பில்லுக்குப் பணம் கொடுத்து விட்டு வெளியே வந்தவுடன் அவன் சொன்னான்.

''ஹேய்.. சுவேதா.. இனியெல்லாம் பார்க்காம இருக்க முடியாது. ரெண்டு நாளைக்கொரு தரமாவது பார்க்கணும். சரியா? போன் பண்ணலாமா? அனுமதியுண்டா?'' என்று கேட்டான்.

''ம்...!'' என்று தலையாட்டினாள்.

பழைய நினைவுகளில் புரண்ட ராஜேந்திரன் ஒரு பெருமூச்சு விட்டான். எப்படியாவது பேசிக் கொள்வது, சந்திப்பது என்ற அந்த நாட்களில் நெஞ்சில் நிறைந்திருந்த காதல் எங்கே போனது?

இப்போது இப்படி முறுக்கிக் கொள்கிறாள். சாதாரணப் பேச்சு கூடச் சண்டையில் முடிகிறது. மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டான்.

கதவை யாரோ தடதடவென்று இடிக்கிற சத்தம் கேட்டு அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தான். கதவைத் திறந்தான்.

குழந்தையுடன் மாமனார் நின்று கொண்டிருந்தார்.

''ஐஸ்வர்யா அப்பா வேணும்னு ஒரே.. அழுகை...'' என்று நீட்டவும், குழந்தை தாவிக் கொண்டாள்.

இறுக அணைத்துக் கொண்டான் ராஜேந்திரன். மாமனாரிடம், ''சுவேதா எங்கே?'' என்றான்.



''மாப்பிள்ளை.. அவளுக்கு நேத்திலருந்து காய்ச்சல்.. அதோட வேலைக்குப் போயிட்டு வந்து சோர்ந்து படுத்துட்டா...'' என்றார் தயக்கமாக.

ஓ...! என்று திகைத்துப் போனவனாய் மாமனார் வீட்டுக்கு உடனே போனான்.

மனைவி ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைப் பார்த்தான். மனம் கனிந்தது. தானாவது நேற்று வந்து பார்த்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டவனாய், குழந்தை என்கிட்டே இருக்கட்டும் என்று எடுத்துக் கொண்டான்.

குழந்தையும் அவனும் சற்று நேரம் கொஞ்சி விளையாடிய பின்தான் மனம் லேசாகியது.

வழக்கம் போல் ஐஸ்வர்யாவைக் கட்டிக் கொண்டு உறங்கினான்.

## 4

''ஹலோ... குட் மார்னிங்...!''

சிரித்தபடி குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு வந்து நிற்கிற கணவனைப் பார்த்தவுடன் சுவேதாவுக்குக் கொஞ்சம் கோபம் குறைந்து விட்டது.

''பரவாயில்லை.... இப்பவாவது என் நினைப்பு வந்துச்சே!'' என்றாள்..

''ஹேய்... சாரி... வெரி சாரி... உனக்கு உடம்பு சரியில்லேன்னு எனக்குத் தெரியலே. அம்மா இன்னும் கோபம் தீராம இருக்கீங்கன்னு நெனச்சுட்டுத்தான்... வர்லே... எட்டிப் பார்க்கத் தைரியம்... வர்லேன்னு வச்சுக்கயேன்!'' என்று அவன் சிரிக்கவும் அவளும் லேசாகப் புன்னகைத்தாள்.

''அடடடா! ரொம்பப் பயந்தவர்தான்!'' என்று முணுமுணுத்தாள்.

''ஓ.கே... ஓ.கே... அதுக்குப் பிராயச்சித்தம் செஞ்சர்றேன்... அய்யா நாலு நாளைக்கு ஆஃபீசுக்கு லீவ். மனைவிக்குப் பணிவிடைதான். வா...நம்ம வீட்டுக்குப் போயிரலாம்,'' என்று அழைத்துப் போனான்.

குழந்தையைத் தயார் செய்து ஸ்கூலுக்குக் கொண்டு போய் விட்டு விட்டு வந்தான்.

தானே அவளுக்குக் கஞ்சி தயாரித்தான். ''நீங்க... ஏங்க... சிரமப்பட்டுக்கிட்டு... அம்மா... கிட்டே...சொன்னா...'' என்றவளை மேலே பேச விடாமல் தடுத்தான்.

''ஏன்... நான் செய்யக் கூடாதா? நீ எங்களுக்கு உடம்பு சரியில்லாதப்ப... எப்படிக் கவனிக்கறே... அந்தக் கடமை எனக்கு இல்லையா? ஐ லைக் டு டூ இட்!'' என்று வாயடைத்தான்.

அவன் கஞ்சியை டம்ளரில் ஊற்றி மேலும் கீழும் ஆற்றி அளவான சூட்டில் கொடுத்தபோது அவள் உள்ளம் நெகிழ்ந்தது.

''தேங்க்ஸ்... அத்தான்...'' என்றாள்.

''ஹேய்... நமக்குள்ளே... தேங்க்ஸ் எதுக்கு? சரி... நான் சாப்பிட என்ன செய்யட்டும்? பருப்பு சாதம்...?''என்றான்.

ஓரளவு சமையல் செய்வான். அதனால் அளவாக, சுவையாகப் பருப்பு சாதம் செய்தான்.

''உங்களுக்காவது அம்மா கிட்டே சொல்லி...'' என்று அவள் இழுத்தபோது

''வேண்டாம்... நீ பத்தியம் இருக்கும்போது எனக்கு என்ன டேஸ்ட் வேண்டிக் கிடக்கு. டேய்... சுவேதா... ஒண்ணு தெரியுமா? டாக்டர் நம்மளைப் பத்தியம் இருக்கச் சொல்லும் போதுதான்... பக்கத்துல யாராவது ரசம் சாதம் சாப்பிட்டாக் கூட ரொம்ப வாசனையா இருக்கும்...''என்று கலகலவென்று சிரிக்க, அவளும் சிரித்தாள்.



''ஆமாங்க... காய்ச்சல் சமயத்துல பிரெட் சாப்பிட்ட பழக்கத்தாலயோ என்னவோ... எனக்கு பிரெட்டே பிடிக்காமப் போயிடுச்சு. பிரெட்டல்லாம்... ஒரு டிஃபனான்னு ரகளை செய்வேன்!'' என்றாள்.

''ரகளைதானே? அது நல்லாச் செய்வியே!'' என்றுஅவன் கிண்டல் செய்தான்.

''வேண்டாம்... ராங் டிராக்ல போனா மறுபடியும் சண்டை வரும்!'' என்று அவள் ஆட்காட்டி விரல் உயர்த்தி மிரட்ட -

''ஆமாமா... சண்டை வேண்டாம். சரண்டர்!'' என்று அவன் ஒரேயடியாகச் சரணடைந்தான்.

மூன்று நாட்கள் அவளை மிக நன்றாகக் கவனித்துக் கொண்டான். நான்காம் நாள் வெள்ளிக் கிழமை அவளே காலையில் சொன்னாள்.

''ஏங்க... ஐ ம் ஃபீலிங் பெட்டர். நீங்க இன்னைக்கு ஆஃபீஸ் போங்க... பெண்டிங் வொர்க் எல்லாம் முடிச்சுட்டு வந்தீங்கன்னா... பர்டன் குறையும். நாளைக்கும் நாளன்னைக்கும் லீவுதானே...!'' என்றாள்.

அவனுக்கும் அது சரியென்று பட்டது. கிளம்பிப் போனான்.

மாலையில் வீட்டுக்கு வந்த போது வீடே கமகமத்தது.

பிரியாணி வாசனை. சுவேதா அடுப்படியில் நின்று கொண்டிருந்தாள்.

''ஏய்... என்ன...இப்ப... இதெல்லாத்துக்கும் அவசியம் என்ன?'' என்று அவன் குரலை உயர்த்தியபோது -

'ஷ்...!' என்றாள் ஒற்றை விரலை வாயில் வைத்து.

''பாலு அண்ணாவும், சாந்தாவும் வர்றாங்களாம். ஃபோன் வந்துச்சு,'' என்றாள்.

'ஓ!' என்று தணிந்தான்.

"ரெண்டு பேருக்கும் வெஜிடபிள் பிரியாணி ரொம்பப் பிடிக்குமே... அதான்... அம்மாகிட்டே கொஞ்சம்... ஹெல்ப் வாங்கிக்கிட்டேன்... சரியா?"என்றாள்.

அவன் பேசுவதற்கு எதுவும் இருக்கவில்லை. சாந்தாவும் அவள் கணவனும் வந்தவுடன் வீடு கலகலப்பானது.

"என்னப்பா... டாக்டர்... நீ... தங்கைக்கு உடம்பு சரியில் லேன்னா... உடனே வர வேண்டாமா? அவளே எழுந்து பிரியாணி செய்யற அளவுக்குத் தெம்பானதும்... வர்றே!" என்று கலாட்டா செய்தான் ராஜேந்திரன்.

"அதுக்குத்தான்... சண்டை பிடிக்க வந்திருக்கேன்... ஏன் சொல்லலேன்னு..." என்றான் பாலு.

"இல்லே...நாந்தான் சொல்ல வேண்டாம்னேன். எனக்குச் சாதாரணக் காய்ச்சல்தானே. நீங்க புறப்பட்டு இங்கே வந்துட்டா... அங்கே எத்தனை பேஷண்ட்ஸ்... வெயிட் பண்ணிகிட்டிருக்கணும்!" என்று சுவேதா உதவிக்கு வந்தாள்.

"ரெண்டு பேருமா.... சதி... பண்ணீட்டீங்க!" என்றான் பாலு முழுவதும் சமாதானமாகாமல்.

"இல்லண்ணா, இப்பதான்... உங்களுக்கு கிளினிக்...நல்லா பிக்கப் ஆயிருக்கு!" என்றாள் சுவேதா... மீண்டும்.

"ஓ.கே... ஓ...கே... விடுங்க!" என்று பாலுவும் இறங்கி வந்தான்.

சற்றுத் தனிமை கிடைத்த போது சாந்தா சகோதரனிடம் -

"அண்ணா, லக்ஷ்மிக்கா... வந்தாளா? ஃபோன் செய் தாளா?" என்று கேட்டாள்.

"இல்லையே? அவளுக்கு நான் விஷயமே சொல்லலை யேம்மா...?" என்றான்.

"இல்லண்ணா... நான் ஃபோன் பண்ணிச் சொன்னேன்..." என்றாள்.



"விடும்மா... சாதாரணக் காய்ச்சல்தானே.... இதுக்காக... அவள் சேலத்திலிருந்து வரணுமா என்ன?" என்றான்.

சாந்தா அதற்கு மேல் வளர்க்கவில்லை. கலகலப்பாகப் பொழுதைக் கழித்த பின் அவர்கள் புறப்பட்டுப் போனார்கள்.

"பாலு அண்ணா பாலு அண்ணாதான்!" என்று பாராட்டிக் கொண்டாள் சுவேதா.

"ஆமா... ரொம்ப... நல்ல டைப்..." என்றான் அவனும்.

எட்டு மணி யிருக்கும்.

"ஏய்... சுவேதா... போதும்... அலைச்சல். ரெஸ்ட்... எடு..."என்று அவளை மிரட்டிப் படுக்கச் செய்தான்.

விரைவில் உறங்கி விட்டாள்.

மடியில் மகளை வைத்துக் கொண்டு அவளுக்குக் கதை சொல்லி உறங்கச் செய்தான். இரண்டு பேரும் உறங்கிய பின் அவ்வளவு விரைவில் உறங்கப் பிடிக்காதவனாய் அவன் கட்டிலில் கால் நீட்டி அமர்ந்திருந்தான்.

சிந்தனை பின்னோக்கி ஓடியது.

சாந்தாவின் கல்யாணம் முடிந்து அவனுடைய கல்யாணம் பேசப்பட்ட சமயம்.

அப்பா... அம்மா... எல்லாரும் பத்திரிகை கொடுக்கப் போயிருந்தார்கள். தனிமை கிடைக்கவும் அவன் சுவே தாவை ஃபோனில் அழைத்தான்.

"ஹேய்... என்ன செஞ்சிட்டிருக்கே?" என்றான்.

"ம்... இன்விடேஷன்ஸ்ல... பேர் எழுதிக்கிட்டிருக்கேன்..." என்றாள்.

"ஒருத்தரும்... இல்லையா?"

"இல்லை... அம்மா, அப்பா... அண்ணன் எல்லாரும் ஏதோ பர்ச்சேஸ் பண்ணப் போயிருக்காங்க!" என்றாள்.

''அப்ப... நான் அங்கே கிளம்பி வரவா?'' என்றான்.

''ஐய்யோ... அப்படிக் கிப்படி வந்திராதீங்க...''

''ஏய்... என்ன நீ...பாத்து நாலு நாளாச்சு...'' என்று அவன் உருகினான்.

அவள் வெட்கம் மேலிட அந்தப் பக்கம் அமைதியாக நின்றாள்.

''ஹேய்...! என்ன பேச்சைக் காணோம்!'' என்றான்.

''என்ன பேசறது...?''என்றாள் தயக்கமாய்.

''ஏதாவது... பேசு... நான் சொல்லலையா, எப்பவும் உன் நினைப்பா... இருக்குது. அது மாதிரி ஏதாவது சொல்லு...'' என்றான்.

''ஆசைதான்!''என்று முணுமுணுத்தாள். அவன் சிரித்தான்.

''எத்தனை நாளைக்குத் தப்பிப்பே?'' என்றான்.

''ராஜ்... ப்ளீஸ்...'' என்று அவள் தவிக்கவும், ''ஓ...கே... சரி... சரி... ஏதோ குரல் கேட்டா...நாலு நாளைக்கு... சார்ஜ் ஏத்தின மாதிரி இருக்குமே...'' என்று சிரித்து விட்டு -

''சரி,..வைக்கட்டுமா?'' என்றான்.

''இருங்க... இருங்க...'' என்றாள்.

அவன் அதிசயமாய் உணர்ந்தான்.

''என்னம்மா?'' என்றான்.

''இல்லே... ஒரு ஐடியா... தோணிச்சு!'' என்றாள்.

''சொல்லு!'' என்றான் ஆச்சரியமாய்.

''சாந்தா கல்யாணத்துல உங்களுக்கு நெனச்சதுல பாதி தானே செலவாச்சு?''

''பாதிக்கு மேலேயே மீதம்!''என்றான்.

''அதான்... ஒரு யோசனை தோணிச்சு...'' என்றாள்.



''இப்ப...பாலு அண்ணனோட வீடு நல்ல சென்டரான இடத்திலே இருக்கு. அதை அப்படியே கிளினிக்கா மாத்திரலாம். அவங்க வீட்ல இருந்து ரெண்டு கிலோ மீட்டர் தூரத்திலே இடம் சேல்ஸ்க்கு இருக்கு. விலை மலிவுதான். கார்லே டென் மினிட்ஸ்ல வந்தர்லாம். ஒரு சைட் வாங்கிக் குடுத்தா... ஹவுஸ் லோன் வாங்கலாமே. டாக்ஸ்க்கும் காட்டலாம் வீடு கட்டிப்பாரில்லே?'' என்றாள்.

''ஹேய்! சூப்பர் ஐடியா...'' என்று அவன் பிரகாசமானான். பிறகு அன்பு நிறைந்த குரலில், ''என்ன நீ வித்தியாசமா இருக்கே? பொதுவா... நாத்தி... கொழுந்தின்னா... பிடிக்காதும்பாங்க!'' என்றான்.

''சாந்தா... இஸ்... மை... ப்ரெண்ட்!'' என்றாள்.

''அப்படிப்போடு!'' என்று மீண்டும் மகிழ்ச்சியானான். பிறகு,

''நானே நினைச்சுட்டிருந்தேன்... கவி... அவளுக்குன்னு ஒதுக்கின பணத்துக்கு அவளுக்கே ஏதாவது செஞ்சர்ணும்னு. இட்ஸ் எ குட் ஐடியா. அதுக்காக... நீ கவலைப்பட்ராதே... நம்ம கல்யாணத்துக்கும் ஒரு அமௌண்ட் சேமிச்சிருக்கேன்,'' என்றான் குறும்பாக.

''எனக்கொண்ணும் கவலையில்லே!'' என்றாள்.

''ஏன்?''

''பின்னே? உங்க வீட்டுக்கு வரப்போறவளுக்கு என்ன செய்யணும்னு உங்களுக்குத் தெரியாதா? நம்ம கல்யாணம் சிம்பிளா நடந்தாலும் எனக்கு சந்தோஷம்தான்...'' என்றாள்.

''தட்ஸ்...ரியலி... குட்...'' என்று வெகுவாக மகிழ்ச்சியடைந்தான்.

அந்த நினைவுகள் வரவும் மெதுவாகத் திரும்பி உறங்கிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தான்.

எவ்வளவு அருமையாக ஒத்துழைத்தாள் இந்தப் பெண். கல்யாணத்தின் போதும் சரி... அதற்குப் பின்பு ஏற்பட்ட பிரச்

சினைகளின் போதும் சரி. ஆனால்... கேவலம் வாடகையை ஒரு பிரச்சினையாகப் பேசி... அவளை நோகடித்து விட்டோமே... என்று தன்னையே நொந்து கொண்டான்.

அப்போது நடந்த நிகழ்வுகள் மீண்டும் நினைவுக்கு வந்தன.

மூத்த சகோதரி லக்ஷ்மிக்கும் அவனுக்கும் எட்டு வருடங்கள் இடைவெளி. அவளுக்கு விரைவிலேயே கல்யாணம் வேறு செய்து விட்டார்கள் என்பதாலோ என்னவோ... ராஜேந்திரனுக்கும், சாந்தாவுக்கும் இருந்த ஒட்டுதல் அவளிடத்திலே இல்லை. ஆனாலும், ராஜேந்திரன் இளையவன் என்ற போதும் அவளுக்கும் சகோதரனாக எந்தக் குறையும் வைக்கவில்லை. ஆனாலும் ஏதாவது பிரச்சினைகள் செய்து கொண்டே இருப்பாள்.

சாந்தாவின் கல்யாணத்தை விமரிசையாக நடத்தியபோது பொருமிக் கொண்டேயிருந்தாள்.

''என் கல்யாணத்தை இப்படி நடத்தினீங்களா? இவ்வளவு நகை போட்டீங்களா?'' என்று-

ஒரு கட்டத்தில் ராஜேந்திரனுக்கே கோபம் வந்தது.

''அக்கா... அப்பா ரிட்டையரான பணம் பூராவும் உன் கல்யாணத்துக்குத்தானே செலவு செஞ்சாரு. உன் கல்யாணமும் ரொம்ப நல்லாத்தான் நடந்தது. உன் கல்யாணத்தப்ப நகை நெறயப் போடலேன்னாலும் அதுக்கப்புறம் நெறய செஞ்சதே. உனக்குச் செஞ்ச அதே அளவுதான் இப்ப சாந்தாவுக்கும் செய்யுது. சொல்லப் போனா... அதில ஒரு பங்கு... அவளா வாங்கிக்கிட்டது!'' என்றான்.

''நான் என்ன வேலைக்கா போனேன் - நானா வாங்கிக்கறதுக்கு?'' என்றாள்.

ராஜேந்திரன் சலித்துப் போனவனாய்ப் பார்த்தான்.

''அதுக்குச் சொல்லலைக்கா... நீ சந்தோஷமா கலந்துக்க... அது போதும்...'' என்றான். அதன் பிறகுதான் கலாட்டா



செய்வதை நிறுத்தினாள். ஆனாலும், விஷயம் அத்தோடு முடிந்து விடவில்லை.

சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோதே பத்து மணி வாக்கில் டெலிஃபோன் மணி ஒலிக்க, உறங்குபவர்களின் உறக்கத்தைக் கலைக்க வேண்டாமேயென்று ஹாலுக்குப் போனான். ரிசீவரை எடுத்தான்.

அந்தப் பக்கம் லக்ஷ்மியக்கா.

''நூறு ஆயுசுக்கா... உனக்கு!'' என்று சொல்ல வாயெடுத்தவன் நிறுத்தி விட்டான். அதற்கும் ஏதாவது வம்படியாகச் சொல்வாள்.

''சொல்லுக்கா...'' என்றான்.

''என்னடா? சுவேதாவுக்கு உடம்பு சரியில்லையாமே?'' என்றாள்.

பரவாயில்லையே. விசாரிக்கிறாளே என்று எண்ணியபடி -

''ஆமாக்கா... காய்ச்சல்.''

''டைஃபாய்டு... கிய்ஃபாய்டுன்னு இல்லியே?'' என்றாள்.

''இல்லக்கா... அதெல்லாம்... ஒண்ணும் இல்லே. சாதாரணக் காய்ச்சல்தான். சாந்தாவும், பாலுவும் வந்திருந்தாங்க!'' என்றான்.

''அவளுக்கென்ன? பக்கம்... வந்தர்றா... நான் வர முடியணுமே!''

''பரவால்லே... பரவால்லே... விசாரிக்கிறியே! அதுவே போதும்... அப்புறம்... மாமா. எப்படியிருக்காரு? அனிதா... எப்படி யிருக்கா?'' என்றான்.

''ம்... எல்லாம் நல்லாயிருக்காங்க... சரி... சரி... பாத்துக்க...'' என்று சற்று நேரம் பேசிவிட்டு,

''அது சரி... சாதாரணக் காய்ச்சலுக்கா... நீ நாலு நாள் ஆபீசுக்கு லீவு போட்டே?'' என்று ஒரு வெடியும் போட்டு விட்டு வைத்தாள்.

ராஜேந்திரன் நொந்து போனான்.

"சை! இவளைத் திருத்தவே முடியாது!" என்று முணு முணுத்தபடி உள்ளே வர, சுவேதாவும் படுக்கையறையில் இருந்த ஃபோன் ரிசீவரை வைத்தாள்.

அவன் செய்வதறியாது விழித்தான்.

"சாரி... சுவேதா..." என்று ஆரம்பிக்க.

"விடுங்க... உங்க அக்கா அப்படிப் பேசலேன்னாத்தான் ஆச்சரியப்படணும்!" என்று புன்னகைத்தாள்.

அதற்குப் பிறகுதான் அவன் நிம்மதியானான். சற்றே கவலையான முக பாவத்தோடு அவன் படுத்துக் கொள்ள, அவள் எழுந்து கட்டிலின் இந்தப் புறமாக வந்தாள். குனிந்து முத்திரை வைத்து விட்டு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"எல்லாருக்கும் பொறாமை - எங்க வீட்டுக்காரர் என்மேலே இவ்வளவு பிரியமா இருக்காரேன்னு..." என்று முணுமுணுத்தாள்.

அவன் சிரித்து விட்டான்.

"கிடக்கறாங்க... விடுங்க... மிஸ்டர் ராஜேந்திரன்... தூங்குங்க..." என்றாள்.

அவன் மனம் நிறையப் புன்னகைத்தபடி கண்ணயர்ந்தான்.




இரண்டு நாட்கள் கழிந்திருக்கும். அன்றைக்குத்தான் அலுவலகம் போயிருந்தான்.

உணவு இடைவேளையின்போது ராஜேந்திரனிடம் இருந்து ஃபோன் வந்தது.

"சுவி, லீவு போட்டுட்டுப் புறப்பட்டு வா. அனிதா பெரியவளாயிருக்காளாம். நீதான் போயி தண்ணி ஊத்தணுமாம்!" என்றான்.



"ஓ!" என்றாள்.

'என்னப்பா?'

"இல்லே இன்னும் டயர்ட்னஸ் சரியாகலே. டிராவல் வேற பண்ணணுமே!" என்றாள் தயக்கமாய்.

"இல்லல்லே. அதுக்கு நான் வேற அரேஞ்ஜ்மெண்ட் பண்ணியிருக்கேன் பாலு அவரோட ஃபிரண்ட் காரை வாங்கிட்டு வர்றாரு. பாலுவோட காரை நான் டிரைவ் பண்றேன். நீ நான் உங்கம்மா எங்க பேரண்ட்ஸ்... சாந்தா, பாலு எல்லாரும் போறோம். சரியா?" என்றான்.

'எல்லாம் ஏற்பாடு பண்ணீட்டீங்க?' என்றபடி ஃபோனை வைத்தாள்.

விரைவில் போய்ச் சேர்ந்து விட்டார்கள். சடங்குகள் முடிந்து மற்ற விஷயங்கள் பேசினார்கள்.

பெரிய அளவில் சீர் வைக்க வேண்டுமென்று பிடிவாதமாய் நின்றாள் லக்ஷ்மி.

அனிதா தனியாக வந்து ராஜேந்திரனிடம் அழுதாள்.

"மாமா, இதெல்லாம் எனக்குப் பிடிக்கலே. எதுக்கு விளம்பரப் படுத்தணும்?" என்று கேவினாள்.

அந்தப் பன்னிரண்டு வயதுக் குழந்தையின் வேதனையை இரக்கத்துடன் பார்த்தபடி நின்ற ராஜேந்திரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சாந்தாவிடம் கலந்து யோசித்தான்.

அவளே கூட லக்ஷ்மியக்காவின் விஷயத்தில் ஏதும் பேசப் பயந்தாள். சுவேதா அதைவிடத் தயங்கினாள். ஆனால், அனிதாவின் தந்தை சத்தியமூர்த்திக்கு சுவேதாவை மிகவும் பிடிக்கும். அவளும் அண்ணா, அண்ணா என்று இயல்பாய் ஒட்டிக் கொள்வாள். அவரிடம் மெதுவாக அனிதாவின் உணர்வுகளைச் சொன்னாள் சுவேதா.

அதற்குப் பிறகு எல்லாரும் உட்கார்ந்து பேசும்போது, அவர் ஒரேபிடியாய்ப் பெரிய அளவில் ஃபங்ஷன் வேண்டா மென்று கூறி விட்டார்.

லக்ஷ்மிக்கு எல்லாரும் ஒரேயடியாய் ஒன்றுபோல் பேசவும் ஒன்றும் பேச முடியவில்லை. ஆனால், உள்ளுக்குள்ளே ஆத்திரம் கனன்று கொண்டிருந்தது.

பெண்கள் எல்லாம் தனியாக அமர்ந்து இருந்தபோது, "எப்படியோ தான் கிராண்டா ஒரு ஃபங்ஷன் வைக்கணும்னு நெனக்கிறப்போ மட்டும் கெடுத்து விட்டார்நீங்க!" என்றாள்.

சுவேதா அதிர்ந்து போய்ச் சாந்தாவைப் பார்த்தாள். அதற்குள் சாந்தாவே -

"அக்கா! அப்படியெல்லாம் இல்லே. இதையெல்லாம் விளம்பரப்படுத்தினா, அனிதாவுக்கே கஷ்டமா இருக்கும். நல்லதில்லே. அதுதான்!" என்றாள்.

திரும்பவும் ஞாயிற்றுக் கிழமை வீட்டளவுக்குச் சடங்கு வைத்தார்கள்.

ராஜேந்திரன் பத்துப் பவுனில் காசு மாலை போட்டதோடு, அவனும், பாலுவும் சேர்ந்து ஐம்பதாயிரம் ரூபாய்க்குச் சேமிப்புப் பத்திரம் என்று அனிதாவின் பெயரில் எடுத்துக் கொடுக்கவும்தான் லக்ஷ்மி அமைதியானாள்.

புறப்படும்போது மட்டும் ராஜேந்திரன் ஒரு வார்த்தை சொன்னான் அக்காவிடம்.

"அக்கா, அனிதா உனக்கு மட்டும் குழந்தைன்னு இல்லே. எங்க எல்லாருக்கும் அவ செல்லம்தான். அவளுக்குச் செய்யறதுக்கு நாங்க எப்பவும் தயங்க மாட்டோம். செய்யறது எவ்வளவுன்னு பாத்து மனுஷங்களை எடை போடக் கூடாது!" என்றான்.

"ஐயய்யோ... நான் எதுவும் செய்யச் சொல்லிக் கேட்கலியே..." என்று அசடு வழிந்தாள் லக்ஷ்மியக்கா. அடுத்து



வந்த விடுமுறையின் போது அனிதாவை இரண்டு நாட்கள் அழைத்து வந்து தங்களோடு வைத்துக் கொண்டு அனுப்பி வைத்தாள் சுவேதா.

அழைத்துப் போக வந்த சத்தியமூர்த்தி கூட மனம் நெகிழ்ந்தவராய் -

"லக்ஷ்மி பேசறதை யெல்லாம் மனசுல வச்சுக்காதே, சுவேதா! அவ சுபாவமே அப்படியாகிப் போச்சு!" என்று சொல்லிப் போனார்.

அன்றிரவு

ராஜேந்திரன் அவளிடம் நெருங்கி அமர்ந்து சிரித்தான்.

"ஹேய்... உன்னைப் புரிஞ்சுக்கவே முடியல. எங்க லக்ஷ்மியக்கா மேலே இருக்கற கோபத்துல எதுவும் செய்யக் கூடாதுன்னு சண்டை போடுவியோன்னு நெனச்சேன். ஆனா எல்லாத்துக்கும் முன்னால நின்னு செஞ்சே. அனிதாவுக்கும் அத்தையை ரொம்பப் பிடிச்சுப் போச்சு!" என்றான்.

"அவங்கம்மா அப்படிப் பேசினா, அனிதா என்ன செய்வா, பாவம். அவ நல்ல அன்பான குழந்தை. அதுவுமில்லாம நம்ம சொந்த விருப்பு, வெறுப்புகளைக் குடும்பம் தொடர்பான விசேஷங்களில் காட்டக்கூடாது!' என்றாள்.

அவன் அவளை வாஞ்சையாய் அணைத்துக் கொண்டான்.

"ஆனா, என்கிட்டே மட்டும் சரிக்குச் சரியா சண்டைக்கு நிக்கறே!" என்றான்.

"அது... உங்களோட வார்த்தைகள் தப்பாப்போகும்போது மட்டும்தான். நல்லா... யோசிச்சுப் பாருங்க!" என்றாள்.

அவனால் மறுக்க முடியவில்லை.

அவள் மேலும் சொன்னாள். "அது மட்டுமில்ல... சமீப காலமா... நீங்க ரொம்ப மாறிட்டீங்க... பணத்துக்கு ரொம்ப முக்கியத்துவம் குடுக்கறீங்க..." என்றாள்.

''ஆமா... நீ உனக்குன்னு எடுத்துக்கற இரண்டாயிரம் ரூபாயை என்ன செய்யறேன்னு என்கிட்டே சொல்றது இல்லே?'' என்றான் புகாராக.

''நீங்க எடுத்துக்கறதையும் சொல்றது இல்லையே...' என்றாள்.

அவன் மௌனமாகி விட்டான் பணத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தாலே அவர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு விடுவது இருவருக்குமே புரிந்தது.

ராஜேந்திரன் சற்று நேரம் சுய அலசலில் ஆழ்ந்தான்.

அவள் சொல்வது உண்மைதானோ? சமீப காலமாகத் தன் குடும்பத்துக்கென்று ஒரு வீடு கட்டிக் கொள்ள வேண்டுமென்ற தீவிரம் அவன் மனதிலே தோன்றியிருந்தது. அந்த எண்ணம் வந்ததற்குப் பிறகு பணம் ஒரு முக்கிய விஷயமாக மாறிவிட்டதை அவனே உணர்ந்தான்.

தன் வீட்டளவில் சிக்கனம் பார்க்கிற அதே வேளையில் உறவினர்களுக்குச் செய்வதில் எந்த விதத்திலும் குறையும் வைக்க முடியாத அளவில் சிக்கல் தோன்றியிருப்பது அவனுக்கும் புரிந்தது.

மனைவிக்கு ஒரு ஸ்கூட்டி வாங்கிக் கொடுக்க மறுத்து விட்டு, சகோதரி மகளுக்குக் காசுமாலை வாங்கிக் கொடுக்க வேண்டி வந்த நிலை அவனுக்குள் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தி இருந்தது.

சுவேதாவுக்குக் காய்ச்சல் வந்ததற்குப் பிறகு ஏற்பட்டிருந்த சுமுக உணர்வு சற்றே குறைந்து விட்டாற் போல் உணர்ந்தான்.

அதற்கேற்றாற் போல் வேறொன்றும் நடந்தது. அந்த ஞாயிற்றுக் கிழமை ஊருக்கு வந்திருந்த லக்ஷ்மி அம்மா வீட்டிலிருந்து ஃபோன் செய்தாள்.

''ராஜா, நீயும் சுவேதாவும் வந்துட்டுப் போங்க. பாக்கணும்'' என்றாள்.



சுவேதா கடுப்பாகி விட்டாள்.

''ஏன், அக்கா இங்க வரமாட்டாங்களா? நாமளேதான் போய்ப் பார்க்கணுமா?'' என்றாள்.

ராஜேந்திரனுக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. லக்ஷ்மிக்கு நாசூக்காய்ச் சொன்னாலும் புரியாது. நிலைமையைச் சமாளிக்க அவன் மட்டும் போய் விட்டு, நீயும் வாயேன்க்கா... என்று அழைத்துக் கொண்டு வந்தான்.

வந்தாள். நன்றாகத்தான் பேசிக் கொண்டு இருந்தாள். ஆனால், அருகிலேயே இருக்கிற சுவேதாவின் அம்மா வீட்டுக்கு அவர்கள் வருந்தி வருந்தி அழைத்தும் போகவில்லை. அது சுவேதாவின் மனத்தை வெகுவாகப் புண்படுத்தி விட்டது.

அவள் புறப்பட்டுப் போனபின் வீட்டில் கனத்த மௌனம் நிலவியது. இதுவே சாந்தா வந்து விட்டுப் போனதற்குப் பின் வீடு கலகலப்பாக இருக்கும்.

மௌனமாகவே எல்லாம் நடந்து கொண்டு இருந்தது. லக்ஷ்மியின் நடத்தைக்குப் பின்னால் மனோதத்துவ ரீதியான காரணங்கள் இருக்கிறது என்று சொல்லலாமா என்று நினைத்தான். எப்படிச் சொல்வது என்று புரியவில்லை.

மௌனமாக இரவு டிஃபன் தயாரித்துக் கொண்டிருந்த மனைவியின் அருகில் போய் நின்றான்.

''ஹேய்... நீ இப்படி சைலன்ட்டா இருந்தே என்னைக் கொல்றே!'' என்றான் இறங்கிய குரலில்.

''நான் என்ன சொல்லணும்? எதுக்குச் சொல்லணும்?'' என்றாள்.

''ஹேய்! நீ எனக்காக எங்கக்காவைப் பொறுத்துக்க வேண்டியதுதான். பொறுத்துக்கக் கூடாதா? ரெண்டு அடி வேண்ணாலும் வை... வாங்கிக்கறேன்... இப்படித் தண்டிக்காதே!'' என்றான்.

அவள் அந்த நிமிடம் உடைந்து விட்டாள். அவன் தோளில் சாய்ந்து கொண்டு அழுதாள்.

"அவங்க... அவங்க... ரொம்ப சாப்ட்டா இன்சல்ட் செய்றாங்க..." என்று தேம்பினாள்.

"அப்படியெல்லாம் யோசித்து சாப்ட்டா இன்சல்ட் பண்றதுக்கெல்லாம் அவளுக்குத் தெரியாது!" என்றான் யதார்த்தமாக.

அவன் சொல்ல நினைத்தது திருமணத்துக்குப் பிறகுதான் அவள் மனநிலை மாறிவிட்டது. புகுந்த வீட்டில் அவள் நடத்தப்பட்ட விதம் அப்படி என்று. ஆனால் கவிதா தவறாகப் புரிந்து கொண்டாள்.

"அப்ப உங்க அக்கா யதார்த்தம். நாந்தான் விஷமமா ஒன்னொன்னும் செய்யறேங்கறீங்களா?" என்று மறுபடியும் ஒரு பிடி பிடிக்க ஆரம்பித்தாள்.

'உங்க அக்கா என்ன உசத்தி? எங்க அப்பா அம்மா என்ன தாழ்த்தி? அதென்ன அவ்வளவு கௌரவம்!" என்று கொடி பிடிக்கிற அவளிடம் பேசவே முடியவில்லை.

ஒரு கட்டத்தில் கடுப்பாகி, "ஆமாடி, அப்படித்தான். என் மனுஷங்க அப்படித்தான் இருப்பாங்க. என்ன செய்வியோ செய்!" என்றான்.

"நான் உங்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். உங்க குடும்பத்து வெட்டிக் கௌரவத்தையெல்லாம் தாங்கிக்கணும்கிற அவசியம் எனக்கில்லை. இனிமேல் இன்சல்ட் செஞ்சா நானும் செய்வேன்!" என்றாள்.

அவன் கோபமாக டேபிளின் மேல் இருந்த ஏதோ ஒரு பொருளை எடுத்து வீசிவிட்டு வெளியேறினான்.

வண்டியை எடுக்கிற சத்தம் கேட்டும் அவள் கண்டு கொள்ளவில்லை.



செய்த டிஃபனை அப்படியே மூடி வைத்து விட்டு அவளும் போய்ப் படுத்துக் கொண்டாள். கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

குழந்தை அம்மா வீட்டிலிருந்து வந்ததற்குப் பிறகு அவளுக்கும் உணவு கொடுத்து உறங்கச் செய்தாள். அவள் ஒன்றும் சாப்பிடவில்லை..

இந்த லக்ஷ்மியக்கா வரும்போது இப்படித்தான் ஒவ்வொரு முறையும் ஏதோ ஒரு பிரச்சினை என்று மனசு பொருமியது.

நேரம் பதினோரு மணியைத் தாண்டியும் ராஜேந்திரன் வரவில்லை. அலை பாய்ந்தது மனது. மாமியார் வீட்டுக்கு ஃபோன் செய்தாள். வரவில்லை என்றார்கள்.

சாந்தா வீட்டுக்கு ஃபோன் செய்தாள். அங்கேயும் வரவில்லை என்றார்கள். திகைத்துப் போனாள். கலக்கத்திலேயே இருந்தாள். பதினொன்றரை மணிக்கு ஃபோன் வந்தது. எடுத்தாள். அந்தப் புறத்திலிருந்து செய்தி கேட்டு அதிர்ந்து போய் நின்றாள். உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் உணர்ந்தாள்.




ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் அவர்களுக்குள்ளே வரும் பெரும்பாலான பிணக்குகள் அவர்களால் அல்ல, சுற்றியிருக்கும் உறவினர்களால் வருவது என்று எப்போதோ ஒரு அறிஞர் சொன்னது நினைவு வந்தது ராஜேந்திரனுக்கு.

இந்த அக்காதான் என்ன? தன் மனைவியை மதித்து அவளுடைய அம்மா வீட்டுக்கு ஒரு நடை போயிருக்கக் கூடாதா? கவி கேட்டதிலும் நியாயம் இருக்கிறதே என்று நினைத்து நினைத்து மாய்ந்து போனான்.

வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. உறவினர் எவர் வீட்டுக்கும் போகப் பிடிக்கவில்லை.

நேராக ஈச்சனாரி கோவிலுக்கு வண்டியை விட்டான். போய்ச் சாமி கும்பிட்டு விட்டு வெளியே வந்தான். சற்று நேரம் மண்டபத்தில் அமர்ந்திருந்தான்.

அப்போதைக்கு மனம் தெளிந்த மாதிரி இருந்தது. ஆனால், திரும்ப வரும்போது மீண்டும் குழப்பம் மேலிட்டது.

பேசாமல் இந்த வீடு கட்டும் திட்டத்தைக் கொஞ்ச நாள் தள்ளிப் போட்டு விடலாம் என்று முடிவு கட்டினான். அதற்குப் பிறகு மனம் லேசாகியது.

சுவேதாவுக்கு ஒரு ஸ்கூட்டி வாங்கிக் கொடுத்து கூல் செய்து விட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டு உற்சாகமானான் அந்த சந்தோஷ இடைவேளையில் எதிரே வந்த வேனைக் கவனிக்கவில்லை.

கவனித்து ஒரு வழியாக வண்டியைத் திருப்பி நிறுத்தி விட முயற்சி செய்தான். வண்டி மரத்தில் மோதி நிற்க, அவன் கீழே விழுந்தான். இடது கால் மரத்துக்கும், வண்டிக்கும் இடையே சிக்கிக் கொள்ள, இரத்தம் குபுகுபுவென்று பொங்கியது. அவன் நினைவிழந்தான்.

**பா**லுவின் ஆஸ்பத்திரி!

சுவேதாவின் கண்களில் கண்ணீர் அருவியாய்ப் பொங்கி வழிந்தது.

அவ்வளவு தூரம் இறங்கி வந்து எனக்காகப் பொறுத்துக் கொள்ளக் கூடாதா என்று கெஞ்சினாரே. தான் சமாதானமாகி இருக்கக் கூடாதா? இப்படி அடிபட்டுக் கொண்டு வந்து கிடக்கிறாரே என்று பொங்கிப் பொங்கி அழுதாள்.

லக்ஷ்மியைப் பார்த்தவுடன், ''அக்கா, நாம ரெண்டு பேருமா சேர்ந்துதான் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து படுக்க வச்சுட்டோம். நீங்க பெரியவங்கன்னு நாந்தான் விட்டுக் கொடுத்துத் தொலைச்சிருக்கக் கூடாதா?'' என்று கதறி அழுதாள்.



லக்ஷ்மி திகைத்துப் போய் விட்டாள்.

சாந்தா லக்ஷ்மியை ஒரு பக்கமாக அழைத்துக் கொண்டு போய்த் தங்கள் சகோதரனின் வீட்டில் அக்காவால் ஏற்பட்ட பிரச்சினைகளை எல்லாம் விளக்க, லக்ஷ்மிக்கே ஒரு மாதிரியாகப் போனது.

''அக்கா, அண்ணன் உன்னை விடச் சின்னவங்க.. ஆனா, ஒரு தகப்பன் மாதிரி நமக்கு எல்லாம் செய்யறாங்க. அவரு செய்யணும்னு என்ன அவசியம் இருக்கு? செய்யமாட்டேன், உங்க உறவு வேண்டாம், உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமை அம்மா அப்பாவுக்குத்தான், எனக்கு இல்லேன்னு சொன்னா நாம என்ன செய்ய முடியும்? ஆனா, எவ்வளவு விட்டுக் கொடுக்கறாரு! அதுக்கு நாம என்ன பிரதியுபகாரம் செய்ய முடியும்? குறைஞ்ச பட்சம் அவருக்கு நம்மனாலே சிக்கல்கள் ஏற்படாமயாவது பாத்துக்கணுமில்லே?'' என்றாள் சாந்தா வெகு கோபமாக.

திகைத்துப் போன லக்ஷ்மி ஏதோ சொல்ல வாயெடுக்கு முன் அவளே தொடர்ந்தாள்.

''உனக்கு என்னக்கா, அப்படியொரு கௌரவம்? அண்ணியோட அம்மா, அப்பா வீட்டுக்கு ஒரு நடை போய் வந்தாத் தான் என்ன? இன்னைக்கு அண்ணனுக்குக் கால் கீல் உடைஞ்சு போச்சுன்னா, ஆயுசுக்கும் நாம நிம்மதியா இருக்க முடியுமா? அதிலயும், நீ பெரியவ... நீ பாத்து எல்லாரையும் அனுசரிச்சு நடத்திட்டுப் போகணும். ஆனா நம்ம வீட்டுல சங்கடங்களே உன்னாலதான் ஏற்படுது!'' என்று பொரிந்து தள்ளவும் லக்ஷ்மி சுத்தமாகப் பயந்தே போனாள்.

''என்னடி. நீ கடைசியில எம்மேல் பழி போடறே. எனக்கு மட்டும் ராஜா நல்லாருக்கணும்னு எண்ணம் இல்லையா?'' என்றாள் கண் கலங்கி.

''அது சரி... இனிமேலாவது பாத்து நடந்துக்க!'' என்று போய்விட்டாள் சாந்தா.

பாலு ஐ.சி.யூனிட்டை விட்டு வெளியே வரவும், சுவேதா அண்ணனிடம் ஓடினாள்.

"அண்ணா! ஒன்னும் பயமில்லையே?" என்று அழுதாள்.

அவன் தட்டிக் கொடுத்து ஆறுதல் படுத்தினான்.

"ஒன்னும் பயமில்லைம்மா. நல்ல வேளை கால் சக்கரத்துக்கடியில் சிக்கலை. ஆனா, ஏதோ ஒரு கம்பி கீறி வெட்டுக் காயம் ஒன்னு ஆகியிருக்கு. ஆழமான காயம். ரத்தம் நிறைய வெளியேறிருச்சு... அதான்... மயக்கம்... ஒன்னும் பயப்பட வேண்டாம்!" என்றான்.

ஆழ்ந்த மயக்கத்தில் கிடக்கிற கணவனைப் பார்த்து சுவேதாவுக்கு மனம் தாளவில்லை.

மிகவும் மென்மையானவர். யாரையும் புண்படுத்தக் கூடாது என்று நினைப்பார். சமீப காலமாக வீடு கட்ட வேண்டும் என்பதற்காகத்தானே சிக்கனமாக இருக்கச் சொல்கிறார்.

எல்லாம் என் மகாராணிக்கு ஒரு மாளிகை கட்டிக் குடி வைக்க வேண்டும் என்ற எண்ணம்தான் என்று அவ்வப்போது சொல்வார்.

என்ன? தன் சகோதரிகளை அரவணைக்க வேண்டுமென்று நினைக்கிறார். தப்பென்ன? தனக்கு மட்டும் இந்தச் செய்தி கிடைத்தவுடனே சந்தோஷ்குமார் அண்ணனுக்கு ஃபோன் செய்ய வேண்டுமென்று தோன்றியதே. ஏன்? என்றெல்லாம் பலதையும் எண்ணிக் கொண்டு சோர்ந்து போய் அவனருகில் அமர்ந்து இருந்தாள்.

அறைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். காலைக்குள் மயக்கம் தெளிந்து விடும் என்றார்கள்.

அரைக் கண் உறக்கமும் விழிப்புமாகக் காலை வரை சோர்ந்து இருந்தாள் சுவேதா.



எல்லாரும் காலையில் குளித்து விட்டு வந்து விடுகிறோம் என்று போனார்கள்.. அந்த நேரத்தில் அவர்கள் இருவர் மட்டுமே இருந்தார்கள்.

அவன் மெல்லக் கண்விழித்தான். சூழ்நிலையைப் புரிந்து கொள்ளச் சற்று நேரமாகியது.

தான் ஆஸ்பத்திரியில் இருப்பதையும், தன் மனைவி தேம்பித் தேம்பி அழுவதையும் அவன் புரிந்தும், புரியாதவனாய்ப் பார்த்தான்.

'என்ன... சுவி... என்ன ஆச்சு?' என்றான் மெல்லிய குரலில்.

"ஈச்சனாரி கிட்டே வண்டி மரத்தில் மோதி.. அடிபட்டு... நினைப்பே இல்லாம கிடந்தீங்களாம். நான்... பாவி... என்னாலதான். மனசு சங்கடமாகி அப்படிப் போய்..." என்று விக்கி விக்கி அழுகிற மனைவியை வலக்கையால் அருகில் இழுத்துக் கொண்டான்.

காலில் வலியை உணர்ந்தான். லேசாக முகத்தைச் சுழித்த படி விவரம் கேட்டான். அதற்குள் விஷயம் தெரிந்து பாலுவும் வந்தான். நடந்த விவரங்களைச் சொன்னான்.

பாக்கெட்டில் இருந்த அவனது ஐடென்டி கார்டைப் பார்த்து விட்டு, மேலும் துழாவிப் பாலுவின் விசிட்டிங் கார்டைப் பார்த்து யாரோ ஃபோன் செய்ய, ஈச்சனாரி அருகில் இருந்த நண்பனுக்கு ஃபோன் செய்து காரில் கொண்டு வர ஏற்பாடு செய்தானாம் இதற்கிடையில் எலும்புச் சிகிச்சை நிபுணர் ஒருவரையும் வரவழைத்தான்.

நல்ல வேளையாக எலும்பு முறிவு எதுவும் ஏற்படவில்லை. ஆனால், ஆழமான அந்தக் காயத்துக்கு மட்டும் தையல் போட வேண்டி வந்தது என்றான்.

'சரி... மச்சான்... ஒன்னும் பயப்படாதீங்க. காலைக் கீழே வைக்காதீங்க, மத்தப்படி லேசா அசைக்கலாம். ரெண்டு

நான்தான். அப்புறம் வீட்டுக்குப் போயிடலாம்!'' என்று தனிமை கொடுத்து விலகிப் போனான்.

''நல்ல வேளையா, இதோட போச்சே? வேற ஏதாவது ஆகாம?'' என்று அவன் அலட்டிக் கொள்ளாமல் சொல்ல,

''ஐயோ... சொல்லாதீங்க... ராஜ்...செத்தே போயிருவேன்...'' என்று கலங்கிய மனைவியைச் சமாதானம் செய்தான்.

''நீ கேக்கற கேள்வியெல்லாம் நியாயமானதா இருக்கு. என்னால பதில் சொல்ல முடியாத நிலைமையாய்ப் போச்சேன்னுதான்... சங்கடம்...'' என்று அவன் ஏதோ சொல்ல வர,

'வேண்டாங்க... இனிமே உங்களுக்காக எல்லாத்தையும்... விட்டுக் கொடுக்கத் தயாரா இருக்கேன். நீங்க மட்டும் நல்லா இருந்தாப் போதும்!'' என்று கலங்கினாள்.

'மக்கு... நம்ம ஆயுசு கெட்டிதான். அப்படியெல்லாம் ஒண்ணும் ஆயிடாது. கவலைப்படாதே!' என்று அவன் அவள் நெற்றியில் லேசாக முத்தம் வைக்க அவள் சட்டென்று ரிலாக்ஸானாள்.

'ஒரே டெட்டால் ஸ்மெல்...!' என்று சிரித்தாள். அழுகையும், சிரிப்புமாக உணர்ச்சி வசப்படுகிற மனைவியைப் பார்த்தவுடன் அவனுக்கு ஒரு உண்மை புரிந்தது.

அதே நேரம் -

வாசலில் நிழலாடியது.

திரும்பிப் பார்த்தார்கள். அவள் அண்ணன் சந்தோஷ் குமார் நின்று கொண்டிருந்தான்.

''உள்ளே வரலாமா? டெல்லியில் இருந்து ஃபிளைட்ல வந்தேன்...'' என்று சிரித்தான்.

பிற்பகலில் லக்ஷ்மி வந்தாள்.



''ஏப்பா தம்பி, என்னால வந்த மனசு சங்கடத்துல வண்டி ஓட்டித்தான் இப்படி ஆச்சுங்கறாங்க! உண்மையா?'' என்றாள் உண்மையான வருத்தத்துடன்.

சுவேதாவே இதை எதிர்பார்க்கவில்லை. ராஜேந்திரனுக்கும் அவள் நேரடியாகக் கேட்க எப்படி பதில் சொல்வதென்று தெரியவில்லை. சற்று நேரம் மௌனம் சாதித்தான் பிறகு.

''யாரையும் குத்தம் சொல்லக் கூடாதுக்கா, எனக்கு நேரம் அப்படி!'' என்றான்.

சகோதரன் இல்லை என்று சொல்லவில்லை என்பதை உணர்ந்து கொண்டாள் லக்ஷ்மி.

''சாரிடா, தம்பி. நாங்க பொம்பளைங்க... எங்களுக்கு அன்பில் மட்டும் போட்டி ஜாஸ்தி. நான் ஏதோ உன்மேல எனக்கு அதிகாரம் ஜாஸ்தின்னு காட்டிக்கறதுக்காக இப்படி நடந்துகிட்டேன் போலிருக்கு. உன்மேல் உன் பொண்டாட்டிக்கும் ஒரு உரிமை இருக்கும்கறதையும் அவளை உன் வைஃப்ங்கறதுக்காகவாவது நான் மதிச்சிருக்கணுங்கறதும் எனக்குப் புரியாமப் போச்சு!'' என்றாள். கலங்கிக் கண்ணீர் விட்டாள்.

''ரொம்ப சாரிப்பா, இனிமேல என்னால தொல்லை இருக்காது!'' என்று தழுதழுத்தாள்.

'ஐய்யோ.. என்னக்கா இப்படியெல்லாம் பேசறே?'' என்று அவனும் கண்கலங்கினான். இந்த எதிர்பாராத திருப்பம் கண்டு சுவேதாவே திகைத்துப் போனாள்.

லக்ஷ்மியே தொடர்ந்தாள்.

''இல்லப்பா, ஒரு சின்ன விஷயம் நான் சுவேதாவை மதிச்சு அவங்க அம்மா வீட்டுக்கு ஒரு நடை போயிருக்கலாம். அங்கே போறது என்னமோ தகுதிக் குறைவுன்னு நெனைச்சு நான் போனதுனாலதான் உங்களுக்குள் பிரச்சினை வந்தது. சுவேதா நம்ம வீட்டுப் பொண்ணுன்னு நினைச்சிருந்தேன்னா

நான் கௌரவம் பாத்திருக்கமாட்டேன் இல்ல. கடைசில சின்னப் புள்ளைங்கல்லாம் எனக்குப் புத்தி சொல்ல வேண்டியதாய்ப் போச்சு!'' என்று சிரித்தாள்.

சாந்தா அவசரமாக, 'அக்கா'என்று ஏதோ ஆரம்பிக்க, லக்ஷ்மி கையமர்த்தினாள்.

''இல்லல்லே.. நீ சொன்னது கரெக்ட்தான். கல்யாணமாகிப் போனதற்குப் பிறகு நாம நம்ம எல்லை தெரிஞ்சு நடந்தா ஒரு பிரச்சினையும் இல்லே. இல்லையா?'' என்றாள். சுவேதாவிடம் நெருங்கி நின்றாள். இடக்கையால் அணைத்துக் கொண்டாள்.

''சுவி சின்னப் பொண்ணு. ஆனா, எந்தக் கள்ளமும் இல்லாம, என் வீட்டு விசேஷத்துல எல்லாம் செஞ்சா. ஆனா, நாந்தான் அவளைச் சீண்டிக்கிட்டே இருந்தேன். என் வயசுக்கேத்த மாதிரி நான் நினைக்கல. அது மட்டுமில்ல. நீயும் சின்னவன்தான்.

''சாந்தா சொன்ன மாதிரி ஒரு தகப்பன் மாதிரி நீ எல்லாம் எங்களுக்குச் செய்யறே. அப்ப நாங்க உங்களைச் சந்தோஷமா வச்சுக்கணும் இல்லே. இந்த ஆக்ஸிடெண்டில் மட்டும் ஏதாவது ஆயிருந்தா... ஐயோ... நினைக்கவே பயமாயிருக்குப்பா!'' என்று வெடித்து அழுதாள்.

சுற்றியிருந்த அம்மா, சாந்தா, சுவேதா எல்லாரும் தங்களையும் அறியாது விசும்பினார்கள். சற்று அழுது விட்டுத் தானே கண்ணைத் துடைத்துக் கொண்டு சொன்னாள்.

''இனிமே என்னால உங்களுக்குள்ள பிரச்சின்னை வராது. சுவி, என்னை மன்னிச்சிரும்மா!'' என்று அவள் இரு கைகளையும் பிடித்துக் கொள்ள, சுவேதாவும் மனம் நெகிழ்ந்தாள்.

''மறந்தர்லாம்க்கா... போனதெல்லாம் மறந்தர்லாம் இனிமே விட்டுக் குடுத்து நடந்துக்கலாம்க்கா!'' என்றாள்.

''ஆமாம்மா... அதுதான் நல்லது!'' என்றாள் லக்ஷ்மி.



ராஜேந்திரன் திகைத்துப் போய் அமர்ந்து விட்டான்.

''சரி. நீ கொஞ்சம் ரெஸ்ட் எடு. நீங்கள்ளாம் வாங்க!'' என்று அம்மாவையும் சாந்தாவையும் அழைத்துப் போனாள்.

ராஜேந்திரன் மெதுவாக சுவேதாவைத் திரும்பிப் பார்த்தான்.

''ஏன், சுவி, நாங்க ஆம்பளைங்க ஏதாவது கையைக் காலை உடைச்சுக்கிட்டாதான் நீங்க முழுப் பிரியத்தையும் வெளியே காட்டுவீங்களோ?'' என்று சிரித்தான்.

அவள் சிரிக்கவில்லை. ''உங்களுக்கென்னங்க, சிரிக்கறீங்க. நேத்து நீங்க மயங்கிக் கிடந்த விதம் பாத்து என் உயிரே போயிருச்சு... இப்படி... அந்த நேரத்துல ஈச்சனாரி போக வேன்னா என்ன...'' என்று தேம்பியழ அருகில் இழுத்துக் கொண்டான்.

''சரி... சரி! அழாதே. நீயே ஏதாவது வைத்தியம் பண்ணு. சீக்கிரம் வீடு போய்ச் சேரலாம்... ஓவர் சென்டிமெண்ட்டா... இருக்கு...'' என்று எல்லாவற்றையும் வேடிக்கையாக்க முயன்றான்.

எல்லா அன்பையும் ஒரே நாளில் காட்டி விடுகிற மாதிரி தன் முகம் நோக்கிக் குனிந்து அன்பு மழை பொழிகிற மனைவியிடம் தன்னை ஒப்புக் கொடுத்தான்.




பகலுணவு சாந்தாவின் வீட்டில் இருந்து வந்தது.

சாந்தாவே வந்து பரிமாறிச் சாப்பிடச் செய்தாள்.

பாலுவின் நர்சிங் ஹோம் என்பதாலும், அவனுடைய மைத்துனர் என்பதாலும் அவனுக்கு அங்கே ஏக மரியாதை.

இரவு டிஃபன் எடுத்துக் கொண்டு சந்தோஷ்குமார் வந்தான்.

''என்ன மச்சான், இப்படி ஒரு கலக்குக் கலக்கிட்டீங்க!'' என்றான்.

''பெரிய அடியெல்லாம் ஒண்ணும் இல்லே. இதுக்குப் போயி நீங்க ஃபிளைட் எல்லாம் புடிச்சு வந்திருக்கவே வேணாம்!'' என்றான்.

''மச்சான், என் தங்கச்சி ரொம்ப போல்ட். அவ அப்படி வெடிச்சு அழுது நான் பார்த்ததில்லே. அந்த அழுகைக்கப் புறம் ஒரு நிமிஷம் கூட என்னாலே டெல்லியில உட்கார்ந்து கிட்டு இருக்க முடியலே. யார் யாரையோ பிடிச்சு டிக்கெட் அரேன்ஜ் பண்ணி வந்தேன்!'' என்றான்.

ராஜேந்திரனின் பார்வை மனைவி மேல் படிந்து மீண்டது. அவள் அவசரமாக ஏதோ வேலையிருப்பது போல் வெளியே போனாள்.

''ஐயோ, இந்த லேடீஸ் பண்ற கலாட்டா இருக்கே... ஆனா, அது இல்லாமயும் நம்மளாலே இருக்க முடியலே... இல்லே?'' என்று ராஜேந்திரன் சிரித்தான்.

மீண்டும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள்.

''எதுக்கு டென்ஷன்? ஓவர் ஸ்ட்ரெயின். பண்ணிக்கிறீங் களோ? ஏதாவது பிளான் வச்சிருக்கீங்களா? என்ன?'' என்றான் சந்தோஷ்குமார்.

'அதெல்லாம் ஒண்ணுமில்லே மச்சான். உங்க வீட்டுக்குப் பக்கத்துலயே பிளாட் ஒண்ணு கிடைச்சது. வாங்கி யிருக்கேன். கொஞ்சம் செலவு ஜாஸ்தியாப் போச்சு. இன்னும் சுவேதாவுக்குச் சொல்லலே. சர்ப்ரைஸா வச்சிருக்கேன். ஃபைனான்ஷியல் ஸ்ட்ரெஸ்னால கொஞ்சம் டென்ஷன். அதனால பணத்துக்குக் கணக்குப் பார்க்கும் போது எனக்கும் அவளுக்கும் பிரச்சினையாயிருது சீக்கிரம் சரி பண்ணிக் கறேன்!'' என்றான் குற்ற மனப்பான்மையுடன்.



''எந்த இடத்துல?''

''அடுத்த தெருவில.''

''ஓ! மச்சான் இதைப்பத்தி நாம உட்கார்ந்து டிஸ்கஸ் செய்வோம். அநேகமா நான் டெல்லிப் பக்கம்தான் செட்டில் ஆவேன்னு நினைக்கிறேன்!'' என்று இழுத்தான் சந்தோஷ் குமார். ராஜேந்திரன் சந்தோஷ்குமாரை ஆழமாகப் பார்த் தான்.

''மச்சான், என்னவோ விஷயம் இருக்கு!'' என்றான்.

சந்தோஷ்குமார் முகம் சிவந்து போனது. ராஜேந்திரன் கைகளைக் கொட்டிச் சிரித்தான்.

''அட்ரா சக்கை!'' என்றான்.

''மச்சான், ப்ளீஸ்!'' என்று அவன் மேலும் வெட்கப் படவும், அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

''ஓ...கே! ஓ...கே! இதெல்லாம் நேச்சரல்தான். சொல்லுங்க. பொண்ணு யாரு?'' என ஆர்வமாகக் கேட்டான்.

''பொண்ணு... பொண்ணு... தமிழ்ப் பொண்ணுதான் நம்ம... கம்பெனிலதான் வேலை செய்யுது....''

''ஓ....! நல்லதாப் போச்சு.''

''அது மட்டுமில்லே மச்சான்... நம்ம ஊரு... சுற்றி வளைச்சு நம்ம சொந்தமும் கூட!'' என்றான் தயக்கமாய்.

''ஓ...! அப்ப ரொம்ப நல்லதாப் போச்சே!''என்றான்

''இல்லே! அதுதான் சிக்கலே...''

''ஏன்?''

''பொண்ணு யாருன்னு சொன்னா... புரிஞ்சுப்பீங்க...'' என்றான்.

''யாரு?''

சொன்னான்.

உடனே ராஜேந்திரன் முகம் மாறியது முகத்தில் பெரும் கவலை மண்டியது.

'சிக்கல்தான்...!' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டவனாய் சந்தோஷ்குமாரை நேரடியாகப் பார்க்காமல் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இரவு உணவு உண்ணும்போதும் பாலு வந்து செக்கப் செய்து விட்டுப் போகும் போதும் தனக்குள்ளேயே மௌனத்தில் ஆழ்ந்திருந்தான்.

"என்ன, சுவி, மச்சான் ரொம்ப யோசனையிலேயே இருக்கறாரு?" என்று பாலு விசாரித்தபோது கூடச் சிரித்து மழுப்பிவிட்டான். பேச்சை மாற்றி -

"ரூம் ரெண்ட் எல்லாம் பாத்து கொஞ்சம் அளவாய்ப் போடுங்க!" என்று கிண்டலில் இறங்கினான்.

"உங்களுக்கு ரூம் ரெண்ட் போடற அளவுக்கு நான் ஒண்ணும் பெரிய மனுஷன் ஆகிடலப்பா... அப்படியே போட்டேன்னு வச்சுக்கங்க.. உங்க சிஸ்டர்... வீட்ல எல்லாத்துக்கும் பில் போட்டுருவா!" என்றான்.

இருவரும் சிரித்தார்கள். அப்போதுதான் ராஜேந்திரன் விளையாட்டாய் அந்த யோசனையைச் சொன்னான்.

"மச்சான்! சாந்தா ரொம்ப கெட்டிக்காரி. பேசாம நீ அவளை அட்மினிஸ்ட்ரேடிவ் ஆஃபீசராப் போட்டீங்கன்னு வச்சுக்குங்களேன். உனக்கு ரொம்ப ஹெல்ப்பாயிருக்கும்!" என்றான்.

'அட! இது எனக்கு ஏன் தோணாமப் போச்சு? வீட்ல போரடிக்குதுன்னு ஒரே புலம்பல்தான்!' என்றான்.

தான் சொன்னதை அவன் சீரியஸாய் எடுத்துக் கொண்டதைக் கண்டு ராஜேந்திரன் மகிழ்ந்து கொண்டான்.



எல்லாரும் கிளம்பிப் போன பிறகு அவனும் சுவேதாவும் மட்டும் இருந்தார்கள்.

"என்னங்க... ஒரே யோசனையா இருக்கீங்க..." என்றாள் சுவேதா..

"ஒண்ணுமில்லே!" என்றான்.

"எங்கண்ணன் வந்துட்டுப் போனதுக்கப்புறம்தான் இப்படி இருக்கீங்க. நம்ம லக்ஷ்மியக்கா விவகாரம் ஏதும் பேசினீங்களா?" என்றாள் கவலையுடன்..

"சேச்சே! அதெல்லாம் இன்டர்னல் பாலிடிக்ஸ். அதைப் போயி மச்சான்கிட்டே சொல்வேனா?"

"அதானே! நான் இதையெல்லாம் வீட்ல பேசறதில்லை. என்ன இருந்தாலும் என்னை ஏதாவது சொன்னா அவருக்கு வருத்தமாகும் இல்லே...?" என்றாள்.

"அது கரெக்ட்தான். இந்த அண்ணன் தம்பிகளா இருக்கறதே கஷ்டமான வேலைதான். பாசத்துக்கும், நியாயத்துக்கும் இடையில் அவதிப்படணும்!" என்றான்.

"ஐயோ போதுமே! அதே லக்ஷ்மியக்கா... பாசத்துக்காக எப்படித் தன்னோட ஸ்டாண்ட்ல இருந்து... இறங்கி... வந்து மன்னிப்புக் கேட்டாங்க... மறந்துட்டீங்களே?"

"நல்லா... ஆச்சு...போ... இப்ப நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்து கிட்டீங்களா! எப்படியோ, மூணே மாசத்துல மறுபடியும் பிரச்சினை பண்ணாம இருந்தீங்கன்னா சரி...!" என்று சிரித்தான்.

'போதும்... சார் பேச்சை மாத்தாதீங்க!"என்று அவன் எதிர்பாராத பரிசு ஒன்று கொடுத்து நிமிர்ந்தாள் சுவேதா.

அவன் பார்வை மாறியது.

"ஹேய்! வீட்லயானா கெஞ்சிகிட்டு நிக்கணும். இங்க என்ன, இப்படி இலவசமாக் கிடைக்குது..." என்றான் கிறக்கக் குரலில்.

அவள் ஒரு நிமிடம் மௌனமானாள். பிறகு, "இப்பத்தானே தனிமை கிடைச்சிருக்கு. அதான்..." என்றாள்.

அவன் தொடர்ந்து அப்படியே பார்க்கவும், "இது ஆஸ்பத்திரிங்க... சார். முதல்ல டாக்டர் சொல்றபடி கேட்டுக் காலைச் சரிபண்ணிகிட்டு வீடு வந்து சேருங்க..." என்றாள்.

"அப்ப... இனிமே... கேட்கறதெல்லாம் கிடைக்குமா?" என்று அவன் மேலும் தொடர.

"அது இருக்கட்டும். அப்படி என்ன எங்கண்ணன் கிட்டே இன்டர்நேஷனல் பாலிடிக்ஸ் பேசினீங்க?" என்றாள்.

"அதுவா...?" என்ற ராஜேந்திரன் தலையணையைச் சரிப்படுத்திக் கொண்டு படுக்கையில் சாய, அவன் காலைச் சரியாக வைக்க உதவி செய்தாள்.

"ஹேய்... சுவி...! உங்கண்ணன் வெட்கப்படும்போது பாக்க ரொம்ப அழகா இருக்குது!" என்றான்.

சுவேதா ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"எங்கண்ணா வெட்கப்பட்டாரா? எதுக்கு...?" என்றாள்.

"சொல்றேன்... பொறு. ஆனா, இன்னைக்கு இல்லே!" என்று திரும்பிப் படுக்கவும் சுவேதா அவன் முதுகைப் பார்த்த வண்ணம் எதிர்ப் படுக்கையில் படுத்தாள்.

அவ்வளவுதான். இனி எப்படிக் கேட்டாலும் விஷயம் பெயராது என்று அவளுக்குத் தெரியும்.

* * *

சந்தோஷ்குமார் அங்கே உறக்கம் வராமல் அவதிப் பட்டுக் கொண்டிருந்தான்.

சுவேதாவின் குழந்தை அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு படுத்து உறங்கியிருந்தாள். குழந்தையின் முகத்தை ஆசையாய்ப் பார்த்தான்.

தொடுவதற்கு மிருதுவாக இருந்த அந்தக் கன்னங்களில் அழுந்த முத்தம் வைத்தான்.



குழந்தை...! எவ்வளவு அற்புதமான படைப்பு. இப்படிக் கழுத்தைக் கட்டிக் கொண்டு உறங்குகையில் எவ்வளவு சுகமாக இருக்கிறது. அவனுக்கு மோகனாவின் நினைவு வந்தது. அவளும் மென்மையானவள்தான். ஆனால், மென்மை யானவள் என்று சொன்னால் யாரும் நம்ப முடியாத சூழ்நிலை அவளுக்கு.

மனிதர்கள் சில நேரங்களில் சூழ்நிலைக் கைதிகள் ஆகி விடுகிறார்கள் என்பது எவ்வளவு உண்மை!

மைத்துனரிடம் அவசரப்பட்டுச் சொல்லியிருக்க வேண் டாமோ என்று தோன்றியது. ஆனால், ராஜேந்திரன் மிகவும் பொறுப்பானவன், இளம் வயதிலேயே குடும்ப பாரத்தைச் சுமந்தவன். அப்படியெல்லாம் சட்டென்று போட்டு உடைக்க மாட்டான். ஆனால், அவனே மோகனாவின் பெயரைச் சொன்னதும் திகைத்துப் போய்விட்டான். மற்றவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களோ?

அம்மாகூட இன்று நேரடியாக இல்லாமல் குழந்தை ஐஸ்வர்யாவிடம் கேட்டாள்.

"ஐஸுக்குட்டி, மாமாகிட்டே அத்தை எப்ப வரப்போறாங் கன்னு... கேளு," என்றாள்.

ஐஸ்வர்யா உடனே மாமா, அத்தை எப்ப வர்றாங்கன்னு... பாட்டி கேட்கறாங்க... என்றாள்.

"எனக்கே தெரியலியேம்மா. எந்தக் கடையிலும் கிடைக்க லியே. கிடைச்சா வாங்கிட்டு வந்திருப்பேன்..." என்று சிரித்தான்.

"ஐயோ.... போங்க... மாமா... அத்தை கடையில எல்லாம் கிடைக்காது. நீங்க... கல்யாணம் பண்ணிகிட்டு வரணும்," என்று ஐஸ்வர்யா கைகொட்டிச் சிரித்தாள்.

அவன் குழந்தையை மடியில் அமர்த்திக் கொண்டு, 'உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டான்.

"டி.வி.யில் கதையில பாக்கறனே!" என்றாள். "வேறே என்னென்ன பாக்கறே?" என்று அவன் பேச்சை மாற்றினான்.

"ம்...டி.வி.யிலே ஒரு பொம்மை வருதே... அது எனக்கு வாங்கித் தர்றீங்களா? அப்புறம் ஃபைவ் ஸ்டார் சாக்லேட்..." என்று குழந்தை அவளுடைய உலகத்துக்குப் போனாள்.

குழந்தையுடன் அளவளாவியது அவன் மனதுக்கு இதமாக இருந்தது. அவன்தான் நேற்றிலிருந்து குழந்தையைத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டான்.

"மாமா... நீங்க அப்பா... மாதிரியே... அப்பாதான் என்னைக் குளிக்க வைப்பாங்க... எல்லாம்... வாங்கித் தருவாங்க..." என்று பெரிய பாராட்டும் கொடுக்கவே இன்னும் மனம் மகிழ்ந்தான்.

உள்ளுக்குள்ளேயோ வரப் போகிற பூகம்பத்தை நினைத்து மருண்டு போனான். அதை மறப்பதற்கோ என்னவோ குழந்தையை இறுகக் கட்டிக் கொண்டு உறங்கினான்.

## 8

"ஹேய்! சந்தோஷ்! நியூஸ் ஃபார் யூ... உங்க ஊர்ப் பொண்ணாம்டா, இங்கே வேலைக்கு வர்றாப்லே!" என்று தன் கம்பெனியில் உடன் வேலை செய்கிற ராகேஷ் சொன்னபோது அவன் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

"யாரோட ரெஃபரன்ஸ்?" என்று இயல்பாக எழுகிற ஆர்வத்துடன் கேட்டான்.

"சிநேகாவோட ரெஃபரன்ஸ்," என்று ராகேஷ் சொல்லவும் சாதாரணமாகக் கேட்டுக் கொண்டான். ஆனால், மோகனா கடைசியில் ராகேஷின் பிரிவுக்கே வேலைக்கு வந்து சேர்ந்தாள்.

ரொம்பவும் அமைதியாக இருந்தாள். யாரிடமும் நெருங்கப் பயந்தவளாக இருந்தாள். தனிமை விரும்பியாக இருந்தாள். ஆனால், ராகேஷ் அதற்கு நேர் எதிரிடையாக இருப்பவன்.



தமிழ் தெரியும்.

"என்ன... நீ... பேச மாட்டேங்கறே?"

"ஃபீல் ஃப்ரீ... கம் அவுட் யார்!" என்று விதவிதமாக அவளை உற்சாகப் படுத்தினான்.

ஒரு சகோதர பாசத்துடன் பழகினான். தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று மனைவியிடம் அறிமுகப்படுத்திப் பழகச் செய்தான்.

மெதுமெதுவாக...அவளுக்குள்ளே யிருந்த திறமைகளை அவளுக்கே புரியச் செய்தான். அதோடு மட்டுமில்லாமல் அடிக்கடி அவளிடம்,

"நம்ம சந்தோஷும் வந்தப்ப இப்படித்தான் இருந்தான்.... இப்பப் பாரு, பெரிய மானேஜர் ஆயிட்டான். நீயும்... அப்படி வருவே!" என்று உற்சாகப்படுத்தினான்.

ஒரு நாள் சந்தோஷ்குமாருக்கும், அவளுக்கும் தங்கள் வீட்டில் விருந்தளித்தான். அப்போதுதான் சந்தோஷ்குமார் அவளை நேராகப் பார்த்தான். உறவுக்காரர்கள் பற்றியெல்லாம் விசாரித்தான். அப்போது அவள் சொன்னாள்.

"சொந்தக்காரங்க வீட்டுக் கல்யாணங்கள்லே உங்களை நான் பாத்திருக்கேன்!" என்றாள்.

"ம்... அப்படியா? உங்க பேரண்ட்ஸ் பேர் சொல்லுங்களேன்," என்றான்.

"வேண்டாம்... சார்... எங்க குடும்பம் பத்திக் கேட்டீங்கன்னா... பயந்துடுவீங்க..." என்றாள் லேசான கலக்கத்துடன்.

"யு.ஸீ... வி...ஆர் கோயிங் டு பி ஃப்ரெண்ட்ஸ். ஃப்ரெண்ட்ஷிப்புக்கு அந்த மாதிரி எந்தப் பயங்களும் தேவையில்லை!" என்று தேற்றினான். அதன் பிறகுதான் அவள் தன் பெற்றோர்கள் யார் என்று சொன்னாள்.

"ஓ! ராமசாமி மாமா பொண்ணா நீங்க... பொன்னம்மா... அத்தை... சரி... சரி... எனக்குத் தெரியும்," என்று லேசு போலச் சொல்லி விட்டு வேறு விஷயங்களுக்குத் தாவினான்.

எப்படிப் புதிய இடத்தில் வேலை பழகிக் கொள்வது என்பது பற்றி யெல்லாம் விளக்கினான். அதற்குப் பிறகு கலகலப்பாகப் பேச ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் மோகனா வின் குடும்பத்தின் சிக்கல்கள் அவனுக்கும் தெரியும்.

மோகனாவின் அண்ணன் பிரபு ஊரில் பெரிய ரௌடி என்று பெயர் எடுத்திருந்தான். தாயார் பொன்னம்மா எந்த விசேஷத்துக்குப் போனாலும் அங்கே சண்டை கிளப்பி விட்டுத்தான் வருவாள். அப்பா ராமசாமியும் பொறுமை யில்லாத சுபாவத்தவர்தான். குடும்பமே சண்டைக்காரக் குடும்பம் என்றுதான் பெயர் எடுத்திருந்தது.

மோகனாவின் சகோதரி பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டுத் தனது முப்பதாவது வயதில் காதல் கல்யாணம் செய்து கொண்டு வெளியேறினாள். பிரபுவுக்கு ஒரு ஏழை வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வந்தார்கள். அவளோடும் தினமும் சண்டைதான்.

இந்தச் சூழ்நிலையிலிருந்து தப்பித்தால் போதும் என்று மோகனா பெரும்பாலும் தோழிகள் வீட்டில்தான் படிப்பாள். நன்றாகப் படிப்பாள். கம்ப்யூட்டர் கோர்ஸ் முடித்து விட்டுச் சென்னைப் பக்கம் வேலை கிடைத்தது என்று அங்கே போனாள். அப்போதும் வீட்டினர் தொல்லை தாங்காத நிலைமை இருந்தது. அடிக்கடி சென்னை வந்து விடுவார்கள்.

அதனால்தான் டெல்லியில் வாய்ப்புக் கிடைத்தவுடனேயே ஓடி வந்து விட்டாள்.

ஓரிரு சந்திப்புகளிலேயே அவள் நிலைமையைப் புரிந்து கொண்டான். அவன் மனதில் அனுதாபம் பிறந்தது. அன்புக்கு ஏங்கும் அவள் மேல் அவனுடைய இதயத்தில் அன்பு



பிறந்தது. "சுவிக் குட்டி... சுவிக் குட்டி!" என்று தன் தங்கையைப் பற்றி வாஞ்சையாய் அவளிடம் பகிர்ந்து கொள்வான். சுவேதாவுக்குப் புடவைகள் செலக்ட் செய்ய ஓரிரு முறை அவளை அழைத்துப் போனான். பிறகு அப்படியே ஹோட்டலுக்கு அழைத்துப்போனான். அப்போது மௌனமாக அமர்ந்திருந்த மோகனாவிடம் -

"க்யா ஹுவா... மேடம்?" என்றான் விளையாட்டாக.

அந்தக் கணம் அவள் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டுக் கீழே பார்த்தபடி அமர்ந்து கொண்டாள்.

"அவுட் வித் இட்... மேடம்!" என்றான்.

"இல்லே... சுவேதா ரொம்ப லக்கி... இல்லே? இப்படி யெல்லாம் பிரியம் காட்டணும்னு பிரபுவுக்கு ஒரு நாளும் தோணினது இல்லே!" என்றாள்.

சந்தோஷ் திகைத்து விட்டான்.

"அப்படி நினைக்காதீங்க... மோனா... வெளிய காட்டாத தனாலேயே பிரியம் இல்லேன்னு... ஆயிடாது.." என்றான்.

அவள் சோகமாய்ச் சிரித்தாள். "அப்படித்தான்... நினைச்சு... சமாதானம்... பண்ணிக்கணும்..." என்றாள். முகம் வாடி விட்டது.

அவன் சட்டென்று நகைச்சுவைக்குத் தாவினான்.

"சியர்... அப்... மேடம்... ஆஸ்... எ பிரண்ட் நாந்தான்... சேத்துப் பிரியம் காட்டறனே... போதாதா?" என்று தேற்றினான்.

"உண்மையிலேயே... நீங்களும்...ராகேஷ் அண்ணாவும் தான் உண்மையான பிரியம்னா... என்னன்னு எனக்குப் புரிய வைக்கறீங்க..." என்றாள்.

அவன் நெகிழ்ந்து விட்டான். அதற்குப் பிறகு அவனும் அவளுக்குப் பரிசுகள் வாங்கிக் கொடுக்க ஆரம்பித்தான். அவளும் அவ்வப்போது பரிசுகள் வாங்கிக் கொடுத்தாள்.

ஒருநாள் விளையாட்டாக, "மோனா, உலகத்துல இருக்கற எல்லாப் பிரியத்தையும் உன் மேலே கொட்டற மாதிரி... மாப்பிள்ளையாப் பாத்திரலாம்... என்ன?" என்றான்.

"ஆமா... இனிமே வலை போட்டுத் தேடித்தான் பிடிக்கணும்... ஏன்னா.... எங்க குடும்பத்தைப் பத்தித் தெரிஞ்ச யாருக்கும்... என்னைக் கல்யாணம் பண்ற தைரியம்... வராது.. நான் இப்படியே இருந்துட்டுப் போறேன்!" என்றாள். அந்த வார்த்தைகளில் ஏதோ மறைமுகமான செய்தி இருக்கிறாற் போல் உணர்ந்தான்.

'உனக்கு முதல்ல அந்தத் தைரியம் இருக்கிறதா?' என்று கேட்கிறாற் போல் இருந்தது.

அன்றிரவு சந்தோஷ்குமாருக்கு உறக்கம் வரவில்லை.

இரண்டு மூன்று நாட்களாகவே ராகேஷின் பிரிவுக்கு நேரடியாக வருவதைத் தவிர்த்தான் சந்தோஷ் - முதல்நாள் ராகேஷுக்கு அது தோன்றவே இல்லை. இரண்டாவது நாள் லேசாகப் புரிய ஆரம்பித்தது. மூன்றாம் நாள் ஏதோ வித்தியாசம் என்பதை உணர்ந்து கொண்டான். அன்று மாலையே அவனே புயல்போல் சந்தோஷின் கேபினுக்கு வந்தான்.

"அரே, க்யா ஹுவா யார்? வொய் திஸ் ஹைட் அன்ட் சீக்?" என்று கேட்டான்.

சந்தோஷ்குமார் அவன் முகத்தை ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்து பார்த்தான். உட்காரச் சொல்லிச் சைகை காட்டினான். ராகேஷும் அமர்ந்தான்.

"உன்கிட்ட பேசணும்..." என்றான்.

"ஆமா, நானும் யோசிச்சேன். உன்கிட்டே பேசணும்..." என்றான் சந்தோஷ்குமார்.

ஹோட்டல் ஒன்றுக்குப் போனார்கள். அப்போது நடந்த விவரங்களைச் சொன்னான் சந்தோஷ்... ராகேஷும் தீவிர யோசனையில் ஆழ்ந்தான்.



"சேம் காஸ்ட். ரிலேடிவ்ஸ். அப்புறம் இன்னா?" என்றான்.

சந்தோஷ்குமார் அவளது குடும்பப் பிரச்சினைகளைச் சொன்னான். ராகேஷ் அதற்குப் பதிலாகத் தெளிவான ஒரு கேள்வியைக் கேட்டான்.

"நீ மோனாகிட்டே ஏதாவது குறை கண்டியா? ரொம்ப நல்ல பொண்ணு. காம் லைஃப் வேணும்னுதானே இவ்வளவு தூரம் வந்திருக்கு? ஷி டிசர்வ்ஸ் காம் லைஃப் நீ யோசிச்சக்கோ!" என்றான்.

"எனக்குத் தெரியும், மோனா ரொம்ப டீசன்ட்டான பொண்ணுன்னு. ஆனா... எங்க ஃபேமிலியைக் கன்வின்ஸ் பண்றது கஷ்டம்!" என்றான் கவலையுடன்.

"பிராப்ளம் அது இல்லே, டு யூ லைக் ஹர் ஆர் நாட்..." என்று நேரடியாகக் கேட்டான் ராகேஷ்.

சந்தோஷ் முகம் சிவக்க, "ஐ திங்க் ஐ லைக் ஹர்!" என்றான்.

"அப்புறம் இன்னா? நல்ல பொண்ணு. யு லைக் ஹர். மத்லப் கி பாத் கரோ... மேன். டாக் டு யுவர் பேரண்ட்ஸ். கன்வின்ஸ் தெம்!" என்றான்.

"செய்யணும்... அதுதான் எப்படின்னு புரியலே..." என்றான் சந்தோஷ்குமார்.

"தட்ஸ் யுவர் ஹெட் ஏக். எப்படியோ பண்ணு. அதுக்கு முதல்லே...மோனா கிட்டே பேசு மேன். ஒஹ் ஹோ... அதுதான் ரண்டு மூணு நாளாவே மோனாவும் மூடியா இருக்கா?" என்றான்.

அவனே மோனாவின் செல்ஃபோன் எண்களைச் சுழற்றினான்.

"ஹலோ பெஹன்... சந்தோஷப் படற மாதிரி ஒரு விஷயம் இருக்கு. பையன் உன் கிட்டே பேசணுமாம். எந்தப் பையனா? சந்தோஷ் பயல்தான். ரெடியா இருங்கோ... பெஹன், ஹி வில்

கம் அண்ட் பிக் யு அப்!'' என்றான். ஆஃப் செய்து விட்டுக் கலகலவென்று சிரித்தான்.

''போங்கடா. எங்கேயாவது ஹோட்டல் கூட்டிட்டுப் போ, சார்ட் திங்ஸ் அவுட் அண்ட் கம்!'' என்றான். ஆனால், சந்தோஷ் கோவிலுக்கு அழைத்துப் போனான் பிறகு ஓட்டலுக்குப் போனார்கள்.

''மோனா... அன்னைக்குச் சொன்னயே... எங்க குடும்ப விஷயம் தெரிஞ்சும் என்னை யார் கல்யாணம் பண்ணிக்கு வாங்க.. அப்படின்னு... எல்லாம் தெரிஞ்ச ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கேன்!'' என்றான்.

அவள் முகத்தில் சற்றே ஏமாற்றம் தெரிந்தது.

''வேண்டாம்... சந்தோஷ்... விட்டுடுங்க. எனக்கொண்ணும் கல்யாணத்துல பெரிய இன்ட்ரஸ்ட் இல்லை.''

''ஆனா... எனக்கிருக்கே!''என்றான் குறுஞ்சிரிப்புடன்.

'வ்வாட்?' என்று அவள் அதிசமாய்ப் பார்க்க -

''அட... ஆமா... நிஜந்தான்...'' என்றான். அவளுக்குப் புரிய ஒருநிமிடமானது. முகம் மலர்ந்தது. அடுத்த வினாடியே கூம்பியது.

''வேண்டாங்க... உங்க வீட்ல ஒத்துக்க மாட்டாங்க...'' என்றாள் கலங்கிய கண்களுடன்.

அவன் சிந்தனையுடன், ''ஆமா... அது ஒரு பிரச்சினை தான். ஆனா... ஏதோ ஒரு காரணம் சொல்ல வேண்டியது தான்...'' என்றான். சிரித்தான்.

அவள் சிரிக்கவில்லை.

''என்ன காரணம் சொல்வீங்க?'' என்றாள்.

''சொல்ல வேண்டியதுதான். நோன் டெவில் இஸ் பெட்டர் தேன் அன்நோன் டெவில்!'' என்று கலகலவென்று சிரித்தான்.



அவள் முகத்தில் புன்னகை அரும்பியது. பிறகு மெதுவான குரலில், ''சந்தடி சாக்கில டெவில்னுட்டீங்க...'' என்றாள்.

''பின்னே? எடுத்தவுடனே தேவதைன்னு சொல்லீர முடியுமா? தொகுதி நிலவரம் தெரிஞ்சுக்கிட்டுத்தானே வேட்பாளர் களம் இறங்கணும்? டெபாசிட் போயிரக் கூடாதில்லே...'' என்று சிரித்தான்.

''அன்னப்போஸ்டா ஜெயிக்கறவங்களுக்கு... பயம் எதுக்காம்?''என்றாள் சற்றே வெட்கத்துடன்.

அவள் வார்த்தைகளின் பொருள் முழுமையாக அவன் மனதில் இறங்க, அவளை விழுங்குகிறாற்போல் பார்த்தான்.

''தாங்க்ஸ்... மோனா...'' என்றான்.

அவள் அவனை நேரடியாகப் பார்க்காமல், ''நாந்தான்... தாங்க்ஸ்... சொல்லணும். சின்ட்ரெல்லாக்களுக்கு இளவரசர்கள் நன்றி சொல்வதில்லை...!'' என்றாள்.

அவனிடமிருந்து பதில் வராமல் போகவே அவள் நிமிர்ந்து பார்த்தாள்.. அவன் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை தெரிந்தது.

''நீ முதல்ல இந்தக் காம்ப்ளெக்ஸை விடணும் மோனா. நீ சின்ட்ரெல்லாவும் இல்லே. நான் இளவரசனும் இல்லே. உன்னுடைய சூழ்நிலைகள் சரியா அமையலேங்கறது உன்னோட தப்பில்லே. ஆனா, அத்தனைக்கும் நடுவிலே, நீ இந்த உயரத்துக்கு வந்திருக்கியே. அதுதான் முக்கியம். உனக்குள்ளே இருக்கற இயல்பான சுபாவங்களைப் பெட்டிக்குள்ளே போட்டு மூடி வச்ச மாதிரி இருக்கே. போதும். அதெல்லாம் விட்டுட்டு... வெளியே வா... ரெண்டு பேரும் சேர்ந்து பேரண்ட்ஸை கன்வின்ஸ் பண்ணலாம். என்ன?'' என்றான்.

அவள் மௌனமாகத் தலையாட்டினாள். கண்களில் இருந்து மட்டும் கண்ணீர் கரகரவென்று இறங்கியது.

''ஹேய்... என்ன இது?'' என்று பதறிப்போய்ச் சுற்று முற்றும் பார்த்தான். நல்ல வேளையாகக் கடைசி கேபினில் ஏ.சி. அறையில் இருந்தார்கள். யாரும் கவனிக்கவில்லை.

"மோனா... ப்ளீஸ்..." என்று அவளது இரு கரங்களையும் பற்றிக் கொண்டான். பிறகு சட்டென்று கையை எடுத்துக் கொண்டான்.

"கவலைப்படாதீங்க... இது சந்தோஷக் கண்ணீர்தான்..." என்றாள். பின் சிரித்தாள்.

வழியில் தன்னுடைய அபார்ட்மெண்டுக்கு அழைத்துப் போய்க் காண்பித்தான். மூன்றே அறைகள் உள்ள சின்ன போர்ஷன். ஆனால், அழகாக வைத்திருந்தான்.

ஐந்தே நிமிடங்களில், "நேரமாயிருச்சு. மோனா... வா... கொண்டு விட்டுர்றேன்," என்று கிளம்பினான்.

"சந்தோஷ்...!" என்றாள். தயங்கி நின்றாள். லேசான தயக்கம் மற்றும் ஒருவித எதிர்பார்ப்புடன் அவன் நிற்க... அவன் மார்பில் அடைக்கலம் புகுந்தாள். வெடித்து அழுதாள். அவன் அழ விட்டான். தலையைக் கோதிக் கொடுத்தபடி நின்றான்.

மெல்ல விசும்பல் அடங்கியது. "வாஷ் பேசின்... அங்கே...!" என்றான். அவள் முகம் கழுவி வந்த பின் தன் வலக்கையால் அவள் முகம் நிமிர்த்தி -

"இனிமேல்... நோ... அழுகை... என்ன?" என்றான். நெற்றியில் லேசாக இதழ் பதித்து நிமிர்ந்தான்.

காரில் போகும்போது மட்டும், "மோனா! அவனவன் ப்ரபோஸ் பண்ணும்போது என்னென்னமோ ரியாக்ஷன் பாத்திருப்பான். ஆனா... இப்படி ஒரு ரியாக்ஷன்..." என்று கலாட்டா செய்து சிரித்தான்.

அவள் வெட்கத்துடன் வெளியே பார்த்துக் கொண்டு வந்தாள். அதற்குப் பிறகு அவ்வப்போது வாய்ப்பேச்சு பேசுவான். கிண்டல் செய்வான். ஃபோனில் வம்பு பேசுவான். ஆனால், தொட மட்டும் மாட்டான்.

இத்தனையையும் வடிகட்டியும், சேர்த்தும் தனது மைத்துனரிடம் சொல்லி முடித்தான்.



"மச்சான்... நம்முளுதை விட உங்களது ரொம்ப இன்ட்ரஸ்டிங்... ஸ்டோரி..." என்று சிரித்தான் ராஜேந்திரன்.

"உங்களைத்தான்... நம்பியிருக்கேன்!" என்றான் சந்தோஷ் குமார்.

"நோ... பிராப்ளம்... மச்சான்... நான் பாத்துக்கறேன்... என்ன...? பொன்னம்மா பெரியம்மாவைச் சரி பண்றது ஏதோ... செய்வோம்... நீங்க தைரியமா டெல்லி போங்க..." என்று உறுதி கொடுத்தான் ராஜேந்திரன்.

"மச்சான்! இந்தக் காலம் பொற்காலம் மாதிரி பின்னாடி நினைச்சுப் பாத்து ரசிக்கக்கற மாதிரியான கால கட்டம். என்ஜாய் யுவர் செல்ஃப்!" என்று மறுபடியும் சிரித்தான்.

"மச்சான்... ப்ளீஸ்..."என்று சந்தோஷ்குமார் வெட்கப்படுவதை ரசித்துப் பார்த்தான். பிறகு.

"ஏன் மச்சான்... மோனா... இதை உங்ககிட்ட சொல்லலியா?" என்றான்.

"எதை?" என்றான் விசித்திரப் பார்வையுடன்.

"உங்க... முகம் சிவந்து போகும்போது ரொம்ப அழகா இருக்கீங்க... அப்படீன்னு!" என்றான்.

"ஐயோ... என்ன...நீங்க?" என்று சட்டென்று எழுந்து நின்றான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

ராஜேந்திரன் உறுதி கொடுத்து விட்டானே தவிர, எப்படி முடிக்கப் போகிறோம்... என்ற பெருங்கவலை அவனைச் சூழ்ந்து கொண்டது.




"தொழில் வேற... உறவு வேற... அதனால கன்செஷன் வேண்ணாக் குடுங்க. ஒத்துக்கறேன். வெளியில் இருந்து ஸ்பெஷ

லிஸ்ட்டை யெல்லாம் கூட்டிட்டு வந்திருக்கீங்க. இது சரியில்லை. பாலு. பணம் நான் கட்டறேன்!'' என்று சந்தோஷ் எவ்வளவோ வற்புறுத்தியும் பாலகிருஷ்ணன் பைசா கூட வாங்க மறுத்து விட்டான்.

சந்தோஷ்குமார் சுவேதாவிடமும், ராஜேந்திரனிடமும் வந்து வருத்தப்பட...

''சரி... விடுங்க... மச்சான்... நாம வேற ஏதாவது வழியில செஞ்சர்லாம்,'' என்று பேச்சை முடித்து வைத்தான். அப்போது அங்கே வந்த பாலு -

''சந்தோஷ்... அண்ணா ராஜாவை யாருன்னு நெனச்சீங்க... தன்னோட சம்பளத்தை யெல்லாம் சேமிச்சு... எங்க கல்யாணம் நடத்தினவரு. இன்ஃபாக்ட் இந்த ஆஸ்பத்திரி ஆரம்பிக்கக் காரணமே... அவருதான். அவருகிட்டே... போயி... என்னண்ணாரா நீங்க...'' என்று மிகவும் வருத்தப்பட்டுப் பேசினான்.

ராஜேந்திரன் நெகிழ்ந்து போனான். ''சரி... மச்சான்... இப்படி ஒரு பேச்சு வந்ததையே மறந்துருங்க...'' என்றான். ஆனால், பிறகு சிரித்துக் கொண்டே...

''எதுக்கும்... கமிட் பண்றதுக்கு முன்னாடி யோசிச்சுக்குங்க. அப்புறம்... குடும்பமே... ஓசி வைத்தியம் பாக்க வந்துருவோம்...'' என்று செல்லமாக மிரட்டினான்.

''வாங்களேன்...'' என்று புன்னகைத்தபடி சாந்தாவிடம் நெருங்கி நின்றான். ''இதோ... இப்படி ஒரு பொக்கிஷத்தையே எனக்குக் குடுத்திருக்கீங்க அதுக்கு... நான்... என்ன விதத்துல ஈடு கட்ட!'' என்று வாய் மலரச் சிரித்தான்.

சாந்தாவின் முகம் சிவந்து போவதைக் கவனிக்காதவன் போல் இடக்கையால் அவள் தோளை அணைத்துக் கொண்டான்.

''ஐயோ... என்ன... இது!'' என்று அவள் தவிக்க -

''பின்னே? உங்கண்ணனுக்குப் புத்தி சொல்லு!'' என்று மீண்டும் சிரித்தான்.



அந்தக் காட்சியை மகிழ்ச்சியுடன் பார்த்த ராஜேந்திரன் திரும்பி சுவேதாவைப் பார்த்தான். இருவரும் புன்னகைத்துக் கொண்டார்கள். அதற்குள் நர்ஸ் வந்து அழைக்க, அவன் போனான்.

''தாங்க்ஸ்ம்மா...'' என்றான் ராஜேந்திரன் தங்கையைப் பார்த்து.

''எதுக்கு?'' என்று அவள் விழிக்க...

''இப்படி ஒரு நல்ல பேரை வாங்கிக் குடுத்திருக்கயே... அதுக்கு!'' என்று பாராட்டினான்.

பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த சாந்தா ஏதோ வேலையிருக்கிறது என்று புறப்பட்டுப் போனாள்..

சுவேதாவும், ''அண்ணா! நீ கொஞ்ச நேரம் இவரோட இரேன். நான் போய் வீட்டைக் கொஞ்சம் ஒழுங்கு பண்ணிட்டு வர்றேன்,'' என்று புறப்பட்டுப் போனாள்.

சந்தோஷ்குமாரும் இப்படி ஒரு வாய்ப்பை எதிர்பார்த்தவன் போல், ''மச்சான்... உங்ககிட்டே பேசணும்,'' என்றான் எதிரில் அமர்ந்து.

''என்ன... மோனா... விஷயமாவா?'' என்று குறும்பாகச் சிரிக்க...

''அந்த விஷயம் பத்தி எனக்கென்ன கவலை. இனிமே அது உங்க பிரச்சினை... நான் பேச வந்தது வேற...'' என்றான்.

''அப்படிப் போடுங்க...'' என்று ராஜேந்திரன் வெடிச் சிரிப்புச் சிரித்து விட்டான்.

சந்தோஷ்குமார் அதைக் கண்டு கொள்ளவில்லை. மாறாகத் தான் பேச வந்த விஷயத்தைக் கூறினான்.

''மச்சான்! நீங்க இதுவரைக்கும் வாடகை குடுத்தீங்களே... அந்தத் தொகையை அப்படியே நான் பாங்க்ல போட்டு வச்சிருக்கேன். உங்களுக்கு ஒரு சேமிப்பா இருக்கட்டுமேன்னு...'' என்றான்.

ராஜேந்திரன் திகைத்துப் போய், ''அதுக்கெல்லாம் அவசியமேயில்லை...'' என்று ஏதோ சொல்ல வர, சந்தோஷ் குமார் அதைத் தடுப்பது போல் கையை உயர்த்தினான்.

''நான் சொல்ல வந்ததை முழுசாக் கேளுங்க.... கவேதா வுக்கும், சொத்துல பங்கிருக்கில்லையா, அப்ப எப்படி வாடகை வாங்கறது? ஆனா... முதல்லயே... சொன்னா... ஒத்துகிட்டிருக்க மாட்டீங்களே!'' என்றான்.

ராஜேந்திரன் மௌனம் சாதித்தான்.

''நான் எப்படியும் டெல்லிப் பக்கம்தான் ரிடையர்மெண்ட் வரைக்கும்... அதனால ஒரு திட்டம் வச்சிருக்கேன். நீங்க வாங்கியிருக்கீங்களே அந்த சைட்டை நான் அதே விலைக்கு வாங்கிக்கறேன். இதுவரைக்கும் சேமிச்சு வச்சிருக்கிற வாடகைத் தொகையையும், சைட் அமௌண்ட்டையும் சேர்த்து... கூடக் கொஞ்சம் லோன்... வாங்கி.... இப்ப இருக்கற இந்த வீட்டுலயே மேல நீங்க பெரிசா... ஒரு வீடு கட்டிக்குங்க.. கட்டற புது வீட்டை வாடகைக்கு விட்டாலும் சரி... இல்ல... கீழே... இப்ப நீங்க இருக்கிற வீட்டை வாடகைக்கு விட்டாலும் சரி... உங்க இஷ்டம். லோனை அடைச்சுக்குங்க...'' என்றான்.

ராஜேந்திரன் சந்தோஷ்குமாரை வெறித்துப் பார்த்தான்.

''மச்சான்... என்னை... என்னன்னு நெனச்சீங்க. கவேதா வீட்லருந்து நான் எதையும் எதிர்பார்க்கலேங்கறதை நான் எப்பவோ சொல்லியாச்சு...''

''நீங்க எதிர்பார்க்கலே... சரி... ஆனா... அவ பங்கைக் கொடுக்க வேண்டியது என் கடமையாச்சே... அதுமட்டுமில்ல... இதை நான் ஒரு உதவியாத்தான்... உங்ககிட்டே கேட்கறேன்.''

''உதவியா?''

''ஆமா... ரெண்டு பெரியவங்களையும், இங்க விட்டுட்டுப் போறேன். அவங்க டெல்லி... வந்தா சந்தோஷந் தான்... அப்படி இல்லேன்னாலும் உங்க பொறுப்புல இருக்



காங்கங்கறது... ஒரு சந்தோஷம். அது மட்டுமில்லே... அவங்க காலம் வரைக்கும் இப்ப இருக்கிற அதே வீட்ல இருக்க அனுமதிக்கணும். அவங்க வாழ்ந்து ஆகி வந்த வீடு...'' என்றான்.

ராஜேந்திரன் மைத்துனரின் திறமையை மனதுக்குள் பாராட்டிக் கொண்டான். தனக்கு உதவி செய்வதை ஏதோ அவனுக்குத் தான் செய்கிற உதவி போல மாற்றுவதைப் பார்த்துச் சற்றுப் பிரமித்துத்தான் போனான். அவன் மேலும் தொடர்ந்தான்.

''மச்சான்... எனக்கு என்ன சம்பளம்ன்னு நெனக்கறீங்க... கைக்கே ஐம்பது ரூபாய்க்குமேல வருது... அத்தனை எனக்கு எதுக்கு? அதுவுமில்லாம... நாளைக்கு நிலைமை எப்படியிருக்குமோ! அதனால, உங்ககிட்டே வாங்கற சைட்டை அம்மா... அப்பா பேருக்கு வாங்கி... நல்ல வாடகை வர்ற மாதிரி... போர்ஷன்ஸ் கட்டிக் குடுத்தர்றேன். அவங்க என்னை எதிர்பார்க்கவே வேண்டியிருக்காது... நான் எப்பவும்... செய்யறதைச் செய்வேன்னு வச்சுக்குங்க...'' என்று புன்னகைத்தான்.

''நம்பவே முடியலை, மச்சான்!'' என்று முணுமுணுத்தான் ராஜேந்திரன்.

''எதை...?''

''ஒருத்தர் இவ்வளவு நல்லவரா இருக்க முடியுமா... என்ன?''

''ஏன்... நீங்க... இல்லை? கவிக்கு உங்களைப் பத்தி எவ்வளவு பெருமை தெரியுமா?'' என்றான்.

சற்றே முகம் சிவக்க மேலும் தொடர்ந்தான்.

''அது மட்டுமில்ல... மோனாவும்.... நல்லா சம்பாதிக்கறா... அதனால...''

''அது சரி... அது சரி...'' என்று ராஜேந்திரன் மேலும் கீழும் தலையாட்ட...

''மச்சான்... ப்ளீஸ்...'' என்று அவன் வெட்கத்துடன் சிரித்தான்.

''நீங்க பேசறதைப் பார்த்தா... மோனாதான்...ஐ முடிவே பண்ணிட்டீங்க...'' என்றான்.

''மச்சான்... இவ்வளவு சொல்லிட்டேன்... இதையும் சொன்னா... என்ன? மேரீட் லைஃப்ன்னு ஒண்ணு இருந்தா... அது... அவளோடதான்... அவளும்... அன்புக்கு ஏங்கறா...'' என்றான்.

ராஜேந்திரன் மென்மையாகப் புன்னகைத்தான். இப்போது சந்தோஷ்குமார் சிரித்தான்.

''புரியுது மச்சான்...'' என்றான்.

''உங்களுக்கு நல்லாப் புரியும்... மச்சான்... நீங்களும்... அந்தமாதிரி... என் சிஸ்டரை நினைச்சவர்தானே!'' என்றான்.

''ம்... இப்படித்தான்... மாட்டிகிட்டேன்!'' என்று சோகப் பெருமூச்சு விடவும் இருவரும் சிரித்தார்கள்.

''ம்... சொல்ல வந்ததை விட்டுட்டனே... நம்ம குடும்பத்துல பணம் ஒரு பிரச்சினையா இருக்க வேண்டாம். அதுமட்டுமில்ல. நீங்களும் கொஞ்சம் சீக்கிரம் தெம்பாகிக்குங்க... ரெண்டு வீட்டையும் நீங்கதான்... கட்டணும். நிறைய வேலையிருக்கு...'' என்றான்.

''ஆமா... கல்யாண வேலை... வேற...'' என்றான் ராஜேந்திரன்.

சந்தோஷ்குமார் இன்னும் வைத்திருந்தான். ''உங்க அலைச்சலுக்கு... வசதியா... சுவிக்கு ஒரு ஸ்கூட்டியும்... உங்களுக்கு ஒரு செகண்ட் ஹாண்ட் காரும் புக் பண்ணியிருக்கேன்!''என்றான்.

''சே... இப்படியெல்லாம் கிடைக்கும்னு தெரிஞ்சா... அடிக்கடி கையைக் காலை உடைச்சுக்கலாமே...'' என்று அவன் அங்கலாய்க்க...



''வேண்டாம்... மச்சான்... விளையாட்டுக்குக்கூட அப்படிச் சொல்லாதீங்க... சுவிக்குட்டி அழுத அழுகை... உங்களுக்குத் தெரியாது!'' என்றான் வேதனையுடன்.

ராஜேந்திரன் லேசாகப் பெருமூச்சு விட்டான். ''ஆமா... தனக்கு எதுன்னாலும் தாங்கிக்குவா... எனக்கு ஏதாவதுன்னா... தாங்க மாட்டா!'' என்று முணுமுணுத்தான்.

''அப்பா!''என்று குரல் கேட்க ஆசையாய்த் திரும்பினான்.

ஐஸ்வர்யா... சிறுநடையாய் ஓடிவந்தாள். ''அப்பா.... இந்த அம்மா... பாரு, என்னை விட்டுட்டு... விட்டுட்டு வந்துட்டாங்க... என்ன... ஆச்சு... எதுக்குக் கட்டுப்போட்டிருக்கே? என்ன குறும்பு செஞ்சே?'' என்று கேட்க, எல்லோரும் சிரித்தார்கள்.

சுவேதாவும் உள்ளே வந்தாள். ''சரிங்க மச்சான். இனி... இவ கேள்விக்குப் பதில் சொல்லவே... நேரம் சரியா... இருக்கும்... டிஸ்சார்ஜ் ஆகற வரைக்கும்... நான் போய் டாக்டரைப் பார்த்துட்டு வரேன்,'' என்று கிளம்பினான் சந்தோஷ்.

அப்போது யாரும் எதிர்பாராத விதமாக ஒரு விருந்தாளி உள்ளே வந்தார்.

''என்னடா...கையைக் காலை உடைச்சுகிட்டு கட்டுப் போட்டுகிட்டியாம். நீ நல்ல பையனாச்சே!'' என்றபடி உள்ளே வந்தாள் பொன்னம்மா...

எப்போதும் பொன்னம்மா பெரியம்மாவிடம் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு நழுவி விடுகிற தன் கணவன் இன்றைக்குப் பெரியம்மா பெரியம்மா'' என்று உருகி உருகிப் பேசுவதை சுவேதா உள்ளூர ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சந்தோஷ்குமார் தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளாமல் டாக்டர் பாலுவின் அறைக்குப் போய் அங்கே பேசிக் கொண்டிருந்தான். அதே நேரம் ராஜேந்திரன் -

''ஏன், பெரியம்மா? உங்க சின்னப் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சுட்டீங்களா?''என்றான்.

பொன்னம்மா கவலையான முகத்துடன், ''பார்க்கணும் தான்டா ராஜேந்திரா.. ஆனா, அவ என்னமோ டெல்லியில போயி வேலைன்னு உட்கார்ந்திருக்கா. அவ அண்ணனைத் தான் உனக்கே தெரியுமே! அவனும் ஒண்ணும் அக்கறை எடுத்துக்கற வழியைக் காணோம். அவ அப்பா என்னத்தைச் செய்யப் போறாரு. உங்கிட்டே சொல்றதுக்கென்னப்பா? மோகனா குடுக்கற பணத்துலதான் குடும்பமே கௌரவமா ஓடிட்டிருக்கு. அதுக்காக அவ கல்யாணத்தையும் தள்ளிப் போட முடியாதே. எனக்கே ஒண்ணுமே புரியலே!'' என்றாள்.

ராஜேந்திரன் சற்று யோசிப்பவன் போல் நடித்து விட்டு, ''டெல்லிப் பக்கமே ஏதாவது மாப்பிள்ளை பாக்கறது?'' என்றான்.

''கிடைக்கணுமே?''

''நான் வேணாப் பாக்கட்டுமா?'' என்றான்.

''பாரேன். நான் வேண்டாம்னா சொல்றேன்!'' என்று நன்றியுடன் பேசி விட்டுக் கிளம்பினாள்.

அதுவரையில் முன் வராண்டாவில் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் ஒதுங்கியிருந்த சந்தோஷ்குமார் பொன்னம்மாள் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போவதைப் பார்த்து விட்டுத்தான் மைத்துனரின் அறை நோக்கிப் போனான். ஆனால், உள்ளே சுவேதாவின் கோபமான குரல் கேட்டுத் தயங்கி நின்றான்.

''ஏங்க, பொன்னம்மாத்தை மகளுக்கு நீங்க மாப்பிள்ளை பாக்கப் போறீங்களா?'' என்றாள் காட்டமாக.

''ஆமா...!'' என்றான் ராஜேந்திரன் அமர்த்தலாக.

''மாப்பிள்ளை யாராம்?''



''நமக்குத் தெரிஞ்ச மாப்பிளைதான். உங்க அண்ணன் தான்!'' என்றான்.

சுவேதா வெகுவாகக் கவலை குரலில் தொனிக்க, ''இது உங்களுக்கு வேண்டாத வேலைங்க. பொன்னம்மாத்தை குடும்பம் பத்தி உங்களுக்குத் தெரியுமில்லே?'' என்றாள்.

''அந்தப் பொண்ணு நல்ல பொண்ணுன்னு சொல்றாங் களே!''

''நடக்கற காரியமாத் தெரியலை!'' என்றாள்.

''ஏன்?''

''அந்தப் பொண்ணோட ஜாதகம் ஏற்கெனவே அம்மா அப்பாகிட்டே வந்தது. புரோக்கர் முதல்லே பொருத்தம் பாருங்க. அப்புறம் பொண்ணு யாருன்னு சொல்றேன் அப் படீன்னாராம். ஜாதகம்லாம் பொருத்தமானதுக்கப்புறம் பொண்ணு யாருன்னு தெரிஞ்சவுடனே அப்பா ரெண்டு கையையும் எடுத்துக் கும்பிட்டு, வேண்டாம்பா... சாமி... என் பையன் வாழ்க்கையை நாங்களே கெடுக்கக் கூடாதுன்னு சொல்லிட்டுத் திருப்பிக் குடுத்துட்டாரு. அம்மாவும், அப்பாவும் ஒத்துக்க மாட்டாங்க...'' என்றாள்..

ராஜேந்திரன் விடாப்பிடியாக, ''அது அப்ப. இப்போ பேசிச் சரி செய்யலாம். பொண்ணு ரொம்ப நல்ல பொண் ணுன்னு சொல்றாங்க!'' என்றான்.

''யாரு சொன்னாங்க?'' என்றாள் வேகமாக. ராஜேந்திரன் சற்றும் அலட்டிக் கொள்ளாமல் குறுஞ்சிரிப்புடன்,

''உங்க அண்ணன்தான்!''என்றான்.

''என்னது!''என்று திகைத்து விட்டாள் சுவேதா.

அறைவாசலில் நிழலாடத் திரும்பிப் பார்த்தார்கள். கவலையும், வெட்கமும் முகத்தில் நிழலாடச் சந்தோஷ்குமார் நின்றிருந்தான்.

அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே தங்கள் பேச்சை அவன் கேட்டிருக்கிறான் என்பது புரிய,

''மச்சான்! வொரி பண்ணிக்காதீங்க. இவ பழைய விவரத்தைச் சொல்றா. நாம ரெண்டு பேரும் பேசிக்கிட்டதெல்லாம் இவளுக்குத் தெரியாதில்ல. நான் பாத்துக்கறேன் எல்லாத்தையும்!'' என்று உறுதி சொன்னான் ராஜேந்திரன்.

அந்த ஒரு வார்த்தையில் சகோதரனின் முகம் மலர்வதைப் புரிந்தும் புரியாதவளாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் சுவேதா.

## 10

**க**ணவன் எல்லா விவரத்தையும் சொல்லக் கேட்ட சுவேதா கவலையும் மகிழ்ச்சியும் கலந்த முகபாவத்துடன் அமர்ந்து இருந்தாள்.

மோகனா நல்ல பெண் என்பதும், அண்ணன் மனசுக்குப் பிடிச்ச ஒரு பெண் கிடைத்திருக்கிறாள் என்பதும், அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவள் குடும்பப் பின்னணியினால் பெற்றோர்களுக்கு எப்படிப் புரிய வைப்பது என்ற கவலையும் இருந்தது.

டிஸ்சார்ஜ் ஆகி வந்த மறுநாள் இரவு சுவேதாவை அமர வைத்து எல்லாவற்றையும் சொன்னான் ராஜேந்திரன். அது மட்டுமில்லாமல் வீடு கட்டத் தான் இடம் வாங்கியிருப்பதையும், அது சம்பந்தமாக மைத்துனன் கூறிய திட்டங்களையும் வேறு விரிவாகச் சொன்னான்.

கலவையான உணர்ச்சிகளுக்கு ஆட்பட்ட சுவேதா மனம் நெகிழ்ந்து போனாள். சற்று நேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள். பிறகு ஆழ்ந்த குரலில்,

''அண்ணனுக்குப் பிடிச்சா நல்ல பொண்ணாத்தான் இருக்கணும்...'' என்றாள்.



அதே நேரம் சந்தோஷ்குமாரும் வந்தான்.

''அண்ணா! நீ பயங்கரமான ஆள்!'' என்று சுவேதா கேலி செய்யவும், அவன் முகம் மலர்ந்து பின் சிவக்கப் புன்னகைத்தான். பிறகு ''ஏண்ணா! ஃபோட்டோ கீட்டோ ஏதும் வச்சிருக்கியா... ஏதோ விசேஷங்கள்லே பார்த்தது. முழுசா ஞாபகம் வர்லை...'' என்றாள்.

சந்தோஷ்குமார் இதை எதிர்பார்க்கவில்லை. ''கொண்டு வர்லையேம்மா... நான் மச்சானுக்கு அடிபட்டிருக்குன்னவுடனே அடிச்சுப் பிடிச்சிகிட்டுப் புறப்பட்டுட்டேன்.'' என்றவன், திடீரென்று நினைவு வந்தவனாக,

''இரு! பிரீஃப் கேஸில் ஒரு ஃபோட்டோ இருக்கும்னு நினைக்கிறேன்,'' என்று போய்ப் பெட்டியை எடுத்து வந்தான்.

அவன் உள்ளே வந்தவுடன் ராஜேந்திரன் சுவேதாவைப் பார்த்து,

''சுவி! மச்சான்... பிரீஃப் கேஸ்ல ஃபோட்டோ வச்சிருக்கிற லெவலுக்குப் போயிட்டாரு. சீக்கிரமே ஏதாவது வழி செஞ்சர்லாம்...'' என்று கலாட்டா செய்தான்.

''மச்சான், ப்ளீஸ்...'' என்று அவன் வெட்கத்துடன் ஃபோட்டோவை நீட்டினான்.

ஆஃபீஸில் ஏதோ ஃபங்ஷனில் நாலைந்து பேராக நின்றிருந்த ஃபோட்டோ அது. மோகனா எளிமையாகவும், அழகாகவும் அடக்கமாகவும் நின்றிருந்தாள்.

''அதுதானே பார்த்தேன். இந்த ரெண்டு மூணு மாசமா நீ அனுப்பிச்சிருந்த புடவை, சுடிதார்ல்லாம் நல்ல செலக்ஷனா இருந்துதேன்னு...'' என்று சுவேதா மேலும் சிரித்தாள்.

''ஹேய்! சும்மா கலாட்டா செய்யாதே. மச்சான் அன் ஈசியா ஃபீல் பண்றாப்ல!'' என்று உதவிக்கு வந்தான் ராஜேந்திரன்.

''ஏன், சாந்தா உங்களை என்ன கலாட்டா செய்வா! நீங்க ரசிக்கச் சிரிப்பீங்களே! அது மாதிரி சிரிக்க வேண்டியது தானே?'' என்று சுவேதா போட்டு உடைத்தாள்.

''ஆமா... மச்சான், இந்த டெக்னிக்கெல்லாம் கொஞ்சம் சொல்லிக் குடுங்க, தெரிஞ்சுக்கறேன்,'' என்றான் சந்தோஷ் குமார் பவ்யமாக.

எல்லாரும் சிரித்தார்கள். பிறகு ராஜேந்திரன், ''அதெல்லாம் சொல்லித் தரமுடியாது மச்சான். தானாகத் தெரிஞ்சுக்கணும்...'' என்றான்.

''தெரிஞ்சுக்கறேன்... தெரிஞ்சுக்கறேன்...'' என்று சிரித்த சந்தோஷ்குமாரிடம், சுவேதா,

''அண்ணா, நீ இன்னைக்கு இங்கயே சாப்பிடு... என்ன?'' என்று டிஃபன் செய்தாள். அவளோடு கூடவே சமைய லறையில் நின்று கொண்ட அண்ணனிடம் மோகனாவைப் பற்றித் துருவித் துருவிக் கேட்டுக் கொண்டாள்.

''கவி, நீ நெனக்கற மாதிரி நாங்க ரொம்ப ஊர் சுத்தற தெல்லாம் இல்லை. ஜஸ்ட் பிரபோஸ் பண்ணியிருக்கேன். உனக்காக ஏதாவது செலக்ட் பண்ணணும்னா ஷாப்பிங் போயிருக்கோம். அவ்வளவுதான்,'' என்றான்.

''ரொம்ப பயப்படாதண்ணா. அம்மா அப்பாகிட்டே நான் பேசறேன். பொன்னம்மா அத்தை ஃபேமிலியை இவரு டீல் செய்யட்டும்... என்ன?'' என்றாள்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். ''மச்சான்... ரெண்டு நாள்லே நான் கிளம்பறேன். இனி மேரேஜ் ஏதாவது முடிவானாத்தான் லீவ் போட முடியும். அதனால ஊருக்குப் போய் இடத்துக்குப் பணம் அனுப்பறேன் நீங்க நல்ல காண்ட்ராக்டர் வச்சு வொர்க் ஆரம்பிச்சிருங்க...'' என்றான்.

''அண்ணா, உன் கல்யாணச் செலவு வேற இருக்கு...'' என்று சுவேதா இழுத்தாள்.



''அதுக்கெல்லாம் வேணும்கற சேமிப்பு இருக்கும்மா... எப்படித் திட்டம் போட்டுச் சேமிக்கணுங்கறது எல்லாம் மச்சான்கிட்டே கத்துக்கிட்டதுதான்!'' என்றான் சந்தோஷ்குமார்.

சொன்ன மாதிரியே புறப்பட்டு விட்டான்.

அன்றிரவு

மனைவியைத் தன் கைப்பிடியில் வைத்துக் கொண்டு -

''ஹேய், உங்கண்ணன் பயங்கரமான ஆள். பணத்துக் காகத்தானே உங்களுக்குள்ள பிரச்சினை வருது. பணம் நான் தரேன்டா. என் தங்கச்சியை நல்லா வச்சுக்கன்னு சொல்லாம சொல்லீட்டாரு!'' என்றான்.

''ஆமாங்க... இந்த வீடு கட்டற ஆசையினாலதானே நமக்கு ஸ்ட்ரெஸ் ஜாஸ்தியாப் போச்சு!'' என்றாள் சுவேதா.

''ஓ...கே... ஓ.கே... இனிமே ரிலாக்ஸ் ஆயிக்கலாம். என்ன? எப்படியோ சுவேதா, ரெண்டு நாளைக்குள்ளே உங்க அம்மா அப்பாவை நீ கன்வின்ஸ் பண்ணு. நான் கொஞ்சம் நடக்கற ஸ்டேஜ் வந்தவுடன் பொன்னம்மா பெரியம்மாகிட்டே பேசறேன்,'' என்று திட்டம் போட ஆரம்பித்தான் ராஜேந்திரன்.

அதே நேரம் டெல்லியிலிருந்து ஃபோன் வந்தது.

ஏர்போர்ட்டுக்கு சந்தோஷ்குமாரை ரிசீவ் செய்ய வந்த மோகனா ராஜேந்திரனிடம் பேச விரும்பினாள் என்றான் சந்தோஷ்.

''குடுங்க...''என்றான் ராஜேந்திரன்.

''அண்ணா! இப்ப உங்களுக்குக் கால் பரவாயில்லையா? சுவேதா அழுதவுடனே இங்கே இவர் ரொம்ப டென்ஷனா யிட்டார். நானும் ரொம்பக் கவலையாயிட்டேன். ஒண்ணும் பயமில்லைன்னு இவர் ஃபோன் வந்ததும்தான் ரிலாக் ஸானேன்,'' என்று இயல்பான அன்புடன் பேசுகிற மோக னாவை ராஜேந்திரனுக்கு அந்தக் கணம் பிடித்து விட்டது.

சுவேதாவிடமும் பேசினாள். அவள் செய்த கலாட்டாவுக்கு அந்தப் பக்கம் வெட்கத்துடன் சிரித்தாள்.

திரும்பவும் ஃபோனை வாங்கிய ராஜேந்திரன் -

''மோனா, மச்சான் எல்லா விவரமும் சொன்னாரு. கவலைப்படாதம்மா, மச்சானுக்குப் பிடிச்சுப் போச்சுன்ன வுடனே நான் முடிவு பண்ணிட்டேன். இனிமே நமக்கு ரெண்டு சிஸ்டர்ஸ் இல்லே, மூனு பேருன்னு. ஓ.கே.வா? கவலைப் படாம... இரு... நான் பாத்துக்கறேன்,'' என்றவுடன், அந்தப் பக்கம் மௌனம் நிலவியது.

''ஹலோ... ஹலோ...!'' என்று இவன் குரல் கொடுக்க, சந்தோஷ்குமார் லைனில் வந்தான்.

''மச்சான்... அப்படி என்னத்தைச் சொன்னீங்க, அம்மிணி குலுங்கிக் குலுங்கிக் அழறாப்ல!'' என்றான்.

ராஜேந்திரன் மனம் நெகிழ்ந்து விட்டது. ''அங்கயே கேட்டு விவரம் வாங்கிக்குங்க...'' என்று ஃபோனை வைத்தான்.

மச்சானின் கல்யாணம் நிறைவேற வேண்டும் என்பதற்காக மோகனாவின் வீட்டுக்கு இரண்டு மூன்று முறை சென்ற ராஜேந்திரனுக்குப் பல விவரங்கள் புரிந்தன.

பொன்னம்மாதான் குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்தினாள் என்பது முதல் விஷயம். இரண்டாவது மோனாவின் தந்தைக்கு யார் வேண்டுமானாலும் ஆதிக்கம் செலுத்தட்டும், தான் அதிகம் உழைக்காமல் இருப்பதற்கு வழியைப் பார்த்துக் கொண்டால் போதும் என்ற மனப்பான்மை. இந்த இரண்டு பேருக்கும் பிறந்த குழந்தைகளில் முதல் மகள் சீதா ஓரளவுக்குக் குடும்ப பாரத்தைச் சுமந்திருக்கிறாள், பொறுக்க முடியாத நிலை வந்தபோதுதான் வெளியேறியிருக்கிறாள் என்பதும் ராஜேந்திரனுக்குப் புரிந்தது.

சீதா தன்னுடைய பொறுப்பில் சிரமப்பட்டு மோகனாவைப் படிக்க வைத்து அவள் வேலைக்கு வந்த பின்தான் வெளியேறியிருக்கிறாள் என்பதெல்லாம் புரிந்தது. மகன் பிரபு படிப்பில் கெட்டிக்காரனாக இல்லையென்றாலும் மெக்கானிக் தொழிலில் தேர்ச்சி பெற்றிருந்தான்.



சொந்தமாக வொர்க் ஷாப் ஆரம்பிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். முடியவில்லை என்ற போது தகுதியில்லாத நண்பர்களுடன் ஊர் சுற்றினான்..

இதில் எத்தனையைச் சரி செய்வது, எங்கே ஆரம்பிப்பது என்று குழம்பிப் போனான் ராஜேந்திரன். விவரமாக மைத்துனனிடம் பேசினான். இரண்டு பேருமாகச் சில திட்டங்கள் போட்டுக் கொண்டார்கள்.

முதல் படியாக ராஜேந்திரன் யதேச்சையாகப் பிரபுவைச் சந்திப்பது போல் சந்தித்தான்.

''வீட்டுக்கு வாப்பா... தம்பி...'' என்று அழைத்து வந்தான்.

''கல்யாணம் வேற ஆயிடுச்சு. தொழில்ல கிழில்ல செட்டிலாக வேண்டாமா?''என்று லேசாகப் பொறி வைத்தான்.

ராஜேந்திரன் தன்னை மதித்து அழைத்து வந்ததே அவனுக்குப் பெரிதாகப் பட்டது.

''நான் ரெடிதான்ணா... ஆனா, பணம் வேணுமே! யார் தருவா?'' என்றான்.

ராஜேந்திரன் யோசிப்பவன் போல் நடித்தான். பிறகு, ''ஏதாவது பாங்க்கில முயற்சி செய்யலாமா?'' என்றான்.

''செய்யலாம்ண்ணா. இது மட்டும் செஞ்சு குடுத்தீங்கன்னா... உங்களை ஆயுசுக்கும் மறக்க மாட்டேன்!'' என்றான் காலில் விழாத குறையாக.

''சரி, பார்ப்போம்,'' என்றான் ராஜேந்திரன்.

மோகனா குடும்பத்தாருக்குச் சொந்தமாக ஒரு வீடு இருந்தது. அதில் ஒரு போர்ஷனில் இவர்கள் குடியிருந்தார்கள். அது போக இடம் ஒரு வொர்க் ஷாப் வைக்குமளவுக்கு இருந்தது.

பிரபுவின் பெற்றோர்களிடம் பேசினான். வீட்டுப் பத்திரத்தை ஈடாக வைத்து ஒரு வொர்க்ஷாப் வைப்பதற்கேற்ப தொகை ஏற்பாடு செய்து கொடுத்தான்.

தொழிலுக்கு ஆரம்ப முதலீடாக சந்தோஷ்குமாரே கொடுத்தான். ஆனால், தொகை அவனிடம் இருந்து வந்தது என்பதை வெளியிடவில்லை.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்றும் செய்தார்கள். பிரபுவின் மனைவிக்கு வொர்க் ஷாப்புக்கு ஒரு ஓரத்தில் ஒரு பெட்டிக்கடை வைத்துக் கொடுத்தார்கள். இரண்டே அறைகள் இருக்கிற மாதிரி ஒரு சின்ன போர்ஷன் தென் மேற்கு மூலையில் அமைத்துக் கொண்டார்கள். இதனால் மோகனாவின் அம்மா அப்பாவுக்கு ஒரு போர்ஷன் வாடகையும் கிடைப்பதோடு, பிரபுவும் ஒரு வாடகை கொடுக்க வேண்டுமென்று முடிவாகியது.

இது ஒரு புறம் போய்க் கொண்டிருக்க, மற்றொரு புறத்தில் ஏதோ தானே ஆலோசனை சொல்வது போல், சந்தோஷ்குமாரைப் பற்றிய பேச்சை எடுத்துச் சம்மதம் வாங்கினான் ராஜேந்திரன்.

சுவேதா அம்மா, அப்பாவிடம் பேசினாள். அம்மா மிகவும் கவலைப்பட்டாள்.

"என்னடி, சுவேதா, போயும் போயும் அந்த வீட்லயா?" என்றாள்.

அப்போதுதான் சுவேதா மெதுவாக, "அம்மா, அண்ணன் டெல்லியில் அந்தப் பொண்ணோட நடத்தையை நல்லா அப்ஸர்வ் பண்ணிட்டுத்தான் எங்க வீட்டுக்காரர்கிட்டே சொல்லியிருக்காரு. அதுவுமில்லாம அண்ணியும் டெல்லியில இருக்கப் போறாங்க எப்பவாவது ஒரு தடவை வரப்போறாங்க. ரெண்டு பேரும் நல்லா சம்பாதிக்கறங்க. அவங்க அம்மா, அப்பாவுக்கு ஏதாவது ஹெல்ப் பண்றதுன்னாலும் செஞ்சுக்க



லாம். அப்புறம்... அண்ணனுக்கே அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கு போல.." என்று நிறுத்தினாள்.

அம்மாவும், அப்பாவும் அந்த வார்த்தைக்குப் பிறகு மறுப்பேதும் சொல்லாமல் ஏற்றுக் கொண்டார்கள்.

பேச்சு வார்த்தை தொடங்கிவிட்டது வேகமாக முடிவும் எடுக்கப்பட்டது.

## 11

"பயப்படாம சாப்பிடு... மேன்... என்னா நீ இப்டி ஹெஸிடேட் பண்றே?" என்று மிரட்டிக் கொண்டிருந்தான் ராகேஷ்.

கோயமுத்தூரில் சந்தோஷ் குடும்பத்தாரும், மோனாவின் குடும்பத்தாரும் கலந்து பேசித் திருமண நாளைக் குறித்து விட்டார்கள் என்றாலும் முறைப்படியான பேச்சு வார்த்தை இன்றைக்கு என்று வைத்திருந்தார்கள்.

திருமணத்திற்கு இன்னும் பத்தே நாட்கள்தான் இருந்தன. இன்று காலையில் உப்பு மஞ்சள் வாங்கி, ஜவுளி முடித்து சந்தோஷ்குமாரின் வீட்டில் சாப்பாடு என்று நடத்திக் கொண்டிருந்தார்கள்.

சந்தோஷ்குமாரும், மோனாவும் இல்லாமலே ராஜேந்திரன் முன்னின்று எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருந்தான். இப்படி ஃபங்ஷன் நடக்கப் போகிறது என்று முந்தைய நாள் ராகேஷிடம் பேச்சு வாக்கில் சொல்ல அவன் அரை நாள் விடுமுறை எடுத்து அவர்களுக்குப் பெரிய ஹோட்டல் ஒன்றில் விருந்து கொடுத்துக் கொண்டிருந்தான்.

"ஹேய்! ரேகா! நாம்ப எப்படி அப்பல்லாம் ஊர் சுத்துனோம்னு இந்தப் பயலுக்குச் சொல்லு..." என்று மனைவியை வேறு வம்பிழுத்தான்.

"அவரு நல்ல பையன், அப்படியெல்லாம் உங்களை மாதிரிப் பொறுப்பில்லாம சுத்த மாட்டாரு!" என்று அவள் இந்தியில் பதில் சொல்லிக் கடுப்படித்தாள்.

"அடப்போடா! நீ வழிஞ்ச வழிசல் எனக்குத் தெரியாதா என்ன?" என்று சிரித்த சந்தோஷ்குமார் -

"நாங்க தென்னாட்டில் அப்படியெல்லாம் எல்லார் முன்னாலயும் சில விஷயங்களைப் பேச மாட்டோம்!" என்றான் பெருமையாக.

"கவர்ட்ஸ்... பயந்தாங்கொள்ளிகள்!" என்ற ராகேஷ் கபகபவென்று சிரித்தான்.

"நோ... மேன்... இட்ஸ் கால்ட் டீஸன்ஸி!" என்று சிரித்தபடியே பதில் கொடுத்தான் சந்தோஷ்.

அவர்கள் சீரியஸாய்ப் பேசுவதாய் நினைத்த மோகனா சற்றே கவலையுடன் பார்க்க.

"ஐயோ! நீ கவலைப்படாதே! நாங்க எப்பவும் இப்படித் தான் சண்டை போட்டுக்குவோம்!" என்றான் சந்தோஷ்.

சினிமாவுக்கு வேறு டிக்கெட் புக் செய்திருந்தான் ராகேஷ். அவர்களுக்குத் தனிமை கொடுக்கவேண்டும் என்று நினைத்தோ என்னவோ - இரண்டிரண்டு டிக்கெட்டாக வேறு வேறு இடங்களில் அமர்கிற மாதிரி புக் செய்திருந்தான்.

"சாரிடா! லேட்டா புக் பண்ணினோமா, இப்படித்தான் கிடைச்சது!" என்று மோகனாவின் முன்னால் சொன்னவன் அந்தப் பக்கம் போய்க் கண்ணைச் சிமிட்டி விட்டுப் போனான்.

சந்தோஷ் சிரித்துக் கொண்டான் "ஹேய்! அவன் கொஞ்சம் ரொமான்டிக் டைப். அதே மாதிரி நாமளும் பிஹேவ் பண்ணணும்னு நினைக்கிறான்!" என்று மோகனாவிடம் ஆழம் பார்த்தான்.

மோகனா பொதுவாகப் புன்னகைத்து வைத்தாள்.

இருவரும் அமர்ந்தவுடன், "பய எங்கியாவது இருந்து வாட்ச் பண்ணிகிட்டிருப்பான்!" என்று சிரித்தவன் -



"எப்படியோ... நிச்சயம்னு ஒண்ணு ஆயிடுச்சு. இனித் தைரியமா... இப்படிக் கொஞ்சம் உட்காரலாம்!" என்று நெருங்கி அமர்ந்தான்.

அவள் வெட்கம் மேலிட, வேறு பக்கம் பார்த்தபடி அமர்ந் தாள். ஆனால் விலகவில்லை. ஆனால், பொதுவான விஷயங் களைப் பேசி அவளைக் கலகலப்பாக்கி விட்டான்.

படம் பார்த்து முடியும்வரை அவள் இடக்கை எடுத்துத் தன் வலக்கையில் வைத்துக் கொண்டிருந்தான். அவள் தடுக்க வில்லை. இதமாய்த்தான் உணர்ந்தாள். ஆனால், மற்றபடி நாகரீகமாகவே நடந்து கொண்டான்.

படம் பார்த்து வெளியே வந்தவுடன் ராகேஷ் மனைவி யுடன் விடை பெற்றுக் கொண்டான்.

காரில் ஏறிய பின்பு,

"ஏன் மோனா! நாம தனியா செலிப்ரேட் செய்யலாமா? ஹோட்டல் போகலாமா?" என்றான்.

சற்று யோசித்து மோகனா, "வேண்டாம்! உங்க அபார்ட் மெண்ட்லயே சமையல் பண்ணிக்கலாம்," என்றாள்.

அவன் உற்சாகமானான். இரு தோள்களையும் குலுக்கியபடி -

"என்னை நம்பி வந்தாச் சரி!" என்று சிரிக்க -

"வேற வழியில்லே! ரிஸ்க் எடுத்துத்தான் ஆகணும்!" என்றாள் முகத்தை சீரியஸ்ஸாக வைத்துக் கொண்டு.

அவன் இதை எதிர்பார்க்கவில்லை. சட்டென்று திரும்பிப் பார்த்துச் சிரித்தான்..

"அம்மிணி. நீயும் லேசுப்பட்ட ஆளில்லை போலிருக்கே!" என்றான்.

அவள் குறும்பாகப் புன்னகைத்துக் கொள்வதை வியப் புடன் பார்த்துப் பார்வையால் விழுங்கிக் கொண்டான்.

"ஐயய்யோ! இப்படிப் பார்வை பார்த்தா... கார்ல வர்றதே ரிஸ்க்கா இருக்கும் போலிருக்கே!" என்று அவன் முணு முணுக்க மறுபடியும் சிரித்துக் காரைச் செலுத்துவதில் கவனம் செலுத்தினான்.

ஆனால் காரை ஓட்டியபடியே, "ஏன், பார்க்கக் கூடாதா? உரிமையில்லையா, பிடிக்கலையா?"என்றான்.

"அங்க... பிடிச்சா... சரி!" என்றாள்.

"ம்...!" என்று அவன் ஒரு விதமாய் இழுக்க,

"நான் கார் பிரேக்கைச் சொன்னேன்!" என்று குறுஞ்சிரிப்புச் சிரித்தாள் மோகனா.

"அப்படிப் போடு!" என்று ரசித்துச் சிரித்தான்.

"எங்க அபார்ட்மென்டுக்கு ஒரு நிமிஷம் போயிட்டுப் போகலாமா?" என்றாள்.

"என்ன விஷயம்?" என்று அவன் கேட்க,

"ஒரே நிமிஷம்... ஒரு டீ சாப்பிட்டுட்டுப் போயிரலாம்," என்றாள்.

போனார்கள். புறப்படும்போது அங்கிருந்து ஏதோ கூடையை எடுத்துக் கொண்டு வந்தாள்.

"என்ன இது?" என்று அவன் கேட்க -

சஸ்பென்ஸ் என்று சிரித்தாள்.

சந்தோஷ் ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான், சிரித்தபடி

"எல்லாப் பயலுகளும் அவனவன் வைஃப்ன்னா ஏன் இப்படிச் சுருண்டர்றானுகன்னு இப்பத்தான் புரியுது. சரியான பாயின்ட்ல அடிச்சர்றீங்க, செல்லம்ஸ்!" என்றான்.

அவனது அந்தப் பேச்சில் முகம் மலர்ந்து ஆனால் சற்றே சிவந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தாள் மோகனா. 'தாங்க்ஸ்!' என்றாள்.



போன வாரத்தில் ஒரு நாள், 'அம்மா, மல்லிப்பூ மாதிரி இட்லி செய்வாங்க, மோனா. எனக்கு ரொம்ப இஷ்டம். சாப்பிட்டே ரொம்ப நாளாச்சு!' என்று அவன் பேச்சுவாக்கில் கொஞ்சம் ஏக்கத்தோடு சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு, தங்கள் அபார்ட்மென்டிலிருந்து அரைத்து வைத்திருந்த இட்லி மாவை எடுத்து வந்து இட்லி வார்க்க ஏற்பாடு செய்தாள்.

அவள் வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பே சந்தோஷ்குமார்,

'ஹேய்! முதல் முதலா சமைக்கறே... ஏதாவது ஸ்வீட் செய்யேன்!" என்றான்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை.

"என்ன பொருள் வேணும்னு சொல்லு. நான் போய் வாங்கிட்டு வரேன்!" என்றான் சந்தோஷ் ஆர்வமாக.

அவள் சற்று யோசித்தாள். "வேண்டாம். நீங்க போயிட்டு வர லேட்டாகும். இருக்கறதை வச்சு ஏதாவது செய்வோம்!" என்று தேடினாள்.

அவன் பெரிய அளவில் சமையல் செய்வதில்லை. காப்பி, டீ போட்டுக்கொள்வான். இரவு நேரங்களில் டிஃபன் செய்து கொள்வான். அதற்கேற்ற வகையில் ரவை, கோதுமை மாவு, சேமியா என்று வைத்திருந்தான்.

சற்றும் யோசிக்காமல் பட்டண ரவையை எடுத்து, ஒரு பங்கு ரவை ஒரு பங்கு சர்க்கரை மூன்று பங்கு பால் என்று கலந்து கிண்டி ஒரு உடனடி ஸ்வீட் செய்தாள்.

"என்னங்க... இது ரொம்ப ஈஸி. கேசரி செய்வோமில்லே. அதே மாதிரிதான். ஆனா, தண்ணீருக்குப் பதிலா பால்ல வேக வைக்கணும்," என்றாள் திராட்சை முந்திரியை வறுத்துக் கலந்து கொண்டே.

"இனிப்பு உப்புமான்னு சொல்லு..." என்று கொஞ்சம் வாயில் போட்டுப் பார்த்தான். அசந்துவிட்டான்.

"ரியலி குட்! ஏன் மோனா, எங்க வீட்டுச் சர்க்கரைக்கு எப்படி இவ்வளவு இனிப்பு வந்தது!" என்றான்.

"உங்க வீட்டு சர்க்கரை இல்ல, மிஸ்டர்! நம்ம வீட்டுச் சர்க்கரை."

"அப்படி போட்டுத் தாக்கு... என்று சிரித்தான். ஒரு வேளை செஞ்ச கை இந்தக் கைங்கறதுனால இனிப்பு வந்துடுச்சோ..." என்று தொடுவதற்கு வந்தான்.

அவள் லாவகமாய் விலகி நின்று சிரித்தாள். கையில் இருந்த கரண்டியை உயர்த்தி.

"ம்ஹூம்... சமையல் செய்யும் போது டிஸ்டர்ப் செய்யக் கூடாது சார்!" என்றாள்.

அவன் பவ்யமாய்த் தலையாட்டிக் கொண்டான். அவள் சுறுசுறுப்பாகவும், நேர்த்தியாகவும் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டே,

"ம்... அப்ப... இதை வேற கேட்டுத் தெரிஞ்சுக்கணும்," என்றான்.

"எதை?" என்று புரியாமல் பார்த்தாள்.

"இல்லே... எந்தெந்த டைம்ல டிஸ்டர்ப் செய்யலாம்னு தான்!" என்றான்.

அவள் சட்டென்று முகம் திருப்பிக் கொண்டு, எதையோ எடுப்பவள் போல் பாவனையிலாழ்ந்தாள். சற்று நேரம் அவன் மௌனமாக இருக்கவே மெதுவாகத் திரும்பி நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அவன் பார்வை தன் முகத்தில் ஆழப் படிந்திருப்பது கண்டு -

"ப்ளீஸ்!" என்றாள் கெஞ்சலும் கலக்கமுமாய்.

அவள் கலக்கம் பார்த்து அவன் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான். அதற்குப் பிறகு வேறு பேச்சுக்குத் தாவி விட்டான். அவளும் இயல்பானாள்.



அடுப்பு மேடையில் அருகில் நின்றபடியே அவன் -

"மோனா... சுவேதா கூட இப்படித்தான் ரொம்ப நீட்டா வேலை செய்வா. அம்மாவுக்கும் அவளுக்கும் ஒரே ஒரு விஷயத்துலதான் ஒத்துப் போகாது. அம்மா அரை மணி நேரம் வேலை செய்யறதுக்குள்ளே நிறையப் பாத்திரத்தை எடுத்து யூஸ் பண்ணிடுவாங்க. அவளுக்கு அது பிடிக்காது..." என்றான்.

"ஆமா! எங்க வீட்லயும் அப்படித்தான். சீதா அக்காவுக்கும், அம்மாவுக்கும் இதனாலேயே பிரச்சினை வரும்..." என்றாள்.

பேசிக் கொண்டே இட்லி, வெண்பொங்கல், ஸ்வீட், சட்னி என்று அமர்க்களப்படுத்தி விட்டாள் மோகனா.

சந்தோஷ்குமார் நெகிழ்ந்து விட்டான்.

"சப்பர்ப்! சப்பர்ப்..! எப்படா... உன் கைச் சாப்பாடுன்னு ஏங்க வச்சுருவே போல இருக்கு!" என்றான்.

"இது ஒரு பெரிய விஷயமேயில்லைங்க. நாளையில இருந்து ஊருக்குப் போற வரைக்கும் நானே உங்களுக்கு டிஃபன், சாப்பாடு எல்லாம் கொண்டு வந்தர்றேன்," என்றாள்.

"அது சரி... சாப்பாட்டு ராமன்னே முடிவுபண்ணிட்டே!" என்று சிரித்துக் கொண்டே ஒத்துக் கொண்டான்.

"மோனா... உனக்கு ஒரு சர்ப்ரைஸ் வச்சிருக்கேன். நாளைக்கு உன்னை இங்க கூட்டிட்டு வர்லாம்னு இருந்தேன். இன்னைக்கே அமைஞ்சிருச்சு. போய் ஃப்ரெஷ் பண்ணீட்டு வா!" என்றான். அவள் முகம் திருத்தித் தூய்மை செய்து கொண்டு வந்தாள்.

ஒரு பார்சல் நீட்டினான். பட்டுப் புடவை மேலே ஒரு நகைப் பெட்டி. ஒரு சிம்பிளான தங்க நெக்லஸ் இருந்தது.

அவள் உணர்ச்சி மேலிட்டவளாய் நிமிர்ந்து பார்த்தாள். 'இவ்வளவு காஸ்ட்லியாய்..!' என்று தயங்கினாள்.

''நிச்சயப் புடவை...! அப்புறம் பரிசம்னு வச்சுக்கயேன்!'' என்று புன்னகைத்தான்.

'உடுத்திட்டு வா,' என்றான்.

உடுத்திக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தால்... ஆட்டோமேடிக் காமிராவுடன் தயாராய் நின்றான். விதவிதமாய் ஃபோட்டோக்கள் எடுத்துக் கொண்டான்.

''நானும் சுவேதாவுமாய்ப் போய் செலக்ட் பண்ணினது!'' என்றான்.

அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி ததும்பி வழிந்தது. இது போலெல்லாம் பரிசுகள் கொடுப்பது வாங்கிக் கொள்வது என்ற பழக்கமெல்லாம் அவள் குடும்பத்தில் இருந்ததே இல்லை. எனவே, வெகுவாய் நெகிழ்ச்சியுற்றிருந்தாள்.

''தாங்க்ஸ்...சந்தோஷ்...'' என்றாள்.. ''ஆனா:.. நான்தான் உங்களுக்குப் பரிசுன்னு குடுக்க... ஒண்ணும் வாங்கலே... தோணவே இல்லே!'' என்றாள் குற்ற மனப்பான்மையுடன்.

''நீதான்... பரிசு குடுத்திட்டியே!'' என்றான்.

அவள் புரியாமல் அவன் முகம் பார்த்து விழிக்க -

''ஆயுசு முழுக்கக் கூட இருக்கப் போறவ சமையல் எப்படியிருக்குமோன்னு கவலைப்படாதே, பயலே... நல்லாத்தான் சமைப்பேன்னு தைரியம் குடுத்துட்டியே!'' என்றான்.

அவள் பதில் சொல்லத் தோன்றாமல் நின்றாள். அவன் அதைச் சாதகமாக எடுத்துக் கொண்டு இன்னும் சற்றுநெருங்கி நின்றான். அவள் சுவரில் சாய்ந்து கொண்டாள்.

''நீ விருப்பப்பட்டா இதெல்லாத்துக்கும் மேலே விலையுயர்ந்ததா ஏதாவது கொடுக்கலாம்!'' என்றான். இரு உள்ளங் கைகளையும், அவளது இருபுறமும் சுவரில் ஊன்றி நின்று.

சிறைப்பட்டாற் போல் தவிப்புடன் நின்ற அவளிடம் அதற்கான துணிவு இல்லை யெனக் கண்டு கொண்டு,



'ம்... சரி... விடு!' என்று விலகினான்.

அவள் வேகமாகப் போய் உடை மாற்றிக் கொண்டு வந்தாள்.

'போகணும்... நேரமாச்சு!' என்றாள்.

அவள் அவஸ்தையைப் பார்த்து அவனுக்குப் புன்னகை மலர்ந்தது.

''ஹேய்! பயப்படாதே! ஃபீல் ஃப்ரீ!'' என்றான். ''போகலாமா?'' என்று புறப்பட்டான்.

காரில் வரும்போது பேச்சு மாற்றிப் பேசிக் கலகலப்பாக்கினான். வழியில் மோகனா ஒரு விஷயம் சொன்னாள்.

'உங்களை மாதிரி ஒருத்தர் எனக்குக் கிடைச்சதுக்கு அக்கா மட்டும் கூட இருந்தா எவ்வளவு சந்தோஷப்படுவா!' என்றாள்.

''ஓ...! இப்ப போக்குவரத்தே இல்லையா?'' என்றான், சந்தோஷ்.

''ஆமா! கலப்புக் கல்யாணம் பண்ணிகிட்டான்னு அம்மாவுக்குக் கோபம். ஆனா, அக்காதான் என்னைப் படிக்க வைச்சா... நிறைய எங்க குடும்பத்துக்காகச் செஞ்சிருக்கா!'' என்றாள் நெகிழ்ச்சியுடன்.

'ஓ!' என்று அவள் சொன்னதை மனதில் குறித்துக் கொண்டான் சந்தோஷ்குமார்.

''ஹேய்! இன்னைக்கு நான் ரொம்ப நல்ல மூட்ல இருக்கறேன். நீ நம்ம வீடுன்னு சொல்லீட்டே!'' என்றான்.

அவள் அவனைத் திரும்பிப் பார்த்து விட்டு, ''நீங்க கூடத்தான் வைஃப்ன்னு சொன்னீங்க...'' என்று முணுமுணுத்தாள்.

''ம்...! என்ன சொல்லி என்ன? ஒண்ணும் செல்லுபடியாக மாட்டேங்குது!'' என்று அங்கலாய்த்தான். அதற்குள் அபார்ட்மெண்ட் வரவும் இறங்கினார்கள். அபார்ட்மெண்ட் வரைக்கும் வந்தான்.

நிவேதா அன்றைக்கு வருவதற்குத் தாமதமாகும் என்று மேசேஜ் அனுப்பியிருந்தாள். சற்று நேரம் பேருக்கு அமர்ந்து விட்டுக் கிளம்பினான். அவளும் கதவு வரை வந்தாள்.

''சந்தோஷ்!''என்றாள் குரலே எழும்பாத ஒரு குரலில். அவன் நின்றான்.

''என்ன வேணுமாம்?'' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் ஆழப் பார்த்தான். அவன் பார்வையைச் சந்திக்க மறுத்தாள். ஒரு விதமான கிறக்கச் சிரிப்புடன் இடக்கையால் அணைத்து வாகாய்க் குனிந்து அவன் முகம் பார்த்தாள்.

அவன் எதிர்பார்த்தது கிடைத்ததும் சிரிப்புடன் நிமிர்ந்தான்..

'தாங்க்ஸ்!' என்றான். போய் விட்டான்.

ஃபோன் ஒலித்தது.

எடுத்தாள்.

சந்தோஷ்குமார் போய் அரைமணி நேரந்தான் ஆகியிருந்தது.

''இப்பதான் தலை சுத்தலே நின்னுச்சு!'' என்றான்.

'ஐயய்யோ! தலை சுத்தலா?' என்று அவள் பதற,

'ஆமா! அம்மிணி குடுத்த பரிசுல தலை கிறுகிறுத்துப் போச்சு இல்ல!' என்று அவன் சிரிக்கவும்தான் அவன் கலாட்டா செய்கிறான் என்பது புரிந்தது.

''சே! நான் பயந்து போனேன்!'' என்றாள்.

''ஹேய்! உங்கிட்டே நேர்ல எதுவுமே பேச முடிய மாட்டேங்குது. அநியாயத்துக்கு வெட்கப்பட்டு ஆளைக் கொல்றே!'' என்றான் புகார்போல...



''அந்தப் பட்டுப் புடவையில ரொம்ப அழகா இருந்தே... தெரியுமா? சமையல் வேற சூப்பரா செய்யறே. பரவாயில்லே. நம்மளுக்கும் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருக்குது!'' என்றான் நிறைவாக.

''ஆனா... எனக்குத்தான் பயமாயிருக்கு.''

''என்ன பயம்?''

''எனக்கு உங்க பிரியமே பயமாயிருக்கு, சந்தோஷ். எல்லாம் ஸ்மூத்தா போயிட்டிருக்கு. கல்யாணம் முடியறதுக்குள்ளே எங்கம்மா என்னென்ன பிரச்சினை பண்ணுவாங்களோன்னு!'' என்றாள் கலக்கமான குரலில்.

''அசட்டுப் பெண்ணே! ஒண்ணும் கவலைப்படாதே. கல்யாணம் வரைக்கும்தானே... அவங்க கன்ட்ரோல்? வளைந்து குடுப்போம்... டோன்ட் வொர்ரி...'' என்றான் ஆதரவான குரலில்.

''நீங்க... எனக்காக விட்டுக் குடுப்பீங்க.. ஆனா... உங்க பக்கத்துல... எல்லாரும்... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க... நாம எதுக்கு வளைஞ்சு போகணும்னு கேட்டா... என்ன சொல்வீங்க?'' என்றாள்.

''சொல்றேன்... வைஃப்னு இருந்தா இவதான்... நல்லபடியாய்ப் பார்த்து நடத்தினா... நடத்துங்க... இல்லே... நானே இழுத்துட்டுப் போய்த் தாலியைக் கட்டிடுவேன்னு சொல்றேன்!'' என்று அந்த விஷயத்தை விளையாட்டாக்கினான்.

அவள் பெருமூச்சு விட்டாள். ''ம்... என்னமோ பயமாத்தான்... இருக்கு...'' என்றாள்.

''அட... என்னடா... இவ...! இன்னைக்குப் பொழுது சந்தோஷமா போச்சேன்னு நான் ஹேப்பியாய் இருக்கேன்... நீ அந்த மூடையே கெடுக்கறே!'' என்றான் எரிச்சலாக.

அவள் உடனே நகைச்சுவைக்குத் தாவினாள்

"இன்னொரு விஷயமும்தான் பயமாயிருக்கு..." என்றான் லேசான சிரிப்புடன்.

"என்ன...?" என்றாள் எரிச்சல் மாறாமல்.

"எப்படி உங்களைச் சமாளிப்பேனோன்னுதான்!" என்றான்.

அவள் உடனே கலகலவென்று சிரித்தாள்..

"கவலைப்படாதே! அம்மணி... தேவீ! சரணம்னு சரண்டராயிருவமில்லே...' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.. ஆனால், இருவருக்குமே ஒரு ஓரத்தில் திருமணம் பிரச்சினை ஏதும் இல்லாமல் முடிய வேண்டுமே என்ற கவலை இருக்கத்தான் செய்தது.

## 12

ஃபோனை வைத்து விட்டுத் திரும்பினான் ராஜேந்திரன்..

"ஹாய் சுவேதா! உங்கண்ணன் இன்னைக்கு ரெண்டு விஷயம் பத்திக் கவலை தெரிவிச்சிருக்காரு." என்றான்.

"என்னவாம்?"

"ஒண்ணு, உங்க வருங்கால அண்ணிக்கு அவங்க அக்கா அவங்க கல்யாணத்துக்கு வர முடியாதேன்னு கவலையா இருக்காம். இரண்டாவது உங்கண்ணன், மோனா ரெண்டு பேருக்குமே பொன்னம்மா பெரியம்மா எதுவும் பிரச்சினை பண்ணாம இருக்கணுமேன்னு கவலையா இருக்காம்!" என்றான்.

சுவேதா சிந்தனையுடன் அவனைப் பார்த்தாள் "அண்ணனுக்கு மட்டுமென்ன? எனக்கே உள்ளூர அந்தக் கவலை இருக்கத்தான் செய்யுது." என்றாள்.

ராஜேந்திரனும் சிந்தனையில் ஆழ்ந்தான்.



"உப்பு, மஞ்சள், ஜவுளி வாங்கறப்பவே அந்த அத்தை அது சொத்தை இது சொள்ளைன்னுட்டு இருந்தாங்க. என்னமோ கதை போற விதத்தைப் பார்த்தா நாம பொண்ணு வீட்டுக்காரங்க மாதிரியும், அவங்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க மாதிரியும் இல்ல இருக்கு!" என்றாள் எரிச்சலாக..

"ஸ்வீட்டி. நாஞ் சொல்ற விஷயத்தை நல்லாப் புரிஞ்சுக்க. பொன்னம்மா பெரியம்மாவுக்கு இதுவரைக்கும் சம்பாதிச்சுக் குடுத்த பொன்னை வெளியே அனுப்பறது பயமாயிருக்கு. ஆனா, அதே சமயத்துல கல்யாணம் பண்ணிக் குடுக்கலேன்னாலும் ஊர்க்காரங்க பேசுவாங்க. அந்த சைகாலஜியைப் புரிஞ்சுகிட்டு நாமதான் காரியத்தை வெற்றியா முடிச்சுக் காட்டணும்!" என்றான்.

சுவேதா தனக்குள்ளேயே பேசிக் கொள்வது போல், "ஆனா, பொன்னம்மாத்தை குடும்பமும் பாவம்தான்!" என்றாள்.

"ம்.... இது மூணாவது பாயிண்ட்!" என்றான் ராஜேந்திரன்.

"எது?"

"பொன்னம்மா பெரியம்மா குடும்பத்துக்கும் ஏதாவது வழி செய்யணும்கறதுதான்!" என்றான் ராஜேந்திரன்.

இன்னமும் கால் முழுமையாகக் குணமாகி விடவில்லை ராஜேந்திரனுக்கு. ஆனாலும், மைத்துனரின் திருமணத்திற்காகப் பொறுப்பேற்றுக் கொண்டதனால் அலைந்து கொண்டிருந்தான்.

"எல்லாம் சரிங்க... உங்களையும் கொஞ்சம் கவனிச்சுக்குங்க!" என்றாள் சுவேதா.

"என்னைக் கவனிக்கத்தான் நீயிருக்கேயே... ஆனா, ஆஸ்பத்திரியில இருந்து வந்ததுக்கப்புறம் ஒண்ணும் கவனிக்கவே இல்லை!" என்று முணுமுணுத்தான்.

'எல்லாம் கவனிக்கலாம். இன்னைக்கு வேணும்கற அலைச்சல் அலைஞ்சிருக்கிங்க. நாளைக்கும் நிறைய வேலையிருக்குங்க. ரெஸ்ட் எடுங்க!" என்றாள்.

"சரி... குறைஞ்ச பட்சம் ஒரு தாலாட்டாவது பாடு!" என்றான் கிண்டலாக.

"நான்தான் பாடாவதியாச்சே... பேசாம ரைம்ஸ் வேணா ஏதாவது சொல்லட்டா?" என்றாள்.

அவன் சிரிப்புடன், "கொஞ்சம் அசந்தா... ஃபீடிங் பாட்டிலை எடுத்துக் கையில குடுத்தாலும் குடுத்துடுவே!" என்றான். சற்று நேரம் வேடிக்கை பேசிவிட்டு உறங்கினார்கள்.

திருமணத்துக்கு ஐந்து நாட்களுக்கு முன்பு மோகனா ஊருக்குப் போவதென்றும், மூன்று நாட்களுக்கு முன்பு சந்தோஷ்குமார் போய்ச் சேர்வதென்றும் ஏற்பாடு.

மோகனாவுக்கு இருபது நாட்கள் விடுமுறையும் சந்தோஷ் குமாருக்குச் சற்றுக் குறைவாகவும்தான் விடுமுறை நாட்கள் கிடைத்தன.

ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் மாலை சந்தோஷ், "மோகனா, இன்னைக்கு அபார்ட்டுமெண்ட்டுக்கு வா. உன் கிட்டே முக்கியமான ஒரு விஷயம் பேசணும்!" என்றான்.

போனாள்.

"மோனா. இந்தப் பக்கத்து அபார்ட்மெண்ட் விலைக்கு வருது. ஓனர் அமெரிக்கா போறார். ஏற்கெனவே லோன் போட்டு வாங்கியிருக்காரு. அதனாலே ஒரு அமௌண்ட் கையிலே குடுத்துட்டு லோனை அப்படியே நம்ம பேருல மத்திக்கலாம். நல்ல வாய்ப்பு. இப்படி ஒரு அபார்ட்மெண்ட் பக்கத்திலேயே இருந்தா எங்க அம்மா, அப்பாவோ அல்லது உங்க அம்மா, அப்பாவோ கூட வந்தாத் தங்கிக்கலாம்" என்றான்.

உங்க இஷ்டம் என்றாள்.

அபார்ட்மெண்ட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். இரண்டு பெட்ரூம் இருந்தது. ஒரு சிறிய ஸ்டோர் கம் பூஜையறை கூட பத்துக்குப் பத்து அளவில் இருந்தது. மோகனா ஒரு யோசனை சொன்னாள்.



"அத்தான்! இந்த ஸ்டோர் ரூமைச் சின்ன ஒரு பெட்ரூமா மாத்திடலாம். சிட் அவுட்ல இருந்து போற மாதிரி கதவு இருக்கிற அந்த பெட்ரூமைக் கதவு மட்டும் வெளியே இருக்கற மாதிரி மாத்தி வச்சோம்னா கெஸ்ட் ரூமாவோ, ஆஃபீஸ் ரூமாவே நம்ம பொறுப்பிலே வச்சுக்கலாம். அபார்ட் மெண்டை இப்பப் போலவே வாடகைக்கு விட்டு வாடகையை வாங்கிக் கூடக் கொஞ்சம் அமௌண்ட் போட்டு லோன் கட்டிடலாம்!" என்றாள்.

"தட்ஸ் எ குட் ஐடியா!" என்றான். "நான் கூட நம்ம அபார்ட் மெண்ட்டை லோன் போட்டுத்தான் வாங்கினேன். ஆனா, அப்பப்ப வந்த போனஸ் சேமிப்புன்னு கடனை முடிச்சுட் டேன். சரி, இப்ப என்ன முடிவு செய்யணும்னா இந்த அபார்ட் மெண்ட்டை உன் பேருக்கு வாங்கிடலாமா?" என்றான் தங்கள் அபார்ட்மெண்டுக்குள் நுழைந்தபடி.

"வேண்டாம்! என்றாள் அவசரமாக. "உங்க பேருக்கே வாங்குங்க!" என்றாள்.

அவன் கண்களைச் சுருக்கிக் கொண்டு பார்த்தான்.

"என் பிறந்த வீட்டைப் பத்தித்தான் தெரியுமே? என் பேர்ல இருந்தா நாளைக்கே ஏதாவது ஒரு விதத்துல உரிமை கொண் டாடுவாங்க!" என்றாள்.

அவன் திரும்பி நின்று அவளைப் பார்த்தான். மறுக்க வில்லை. "ஹேய்! மோகனா! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி முதல் முதலா நீ என்னை அத்தான்னு கூப்பிட்டே, தெரியுமா?" என்றான் கிறக்கக் குரலில்.

அவள் வெட்கத்துடன் புன்னகைத்தாள். பிறகு தன்னருகில் நெருங்கி நிற்கிற அவனை மெல்ல நிமிர்ந்து பார்த்து,

"இன்னொரு முக்கிய விஷயம் பேசணும்," என்றாள்.

"என்ன?"

''இல்லே! இதுவரைக்கும் கல்யாணச் செலவெல்லாம் நீங்க தான் செஞ்சுகிட்டிருக்கீங்க. அதுல எங்க சைட்ல இருந்து நாங்க என்ன குடுக்கணும்னு சொன்னீங்கன்னா...'' என்று இழுத்தாள்.

தன் கல்யாணச் செலவு குறித்துத் தானே பேச வேண்டிய நிலையில் இருக்கிற அவளைக் குறித்து அவன் உள்ளத்தில் பச்சாதாபமும், பரிவும் மேலிட்டது.

அந்தச் சூழ்நிலையின் அபத்தத்தை மாற்றுவதற்காக அவன் நகைச்சுவையில் இறங்கினான்.

''உங்க சைட்ல இருந்து உங்களை முழுசா குடுக்கணும்!'' என்றான்.

இடக் கையால் இழுத்து அணைத்தபடி, அவள் அவன் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

''அது எழுதப்படாத விதி சார்!''என்று முணுமுணுத்தாள்

''அது போதும்!'' என்றான்.

''தாங்க்ஸ் ஃபார் தி ஆஃபர் சந்தோஷ்! ஆனா, நான் ஒரு தொகை சேமிச்சு வச்சிருக்கிறேன்!'' என்றாள்.

''எவ்வளவு?''

''ரெண்டு வருஷமா, மாசம் இருபதாயிரம் அப்படியே பாங்க்ல போட்டு வச்சிருக்கேன்!'' என்றாள்.

''தட்ஸ் ரியலி குட். எவ்வளவு இருக்கோ அதை அப்படியே ஒரு செக்காப் போட்டு ராஜா மச்சான்கிட்டே குடுத்துரு!'' என்றான்.

சற்றும் தயங்காமல் 'சரி' என்றாள். ''சரி, காஃபி போடட்டுமா?'' என்று நகர்ந்தாள்.

''இரு. அவ்வளவு பெரிய தொகையைக் குடுன்னு கேட்கறேன். என்ன செலவுன்னு கேட்க மாட்டியா?'' என்றான்.

''நீங்க எல்லாம் கரெக்ட்டா செய்வீங்கன்னு நம்பிக்கை தான்!'' என்றாள் புன்சிரிப்புடன்.



அவன் ஆழ்ந்த குரலில் தொடர்ந்தான்..

''மோனா! தப்போ ரைட்டோ உங்க பேரண்ட்ஸ் உன்னை நம்பித்தான் இருக்காங்க. அதனால... நானும் ராஜா மச்சானும் பிளான் பண்ணி...'' என்று தொடங்கி, பிரபுவுக்கு வொர்க் ஷாப் ஏற்பாடு செய்தது, பிரபுவின் மனைவி கண்மணிக்குக் கடை வைத்துக் கொடுத்தது, அவர்களுக்காக இரண்டே அறையாய் ஒரு ஓட்டு வீடு கட்டிக் கொடுத்தது, அவள் அம்மா அப்பாவுக்குக் கொஞ்சம் வாடகை கிடைக்கிற மாதிரி ஏற்பாடு செய்தது எல்லாவற்றையும் சொன்னான்.

மோனா பேச்சற்றவளாய், மலைத்துப் போய்க் கேட்டுக் கொண்டாள். கண்களில் கண்ணீர் நிறைந்தது.

''இப்பவும் உன்னோட இந்தப் பணத்தை வச்சு உங்க அம்மா அப்பாவுக்கு வாடகை வர்ற மாதிரி கீழே ஒரு போர்ஷன் எக்ஸ்டென்ட் பண்ணி மேலே மூணு போர்ஷன் ஓடு போட்டுக் கட்டிக் கொடுத்தர்லாம். அப்புறம், முடிஞ்சப்ப ஆர் சி போட்டுக் குடுத்தர்லாம், என்ன?'' என்றான்.

அவள் பொம்மையைப் போல் தலையாட்டினாள். ''குறைந்தது ஒரு பத்தாயிரம் வாடகை வர்ற மாதிரி ஏற்பாடு செஞ்சிட்டம்னா அவங்க நம்மளை எதிர்பார்க்க வேண்டியதில்லை. நம்மால முடிஞ்ச ஹெல்ப் நாம தொடர்ந்து செய்யலாம், என்ன?'' என்றான்.

அவள் நெகிழ்ந்தவளாய் மீண்டும் தலையாட்டினாள். ''தொடர்ந்து மாசா மாசம் பணம் குடுக்கலாம். ஆனா, அதைக் காட்டிலும் அவங்களுக்கே ஒரு வருமானம் வர்ற மாதிரி ஏற்பாடு செஞ்சு குடுத்துட்டா... பெட்டர் இல்லியா? நமக்கே நாளைக்குக் குழந்தைகள் வரலாம்... அவங்க செலவு... படிப்புச் செலவுன்னு... நிறைய வருமில்லே...'' என்றான்.

குழந்தை என்றவுடன் அவள் முகம் சிவக்க, அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

''இத பார்றா! வெட்கமாம்!'' என்று ரசித்துச் சிரித்த அவன் அவள் நெகிழ்ந்த நிலையை விவரமாகப் பயன்படுத்திப் பதில்கள் கூட வாங்கிக் கொண்டான். பிறகு அவனே,

''வேண்டாம்! இப்ப லிமிட் மீறக் கூடாது. என்ன... ஒரு வாரம்தானே! அப்புறம்... பாத்துக்கலாம்!'' என்று விலகினான். அவளை இயல்பாக்குவதற்காக, ''சரி! காஃபி போட்டுக் குடு!'' என்றான்.

அவள் விலகிச் சமையலறை நோக்கிப் போனாள்.

சற்றுக் கழித்து அவனும் வந்தான். ''மோனா! நம்ம கல்யாணத்துனால உனக்கு ஒரு பெரிய பலன் தெரியுமா? உன்னைச் சொந்தத் தங்கையாக நேசிக்கிற ஒரு அண்ணன் கிடைச்சிருக்கிறாரு. எல்லாம் ராஜா மச்சான் போட்ட திட்டம் தான்!'' என்றான்.

''ஆமா, நானும் கூட ஏதோ புண்ணியம் செய்திருக் கிறேன்னு எனக்கே இப்பத்தான் நம்பிக்கை வந்திருக்கு!'' என்றாள் காஃபிக் கோப்பையை அவன் கையில் கொடுத்தபடி.

''சந்தோஷ்!'' என்றாள் நெகிழ்ந்த குரலில். ''எவ்வளவு தூரம் யோசிச்சு, யோசிச்சு இவ்வளவும் செய்யறீங்களே!'' என்றாள்.

''எல்லாம் மச்சான்கிட்டே கத்துக்கிட்டதுதான். அவருக்கு மொத்தச் சம்பளமே பதினைந்தாயிரம்தான். அதுல சேமிச்சு சிஸ்டருக்கு மேரேஜ் செய்யறாரு. சுவேதாவை சந்தோஷமா வச்சுக்க.... ஒரு வீடு கட்டணுங்கறாரு. அவங்க அம்மா அப்பாவுக்கும் செய்யறாரு. பொறுப்புகளை எப்படி அழகா சுமக்கலாம்னு அவருகிட்டேதான் தெரிஞ்சுகிட்டேன்!'' என்றான்.

''ஹி இஸ் ரியலி கிரேட்!'' என்றாள் மோகனாவும்.

''அது மட்டுமில்லே. இப்பப் பாரு. கல்யாணத்துக்கு நாலைந்து நாள்தான் இருக்கு. நான் இங்கே ஜாலியா இருக்கேன். அவரு அங்க எல்லாத்தையும் ஏற்பாடு



செய்யறாரு. ஒரு நாள் ஃபோன்ல, ரொம்ப தாங்க்ஸ் மச்சான் அப்படிங்கறேன்... கலகலன்னு சிரிச்சாரு!'' என்று நிறுத்தினான்.

அவள் ஆர்வமாக அவன் முகத்தைப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

''மச்சான்! நான் ஒண்ணும் சும்மா செய்யலே. எல்லாம் சுயநலம்தான். உங்க மேரேஜை நல்லபடியாக நடத்தி முடிச்சா... வேற இடத்துல எனக்குப் பரிசு கிடைக்கும் மச்சான் அப்படின்னு சிரிக்கிறாரு!'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள் ''அந்த பாயின்டைக் கப்புன்னு புடிச்சுகிட்டேன்!'' என்றான் சந்தோஷ்குமார்.

மறுபடியும் சிரித்தார்கள். அவன் தொடர்ந்து, ''பாரேன், இத்தனை நாள் எத்தனை கெஞ்சினேன், ஒண்ணும் நடக்கலை. இன்னைக்குப் பார். எத்தனை பதில் கிடைச்சுதுன்னு.'' என்று வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

''சே! இப்படி மானத்தை வாங்கறீங்களே!'' என்று முணு முணுத்தபடி சட்டென்று திரும்பிப் பாத்திரங்களை ஒழுங்கு படுத்த ஆரம்பித்தாள்.

அவன் சிரித்துக் கொண்டே நகர்ந்து விட்டான். பிறகு ஊருக்குப் போனதற்குப் பிறகு செய்ய வேண்டிய முக்கிய விஷயங்களைச் சற்றுப் பேசி விட்டுப் புறப்பட்டார்கள்.

''சரி, வா! உன்னைக் கொண்டுபோய் அபார்ட்மென்ட்ல விட்டர்றேன். காலைல எட்டு மணிக்கு ஃபிளைட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தர்றேன்!'' என்று திட்டமிட்டுக் கொண்டார்கள்.

புறப்படுகிற நேரத்தில் அவள் கதவைத் திறக்கப் போகிற சமயம் அவள் 'சந்தோஷ்!' என்று அவன் வலத் தோளைப் பிடித்து நிறுத்தினாள்..

அவன் கேள்விக் குறியுடன் பார்க்க அவள் தன் வலக்கையால் அவன் கழுத்தை வளைத்தாள். தன் முகம் நோக்கி இழுத்து அவன் எதிர்பாராத வண்ணம் பரிசு மழை பொழிந்தாள்.

சந்தோஷ் குமார் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லையாதலால் திகைத்துப் போய் வாங்கிக் கொண்டான். பிறகு விலகி வேகமாகப் படிகளில் இறங்கிப் போகிற அவளைப் புன்சிரிப்புடன் பார்த்தபடி அவனும் அபார்ட்மென்ட்டைப் பூட்டி விட்டு இறங்கிப் போனான்.

காரில் போகும்போது, "ஃப்ரெண்ட்ஸ் சொன்னாங்க: 'டேய்! கல்யாணத்துக்குப் பிறகு எல்லாந்தான் நடக்கும். அதுக்கு முன்னாடி அப்பப்ப கொஞ்சம் கிடைக்கும்... பாரு... அதான்டா திரில்லேன்னாஹுங்க!" என்று மறுபடியும் சிரித்தான்.

அவள் மௌனமாக வெளியே பார்த்தபடி வந்தாள். அபார்ட்மென்டில் இறக்கி விட்டுப் போனான்.

மறுநாள் அவளை விமானத்தில் ஏற்றி விட விமான நிலையத்துக்கு வந்தவன் -

"மோனா! இன்னும் ஒரு 'விஷயம்' பாக்கியிருக்கு," என்றான்.

"என்ன?" என்பது போல் அவள் பார்க்க.

"ஊருக்கு வர்றேன்... இல்ல, அப்பச் சொல்றேன். அதுவரைக்கும் சஸ்பென்ஸ்!" என்று புன்னகைத்தான். தொடர்ந்து -

"பரவாயில்லை. மூணு நாலு நான் பாக்க முடியாதேன்னு நெனச்சேன். நேத்துக் கிடைச்சதை வச்சுகிட்டு இந்த ரெண்டு மூணு நாளையும் ஓட்டிக்குவேன்!" என்று மறுபடியும் கலாட்டா செய்து சிரிக்க,

"ப்ளீஸ்!" என்றாள் வெட்கத்துடன்.

"ஓ...கே! ஓ...கே...!" என்று இரு கைகளையும் லேசாய் உயர்த்தி மகிழ்வாய் வழியனுப்பி வைத்தான்.



"சந்தோஷ் மச்சான்! எதுக்கும் கண்ணாடி முன்னால் நின்னு ஷர்ட்டுக்கு மேல இடுப்புல துண்டைக் கட்டிட்டு பவ்யமாய் நின்னு ஏர் இந்தியா வணக்கம் போட்டுப் பழகிக்குங்க!" என்று சிரித்தான் ராஜேந்திரன்.

"ஏன்?" என்றான் சந்தோஷ்குமார் விஷயம் புரியாதவனாய் ஃபோனில் அந்தப் பக்கம்.

"இங்கே, பெரிய கிச்சன் காபினெட்டே உருவாயிருக்கு மூவர் அணி. சாந்தா, மோனா, சுவேதான்னு முப்பெரும் தேவியர் அதிகாரம் கொடி கட்டிப் பறக்குது!" என்று மறுபடியும் சொல்ல, சந்தோஷ்குமார் நிம்மதியானான்.

"போங்க மச்சான். என்னமோ ஏதோன்னு பயந்து போனேன்!" என்று அவனும் சிரித்தான்.

ராஜேந்திரனின் அருகில் நின்ற சுவேதா, "சும்மாயிருங்க, விளையாடிகிட்டு!" என்று செல்லமாக மிரட்டினாள்.

அந்த சமயம் எல்லாரும் மோகனாவின் வீட்டில் அமர்ந்து ஏற்பாடுகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அப்புறம் பேசறேன்... மோனா கிட்டே பேசறீங்களா?" என்று செல்ஃபோனைக் கொடுத்து, தனிமை கொடுத்து, மற்றவர்கள் விலகினார்கள்.

அவளும் சுருக்கமாகவே பேச்சை முடித்துக் கொண்டாள்.

அன்றைக்கு மோகனாவின் வீட்டில் யாரும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது.

பிரபு, ராஜேந்திரனிடம் வந்து, "அண்ணா! சிஸ்டர் கல்யாணத்துக்கு என்னால முடிஞ்சது!" என்று நாப்பத்தைந் தாயிரம் பணம் கொடுத்தான்..

ராஜேந்திரனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

"எப்படி அரேன்ஜ் செய்தீங்க?" என்று கேட்டான்.

"எப்படியோ செய்தேன் நீங்கள்ளாம் எங்க குடும்பத்துக்காக இவ்வளவு செய்யும்போது நானும் இனிமேலாவது

மனுஷனா இருக்கணுமில்லே, என் கடமையைச் செய்யணு மில்லே!'' என்றான்.

''அது சரிதான்... தம்பி!'' என்று ஏற்றுக் கொண்டான் ராஜேந்திரன்.

சற்றுக் கழித்துத்தான் தெரிந்தது. அவனும் கண்மணியும் கலந்து பேசி, கண்மணியிடம் இருந்த நகைகளை விற்றுப் பணம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று.

ராஜேந்திரன், சாந்தா, சுவேதா எல்லாரும் கிளம்பிப் போன பின் மோகனா சகோதரனின் வீட்டுக்குப் போனாள்.

''அண்ணா! நீ இப்பத்தான் ஒரு வழியா செட்டிலாக ஆரம் பிச்சிருக்க! நீயெதுக்குச் சிரமப்பட்டுப் பணம் சரி செய்தே?'' என்றாள்.

''இல்லம்மா. ராஜா அண்ணன் ஃபாமிலியைப் பாத்து நான் நிறைய விஷயம் புரிஞ்சுக்கிட்டேன். நகை யென்னம்மா நகை, கொஞ்சம் கொஞ்சமா வாங்கிக்கலாம் இப்ப உன் கல்யாணம்தானே முக்கியம்!'' என்றான்.

மோகனா உண்மையாகவே மகிழ்ச்சியடைந்தாள். கண் மணியைப் பார்த்து, ''சரிங்கண்ணி, அதுக்குன்னு நீங்க மஞ்சள் கயிறோட நிக்க வேண்டாம். என்னோட செயின் வளையல் எல்லாம் கொண்டு வந்திருக்கேன்!'' என்று நீட்டினாள்.

''சரி.. இப்ப விசேஷ நேரங்கறதுக்காக இரவலா வாங்கிக் கறேன். ஆனா, கல்யாணம் முடிந்ததும் குடுத்துடுவேன்!'' என்றாள் கண்மணி.

''சரிங்க அண்ணி! அப்படியே செஞ்சுக்கலாம்,'' என்று நகர்ந்தாள் மோகனா.

கண்மணி மோகனாவிடம் தனியாக இன்னொரு விஷய மும் சொன்னாள்.

''ராஜா மாமா ரொம்ப நல்ல மனுஷன் மோனா. அவர்தான் இந்தப் பெட்டிக் கடையை மகளிர் திட்டம் எது மூலமாவோ



ஏற்பாடு செஞ்சு வாங்கிக் குடுத்தார். அப்புறம், பாரும்மா. இந்தக் கடையை நான் ஏற்பாடு செஞ்சு குடுக்கறதுக்கு ரெண்டு காரணம் இருக்கு. ஒண்ணு, உன் கைச் செலவுக்கு ஏதோ பணம் கிடைக்கும். ரெண்டாவது, இந்த ரெண்டாவதுதான் ரொம்ப முக்கியம்.. நீ வொர்க் ஷாப்புக்கு முன்னாலயே கடை போட்டு உட்கார்ந்திருக்கறதனால பிரபுவோட வேண்டாத சிநேகித ருங்கள்லாம் வர்றதுக்குத் தயங்குவாங்கன்னாரு. ஒண் ணொண்ணும் யோசிக்கச் செய்யறாரு. அவரைப் பார்த்துத்தான் உங்கண்ணனுக்கே பொறுப்பு வந்திருக்கு அவருக்குப் பொறுப்பு வந்ததுதான் முக்கியமான விஷயமே தவிர, நகை பெரிய விஷயமே இல்லை!'' என்றாள்.

மோகனா உண்மையாகவே பேச்சற்றுப் போனாள்.

அன்றிரவு!

சந்தோஷ்குமார் அவளை செல்ஃபோனில் அழைத்துப் பேசினான்.

அப்போது கண்மணி சொன்னதைச் சொன்னாள். பிரபு அண்ணன் இப்படி மாறுவான்னு நெனக்கவே இல்லை என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தாள். அந்த மகிழ்ச்சியை அவனும் பகிர்ந்து கொண்டான். பிறகு,

''சரி... இப்ப உன்கிட்டே எவ்வளவு நகை இருக்கு?'' என்றான்.

''ஒரு முப்பத்தைஞ்சு பவுன் வச்சிருக்கேன்!'' என்றாள்.

''சரி. அதுல பிரபு எவ்வளவு செஞ்சிருக்காரோ அதுக்கு மேலே கூட ஒரு பவுனோ ரெண்டு பவுனோ பிரசென்ட் பண்ணிடலாம். உனக்கு அம்மாவோட நகை இருக்கு. நானும் வாங்கித் தரேன்!'' என்றான்.

''சரிங்க...! எனக்கொண்ணும் நகையிலே பெரிய இன்ட்ரஸ்ட் இல்லே!'' என்றாள்.

சந்தோஷ்குமார் தொடர்ந்து, ''மோனா! டெமான்ஸ்ட் ரேஷன் எஃபெக்ட்னு படிச்சிருக்கியா, அதான் நம்ம வீட்ல

நடக்குது. ராஜா மச்சான் யாருக்கும் அறிவுரை சொல்லி நான் பார்த்தது இல்லே. ஆனா, தன்னோட நடத்தையினாலேயே பாக்கறவங்களை அவரை மாதிரி நடக்க வச்சர்றாரு!'' என்றான்.

''உண்மைதான்!'' என்றாள் மோகனா மனப்பூர்வமாக. பிறகு தொடர்ந்து, ''இன்னொரு விஷயம் இருக்குன்னு சொன்னீங்களே? என்ன அது?'' என்றாள்.

''சஸ்பென்ஸ்... அம்மிணி, சஸ்பென்ஸ்...''என்றான். பிறகு, ''ஹேய்! ஸ்வீட் ட்ரீம்ஸ் சொல்ல மாட்டியா? அது சரி! தூங்கினாத்தானே கனவு வர்றதுக்கு. தூக்கமே வந்து தொலைய மாட்டேங்குது!'' என்றான் பாதி உண்மையும் பாதி எரிச்சலுமாய்.

''என்னடா, இன்னும் உளற ஆரம்பிக்கலையேன்னு நெனச்சேன்!'' என்று முணுமுணுத்தாள் மோகனா.

''ஹேய்! என்ன வாடா போடாங்கறே..'' என்று அவன் வம்பிழுக்க..

'நான் எப்ப?'' என்று அவள் விழித்தாள்.

''பின்னே, இப்ப நீ என்னடான்னு சொல்லலியா?'' என்றான்.

''அட! ஆண்டவா!''என்றாள் திகைத்துப்போய்.

''அது சரி போ! அவனுக்கும் அதே கதிதானா?''என்று மறுபடியும் சிரிக்க,

''சே! உங்க கிட்ட பேசவே பயமாயிருக்கு!'' என்றாள் மோகனா சிணுங்கலாக.

''தட்ஸ் ரைட் தங்கம்ஸ்... இனிமே ரொம்பப் பேச விடறதா ஐடியாவும் இல்லே!'' என்று வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

''ஐய்யோ! உங்களுக்கு என்னவோ ஆகிப் போச்சு! நான் கட் பண்றேன்!''என்று அவள் ஆஃப் செய்து விட்டாள்.

ஆனால் அதற்குப் பிறகு தனக்குள் சிரித்துக் கொண்டாள். உறக்கத்திலும் கூடப் புன்னகை உறைந்து நின்றது.






கார் போய்க் கொண்டிருந்தது.

எல்லோரும் கலகலவெனச் சிரித்தார்கள்.

''மச்சான்! எப்படி மச்சான் இப்படி எப்பவும் சிரிச்சுட்டே இருக்கீங்க?'' என்றான் சந்தோஷ்குமார்.

''வேற என்ன செய்ய? கல்யாணம் செஞ்ச நாள்ல இருந்து இப்படித்தான். இடுக்கண் வருங்கால் நகுகன்னு வள்ளுவர் சொல்லலியா?'' என்றான் ராஜேந்திரன் மறுபடியும்.

சந்தோஷ்குமார் திடுக்கிட்டுப் போய்த் தங்கையின் முகத்தைப் பார்க்க, அவளும் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''வைஃபைத்தான் இடுக்கண் அப்படிங்கறாரில்லே! விட்டுட்டு நாலு நாளைக்கு இருக்கச் சொல்லுங்க, பாக்கலாம்!'' என்று சவால் வைத்தாள் சுவேதா

''சே! நேரம் பார்த்துக் காலை வார்றாடா!'' என்று சற்றும் வெட்கமில்லாமல் சிரித்தான் ராஜேந்திரன். மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள்.

'பாத்தியா?' என்பதுபோல் கண்ணாடி வழியாக சந்தோஷ்குமார் மோகனாவின் முகம் பார்க்க, அவளும் அதைக் கவனித்துப் புன்னகைத்தாள். பிறகு மோகனா -

''ராஜா அண்ணா, எங்கதான் போறோம்னு சொல்ல மாட்டீங்களா?'' என்று கேட்டாள்.

''பொறும்மா... தன்னால தெரியும்,'' என்றான் அவன்.

சந்தோஷ்குமார்... மோகனா, ராஜேந்திரன், சுவேதா, கண்மணி எல்லாருமாகக் காரில் போய்க் கொண்டிருந்தார்கள். கண்மணி ராஜேந்திரனை மாமா என்று அழைத்தாள்.

''இரும்மா, நாம பட்ட கஷ்டம் சகோதரியும் படணுமில்ல. பொன்னம்மா பெரியம்மாகிட்டே எத்தனை பொய் சொல்லி இந்த ட்ரிப் ஏற்பாடு செஞ்சிருக்கேன்!'' என்றான்.

அதற்குள் சுவேதா இடை புகுந்து, "மோனா அண்ணி! நாங்களே சொல்லீட்டோம். உங்க சீதா அக்கா வீட்டுக்குப் போறோம், கல்யாணத்துக்கு அழைக்க!" என்றாள்.

"ஓ....!" என்று ஒரு நிமிடம் திகைத்துப் பின் முகம் மலர்ந்தாள். பிறகு முகத்தில் கலவரம் படர,

"அம்மாவுக்குத் தெரியுமா? அம்மா ஒத்துக்கிட்டாங்களா?" என்று கேட்டாள்.

"அம்மாவுக்குத் தெரியாது. ஆனா உங்கண்ணனுக்குத் தெரியும். முக்கியமா ரெண்டு மூணு பேரை அழைக்கறதுக்குப் பொண்ணும் வரணும்னு மாப்பிள்ளை கேட்கறாருன்னு சொல்லி அழைச்சிட்டு வந்திருக்கு..." என்றான் ராஜேந்திரன்.

"அம்மா எதுவும் பிரச்சினை செஞ்சா?" என்றாள் கவலையுடன்.

"அதை அப்புறம் பாத்துக்கலாம்!" என்றான் ராஜேந்திரன்.

"அண்ணா! உங்களுக்கு எங்க அம்மாவைப் பத்தித் தெரியலே!" என்று முணுமுணுத்தாள் மோகனா.

"அதை விடம்மா! இந்தக் கிராமங்களையெல்லாம் பாரு... எவ்வளவு அழகு!" என்று கவனத்தைத் திருப்பினான் ராஜேந்திரன்.

* * *

'அக்கா!' என்று தன் தோளில் முகம் புதைத்து அழுகிற தங்கையை நெகிழ்ந்த உள்ளமும் கலங்கிய கண்களுமாய் அணைத்துக் கொண்டு நின்றிருந்தாள் சீதா.

உணர்ச்சி மயமான காட்சிகளுக்குப் பின் எல்லாரும் இயல்பானார்கள்.

"இப்படியொரு சம்பந்தம் கிடைச்சது ரொம்ப சந்தோஷமாயிருக்கு!" என்று மகிழ்ந்து போனாள் சீதா. அவள் கணவன் ஏதோ வேலையாய் வெளியே போயிருக்கிறார், வந்து விடுவார் என்றாள்.

அவள் கணவன் வந்தபோது இன்னொரு திருப்பமும் நேர்ந்தது.



"அட, ஸ்ரீதர், நீங்களா?"

"அட சந்தோஷ்!" என்று இருவரும் மகிழ்ச்சி பரிமாறிக் கொண்டார்கள்.

"சந்தோஷ் எனக்கு ஸ்கூல்ல ஜுனியர். நாங்க ரெண்டு பேரும் என்.சி.சி.யில ரொம்ப ஆக்டிவ். அப்புறம், நான் அக்ரி யுனிவர்சிடி போயிட்டேன்," என்றான்.

கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுவேதா மிகவும் அக்கறையாக, 'ஏங்கண்ணா, சீதா அண்ணியை எங்க சந்திச்சீங்க?" என்று கேட்டாள்.

அவன் புன்னகைத்தான். "நான் ஒரு ரெண்டு வருஷம் அக்ரி யுனிவர்சிட்டியில டெம்பரரி ஜாப்ல இருந்தேன். அப்ப, சீதா வீட்டுக்குப் பக்கத்துலதான் இருந்தோம். சீதாவோட பொறுப்பு, அவளைச் சுற்றியுள்ள பிரச்சினைகள் எல்லாம் பாத்து ஒரு லைக்கிங் விழுந்துடுச்சு. மறுபடியும் ஊருக்கு வர்ற நேரத்துலதான் பிரபோஸ் பண்ணி ரொம்பக் கஷ்டப்பட்டுத் தான் ஒத்துக்க வச்சேன்," என்றான் ஸ்ரீதரன்.

சீதா அவசரமாக எல்லாருக்கும் சமையல் செய்தாள். கண்மணியும் சுவேதாவும் உதவி செய்யப் போனார்கள்.

உடனே கிளம்ப வேண்டும். பிற்பகலுக்குள் மோனாவை வீட்டில் சேர்க்க வேண்டும். கல்யாணத்துக்கு வேண்டிய மளிகைச் சாமான்களை வரவழைக்க வேண்டும் என்று பரபரத்த ராஜேந்திரனிடம் -

"உடனே சமையல் முடிக்கறேன். பன்னிரண்டு மணிக்குச் சாப்பிட்டர்லாம். முதன் முதலா எனக்குன்னு மனுஷங்க வந்திருக்கீங்க!" என்று சீதா உருக்கமாக வேண்டுகோள் வைக்கவும் தவிர்க்க முடியவில்லை.

கோவையிலிருந்து கோபிக்குப் போகிற வழியில் இருந்தது அவர்கள் கிராமம். சாதாரணக் குடும்பம் - ஸ்ரீதரனுக்கும் அவன் சகோதரனுக்கும் சேர்த்து ஏழு ஏக்கர் நிலம்.

விவசாயமும் பார்த்துக் கொண்டு சின்னதாக ஒரு வியாபாரமும் செய்து கொண்டிருந்தான். சீதாவுக்கு உள்ளூர்ப் பஞ்சாயத்து ஆஃபீஸில் வேலை என்று அளவான வருமானம். ஒரே ஒரு பையன் ஒரு வயதில்.

குழந்தையை ஆசையாக மோகனா கொஞ்சிக் கொண்டிருக்கையில் சுற்றிலும் யாருமில்லை என்ற துணிவில் அருகில் வந்து நின்றான் சந்தோஷ்குமார்.

"என்னம்மா, ட்ரெயினிங் எடுத்துக்கறாப்ல... தெரியுது!" என்று கிசுகிசுத்தான்.

'பேசாம இருங்க. யாராவது வரப் போறாங்க!" என்று அவள் நகர.

"சே! டெல்லியே தேவலாம் போல! அவங்க பாக்கப் போறாங்க, இவங்க வரப் போறாங்கன்னே கொல்றாடா. ரெண்டு நிமிஷம் பேசினா என்ன?' என்று சந்தோஷ்குமார் எரிச்சலாகச் சொல்வது அந்தப் பக்கம் வந்த சுவேதா மற்றும் ராஜேந்திரன் காதில் விழுந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சுவேதா களுக்கென்று சிரித்துக் கொண்டு நகர்ந்தாள்.

"ஏய்! பாவம் உங்கண்ணன்!" என்று புன்னகைத்த ராஜேந்திரன் சத்தமாக -

'சுவேதா... வா... இந்த வயலை ஒரு சுத்து சுத்திப் பாக்கலாம்," என்று அழைத்தான்.

"நானும், கண்மணி அக்காவும் இங்க பாத்துக்கறோம். நீங்க அண்ணன், அண்ணி ஸ்ரீதரண்ணா வேண்ணா போய்ப் பாத்துட்டு வாங்க!' என்றாள் சுவேதா கண்ணைச் சிமிட்டியபடி

ராஜேந்திரன் சந்தோஷுக்கும் மோகனாவுக்கும் தனிமை கொடுத்து, ஸ்ரீதரனை வேறுபக்கம் நகர்த்தினான். அப்போது ஸ்ரீதரன் வேறு ஒரு விஷயம் சொன்னான். ஆனால், சந்தோஷ்குமார் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கவில்லை.



அவர்கள் வீட்டுப் பின்கட்டுப் பக்கம் நின்று வயல் வெளிகளைப் பார்த்தார்கள் அருகில் தெரிந்த பச்சைமலை, பவளமலை இரண்டும் பார்க்க அழகாக இருந்தன. நீர் வளம் மிக்க வயல்கள். அவற்றைப் பார்த்தபடி இரண்டு நிமிடம் அமைதியாய் நின்றார்கள்.

'எல்லாரும் ஏதோ ஸ்கீம் பண்ணி நம்மளைத் தனியா விட்ட மாதிரி இல்லே?' என்றான் சந்தோஷ்குமார்.

'ம்...'என்றாள் மோகனா.

'என்ன, இன்னும் ரெண்டு மூணுநாள். அதுக்கப்புறம் நாம தைரியமா தனியாய் நேரம் தேடிக்கலாம்' என்று புன்னகைத்தான்.

அவள் மௌனமாவும், படபடப்பாகவும் நின்றாள்.

"ஹேய்! ஏன் இப்படி டென்ஷனாகறே. இத்தனை பேருக்கு நடுவிலே என்ன பண்ணீருவேன்னு இப்படிப் பயப்படறே?" என்றான்.

"இல்லே எல்லோரும் ஏதாவது நினைச்சாங்கன்னா..." என்றாள்.

'ஒண்ணும் நெனைக்க மாட்டாங்க. இன்ஃபாக்ட் ராஜா மச்சான் ரெண்டு கார் அரேன்ஜ் பண்றேன். நீங்க தனியா ஒரு கார்ல போங்கன்னாரு. நாந்தான் அதெல்லாம்... எதுக்குன்னுட்டேன்!" என்றான்.

"எனி ஹௌவ் தாங்க்ஸ்...!" என்றாள்.

அவன் கேள்விக் குறியாய்ப் பார்க்க, "இப்படி அக்காவுக்கு மரியாதை செய்வீங்கன்னு நெனக்கவேயில்லை. இதைத்தான் சஸ்பென்ஸ்ன்னு சொன்னீங்களா?" என்றாள்.

"ஆமாம்! உங்கக்கா உன்னைப் படிக்க வச்சவங்கன்னு சொன்னேயில்ல. அதான், உன் மனசில எந்தக் குறையும் இல்லாம மணவறையில் உட்காரணும்னுதான்!" என்றான் வாஞ்சையாக.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். கடலளவு கண்கள் என்பார்களே! அது போலக் கண்கள். அந்தப் பார்வையில்

தெரிந்த உணர்ச்சியில் அவன் ஒரு நிமிடம் திணறிப் போனான். சட்டென்று அவன் வலக்கையை எடுத்துப் புறங்கையில் முத்தமிட்டு விட்டு ஓடிவிட்டாள்.

அவன் புன்னகையுடன் சென்று மற்ற ஆண்கள் இருவருடனும் சேர்ந்து கொண்டான்.

அப்போதுதான், ஸ்ரீதரன் அந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான். நிலத்தில் அவனுக்கும், அவன் தம்பிக்கும் பங்காம். தம்பி சென்னையில் தங்கியிருப்பதால் தன் பங்கு நிலத்தை விற்க விரும்புகிறானாம். தற்போது ஸ்ரீதரனிடம் வாங்குகிற அளவுக்குப் பணம் இல்லையாம். வெளியாட்கள் யாருக்காவது விற்றால் இனி எதிர்காலத்தில் உறவு எப்படியிருக்குமோ என்று தெரியவில்லை என்றான் கவலையுடன்.

''தெரிஞ்சவங்க யாராவது இருந்தா வித்துக் குடுங்க... ராஜா மச்சான்!'' என்றான் சந்தோஷ்.

நிலத்தில் அந்தப் பக்கத்தில் இதேபோல ஒரு வீடும் இருக்கிறது என்றான் ஸ்ரீதரன்.

அப்போதுதான் ராஜேந்திரனுக்கு அந்த யோசனை தோன்றியது. மைத்துனனைத் தனியே அழைத்துப் பேசினான்.

''மச்சான்... நீங்களே வாங்கிக்குங்க...'' என்றான்.

''பணம்!'' என்றான் சந்தோஷ்.

''நான் சொல்றதைக் கேளுங்க. இப்ப என்கிட்டே வாங்கற சைட்டிலே வீடு கட்டறேங்கறீங்களே... சைட்டை மட்டும் வாங்கிக்குங்க. வீடு கட்டறதைக் கொஞ்சம் ஒத்திப்போடுங்க. மாசம் ஒரு பத்தாயிரம் அம்மா அப்பாவுக்கு அனுப்பினீங்கன்னா, உங்களாலே உங்க செலவு போக எவ்வளவு சேமிக்க முடியும்...''

''மினிமம் இருபத்தைந்தாயிரம்.''

''அப்புறம்... என்ன? வருஷத்துக்கொரு போர்ஷனாக் கட்டிரலாம். இப்ப இந்த நிலத்தை வாங்குங்க.''



''ஏன்... அவ்வளவு பர்ட்டிகுலராச் சொல்றீங்க?''

''வளமான பூமி. நாம வாங்கி ஸ்ரீதரன்கிட்டயே குத்தகைக்குக் குடுத்தரலாம். அவங்களுக்கும் ஹெல்ப். நாமளும் எப்ப வேண்ணா ஒரு ரிலாக்ஸேஷன் மாதிரி வந்து தங்கிட்டுப் போலாம். நம்மாளுங்ககிட்டே பூமி இருக்கறதுனால கவலையில்லாம இருக்கலாம். பாருங்க... இந்தப் பூமிக்குள்ளறயே கால்வாய் ஓடுது!'' என்றான்.

''நல்ல யோசனை!'' என்று ஏற்றுக் கொண்டான். சந்தோஷ்குமாரின் அப்பா பேரிலேயே வாங்கிவிட முடிவு செய்தான். உடனேயே ஸ்ரீதரனின் சகோதரனிடம் ஃபோனில் பேசி முடிவு செய்தார்கள்.

அங்கிருந்து புறப்படும்போது எல்லாரும் மகிழ்வாய்ப் புறப்பட்டார்கள்.

* * *

திருமணத்திற்கு முந்தைய இரவு.

நிச்சயதார்த்தம் முடிந்து ரிசப்ஷன் வைத்தார்கள். உறவினர்களின் கூட்டம் நிறைந்திருந்தது.

ஒன்பது மணி வாக்கில் கூட்டம் ஓரளவு குறைந்தது.

மோகனாவும் மாப்பிள்ளையும் மேடையை விட்டு இறங்கி ஓய்வாகச் சற்று அமர்ந்தார்கள்.

ஐஸ்வர்யா ஓடி வந்து சந்தோஷ்குமாரின் மடியில் அமர்ந்து கொண்டாள்.

அதே நேரம் ராஜேந்திரன், சுவேதா, சாந்தா, பாலு எல்லாரும் வந்து ஓய்வாக அமர்ந்தார்கள்.

''மாமா! சொக்குப்பொடின்னா... என்ன?'' என்றாள் ஐஸ்வர்யா.

''ஏன்டா?'' என்றான் சந்தோஷ்குமார்.

''இல்லே... மோனா அத்தை... உனக்கு அந்தப் பொடிதான்... நிறையப் போட்டுட்டாங்களாம்... அப்பா... அம்மா கிட்டே சொன்னாங்க...'' என்றாள் மழலையில்.

வெடிச் சிரிப்பு கிளம்பியது. சந்தோஷ்குமாரின் பார்வை மோகனாவின் மேல் படிந்து மீண்டது. அவள் முகம் சிவந்து போனது.

சந்தோஷ் குறும்பாகச் சிரித்தபடி, "அதுவாடா... அது உங்க அப்பா, உங்க அம்மாவுக்குப் போட்ட பொடிதான்டா செல்லம்மா!" என்றான்.

மறுபடியும் சிரித்தார்கள், பாலு இடையில் புகுந்து, "இப்பக் கேள்வி யாரு யாருக்குப் போட்டாங்கங்கறது இல்லே? சொக்குப் பொடின்னா... என்னங்கறதுதான்..." என்று விளக்கம் சொல்ல எல்லாரும் சிரித்துக் கொண்டே திரும்பினார்கள்.

சீதாவும் அவள் கணவன் ஸ்ரீதரனும் உள்ளே நுழைந்தார்கள்.

ராஜேந்திரன் முகம் மலரப் போய் வரவேற்றான். "ஏன் இவ்வளவு நேரம்?" என்றான்.

"காரணமாத்தான்!" என்றாள் சீதா.

"என்ன காரணம்?" எனக் கேட்டான்.

"இல்லே! ஒரு வேளை அம்மா ஏதாவது பிரச்சினை செஞ்சாங்கன்னா? அதான் கூட்டம் இல்லாதப்ப வந்தோம்!" என்றாள்.

"அதைப் பாத்துக்கலாம்மா." என்றான் ராஜேந்திரன். இருவரும் மணமக்களிடம் போனார்கள்.

அதே நேரம் அந்தப் பக்கம் வந்த பொன்னம்மா நின்று வெறித்துப் பார்த்தாள்.

"ஏண்டா, பிரபு! யாரு வந்திருக்கா பாத்தியா? இதென்னடா கூத்து?" என்று மகனிடம் ஓடினாள்.

"சீதாக்காதானேம்மா! அவ மாப்பிளை இந்த மாப்பிளைக்கு ஃபிரண்டாம். நாம என்ன செய்ய?" என்று கண்டு கொள்ளாமல் நகர்ந்தான் பிரபு.



திகைத்துப் போன பொன்னம்மா, ராஜேந்திரனை அழைத்தாள்.

"பாரப்பா! நீ பொண்ணு கேட்டயேன்னுதான் சரின்னேன். இதென்ன இவளையெல்லாம் உள்ள விட்டு உழப்பறீங்க?" என்றாள்.

"பெரியம்மா... ஒண்ணும் பிரச்சினை செய்யாதே. கல்யாணம் முடியட்டும்!" என்று அமைதிப்படுத்தி நகர்ந்தான். அப்போதைக்குச் சமாதானமானது போல் இருந்தாள். சற்று நேரம் கழித்துப் பரபரப்பாக மணமக்கள் இருந்த இடத்துக்கு வந்து,

"பார்றி... மோகனா... நான் இனி இந்தக் கல்யாண மண்டபத்தில் இருந்தேன்னா... நான் உப்புப் போட்டுச் சாப்பிடறவ... இல்லே... நான் புறப்படறேன்," என்று பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

சீதா ஒரு பக்கம் கண்களில் நீர் திரள, பிரபுவின் கையில் இருந்த தன் குழந்தையை வாங்கிக் கொண்டு கணவனுடன் நடந்தாள்.




பிரபு அம்மாவைக் கண்டு கொள்ளவில்லை, மாறாகச் சகோதரியிடம் ஓடினான்.

"அக்கா... போகாதே, இரு. பிரச்சினையை ராஜா அண்ணன் பாத்துக்குவாரு." என்றான்.

சீதா தயக்கத்துடன் நின்றாள்.

எல்லாரும் பொறுப்பைத் தூக்கித் தன் கணவன் மேல் போடுவதை சுவேதா ஒரு பயத்தோடும் கலக்கத்தோடும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ராஜேந்திரன் விரைவாகப் போய்ப் பொன்னம்மாவிடம் இருந்து பெட்டியைப் பிடுங்கினான்.

"சொன்னாக் கேளு... பெரியம்மா!" என்றான்.

"என்னத்தைடா சொன்னாக் கேக்கறது! உங்க இஷ்டத்துக்கெல்லாம் ஆடற ஆளு... நானில்லே..." என்றாள் அவள்.

வந்திருந்தவர்கள் வேடிக்கை பார்ப்பதை மோகனா ஒரு வேதனையுடன் பார்த்துக் கொண்டு நின்றாள். அவள் முகத்தைத் திரும்பிப் பார்த்த ராஜேந்திரனுக்கு ஒரு கணம் மனம் உருகிப் போனது.

சுற்றிலும் பார்த்தான். அவனுடைய பெற்றோர்கள், சுவேதாவின் பெற்றோர்கள், மோகனாவின் அப்பா எல்லாரும் திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எல்லாருக்கும் பொன்னம்மாவிடம் பேசப் பயம். ஏதாவது எடுத்தெறிந்து பேசி விட்டால் என்ன செய்ய என்று தயக்கம்.

"நீ வா. பெரியம்மா! நாம அந்தப் பக்கம் போய்ப் பேசலாம்..." என்று இழுத்துக் கொண்டு போனான்.

சுவேதா, சந்தோஷ், மோனா மூவரும் பதட்டத்துடன் பின் தொடர்ந்தார்கள். மற்றவர்களும் வந்தார்கள்.

எல்லாரையும் மாப்பிள்ளையின் அறை வாயிலிலேயே நிறுத்தி விட்டு அவன் மட்டும் உள்ளே போனான்.

"பெரியம்மா! நடக்கறது உன்னோட பொண்ணு கல்யாணம். வந்திருக்கறதும் உன்னோட பொண்ணு. நீயே அவர்களை அவமானப்படுத்தினா எப்படி?" என்றான்.

"அது ஒண்ணும் என்னோட பொண்ணு இல்லே. ஓடுகாலி... அவளை உள்ள விட்டா ஊரு என்னடா பேசும்?" என்றாள் முறுக்கியபடி.

"ஊரைப் பத்தி உனக்கு என்ன கவலை? உனக்கு முக்கியமானவங்க யாரோ நாங்க எல்லாம் ஏத்துக்கறோம். இல்லே! அப்புறமென்ன?" என்றான்.

"போடா... நீ. எனக்கு மானம்தான்டா பெருசு!"



"சரி! நீ சீதாகிட்டே பேசாதே! கண்டுக்காதே!" என்றான்.

"அதெல்லாம் முடியாது. இப்படித்தான் இந்தக் கல்யாணம் நடக்குமின்னா... நான் போறேன்"

"பாரு... பெரியம்மா... உனக்குக் கிடைச்சிருக்கிற மாதிரி மாப்பிள்ளை... யாருக்கும் அமையாது. ஆயுசு பூரா உங்களுக்கு வருமானம் வர்ற மாதிரி ஏற்பாடு செய்யணும்னெல்லாம் யோசிக்கறாரு. திட்டம் போடறாரு!" என்றான்.

"அடப் போடா! சோத்துக்காக மானத்தை விட முடியுமா? ரெண்டு கையிருக்கு... உழைச்சுப் பிழைச்சுட்டுப் போறேன்!" என்றாள் பொன்னம்மா.

"அதை இத்தனை நாள் செஞ்சிருக்கலாமில்லே? அப்புறம்... ஏன் பொட்டப் புள்ளைங்க சம்பாத்தியத்துல உடம்பை வளர்த்தே?" என்றான் கடுமையாக.

அவன் குரல் உயர்ந்ததைக் கேட்டுத் திகைத்து நின்றாள் பொன்னம்மா. தன் ஆட்காட்டி விரலை உயர்த்தி மிரட்டலாகப் பேச ஆரம்பித்தான் ராஜேந்திரன்.

"பாரு! பெரியம்மா! தொடர்ந்து பிராப்ளம் பண்ணிகிட்டிருக்கறே. நான் பேசக்கூடாதுன்னு நெனச்சேன். பேச வக்கிறே. முப்பது வயசு வரைக்கும் சீதாவுக்குக் கல்யாணம் பண்ணணும்னு உனக்குத் தோணலே. அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை வரவும் கல்யாணம் செஞ்சுகிட்டா. என்ன தப்பு? இன்னை வரைக்கும் மோகனா சம்பளம் உனக்குத் தேவையாயிருக்கு. ஆனா, உன்னோட அதிர்ஷ்டம் மோகனா மாதிரி பொண்ணு அமைஞ்சது. கல்யாணத்துக்கு அதுவே பணம் சேத்திருக்கு. உங்களுக்கு வருமானத்துக்கு ஏதாவது வழி பண்ணணும்னு கவலைப்படுது. அதைப் பார்த்து உங்களுக்கு வாடகை வர்றமாதிரி வீடு கட்டிக் குடுக்க மாப்பிள்ளை பிளான் பண்ணியிருக்காரு. பிரபுவுக்கு வொர்க் ஷாப் வைக்க யாரு முன்பணம் குடுத்தாங்கன்னு நினைக்கறே. சந்தோஷ்தான் குடுத்தாரு. உன்ற மக எந்தக் கவலையும் இல்லாம தன்னோட

கல்யாண நிகழ்வுகளை யெல்லாம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மோகனா அவன் கையணைப்பில் அடங்கிய வண்ணம்,

"ஏங்க! நாம ராஜா அண்ணாவுக்கு ரொம்ப நன்றி சொல்லணும் இல்லே!" என்றாள்.

"சரி! சொல்லீடுவோம்!" என்றான்.

"இந்தப் பிறவியில்லே, ஏழு பிறவிக்கும் நான் நன்றி செலுத்தணும்!" என்றாள்.

"அட! ஆண்டவா!" என்றான் அவன்.

"ஏன்?" என்பதுபோல அவள் பார்க்க.

"ஏழு பிறவிக்கும் நீயேவா? சேன்ஜே கிடையாதா..." என்று அவன் சிரித்தான்.

"சேன்ஜ் கேக்குதாக்கும் உங்களுக்கு.... நாலு அடி குடுத்தா... சரியாயப் போகும்!" என்று அவள் சிரிக்க.

"அப்படியா... என்ன?" என்று அவன் கிறக்கமாகப் பார்க்க, அவள் அடைக்கலமானாள்.

* * *

இரண்டு நாட்களுக்குப் பிறகு...

எல்லாரும் சந்தோஷ்குமாரின் வீட்டில் இருந்தார்கள்.

சீதாவும், ஸ்ரீதரனும் காலை டிபன் முடித்துக் கிளம்பினார்கள்.

சமையல் உள்ளில் வேலையாய் இருந்த பொன்னம்மா சட்டென வந்து, "டேய்! ராஜா! இன்னைக்கு மத்தியானம் நம்ம வீட்டுச் சாப்பாடு. அவளையும் இருக்கச் சொல்லுடா," என்றாள்.

"யாரை?" என்றான் ராஜேந்திரன் புரியாதவனைப் போல.

"அதான்டா... உன்ற தங்கச்சியை!" என்றாள் பொன்னம்மா.



"யாரை... மோகனாவையா? சாந்தாவையா? இரண்டு பேரும் இருப்பாங்களே. எங்கே போயிடுவாங்க!" என்றான்.

அவன் நாடகம் பார்த்து சந்தோஷும், சுவேதாவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

"இல்லடா... சீதாவை!" என்றாள்.

"ஏன்? நீயே சொல்லேன். உன்ற ஊட்டுக்கு வரோணும்னா... நீதானே கூப்பிடோணும்?" என்றான்.

பொன்னம்மா தயங்கினாள். ஒரு நிமிடத் தயக்கத்துக்குப் பின் பாசம் வென்றது. ராஜேந்திரன் குறுஞ்சிரிப்புடன் மௌனமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"இரு. சீதா! நம்ம வீட்டுக்கு வந்துட்டுப் போவியாம்!" என்றாள் பொன்னம்மா.

சீதா கணவனைப் பார்த்தாள். ஸ்ரீதரன் மௌனமாக நின்றான். பொன்னம்மா புரிந்து கொண்டாள்.

அவனையல்லவா முதலில் அழைத்திருக்க வேண்டும் என்பது தோன்ற -

"நீங்களும் வாங்க, மாப்பிளே!" என்றாள் வணக்கம் சொல்லி.

"அப்படிப் போடு!" என்று சிரித்தான் ராஜேந்திரன்

பொன்னம்மாவின் முகம் சிவந்து போனது.

"பெரியப்பா! இங்க வாங்க!" என்று ராஜேந்திரன் அவசரமாக அழைக்க, பொன்னம்மாவின் கணவரும் என்னவோ ஏதோ என்று வந்தார்.

"பெரியப்பா! உங்க லைஃப் டைம்ல பாக்காத காட்சி... இப்பப் பாத்துக்குங்க..." என்றான்.

"என்ன?"

"பாருங்க... பொன்னம்மா பெரியம்மா வெட்கப்படறதை..." என்றான்.

பொன்னம்மாவின் முகம் மேலும் சிவந்தது. வெடிச் சிரிப்பு அடங்க வெகு நேரமாயிற்று. 'லொள்ளுடா... உனக்கு' என்றாள் பொன்னம்மா.

'அப்படித்தான்... என் பொண்டாட்டியும் சொல்றா!' என்று அவனையும் வம்பிழுக்க, அவள் முறைத்தாள்.

''ஐய்யோ! எல்லாரும் முறைக்கறாங்க. சீதா! உடனே மூடு மாத்றதுக்குள்ளே அப்பா அம்மாகிட்டே ஆசிர்வாதம் வாங்கிக்க!'' என்றான்.

வாங்கிக் கொண்டார்கள்.

பத்து மணி வாக்கில் தங்கள் அறைக்கு வந்து சுவேதா நின்றாள்.

எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலென்ன என்பது போல் ராஜேந்திரன் குப்புறப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான்.

நெகிழ்ச்சியுடன் சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள்.

* * *

மறுநாள் காலை!

சந்தோஷ் குமாரும், ராஜேந்திரனும் சுவேதாவின் வீட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

பெண்கள் எல்லாரும் சுவேதாவின் அம்மா வீட்டில் வேலையாய் இருந்தார்கள்.

''அப்புறம் மாப்பிள்ளே, என்ன ப்ரோகிராம்?'' என்றான் ராஜேந்திரன்.

''ஒரு நாளைக்கு மோனாவோட பேரண்ட்ஸையும் கூட்டிட்டு ஸ்ரீதரண்ணா வீட்டு விருந்து. அவ்வளவுதான் ப்ரோகிராம்.''

''அப்பறம்... ஹனிமூன் எல்லாம் எங்கே போகப் போறீங்க?'' என்றான்.

''போகப் போறீங்க இல்லே... போகப் போறோம்!'' என்றான்.

''வாட்? உங்க ஹனிமூன்ல எனக்கு என்ன வேலை?'' என்றான் ராஜேந்திரன்.



''ஏன்! ஹனிமூன்னா... நாங்க மட்டும் போகணும்னு ரூல் இருக்கா? நீங்களும், சுவேதாவும் வர்றீங்க...''

ராஜேந்திரன் இதை எதிர்பார்க்கவில்லை.

''ஆமாம். மச்சான்... டெல்லியில் வந்து எங்களுக்குக் குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்து குடுத்துட்டு, தாஜ்மஹால் பாத்துட்டு அப்படியே சிம்லா... போறோம்!'' என்றான்.

''அட்றா சக்கை!''என்று மகிழ்ச்சியானான் ராஜேந்திரன்.

## 15

''என்னப்பா, பத்து நாள்ல வந்துடுவீங்களா?'' என்றார் ராஜேந்திரன் அம்மா.

''ஆமாம்மா... மாப்பிள்ளை ரொம்ப ஆசைப்படறார்... நாங்க ரெண்டு பேரு மட்டுமே போய்ப் புதுசாக் குடித்தனம் ஆரம்பிக்கணுமே. நீங்க வந்தா நல்லா இருக்குமேங்கறார்!'' என்றான்.

''சரி... சரி...போயிட்டு வாங்க...''

''சுவேதா சாயங்காலம் வருவாளா?''

''ஆமாம்மா... பேக்கிங் முடிச்சுட்டு வந்துட்டா... கொஞ்சம் நிம்மதியா பேசிட்டுப் போலாமேன்னா. அதுவும் சரிதானே!''

''நல்ல பொண்ணுடா, அவ, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? நீ அவளுக்குன்னு மாசம் ரெண்டாயிரம் குடுப்பியாமே. அதுல ஒரு ஐந்நூறு ரூபாய் எனக்கும், இன்னொரு ஐந்நூறு ரூபாய் உங்கப்பாவுக்கும் பாக்கெட் மணின்னு குடுப்பாப்பா!'' என்றாள்.

ராஜேந்திரனுக்கே அது செய்தி.

''ம்... அப்படியா?'' என்றான் ஆச்சரியமாக.

''ஆமாப்பா. நல்லதா ஏதாவது சமைச்சா அந்தப் பக்கத்து வீட்டுப் பையன் மூலமாக் குடுத்தனுப்புவா. எப்ப முடியல்லைன்னாலும் ஃபோன் பண்ணுங்கத்தை. நான் சமைச்சுக் குடுத்தனுப்பறேம்பா...'' என்றாள்.

"ஓ!"

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டான்..

வழியெல்லாம் அவனுக்குச் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது. தான் கொடுத்த பணத்தில் ஒரு பங்கைத் தன் அம்மா, அப்பாவுக்கே கொடுத்திருக்கிறாள்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவனும் அதேபோல் தன்னுடைய இரண்டாயிரம் ருபாயில் ஒரு ஆயிரத்தை அவளுடைய அம்மா, அப்பாவுக்கென்று கொடுத்து வந்ததுதான். ஒத்த சிந்தனை என்பது இதுதானோ என்று எண்ணிப் புன்னகைத்துக் கொண்டான்.

* * *

நான்கு பேருமே மலைத்துப் போய் நின்றிருந்தார்கள்.

பௌர்ணமி நிலவின் ஒளியில் தாஜ்மஹால் உள்ளத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தது. கிறங்கிப் போய் நின்று கொண்டிருந்தார்கள்.

சந்தோஷ்குமாரும் மோகனாவும் மெதுவாக நடக்க ஆரம்பித்தார்கள்.

சுவேதாவும் ராஜேந்திரனும் அங்கேயே தாஜ்மஹால் கண்ணில் படும் வகையில் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

"எவ்வளவு அழகு! இல்லைங்க?" என்றாள்.

'ம்...' என்றான் பேச்செழாமல்.

ஆழ்ந்த மௌனத்தில் கரைந்தார்கள்.

* * *

சிம்லா வந்து சேர்ந்தபின்னும் கூட அந்த நினைவு அவர்களை விட்டு அகலவில்லை. அடிக்கடி அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்

கம்பெனியில் தெரிந்த ஆட்கள் மூலமாக ராகேஷ் சிம்லாவில் தங்குமிடம் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தான்.



அருமையான அந்த கெஸ்ட் ஹவுசில் இதமான குளிரில் ஐசுவர்யாவை உறங்கச் செய்து விட்டு முன்னறையில் இருந்த சோஃபாவில் சாய்ந்து அமர்ந்திருந்தான் ராஜேந்திரன். அவன் தோளில் சாய்ந்து அமர்ந்திருந்தாள் சுவேதா.

"ஹேய், சுவேதா! என்னமோ செகன்ட் டைம் ஹனிமூன் வந்த மாதிரி இருக்குல்லே..." என்றான்.

'ம்...!' என்றாள் மெல்லிய குரலில்.

அதே நேரம் வெளியே வழக்கம்போல் சற்று தூரம் நடந்து விட்டு வரலாம் என்று கிளம்பிய சந்தோஷ்குமாரும், மோகனாவும் அந்தப்புறம் தயங்கி நின்றார்கள்.

"ஹேய்! ஸ்வீட்டி! ரெண்டு மூணு மாதத்துக்கு முன்னாடி அடிக்கடி சண்டை போட்டமே ஞாபகம் இருக்கா. பேய்ச் சண்டை போட்டயே நீ!" என்றான்.

'ம்' என்றாள்.

"அப்ப எனக்கு ஒரு நாள் தோணுச்சு... கல்யாணம் ஆகறதுக்கு முன்னாடி எப்படா பாப்போம்னு தவிப்பமே. இப்ப ஏன் இப்படிச் சண்டை? ஒரு வேளை சலிப்பு வருதோன்னு?"

"ம்... எனக்கும் கூட அப்படித் தோணுச்சுங்க...'என்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"சரி... சரி... அதுக்கு எதுக்கு நகர்றே? இப்படியே உட்காரு!" என்றான்.

அவள் லேசாகச் சிரித்துக் கொண்டு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்

"அப்ப நான் நெறைய யோசிச்சேன். கல்யாணத்துக்கு முன்னாலே இருந்தது ஒரு கவர்ச்சி. ஒரு ஈர்ப்பு. எப்படா சேர்ந்து இருப்போம்னு ஒரு ஏக்கம்.

"ஆனா கல்யாணத்துக்கு அப்புறம் எப்பவும் ஒண்ணாத் தானே இருந்தோம். அதனால அடுத்ததா சொத்து குழந்தை வீடுன்னு கவனம் கொஞ்சம் மாறுதுன்னு புரிஞ்சது. ஆனா கடுமையான வார்த்தைகள் ஏன் விழுகுதுன்னும் யோசிப்

பேன். ஹேய்! அப்பத்தான் ஒரு புக்ல படிச்சேன் - சண்டையும் அன்பின் வெளிப்பாடுதான்னு."

........

"கேக்கறியா?"

"ம்..."

அப்போது சந்தோஷ்குமார், "ஹேய்! மோனா! ரொம்ப உபயோகமான அனாலிசிஸ் மாதிரி இருக்கே. உட்காரு கேட்போம்," என்று கிசுகிசுத்தபடி அமர்ந்தான்..

"அப்புறம்... எனக்கு அடிபட்டுச்சு பாத்தியா.. அன்னைக்கு நீ பட்ட பாட்டைப் பாத்துட்டுதான், நான் புரிஞ்சுகிட்டேன் எங்கடா போச்சு அந்தப் பழைய நேசம்னு கேட்டமே. அந்த நேசம் எங்கயும் போகவில்லை. உள்ளுக்குள்ளேயேதான் இருக்கு. நெருக்கம் இருக்கறதுனாலதான் சண்டை, கோபம், எல்லாம்னு புரிஞ்சது!" என்றான்.

"ஆமா, நான் கூட அப்புறம் யோசிச்சேன். எனக்குக் காய்ச்சல்ன்னவுடனே ஐயா நாலு நாள் லீவு போட்டுட்டுக் கஞ்சி காய்ச்சிக் குடுத்தீங்களே! அதை..." என்றாள்.

அவன் அவள் முகத்தை ஆழமாகப் பார்த்தான். "தன்னுடைய எல்லாத்தையும், எனக்கு வாரிக் கொடுத்த என் கண்மணிக்குக் கஞ்சி காய்ச்சிக் குடுத்தா என்னவாம்?" என்று சிரித்தான்.

"ஐயய்யோ... இந்தச் சிரிப்பே சரியில்லை!" என்று சுவேதா முனகினாள். அவன் அதற்கும் சிரித்தான்.

"அப்புறம்தான் ஹாஸ்பிட்டல்ல இருந்த நேரத்துல யோசிச்சு, சிக்கனம் பாத்து வீடு அவசரப்பட்டுக் கட்ட வேண்டாம். ரெண்டு பேரோட நிம்மதிதான் முக்கியம்னு முடிவுக்கு வந்தேன். அந்த நேரத்துலதான் உங்க அண்ணன் வந்து வேற விதமா உதவிக்கு வர்றேனுட்டாரு... அதுக்குள்ள உங்கண்ணன் கல்யாணமும் வந்துடுச்சு,"என்றான்.



"கல்யாணம்னவுடனே ஞாபகம் வருது. ஆமா... என்ன இருந்தாலும் பொன்னம்மாத்தை கால்ல எதுக்கு விழுந் தீங்க?" என்றாள் மனத் தாங்கலுடன்.

ராஜேந்திரன் ஆழ்ந்த யோசனையோடு பேசினான். தனக் குத் தானே பேசுவது போல் மெல்லிய குரலில் பேசினான்.

"ஹேய்! சுவி! தமிழ்நாட்டோட புகழ்பெற்ற ஒரு மனோதத் துவ டாக்டரோட புத்தகம் ஒண்ணு படிச்சேன். அதுல ஆரம் பிக்கும்போதே -

'உறவுகள் சௌகரியமான பொய்கள் அவசியமான உண்மை கள் அப்படீன்னு ஆரம்பிக்கறாரு. ரெண்டுமே ரொம்ப எக்ஸ்ட் ரீம்னு நெனக்கறேன் நான். வாழ்க்கையும் கூடப் பொய்ன்னு நெனைச்சா பொய்தான். உண்மைன்னு நினைச்சா உண்மை தான். பொன்னம்மா பெரியம்மாவுக்கு உள்ளூர ஒரு காம்ப் ளெக்ஸ். என்ன இருந்தாலும் பெண்களை நம்பி நாம ஒரு வாழ்க்கை வாழ்ந்தமேன்னு யாரும் நினைச்சுக்கக் கூடாதுன்னு. அதனாலதான் தான் ஒரு முக்கியமான ஆளுன்னு காட்டிக்க வேண்டிய அவசியம் இருந்துகிட்டே இருந்தது. சின்னச் சின்னதாக பிரச்சினைகள் செஞ்சுகிட்டே இருந்தாங்க. நீ முக்கியமான ஆளுதான். ஆனா எல்லை மீறிட்டா நீ முக்கியமான ஆளா இல்லாமப் போயிரக் கூடிய அபாயமும் இருக்குன்னு காட்டத்தான் மிரட்டியும் பேசினேன். கால்லயும் விழுந்தேன். அதனால என்ன இப்ப? பிரிஞ்சிருந்த குடும்பம் சேர்ந்தது. கல்யாணமும் நல்லபடியா ஆச்சு. இப்ப அவசி யம்னு வச்சுக்க... உன் கால்லயும் விழுவேன்!" என்று கபகபவென்று சிரித்தான்.

சுவேதாவும் சிரித்தாள். "அதெல்லாம் காரியம்னா என்ன வேண்ணா செய்வீங்க!" என்றாள்.. அவன் ஆழமாகப் பார்த்தான்.

அவள் அவன் தோளில் செல்லமாக ஒரு தட்டுத் தட்டிவிட்டு,

"அது சரி. உறவுகளைப் பத்தி இவ்வளவு அலசுறீங்களே. காதல், கல்யாணம் இதைப் பத்தி யெல்லாம் ஒண்ணும் படிக்கலியாக்கும்..." என்று கேட்டாள்.

''ம்... ஒரு பொண்ணும்... ஆணும் எவ்வளவுதான் நெருங்கிப் பழகினாலும் வாழ்க்கை முழுசும் இணைஞ்சிருக்கணும்னு நெனக்கறப்பத்தான் காதலே ஆரம்பிக்குதாம். அப்படிப் பார்த்தா நம்ம கல்யாணமும் சரி. உங்கண்ணன் மேரேஜும் சரி... லவ் மேரேஜ்தான்!

''அப்படிக் கிப்படி வீட்ல சொல்லீராதிங்க. உதை விழும்!'' என்றாள் சுவேதா.

''எல்லாத்தையும் எல்லார்கிட்டேயும் சொல்வாங்களா என்ன?''

''அப்புறம்...?'' என்றாள் சுவேதா கதை கேட்பவள் போல.

''ம்... நீ கேட்கத் தயார்தான்னா, நான் பேசத் தயார். நிரந்தரம், நிறைவு, நாளும் வளர்ச்சி, இதெல்லாம்தான் மணவாழ்வின் குறிக்கோள்கள் அப்படீங்கறாரு. காதல் எந்த வயசில வேண்ணாலும் ஏற்படலாமாம். அன்பு, அக்கறை, நெருக்கம், நட்பு எல்லாம் கலந்த உறவுதான் கணவன் மனைவி உறவாம். சரிதான் இல்லே!''

''ம்...'' என்றாள் நெகிழ்ந்த குரலில்

''இப்ப பாரேன். உங்கண்ணன் கல்யாணத்துக்கு நான் முன்னால நின்னேன்னு அம்மணிக்கு என் மேலே ஒரு கருணை. கொஞ்சம் பக்கத்துல வாங்கம்மா...ன்னு கெஞ்ச கெஞ்சன்னு கெஞ்சணும். இப்பத் தொட்டா உருகிருவீங்க போலருக்கு!'' என்று சிரித்தான்.

''சும்மா...யிருங்க... அண்ணன் ஏதாவது கேட்டுக்கிட்டு வைக்கப் போறாரு...''

''கேட்கட்டுமே... இப்ப நாம இதுவரைக்குக் பேசினதெல்லாம் அவங்களுக்குந்தான் பொருந்தும்!'' என்றான். சிரித்தான்.

அதே நேரத்தில் உள்ளே சந்தோஷ்குமார், வெளியே வாக்கிங் போகும் எண்ணத்தைக் கைவிட்டு மனைவியை உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.



''பரவாயில்லை... மோனா! மச்சானை வெறும் விளையாட்டுக்கார ஆசாமின்னு நெனச்சேன். ஆனா, அத்தனையும் விஷயமா இருக்காரு... சுவேதாவும் லக்கிதான்!'' என்றான்.

''நானும் லக்கிதான். இப்படியொரு குடும்பத்துல நுழையற வாய்ப்பைக் கடவுள் எனக்குக் குடுத்தாரே. உங்களுக்குத் தெரியாதுங்க. எங்கம்மா... எப்படியெல்லாம் ரகளை செய்வாங்க தெரியுமா? இப்ப ராஜா, ராஜான்னு ஒரே புகழ் மாலைதான்!'' என்றாள்.

''நீயும் ரொம்ப நல்ல பெண்தான் மோனா!'' என்றான்.

''என்ன... ரொம்ப ஐஸ் வைக்கறீங்க!''

''பொய்யில்லே... மோனா... உங்கம்மாவோட இருந்தும் சண்டை போடற குணம் இல்லாம இருக்கியே!'' என்று முகம் நோக்கிக் குனிய, அவள் அவனைத் தள்ளி விட்டாள்.

''இத பாருங்க! என்னை என்ன வேணா பேசுங்க எங்க அம்மாவைப் பேச வேண்டாம்!'' என்றாள் கோபமாக.

சந்தோஷ்குமார் திடுக்கிட்டான். அவள் சட்டென்று சிரித்துக் கொண்டு அவன் மார்பில் முகம் பதித்தாள்.

''இப்பதானே ராஜா அண்ணா சொன்னாங்க... சண்டையும் அன்பின் வேறொரு வடிவம்தான். அதான் டிரை பண்ணினேன் இருந்தாலும் எங்கம்மா மாதிரி எனக்கு வர்லே!'' என்றாள்.

''ஹேய்! யார் என் மாமியாரைப் பத்தி எது சொன்னாலும் சரி. நான் புகழ்த்தான் செய்வேன். ஏன் தெரியுமா? இப்படி ஒரு தங்கப் புதையலை எனக்காகப் பெத்து வளர்த்து வச்சிருக்காங்களே!'' என்றான் கிறக்கமாக.

''குமார்...'' என்று அவள் ஏதோ சொல்ல வர... ''ஹேய்! போதும் பேச்சு. வெளியே போனா அவர்களுக்கு டிஸ்டர்

பன்ஸ். நாம உள்ற நம்ம ரூமுக்கே போயிடலாம் நிறைய வேலையிருக்கு!'' என்று கைப்பிடித்து இழுத்துப் போனான்.

தங்கள் அறைக்குள் வந்த பின்னே -

* * *

சுவேதா கணவன் மார்பில் சாய்ந்து கொண்டிருந்தாள். ''ஹேய் சுவேதா, மாசம் உனக்குன்னு ரெண்டாயிரம் குடுத்ததுல எங்க அம்மா அப்பாவுக்குப் பாக்கெட் மணி குடுக்கறியாம்.''

''யார் சொன்னாங்க?''

''அம்மாதான். இன்னொரு விஷயம் தெரியுமா? நானும் உங்க அம்மா அப்பாவுக்குப் பாக்கெட் மணி குடுக்கறேன், தெரியுமா?''

அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''நிஜமாவா?'' என்றாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள். மீண்டும் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா! இந்த கேரிங் அண்ட் ஷேரிங்தான் காதல், வேறென்ன? உண்மையைச் சொல்லட்டுமா?'' என்றான் ராஜேந்திரன்.

''ம்!''

'தப்போ டைரட்டோ உங்கண்ணன் மோனாவை லைக் பண்ணிட்டாரு. பெரியம்மா பிரச்சினை பண்ற நேரம். லேசாத் திரும்பிப் பார்த்தேன் மோனா முகத்துல அப்படி ஒரு வேதனை. எனக்கு மனசே உருகிப் போச்சு. இன்னும் கொஞ்சம் திரும்பிப் பாக்கறேன். உன் முகத்துல அதுக்கு மேல ஒரு கலக்கம். அப்பதான் கொஞ்சம்கூட யோசிக்காம பொன்னம்மா... பெரியம்மா... கால்ல விழுந்தேன்!'' என்றான்.

அப்போது சுவேதா... ''இல்லைங்க... நான் அப்ப ரொம்பப் பயந்து போயிட்டேன். ஏன்னா... எல்லோரும் பிரச்சினையை உங்ககிட்ட தள்ளி வுட்டுட்டாங்க. எனக்காக... எனக்காகத் தானே இத்தனையும் சுமக்கறீங்க! ஜெயிச்சு வரணுமேன்னு தான்...''



''கவலையாப் போச்சாக்கும். மக்கு செல்லம்ஸ்..'' என்று கொஞ்சி மகிழ்ந்தான். பிறகு. ''இதுதான்... உன்னை சந்தோஷப் படுத்த நானும்... எனக்கு நீயும் போட்டி போட்டுட்டு செஞ்சமே... இதுக்குப் பேருதான்... அன்பு... நேசம்... காதல்... எல்லாம்... உங்க அண்ணன் நமக்குப் பணத்தால உதவி செய்யறாரு. நான் என்னோட ஒத்துழைப்பு, உழைப்பு எல்லாத்தையும் குடுக்கறேன். ஆக மொத்தம், எல்லாரும் நம்ம குடும்பம் நல்லாருக்கணும்னு நெனக்கறமே... அதுதான் முக்கியம்.''

''ஆமாங்க...'' என்றாள் நெகிழ்ந்த குரலில்.

''இன்னொரு நல்ல விஷயம் சொல்லட்டா?''

''ம்...!''

''அடுத்த மாசம். எனக்கு ப்ரமோஷன். எங்க முதலாளியோட எல்லாக் கன்சர்னுக்கும் சேர்த்து அதாவது நாலு பிராஞ்சுக்கு ஆஃபீசர் லீகல் அட்வைசர் போஸ்ட். எனக்குத் தனி ஆஃபீஸ், கார் எல்லாம் உண்டு!'' என்றான்.

''அடப்பாவி... மனுஷா! இதை எப்படி இத்தனை நாள் மறைச்சீங்க?''

''மறைக்கல தங்கம்ஸ். நேத்துத்தான் கன்ஃபர்ம் ஆயி ஃபோன்ல தகவல் வந்துச்சு. அதை உத்தேசிச்சுத்தான் எனக்கு இப்ப லாங்லீவ் குடுத்தாங்க!'' என்றான்.

''ஐயோ! எவ்வளவு சந்தோஷமான விஷயம்...'' என்று குதிக்காத குறையாய் மகிழ்ந்தாள் சுவேதா. சற்று நேரம் கலகலப்பாகப் பேசி மகிழ்ந்தார்கள் பிறகு சுவேதா மெதுவாக...

''அப்ப இன்னும் ஒரே ஒரு விஷயம்தான் பாக்கி!'' என்றான்.

''என்ன?'' என்றான் கேள்விப் பார்வையுடன்.

''ஐஸ்வர்யாவுக்கு ஒரு தம்பியோ, தங்கையோ வேணும்...'' என்றாள்.

''கிராண்டெட்...'' என்றான் சிரித்து.

சுவேதா கண்களை அகல விரித்தாள். ''நிஜமா?'' என்றாள்.

''நிஜம்தான்!'' என்றான்.

''ஆமா... சுவி...! இதுதான் ரைட் டைம். ஐஸ்வர்யா இனி ரெகுலர் ஸ்கூலுக்குப் போயிடுவா. வரப்போற குட்டி கண்ணனுக்கு நாம டைம் குடுக்க முடியும்...'' என்றான்.

''ஐயோ! எல்லாத்துலயும் பயங்கர பிளானிங்தான்!'' என்று சொல்லிய அவளை அவன் மேலே பேச விடவில்லை.

''ஒரே ஒரு விஷயத்துக்கு மட்டும் எந்தப் பிளானிங்கும் தேவையில்லை. என்ன தெரியுமா? அன்பு செய்வது. அதுக்கு மட்டும் அளவுமில்லை. கால நேரமுமில்லை'' என்று முணுமுணுத்தான்..

பிறகு அங்கே மௌனமே நிலவியது. அன்பு மொழி தன் ஆட்சியைத் தொடங்கியது.

உறவுகள் என்பது ஒருவருக்கொருவர் ஆதரவு தர... பகிர்ந்து கொள்ள...நம்பிக்கை வைக்க... என்று பல வகைகளிலும் காட்டிய தன் அன்புக் கணவனுக்கு அவள் தன் அன்பு மலர்களைச் சரமாய்த் தொடுத்து மாலை அணிவித்துப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டிருக்கையில், அந்நியருக்கு அங்கே என்ன வேலை என்று குளிர்ந்த நிலவொளி கூட அங்கே தயக்கத்துடன் எட்டிப் பார்த்து, பின் தனக்கொன்றும் பெரிய தடையிருக்காது என்ற நம்பிக்கையுடன் மெல்ல காலடி எடுத்து வைத்தது.